# தாய்மொழி பெறாததைச் சமுதாயம் பெறாது!

டாக்டர். வா. செ. குழந்தைசாமி

# தாய்மொழி பெறாததைச் சமுதாயம் பெறாது

டாக்டர் வா.செ. குழந்தைசாமி
முன்னாள் துணை வேந்தர்
*இந்திராகாந்தி தேசியத் திறந்த நிலைப் பல்கலைக் கழகம்*

பாரதி பதிப்பகம்
108, உஸ்மான் சாலை,
தியாகராயநகர், சென்னை 600 017.
த.பெ. எண்: 4984
போன்: 4340205

முதற் பதிப்பு · ஆகஸ்ட் 1996

விலை ரூ.36.00

◆ Thaimozhi Perathathai Chamuthayam Peradhu Essay ◆ Dr. V.C. Kulandaiswamy ◆ First Edition : August 1996 ◆ Price Rs. 36.00 © Dr. K. Soundaravalli ◆ Published by : Bharathi Pathippagam, 108, Usman Road, T.Nagar, Madras -17 Phone : 4340205 ◆ Laser Typeset: Graphic Access, Madras - 94. ◆ Printed at : Mani Offset Press, Madras - 5.



என்னை வளர்த்தாரின், இரவு பகலாகத்
தன்னை அழித்தெனக்குத் தடம் சமைத்த தந்தையரின்,
அன்னை எனும் பெயரின் அழியாத காவியத்தின்
பொன்னை நிகர்த்த பதம் போற்றிப் படைக்கின்றேன்.

# இதனுள்


i. முன்னுரை 7

ii. பதிப்புரை 17

## 1 தாய்மொழி பெறாததைச் சமுதாயம் பெறாது

1. திட்டமிட்ட மேம்பாடு 19
2. கடந்த காலச் சாதனைகள் 21
3. அறிவியல்-தொழில்நுட்ப வளர்ச்சி 22
4. வளர்ந்தும் வறுமை 25
5. இன்றைய அறிவியல் புதியது 29

## 2 அறிவியல், தொழில்நுட்ப விரிவாக்கம்

1. இரு வேறுலகம் 31
2. பயிற்சியும், படிப்பும் 34
3. அறிவியல் - தொழில்நுட்ப மரபு 35
4. தொழில்நுட்ப விரிவு 36
5 தொழில்நுட்பப் பரவல் 38

## 3 தமிழ்வழிக் கல்வி: தயக்கங்கள், தடைகள்

1. அறிவுடையார் எல்லாம் உடையார் 43
2. பரிமாணங்கள் பல 47
3. கொள்கை வேறு: நடைமுறை வேறு 49
4 தயக்கங்கள்:தடைகள் 52
5. நாம் கருத வேண்டியன 56

## 4 மைய அரசின் மொழிக் கொள்கை

1. மைய, மாநில ஆட்சி மொழிகள் 66
2. மைய அரசின் மாநில அலுவலகங்கள் 68
3. 'சர்க்காரியா' குழும அறிக்கை 72

4. பயிற்று மொழியும், மைய ஆட்சி மொழியும் 73
5. பயிற்று மொழிப் பிரச்சினை: பரிமாணங்கள் பல 76

## 5. மாநில அரசின் மொழிக் கொள்கை

1. பொது 78
2. தமிழக மொழிக் கொள்கை 78
3. சில விமர்சனங்கள் 81
4. கேள்விகள் பல 83
5. உயர்கல்வி: தொழிற்கல்வி 89
6. கட்சி கடந்த அணுகுமுறை 94

## 6 கலைச்சொல்: அகராதிகள், வங்கி

1. கலைச் சொற்கள் 95
2. கலைச் சொல்லாக்க முயற்சிகள் 96
3 செய்ய வேண்டுவன 98
4. செயற்படுத்துதல் 99
5. கலைச்சொல் தொகுப்புகள் 102

## 7 இன்றைய தமிழுக்கு இலக்கணம்

1. நன்னூலின் பின்னணி 105
2. ஏழு நூற்றாண்டு இடைவெளி 107
3. இன்றைய தமிழ் எது? 112
4. எழுத்து வழக்கே அடிப்படை 115

## 8 கிரந்த எழுத்துகள்: ஒரு சிந்தனை

1. இரு வகை வழக்கு 118
2. நடைமுறைத் தேவைகள் 119
3 கிரந்த வரி வடிவத்தின் பின்னணி 120
4. புதிய உத்திகள் 122
5. புதுவதன்று 125

## 9 செம்மொழிகளின் வரிசையில் தமிழ்

1. தவறவிட்ட வாய்ப்பு 126
2. இந்தியப் பண்பாட்டின் இரு கண்கள் 127
3. அறிஞர்கள் கருத்து 131
4. சில முயற்சிகள் 132
5. நன்மைகள் பல 133
6. செய்ய வேண்டுவன 135

## 10 உலகத் தமிழ் ஆய்வுக் கழகம்: நான்காவது தமிழ்ச் சங்கம்

1. தோற்றத்தின் பின்னணி 136
2 இன்றைய நிலை 139
3. சங்கம். தமிழர் நடைமுறை 142
4. உலகு தழுவிய நிறுவனம் 143
5. செய்தற்கரிய செயல் 147

## 11 தமிழ் வரிவடிவச் சீரமைப்பு

1. மன்ற நெறிகள் 148
2. சில அடிப்படைகள் 149
3. நீண்ட வரலாறு உண்டு 151
4. தேவையான குறியீடுகள் 152
5. வாழ்வு, காலத்தால் ஆனது 157
6. பரிந்துரைக்கும் சீர்திருத்தம் 160
7. குறியீடு பற்றிய கருத்துகள் 162
8. நன்மைகள் 166
9. பிறர் செய்துள்ளனர் 169
10. செயற்படுத்துதல் 171
11. முடிவுரை 172

## 12. செவ்வியல் தமிழ் இலக்கிய வரிசை

1. இரு நதிகளின் சங்கமம் 182
2. முழுமை இல்லை 183
3. மொழி பெயர்ப்பு முயற்சிகள் 186
4. தமிழ் இலக்கிய வரிசை 188

# முன்னுரை

'தாய் மொழி பெறாததைச் சமுதாயம் பெறாது' என்ற தலைப்பில் வெளிவரும் இந்நூல், இந்தத் தலைப்பின்கீழ் நூல் வடிவில் எழுதப்பட்டதன்று: ஆனால், இத்தலைப்பில் இடம் பெறத்தக்க கருத்துகளைத் தாங்கி நிற்கும் கட்டுரைகளின் தொகுப்பு. இவற்றுள் பெரும்பான்மை, கட்டுரைகளாக வந்தவை மாத இதழ்களில், நாள் இதழ்களில், சிறப்பு மலர்களில் இடம் பெற்றவை கருத்தரங்குச் சொற்பொழிவும் உண்டு. ஒவ்வொன்றும் தனித்தனியாக, தன்னளவில் முழுமையானதாக அமையுமாறு எழுதப்பட்டது. எனவே, ஆங்காங்கு சில கருத்துகள் ஒரு முறைக்கு மேல் இடம் பெற்று, கூறியது கூறல் எனும் குற்றத்திற்கு இடம் அளிக்கலாம். இக்கட்டுரைகள் எழுதப்பட்ட சூழ்நிலையும், எழுதியதன் நோக்கமும் அங்கும், இங்குமாக இரண்டொரு கருத்துகள் திரும்பக் கூறப்படுவதைத் தவிர்க்க முடியாததாக்கி விட்டது. எனினும், அது எவ்வகையிலும் நூலின் தரத்தையோ, மாற்றையோ (Quality) குறைக்கும் தகைமையது அன்று என நம்புகிறேன்.

முன்னுரையில் முதலாவதாக நான் கூற விரும்பும் முக்கியமான கருத்து:

**இந்நூல் மொழித் துறையில் நம்மை எதிர்நோக்கும், எதிர்நோக்க இருக்கின்ற பிரச்சினைகள் பற்றிய, தேவைகள் பற்றிய எண்ணங்கள்; அவற்றிற்கான தீர்வுகள் அல்ல. கேள்விகளின் பரிமாணம் பற்றிய ஆய்வு: கேள்விகட்குப் பதில் அன்று.**

இந்திய அரசியலமைப்பில் இடம் பெற்றிருக்கும் 'மொழிக் கொள்கை'யை முன்மாதிரி (Model) இல்லாத ஒரு புது அமைப்பு என்றே கூறலாம். முந்தைய சோவியத் ஒன்றியத்தை ஓரளவு உதாரணமாகக் கூறலாம். எனினும், அதுவும் முழுவதுமாக ஒப்புடையது (Identical)

அன்று. அரசியலமைப்பில் இடம் பெற்றிருக்கும் இந்திய மொழிகள் 18. அவற்றுள் ஒன்று, அதாவது இந்தி, மைய அரசின் ஆட்சி மொழி: மற்றவை (வடமொழி தவிர) மாநில அரசின் ஆட்சி மொழிகள். அரசியலமைப்பில் இடம் பெறாத, ஆனால் நாடாளுமன்றத்தில் கொடுக்கப்பட்ட வாக்குறுதியின்படி, இந்தி பேசாத மாநிலத்தவர் விரும்பும் வரை ஆங்கிலம் இணை ஆட்சி மொழியாக நீடிக்கும். மேலெழுந்தவாரியாகப் பார்க்கும் பொழுது, ஓரளவு நமது தேசிய மொழிக் கொள்கை தெளிவாக இருப்பது போலத் தோன்றினும், இதில் இருக்கும் சிக்கல்கள் பல: தெளிவுபடுத்தப்படாத பகுதிகள் பல. மைய அரசின் பார்வை வேறாகவும், மாநில அரசின் பார்வை வேறாகவும் இருக்கக்கூடிய பகுதிகள் பல. காலப்போக்கில், மொழி தொடர்பான பல கேள்விகள் எழுவதைத் தவிர்க்க முடியாது பதில் காணுவது தொடர்ந்து நடைபெறும். பதில்கள் எளிதானவையாக இருக்கும் என்பதுமில்லை. பிரச்சினைகட்குத் தீர்வு காணும் ஒவ்வொரு கட்டத்திலும், எடுக்கப்படும் ஒவ்வொரு முடிவின் விளைவுகளை, சாதக பாதகங்களை அறிந்து நாம் ஒரு நிலையை மேற்கொள்ளும் தெளிவு நமக்கு வேண்டும். இயலுவது எது, இயலாதது எது, என்பது பற்றிய கணிப்பும் தேவை.

மைய அரசு என்பது தில்லியில் மட்டும் இருப்பதன்று. அது நாடு முழுவதும் வியாபித்திருப்பது. அதன் அலுவலகங்கள் பல, மாநிலங்களில் பரவலாக உள்ளன. மைய ஆட்சி மொழி என்பது அரசு அலுவலகங்களோடு நின்று விடுவதும் அன்று. மக்களோடு தொடர்பு கொள்வதுமாகும். நாடு முழுவதும் மைய அரசின், மைய அரசைச் சார்ந்த தன்னாட்சி நிறுவனங்களின் எண்ணற்ற உயர் ஆய்வு நிறுவனங்கள் உள்ளன. I.I.T., I.I.M., போன்ற பல கல்வி நிறுவனங்கள் மைய அரசின்கீழ் உள்ளன. பயிற்சி நிறுவனங்கள் உள்ளன. மாநில அளவைத் தாண்டி, பிரதேச அளவில், தேசிய அளவில் நடைபெறும் கருத்தரங்குகள், மாநாடுகள், பயிலரங்குகள், குழுக் கூட்டங்கள் ஆகியன எந்த மாநிலத்திற்குள் நடந்தாலும், அங்கு மைய ஆட்சி மொழி தான் இடம் பெறுகிறது இப்பொழுது ஆங்கிலம்; அது நீங்குமாயின் இந்தி இடம் பெறும் தோற்றமே தென்படுகிறது 'தேசிய அளவில் இந்தி: மாநில அளவில் தாய் மொழி' என்ற கொள்கையில், மாநிலங்கட்குள் நடைபெறும் தேசிய அலுவல்களில், நிகழ்ச்சிகளில், மாநில மொழி பெறும் இடம் வரையறுக்கப்பட வேண்டிய தேவை எழும். அந்தக் கட்டம் வரும்பொழுது, நாம் ஒவ்வொரு பிரச்சினையின் பரிமாணத்தையும் ஆழமாகத் தெளிவாக உணர்ந்திருந்தாலன்றி, ஒரு நல்ல தீர்வுக்கு உதவ முடியாது: நல்ல தீர்வைப் பெறவும் முடியாது.

அடுத்ததாக ஆங்கிலம். அது நிரந்தரமாக இந்தியாவில் இணை ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்ற கோரிக்கை இருக்கிறது அது ஏற்கப்படலாம், ஏற்கப்படாதும் போகலாம். ஏற்கப்படாவிட்டாலும், அறிவியல், தொழில்நுட்பம், உயர்கல்வித் துறைகள் ஆகியவற்றில் அதன் முக்கியத்துவத்தை நாம் குறைத்து மதிப்பிட இயலாது. உலகு தழுவி, அதன் செல்வாக்கு, நாளொரு சிறப்பும், பொழுதொரு 'ஏற்பு'மாக வளர்ந்து வருகிறது ஃபிரான்ஸ், ஜெர்மனி, ஜப்பான் போன்ற முன்னேறிய நாடுகள் கூட ஆங்கிலத்தை 'அறிவியல் - தொழில்நுட்ப உலகின் மொழி'யாக ஒப்புக் கொள்ளத் தொடங்கிவிட்டன. கீழே கொடுக்கப்பட்டிருக்கும் செய்தி இந்த உண்மைக்குச் சான்று பகர்கிறது. ++

''ஆங்கிலம் தாய் மொழி அல்லாத நாட்டு அறிவியலாளர்கள், அறிவியல் துறைகளில் ஆங்கிலத்தின் ஆதிக்கத்தை உணரத் தலைப்பட்டு விட்டார்கள். ஆங்கிலம், ஃபிரஞ்சு இரண்டிலும் ஆய்வுக் கட்டுரைகள் எழுதும் ஃபிரஞ்சு விஞ்ஞானிகள், தாங்கள் ஆங்கிலத்தில் வெளியிட்ட கருத்துகள், ஃபிரஞ்சு மொழியில் வெளியிட்ட கருத்துகளை விட மிக அதிகமாக மற்ற ஆய்வாளர்களால் மேற்கோள் காட்டப்படுவதை உணர்ந்தனர். சராசரியாக அவர்கள் ஆங்கிலத்தில் எழுதும் கட்டுரைகள் மேற்கோள் காட்டப்படுவது இரு மடங்காக இருந்தது

இப்பொழுது ஃபிரஞ்சு விஞ்ஞானிகள் தங்கள் துறைகட்கு ஆங்கிலம் தான் உலகின் தலையாய மொழி என்று ஒப்புக் கொண்டு, சில ஆண்டுகளாகத் தங்கள் ஆய்வுக் கட்டுரைகளைப் பெரிய அளவில் ஆங்கிலத்திலேயே வெளியிடுகிறார்கள். Journal of Information Science (1983) 6 (2-3); 75-80 என்ற இதழில் வெளியிடப் பட்டிருந்த ஓர் ஆய்வுப்படி, 1976-80 ஆண்டுப் பகுதியில் "Endocrinology and Bio-Chemistry of Lactation & Reproduction" என்ற துறையில் ஃபிரஞ்சு அறிவியலறிஞர்கள் வெளியிட்ட ஆய்வுக் கட்டுரையில் 71 சதவிகிதம் ஆங்கிலத்தில் இருந்தன

இது மிகப் பெரிய மாற்றம் ஏனெனில் 1960-களில் இத்துறையில் இக்குழுவினர் பிரசுரித்த எல்லாக் கட்டுரைகளும் ஃபிரஞ்சு மொழியில்தான் இருந்தன . . . . . . . . .

. . . . . . . . . . . .

. . . . இதே போக்கு ஜப்பானிலும் காணப்படுகிறது ''

++ ESCI Communications, December 1988.

அறிவியல் ஆய்வுலகில் ஆங்கிலத்தின் ஆதிக்கத்தை நாம் அறிய இன்னொரு தகவலும் உதவியாயிருக்கும். ஆய்வாளர்கள் பிரசுரிக்கும் கட்டுரை, மற்ற ஆய்வாளர்களால் மேற்கோள் காட்டப்படுவது பற்றிய தகவல்களைக் கொண்ட தாளிகை **Science Citation Index (SCI)** என்பதாகும். இதன் 1986க்கான தொகுப்பில் 7,00,000 கட்டுரைகள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அவற்றுள் 87.8% ஆங்கிலம்; 4.0% ருஷ்ய மொழி· 3.7% ஜெர்மன் மொழி: 2.5% ஃபிரஞ்சு மொழி: 0.8% ஜப்பானிய மொழி: 0.6% ஸ்பானிய மொழி: மற்ற மொழிகள் அனைத்தும் 0.6%'' ++

இந்த 7,00,000 கட்டுரைகளில், ஆங்கிலத்தில் உள்ள 87.8% கட்டுரைகள் ஆங்கிலத்தைத் தாய் மொழியாகக் கொண்டவர் களாலேயே எழுதப்பட்டவை அல்ல. மற்ற மொழியினரும் ஆங்கிலத்தில் எழுதிய கட்டுரைகளும் சேர்ந்தவை. நாம் இங்கு குறிப்பிட விரும்புவது, ஆங்கிலம் இன்று முன்னேறும் நாடுகளன்றி, முன்னேறிய நாட்டினராலும், உலக அளவில் அறிவியல் துறை மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது; ஆங்கிலத்தைத் தாய் மொழியாகக் கொள்ளாதவரும் ஆங்கிலத்தில் எழுதுகிறார்கள், என்பதாகும்

எனவே, **நம்மைப் பொருத்தவரை,** மும்மொழிக் கொள்கையின் அடிப்படையில் நோக்குவோமானால் 'உலக அளவில் ஆங்கிலம்: தேசிய அளவில் இந்தி: மாநில அளவில் தமிழ்' என்ற நிலையும், இருமொழிக் கொள்கை நிலைக்குமாயின். 'உலக அளவில் ஆங்கிலம்: தேசிய அளவில் ஆங்கிலம் மாநில அளவில் தமிழ்' என்ற நிலையும் உருவாகும். இந்திய அரசியலமைப்பில் இடம் பெற்றுள்ள மொழிகள் அனைத்தும் மைய அரசின் ஆட்சி மொழியாகவும் இருக்க வேண்டும் என்ற கோரிக்கையும் இருக்கிறது. தமிழகம் தவிர்த்து மற்ற மாநிலங்களில் இப்படி ஒரு கோரிக்கை எழுப்பப்பட்டதாகத் தெரியவில்லை. தமிழகத்திலும் தேசியக் கட்சிகளின் மொழிக் கொள்கை இந்தத் திசையில் அடியெடுத்து வைக்கவில்லை. நடைமுறைப்படுத்துவதில் ஏற்படும் சிக்கல்கள் காரணமாகவோ என்னவோ, இந்த அணுகுமுறை வழி, தீர்வுகள் காண்பது பற்றிய கருத்துகள் உருவாகும் நிலைக்கு இந்தக் கோரிக்கை விவாதிக்கப்படவில்லை. ஆனால் கோரிக்கை இருக்கிறது. அது வலுப்பெறவும் கூடும் **எது எப்படியிருப்பினும், நமது நாட்டின் மொழிக் கொள்கையில் இன்னும் பல கூறுபாடுகள் தெளிவு படுத்தப்பட**

++ ESCI Communications – December 1988.

**வேண்டிய நிலையில் இருக்கின்றன என்பதை இங்கு குறிப்பிட வேண்டும்.** நாம் இந்தப் பிரச்சனையின் பல கூறுபாடுகளை ஆய்ந்தவர்களாகவும், தெளிந்தவர்களாகவும், இறுதியாக உருவாகும் மொழிக் கொள்கையின் சூழலில் நமது மொழியின் முக்கியத் துவத்தையும், முன்னேற்றத்தையும் இந்திய ஒன்றியத்தின் அமைப்பின் வரன்முறைகட்குள் பாதுகாக்கும் திறன் உள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். நாம் மொழிப் பிரச்சினையை உணர்வு பூர்வமாக மட்டும் அணுகினால் போதாது. அறிவு பூர்வமாகவும், ஆழ்ந்த சிந்தனையின் அடிப்படையிலும், எதிர்கால நிகழ்வுகள் பற்றிய தொலை நோக்குடனும் பார்ப்பது தேவையாகும். **தமிழக அரசியல் தலைவர்கள், இயன்ற அளவில் குறைந்த பட்ச ஒருமை கண்டு, கட்சி கடந்த மொழிக் கொள்கை ஒன்றை உருவாக்க முயலுவதும் தேவையாகும்.**

வருங்காலத்தில் மைய அரசின் மொழிக் கொள்கையில் ஏற்படக் கூடிய மாற்றங்கள் எவ்வகைத்தாயினும், இன்றுள்ள அரசியலமைப்பின் கீழ், கீழ்க்காண்பன நடைமுறைப்படுத்தப்படலாம்:

★ **மாநிலங்களில் உள்ள மைய அரசு நிறுவனங்களில் அந்தந்த மாநில மொழியும் ஆட்சி மொழியாகப் பயன்படுத்தப்பட வேண்டும்.**

★ **நாடாளுமன்ற நடவடிக்கைகள், அங்கு இயற்றப்படும் சட்டங்கள், மைய அரசின் அமைச்சுகள் வெளியிடும் அறிக்கைகள் (Reports) வெளியீடுகள் (Publications) ஆகியன இன்று ஆங்கிலம், இந்தி ஆகிய இரு மொழிகளில் மட்டும் வருகின்றன. அவை, அரசியலமைப்பில் இடம் பெற்றுள்ள மொழிகள் அனைத்திலும் வெளியிடப்பட வேண்டும். இது மைய அரசின் பொறுப்பு.**

★ **ஆட்சி மொழியாக இடம் பெற்றுள்ள இந்தியின் வளர்ச்சிக்கு, மேம்பாட்டுக்கு வேண்டிய நடவடிக்கைகளை இந்திய அரசு எடுக்க வேண்டுமென இந்திய அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ளது. மாநிலங்களில் ஒவ்வொரு மாநில மொழியும் ஆட்சி மொழியாக, பயிற்று மொழியாகப் பயன்படுத்தப்படுமாதலின், அதற்கு ஒவ்வொரு மாநில மொழியும் தகுதி பெற வேண்டும். இதற்கு மாநிலங்களின் பொறுப்பு ஒரு புறமிருக்க, மைய அரசும் உதவ வேண்டும்.**

★ **இந்தி மொழியின் பயன்பாடு, வளர்ச்சி, மேம்பாடு ஆகியவற்றுக்கு மைய அரசில் தனித்துறை இருப்பது போல, ஒவ்வொரு மாநில மொழிக்கும், மேலே கூறப்பட்டுள்ள, ஆட்சிமொழி, மொழி**

**பெயர்ப்பு, மேம்பாட்டுப் பணிகட்காக மைய அரசில் தனித்துறை அமைய வேண்டும்.**

எது எப்படியிருப்பினும், இறுதி நிலையில் தாய் மொழி தான் எல்லா மட்டத்திலும் பாட மொழியாக இருக்க வேண்டும் என்பதில், எள்ளளவும் ஐயம் இல்லை. அந்த நிலையை அடைய நாம் மேற்கொள்ளும் பயணத்தில், இடையிடையே நிறைவேற்றப்பட வேண்டிய தேவைகள் எழக்கூடும் என்பதையும், அவற்றைப் புறக்கணிக்க இயலாது என்பதையும் மனத்திற்கொள்ள வேண்டும். பாட மொழியாகப் பயன்பட, ஒரு மொழிக்குத் தேவையான பரிமாணங்கள், முதல் நிலைக் கல்வி (Primary Education); இரண்டாம் நிலைக் கல்வி (Secondary Education); மூன்றாம் நிலைக் கல்வி (Tertiary Education) போன்ற, கல்வி நிலையைப் பொருத்து மாறுகின்றன.

பொதுவாகப் பாடநூல்கள் (Text books): பார்வை நூல்கள் (Reference Books): ஆய்வுத் தாளிகைகள் (Research Journals) ஆகியவற்றில் எந்தக் கல்வி நிலைக்கு எந்த அளவிற்கு நாம் தன்னிறைவு பெற வேண்டும் எந்த அளவிற்கு நாம் அந்நிய மொழிகளை, குறிப்பாக ஆங்கிலத்தை, நம்பி இருக்கலாம். இருக்க வேண்டும் என்பதில் நமக்குத் தெளிவு வேண்டும் **இன்றைய உலகில், முழுமையான தன்னிறைவு என்பது எந்த மட்டத்திலும் தேவை இல்லை என்பது உண்மை: ஆனால் மற்றவரைச் சார்ந்திருப்பதற்கும் ஒரு வரம்பு வேண்டும். கப்பல் இல்லாவிட்டாலும் கட்டுமரமும் இல்லாது கடற்பயணம் மேற்கொள்ள இயலாது: எந்தக் கலத்தில் எதுவரை செல்லலாம் என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும்.**

உயர்நிலைப் பள்ளிக் கல்வி. மேல்நிலைப் பள்ளிக் கல்வி: பல்கலைக் கழகக் கல்வியில் இள நிலைப் பட்டம், முது நிலைப் பட்டம்: தொழிற்கல்வியில் சான்றிதழ், பட்டயம், பட்டப் படிப்பு நிலைகள் உயர்நிலை ஆய்வு, ஆகிய ஒவ்வொரு கட்டத்திற்கும் நாம் பாடநூல், பார்வை நூல், ஆய்வுத் தாளிகை ஆகியவற்றில் அந்தந்த நிலைக்கு ஏற்ற அளவில் பெற வேண்டிய குறைந்த பட்சத் தன்னிறைவு பற்றிய தெளிவும், அனுமதிக்கத் தக்க சார்பு நிலை பற்றிய கணிப்பும், அவற்றை அடைவதற்கான பாதை பற்றிய விவரமும், செய்ய வேண்டிய பயணம் பற்றிய முடிவும், பயணத்திற்கேற்ற வாகனம் பற்றிய தரவும், நமக்குத் தெரிந்திருக்க வேண்டும் குறுகிய கால, நீண்ட காலத் திட்டங்கள் வகுத்து, அவற்றின் மூலம் நாம் நமது குறிக்கோளை அடைய முயல வேண்டும்

இவை தொடர்பான சில சிந்தனைகள் இந்நூலில் காணப்படும் கட்டுரைகளில் இடம் பெற்றுள்ளன

ஒரு புறம் தமிழ் மற்ற மாநில மொழிகளுள் ஒன்றாக இடம் பெற்றிருக்கின்றது எனினும், மற்ற மொழிகள் பலவற்றிற்கு இல்லாத சில தனிச் சிறப்புகள் தமிழுக்கு உண்டு. முதலாவதாக, வடமொழி போன்று, தமிழ் ஒரு செவ்வியல் மொழி நீண்ட பாரம்பரியம் உள்ள இரு இந்திய மொழிகளுள் தமிழும் ஒன்று. இந்தியப் பண்பாடு, கலை, இலக்கியம், ஆன்மிகம், தத்துவம் ஆகியவற்றை முழுமையாக உணர, வடமொழி மட்டும் போதாது தமிழும் தேவை இது நாம் கூறுவதன்று. இவ்வாறு பல ஆய்வாளர்கள், அறிஞர்கள் கூறியுள்ளனர் எப்படி ஐரோப்பியப் பண்பாட்டிற்கு இலத்தீனும், கிரேக்கமும் அடிப்படையோ, அதைப் போல இந்தியப் பண்பாட்டிற்கு வடமொழியும், தமிழும் அடிப்படை எனினும், செவ்வியல் மொழிகள் வரிசையில் தமிழ் இடம் பெறவில்லை. இன்று இந்திய அரசு, வடமொழி, பாரசீகம், அரேபியம் ஆகியவற்றைச் செம்மொழிகளாக ஏற்றிருக்கிறது. அவையொத்த பழைமையும், பாரம்பரியமும், இலக்கிய இலக்கண வளமும், இரு தலையாய பண்டைப் பெரும் காப்பியங்களும் கொண்ட தமிழ் மொழியைச் செவ்வியல் மொழிகள் வரிசையில் சேர்ப்பதற்கு எதிர்ப்பு இருக்க நியாயமில்லை இருப்பினும், முறையோடும், மற்ற மொழி அறிஞர்களின் ஒத்துழைப்போடும், மைய அரசில் பொறுப்பேற்றிருக்கும் தலைவர்களின் ஆதரவோடும், ஒத்துழைப்புடனும், இந்தக் குறிக்கோளை நாம் அடைய வேணடும். நாளைய உயர்வை நாம் முயன்று பெறலாம் பெற அனைவரும் முயலலாம். ஆனால், பண்டைப் பெருமை என்பது, வேண்டினால் கிடைப்பதன்று. விலை கொடுத்துப் பெறுவதன்று. அது ஒரு சில இனங்கட்கே உரித்தான சிறப்பு பரிணாம வளர்ச்சியில் நமது பண்பாடும், மன வளமும் அடைந்திருந்த நிலைக்கு ஓர் அத்தாட்சி வேரின் ஆழமிருப்பின், வேகம் மிகுந்த புயலிலும் மரம் விழுந்து விடாது நாம் எத்தனையோ கலாச்சாரப் புயல்களைத் தாங்கி நின்றதன் இரகசியம் நமது பாரம்பரிய வலிமை தான்

அடுத்ததாக, இந்திய மொழிகளில், இந்தியத் துணைக் கண்டத்தின் எல்லை கடந்து தேசிய அளவில் ஆட்சி மொழி எனும் தகுதி பெற்றிருக்கும் மொழிகள் தமிழ், உருது, வங்காளம் ஆகும் தமிழ், இலங்கையில் ஆட்சி மொழித் தகுதி உடையது சிங்கப்பூரில் ஆட்சி மொழித் தகுதி உடையது. மலேசியா, மொரீஷியஸ் போன்ற நாடுகளில் அங்கீகாரம் பெற்ற மொழி: உலகின் பல நாடுகளில் தமிழர்கள் கணிசமான தொகையினராக

வாழ்கிறார்கள். **இன்று தமிழர் ஒரு மொழியினர்: பல நாட்டினர்.** தமிழ் இனத்திற்கு, மிகவும் முன்னேறிய, வளர்ச்சி பெற்ற இலக்கியம், இசை, நாட்டிய, பாரம்பரியம் உண்டு தமிழ்க் கல்வியும், தமிழ்ப் பண்பாடும், தமிழர் பரவியுள்ள சமுதாயங்களில் பரவலாக இடம் பெறுவதற்கான வாய்ப்புகட்கு நாம் உதவ வேண்டும் உதவ இயலும். மொழிக் கல்வியை எளிமைப்படுத்தவும், நவீனப்படுத்தவும், தேவைக்கேற்ப மாற்றங்களை ஏற்கவும் நாம் சமைவாயிருக்க வேண்டும்

இருபதாம் நூற்றாண்டு, சமுதாய வாழ்வில், அரசியலமைப்பில், பொருளாதார நிலையில், அறிவியலில், தொழில்நுட்பத்தில், எண்ணற்ற முன்னேற்றங்களை. புரட்சிகரமான மாற்றங்களைக் கண்டிருக்கிறது. அவற்றுள் சிகரம் போன்றது, **'கல்வி' பெற்றுள்ள முக்கியத்துவம்** தான். வேளாண்மை நாகரிகத்தின் பெரும்பகுதிக் காலம் அணிகலனாக, அலங்காரப் பொருளாக, பண்பாட்டுத் தேவையாக மட்டுமே இருந்த கல்வி, தொழில் நாகரிகத்தில் பொருளாதார வளர்ச்சிக் கருவியாக உருவம் பெற்றது. இந்த நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் அது ஒரு புதிய யுகத்தையே (Knowledge Era) உருவாக்கி, சர்வ வல்லமை பெற்ற சகதியாக அவதாரமெடுத்திருக்கிறது. வரலாறு தெரிந்த காலந்தொட்டு இன்று வரை மனித சமுதாயம் கண்ட உண்மைகளின், அறிவு வளர்ச்சியின் கருவூலமாக இருப்பது, தலைமுறைக்குத் தலைமுறை தாங்கிவந்து வழங்குவது மொழியேயாகும் களப்பிரர் காலம் தொட்டு, இன்று வரை அமைநத காலததில் பெரும் பங்கு, தமிழ் மண்ணில் ஏற்பட்ட வளர்ச்சியும் மேம்பாடும் பிற மொழி வழி இடம் பெற நேர்ந்த அடிமை நிலை; அதனால் நமது மொழிக்கு நீண்ட கால ஏழ்மை, தொடர்ந்து புறக்கணிக்கப்பட்ட நிலை இருந்து வந்திருக்கிறது. இந்தக் காலப்பகுதியில், கடந்த முந்நூறு ஆண்டுகளில் மனித சமுதாயம் இரண்டு புது யுகங்களைக் கண்டிருக்கிறது. நமது தாய் மொழி இந்த மகத்தான வளர்ச்சியின், மேம்பாட்டின் பயனை எல்லாம் இழந்து நிற்கிறது இன்றைய அறிவியல் உலகம், நாம் இதுவரை கண்டிராத வேகத்தில் வளர்ந்து கொண்டிருக்கிறது முன்னேறிக் கொண்டிருக்கிறது **ஒருபுறம், நாம் இழந்ததை ஈடு செய்ய வேண்டும். இன்னொரு புறம், நாம் இன்றைய முன்னேற்ற வேகத்திற்கு ஈடு கொடுக்க வேண்டும்.** இவையெல்லாம் சாதாரணமான பணிகளல்ல. ஒருபுறம், வளர்ந்த அறிவியலை, தொழில்நுட்பத்தை மக்கள் மன்றத்திற்கு எடுத்துச் செல்லவேண்டும் இன்னொரு புறம், உலகின் எந்தப் பகுதியில் உயர்மட்ட ஆய்வுகள் மூலம் உண்மைகள் காணப்படினும் அதை அறிந்து, தெளிந்து நமதாக்கிக் கொள்ளும் ஆய்வினர் குழு நமக்கு வேண்டும் புலரும் புதியன அனைத்தும் மிகுந்த கால இடைவெளியின்றி, நமது மொழியில் இடம்

பெற வேண்டும். இதற்கான நிறுவனங்களை நாம் உருவாக்க வேண்டும்.

இன்றைய உலகில், எந்தத் துறையிலும், முன்னேற்றம் காண்பதற்கு அந்தத் துறை வல்லுநர் வேண்டும். அவர்களை உருவாக்கவும், அவர்கள் செயல்படத் துணை புரியவும் தகுந்த நிறுவனங்கள் வேண்டும். தமிழ், கல்வி மொழியாக, ஆட்சி மொழியாக, அதன் முழுப் பரிமாணத்தையும் அடைய அதற்குத் தேவையான நிறுவனங்கள் உருவாக்கப்பட வேண்டும். **மனித சமுதாயத்தின் பல்துறை வளர்ச்சியில் நிறுவனங்களின் முக்கியத்துவத்தை நாம் அண்மைக் காலம் வரை முழுமையாக உணரவில்லை. இன்று, நிறுவனங்கள் இன்றியமையாத வளர்ச்சிச் சாதனங்களாக எண்ணப்படுகின்றன.**

காலத்தொடு இயைந்து, பரிணாம முறையில் ஏற்படும் வளர்ச்சி இயற்கையாக நடைபெறுவது. ஆனால் நாம் நீண்ட காலத் தேக்கத்தை ஈடு செய்வதாயின், நாம் விரும்பும் திசையில் முன்னேற்றத்தை வழி நடத்துவதாயின், **திட்டமிட்டுச் செயலாற்ற வேண்டும். தமிழ் வளர்ச்சிக்கு, மேம்பாட்டுக்கு, குறுகிய கால, நீண்ட காலத் திட்டங்கள் தேவை. இங்கு தமிழறிஞர்கள், தமிழ்ப் புலவர்கள் ஆகியோர் ஈடுபாடு மட்டும் போதாது. தமிழைப் பயன்படுத்துவோர் அனைவரும் ஈடுபட வேண்டும். ஈடுபடும், பங்கேற்கும் உரிமையும் அவர்கட்கு உண்டு. அது அவர்களது கடமையும் கூட.**

தமிழ் வளர்ச்சி என்பது ஏதோ தங்களது ஏகபோக உரிமைபோல, அதில் தாங்கள் மட்டுமே உண்மையான ஈடுபாடு கொண்டவர்கள் போல, சிலர் எழுதுவதும், பேசுவதும் நாம் காணும் ஒன்று. இது ஏற்கததக்க அணுகுமுறை அன்று. 'சந்திர மண்டலத்தியல் கண்டு தெளிவோம் சந்தி தெருப் பெருக்கும் சாத்திரம் கற்போம்' என்றான் பாரதி அநதச் சந்தி தெருப் பெருக்கும் சாத்திரத்தில் சிறு மாற்றம் காண வேண்டுமானால், அதற்குச் சந்திர மண்டலத்தியல் காணும் அறிஞர்கள் போதாது சநதி தெருப் பெருக்குபவர் யோசனையும் தேவை, ஈடுபாடும் தேவை பரவலான பங்களிப்பின் மூலம் தான் நாம் அடி முதல் நுனி வரை பயனுறு மொழியைப் படைக்க முடியும் **நமது சமுதாயத்திற்கு இன்று மாட்டு வண்டியும் தேவை. வானூர்தியும் தேவை. மாட்டு வண்டியை நவீனப்படுத்தும் வழிகளும் முக்கியம். வானூர்திக்கு உருவமைக்கும் நூல்களும் முக்கியம்.** தமிழ் வளர்ச்சிக்கு எல்லா மட்டத்திலுமுள்ள படைப்போர், பயன்படுத்துவோர் பங்களிப்புத் தேவை. இவற்றைப் பெறும் வகையில் நிறுவனங்கள், அமைப்புகள் அமைய வேண்டும்.

அகர முதலி, பல்வகைத் துறைக் கலைக் களஞ்சியங்கள், கலைச் சொல் தொகுப்புகள், இலக்கணம் போன்ற, பார்வை நூல்கள் (Reference Books) குறிப்பிட்ட கால இடைவெளிகளில், **அங்கீகாரம் பெற்ற அமைப்புகள், நிறுவனங்கள் மூலம் முறையாக வெளி யிடப்பட வேண்டும்.** தேவைக்கேற்ப தரப்படுத்தும் பணி தொடர்ந்து நடைபெற வேண்டும். இவையொத்த, மொழி தொடர்பான செயல் திட்டங்களில் பங்கேற்கும் உறுப்பினர் தேர்வு, நிறுவனங்களின் அமைப்பு ஆகியவற்றில் சில மரபுகள் உருவாக்கப்பட்டு, நடைமுறைகள் சர்ச்சைகட்கு அப்பாற்பட்டவையாக அமைய வேண்டும்.

நமது முன்னேற்றப் பயணத்திற்கு மொழி முக்கியமான வாகனம். அது தேவையான பாரத்தையும் ஏற்க வேண்டும். செல்ல வேண்டிய தூரத்தையும் கடக்க வேண்டும். உரிய நேரத்தில், உரிய இடத்தை அடைய உறுதுணையாக அமைய வேண்டும் **மொழி, நாம் வளர்ப்பது: நம்மை வளர்ப்பதும் மொழியே. மனிதன் படைப்பவன்: தான் படைத்ததன் மூலம் பயன் பெறுபவன். இவை வாழ்வின் இரு பக்கங்கள்.**

பொதுவாகத் தமிழ் வளர்ச்சி தொடர்பான, மொழிக் கொள்கை தொடர்பான சில எண்ணங்கள் இந்நூலிலுள்ள கட்டுரைகளில் இடம் பெற்றிருக்கின்றன. அவை பெரும்பாலும் பத்திரிகைகளில், குறிப்பாகத் 'தினமணி'யில் இடம் பெற்றவை. 'தினமணி' ஆசிரியருக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒவ்வொரு கட்டத்திலும் கட்டுரைகளைத் தட்டச்சுச் செய்த திரு.பையூர் கி.இலக்குமிநாராயணன் அவர்களின் உதவி நினைவு கூரத்தக்கது

வழக்கமாக எனது நூல்களை வெளியிடும் பாரதி பதிப்பகத்தினர் இந்த நூலையும் நல்ல முறையில் வெளியிட முன்வந்தமைக்கு நன்றியுடையேன். இந்நூலில் இடம் பெற்றுள்ள எண்ணங்கள் தமிழ் மொழி வளர்ச்சிக்கும், வளர்ச்சிக்கான கொள்கை ஆக்கத்திற்கும், திட்டங்களை மேற்கொள்ளவும் ஓரளவாவது துணையாக அமையும் என்ற நம்பிக்கையுடன் தமிழ் மக்கட்குப் படைக்கிறேன்.

**வா.செ. குழந்தைசாமி**

சென்னை
ஜூலை, 1996.

# பதிப்புரை

டாக்டர் வா.செ. குழந்தைசாமி உலகறிந்த அறிவியல் அறிஞர், தமிழுணர்ந்த தகைமையாளர். நாட்டு முன்னேற்றம் என்னும் நாணயத்திற்கு அறிவியல் வளர்ச்சி ஒரு பக்கமாகவும், தமிழ் வளம் மறுபக்கமாகவும் இருக்க வேண்டுமெனச் சொல்லும் நாணயக்காரர்

அவருடைய ஆராய்ச்சிக் கட்டுரைகள் அடங்கியுள்ள **"தாய்மொழி பெறாததைச் சமுதாயம் பெறாது"** எனும் இந்நூலை வெளியிடுவதில் பாரதி பதிப்பகம் பெருமை கொள்கிறது.

அறிஞர் குழந்தைசாமி இந்நூலில் அரிய கருத்துகளை அனைவரின் சிந்தனைக்குத் தந்திருக்கிறார் **கருத்துகள் விவாதத்திற்குரியனவாக இருக்கலாம்; ஆனால் இவை பற்றிச் சரியான ஒரு முடிவு எடுக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்.** இல்லையேல் முன்பே தொழில் யுகம் முழுவதையும் இழந்து பின் தங்கி விட்ட நாம் இனி என்றுமே நிகழ்கால வளர்ச்சி நிலையை எட்டிப் பிடிக்க முடியாதவர்களாகி விடுவோம் என்பதைச் சுட்டிக்காட்டுகிறார்.

கருத்துகள் விவாதத்திற்குரியன என்று ஆசிரியர் கூறியிருந்தாலும் விவாதத்தின் முடிவில் இவர் கருத்து ஏற்புடையது என ஒப்பும் வகையில் பொருத்தமான ஆய்வு முடிவுகளைத் தந்துள்ளார்.

பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன் அவர்கள் டாக்டர் வா.செ.குழந்தைசாமி அவர்களின் 'வாழும் வள்ளுவம்' என்னும் நூலுக்கு அளித்துள்ள அணிந்துரையில், "அறிவியலறிஞன் உண்மைகளைக் காணப்புறப்படுகையில் தடைகள் வரின் அவை கண்டு அஞ்சுவதில்லை; அவன் செய்யும் முயற்சியில் தோல்வி ஏற்பட்டாலும் அதற்காகக் கவலைப் படுவதுமில்லை" எனக் குறிப்பிட்டுள்ளார். அக்கூற்றை மெய்ப்பிக்கும் வகையில் வா.செ. குழந்தைசாமி அவர்கள் முனைப்போடும், துடிப்போடும் விருப்பு வெறுப்பற்ற அறிவியல் அணுகு முறையோடும் தமக்குத் தோன்றிய உண்மைகளைத் திறந்த மனத்தோடு வெளிப்படுத்தி யிருக்கிறார்.

நம் நாட்டில் அறிவியல் தொழில் நுட்பக்கல்வி, ஆய்வுக் கூடங்கள், உலகு போற்றும் அறிவியல் அறிஞர்கள் இருக்கிறார்கள். இருந்தாலும் நம் மண்ணில் அறிவியல் - தொழில் நுட்ப மரபு வளரவில்லை. இம்மரபு வளர வேண்டுமாயின் மக்களைச் சென்றடைய வேண்டிய கல்வியறிவு முழுதும் மக்கள் மொழியில் இருத்தல் வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார்.

தாய்மொழியைப் பயிற்று மொழியாக்குவதிலும் அறிவுத் துறைகளில் ஏற்பட்ட முன்னேற்றங்களை மக்கள் தாய்மொழியில் பெறச் செய்வதிலும் நாம் போதிய வளர்ச்சி காணவில்லை என்பதைக் குறிப்பிட்டு, இதைச் செய்ய வேண்டுமானால் பண்டைய இலக்கிய மொழியான தமிழை, அறிவுத்துறைகள் அனைத்திலும் ஆங்கிலம் போலப் பயன்படும் மொழியாக மாற்ற வேண்டும்: தமிழில் அறிவியல் நடை உருவாக வேண்டும் என்கிறார்.

கலங்கிய நீரில் கிடக்கும் பொருள் கண்ணுக்குத் தெரியாது. ஆனால் தெளிந்த நீரில் ஆழத்தில் கிடக்கும் பொருள்கூட மேலே அருகே உள்ளதுபோல நன்றாகத் தெரியும். நடைத் தெளிவின்மையால் என்ன சொல்லப்பட்டுள்ளது என்பதைப் புரிந்து கொள்ள முடியாது செய்து விடும் எழுத்தாளர்கள் உண்டு. ஆனால் டாக்டர் வா.செ.குழந்தைசாமி அவர்களோ, எளிய நடையில் அரிய கருத்துகளையும் மிக எளிதாகப் புரிந்து கொள்ளும் வகையில் எழுதியிருக்கிறார்.

வளம் மிகுந்த தமிழ் நிலத்தில் தரிசு மிகுந்துள்ளது. உழுது பண்படுத்துவதற்குரிய கருவிகளையும், நல்ல விளைச்சலைப் பெற வீரிய வித்துகளையும் ஆசிரியர் தந்துள்ளார். அவர் தந்துள்ள அறிவியலணுகு முறையாகிய கருவியையும், தமிழ் வளர்ச்சிப் பணியாகிய விதைகளையும் கொண்டு வளத்தைப் பெருக்குவோம்.

இவ்வரிய நூலை வெளியிட, பாரதி பதிப்பகத்திற்கு அனுமதியளித்த அறிஞர் பெருமகனார்க்கு எங்கள் நெஞ்சார்ந்த நன்றி.

**பாரதி பதிப்பகம்**

# 1

# தாய்மொழி பெறாததைச் சமுதாயம் பெற்றாது

## 1. திட்டமிட்ட மேம்பாடு

நமது நாடு விடுதலை பெற்றபொழுது நம்மை முன்னோக்கி நின்ற பிரச்சினைகள் பல எனினும், முக்கியமானது நமது வறுமை; நமது மக்களின் ஏழ்மை நிலை. பஞ்சமும், பட்டினியும் நமது மக்களை நீங்கா நிழல் போல நீளத் தொடர்ந்து வந்திருக்கின்றன. நமது அன்றைய முதல் பிரச்சினையும் ஏழ்மை தான்; இன்றைய முதல் பிரச்சினையும் ஏழ்மை தான். உலகில் செல்வம் கொழிக்கும் நாடுகளோடு நம்மை ஒப்பிடாவிட்டாலும், நம்மைப் போன்று வளரும் நாடுகள் (Developing countries) என்ற வரிசையில் தனி நபர் வருமானம் என்று பார்க்கும்பொழுது கூட, நாம் மிகவும் கீழே தான் இருந்தோம்; இன்றும் இருக்கிறோம்.

பொதுவாக இந்தியத் துணைக்கண்டம் இயற்கை வளங்கள் நிறைந்த நாடு; ஆனால் ஏழ்மையில் வாடும் ஒன்று ''வளம் நிறைந்த நாடு; வறுமையில் வதியும் மக்கள்'' என்ற இரு துருவ நிலை (Extremes) நம்மோடு இணைந்தே வந்திருக்கிறது. பொருளாதார வளர்ச்சிப் பாதையில் நாம் முழுமையாக ஒரு யுகம் பின்தங்கி விட்டதே இந்த நிலைக்கு முதற்காரணம். மேலை நாடுகள் 18 -ஆம் நூற்றாண்டின் இறுதியில் தொழில் யுகத்தில் (Era

of Industrial Civilization) அடியெடுத்து வைத்தன. வேளாண்மைப் பொருளாதாரத்திற்கு மாறின. தொழில் யுகத்தின் முக்கியக் கூறுபாடு உற்பத்தியைப் (Productivity) பெருக்குவது. வேளாண்மை நாகரிகம், கைத்தொழிலின் (Craft) அடிப்படையில் அமைவது. தொழில் நாகரிகம், தொழில் நுட்பத்தின் (Technology) அடிப்படையில் அமைந்தது. தொழில் நுட்பத்தின் உற்பத்தித் திறன் கைத்தொழிலுக்கு இல்லை. தொழில்நுட்பம், இருக்கின்ற வளங்களின் பயனை மிகுக்கிறது; இதுவரை பயன்படுத்தப் படாதிருந்த வளங்களைக் காணவும், அவற்றை நமது தேவைகட்குக் கையாளவும் உதவுகிறது. தொழில் நுட்பம் (Technology) என்ற கருவியும், அதைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட தொழிற் பொருளாதாரமும் (Industrial Economy) 18-ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலிருந்து மேலை நாட்டினரின் வளர்ச்சிக்குக் கைகொடுக்கத் தொடங்கின. நாம் ஏறத்தாழ 150 அல்லது 200 ஆண்டுகள் பின்தங்கி விட்டோம். **அந்தக் காலப் பகுதி, மனித வரலாற்றில் முக்கியமான ஒரு புது யுகம் தொடங்கி, வளர்ந்து, விழுதிறக்கி, விரிந்து, அடுத்த யுகத்தின் வைகறையும் மலர்ந்த காலம் என்பது குறிப்பிடத்தக்கது.**

நாம் விடுதலை பெற்றுத் தொழில் யுகத்தில் அடியெடுத்து வைக்கும் முயற்சியில் ஈடுபட்ட காலப் பகுதியில், முன்னேறிய நாடுகள், உயர் தொழில்நுட்ப (High Technology) யுகம் என்ற அடுத்த வளர்ச்சி நிலையில் அடியெடுத்து வைக்கத் தொடங்கி விட்டன. சுருக்கமாகச் சொல்வதானால், நாம் மனித சமுதாயத்தின் வளர்ச்சியில் ஒரு யுக இடைவெளியை (Gap of an Era) ஈடு செய்ய முயன்று கொண்டிருக்கிறோம்.

''பழையன கழிதலும், புதியன புகுதலும், வழுவல கால வகையினானே'' என்பது நன்னூல். இது மனித சமுதாயத்தின் பரிணாம வளர்ச்சியில் தானாக ஏற்படுவது. ஆனால் நம்மைப் போன்று, ஒரு யுகப் பகுதி, அதாவது தொழில் யுகம் முழுவதையும் இழந்து பின்தங்கி விட்ட இனம் நிகழ்கால வளர்ச்சி நிலையை எட்டிப் பிடிக்க வேண்டுமாயின், சில துறைகளில், பழையன

கழியும் வரை பொறுத்திருக்காது, பழையனவற்றைக் கழிக்க வேண்டும். புதியன, தாமாகப் புகும் வரை பொறுத்திருக்காது, புதியனவற்றைப் புகுத்த வேண்டும். **பழையன அனைத்தும் கழிக்கப்படத்தக்கன அல்ல. புதியன அனைத்தும் புகுத்தப்படத் தக்கன அல்ல. எனவே பழையனவற்றில் எதைக் கழிப்பது, எதைக் காப்பது என்பது போன்ற பிரச்சினைகள், பட்டறிவும், படிப்பறிவும் கொண்ட சான்றோர்களால் நிர்ணயிக்கப்பட வேண்டும்.** இந்த அணுகுமுறையில் தான் நாம் திட்டமிட்ட மேம்பாடு (Planned Development) எனும் தத்துவத்தை ஏற்று, அறிஞர்கள், வல்லுநர்கள் கொண்ட திட்டக்குழு மூலம் நமது வளர்ச்சி முயற்சிகட்கு வழி வகுத்தோம். அரசு, அல்லது ஓர் அரசு நிறுவனம் வகுக்கும் திட்டங்களின் அடிப்படையில் பொருளாதார வளர்ச்சி காணும் பாதையை முதலில் வகுத்தது சோவியத் ஒன்றியம். சமதர்ம நாடுகள் இவ்வழியில் தொடர்ந்தன. குடியரசு நாடுகளில் திட்டமிட்ட மேம்பாட்டுக்கு இந்தியா முன்னோடியாகும்.

## 2. கடந்த காலச் சாதனைகள்

முதலாவது ஐந்தாண்டுத் திட்டம் 1951-52இல் தொடங்கப்பட்டது. அன்று முதல் கடந்த 45 ஆண்டுகள் தொடர்ந்து ஐந்தாண்டுத் திட்டங்கள் மூலம் எல்லாத் துறைகளிலும் கணிசமான வளர்ச்சியைக் கண்டிருக்கிறோம். சான்றாகச் சில புள்ளி விவரங்கள் கூறுவது பொருத்தமாகும்.[1]

i. நமது உணவு உற்பத்தி 1950-51இல் 50.9 மில்லியன் டன்னாக இருந்தது. 1990-91இல் அது 176.2 மில்லியன் டன்னை எட்டியது. நீர்ப்பாசன வசதி பெற்ற விளைநிலம் 22.6 மில்லியன் ஹெக்டேரிலிருந்து 1990-91இல் 82.8 மில்லியன் ஹெக்டேர் ஆக உயர்ந்திருக்கிறது.

---

1. இந்தியா, 1992 : பதிப்புத் துறை இயக்குநர், இந்திய அரசு, தில்லி, 1993

ii. பேறு கால ஆயுள் எதிர்பார்ப்பு (Life Expectancy at Birth) 1941-51 காலப் பகுதியில் 32 ஆண்டுகளாக இருந்தது. இது 1991-96 காலப் பகுதியில் 61.1 ஆக உயர்ந்துள்ளது.

iii. நமது வளர்ச்சிக்கு, கிராமங்கட்கு மின்சக்தி வழங்குதல் ஒரு நல்ல எடுத்துக்காட்டு. 1956இல் 7294 கிராமங்கட்கு மின்சக்தி வசதி செய்யப்பட்டிருந்தது. இது 1991இல் 4,91,266 ஆக உயர்ந்திருக்கிறது. மின்சக்தி உற்பத்தி 1947இல் 1400 மெகாவாட் ஆக இருந்தது: 1991-92இல் 69,000 மெகாவாட் ஆக உயர்ந்திருக்கிறது.

iv. நிலக்கரி உற்பத்தி 33.0 மில்லியன் டன்னில் இருந்து 1991-92இல் 229.3 மில்லியன் டன்னாக உயர்ந்திருக்கிறது.

v. எஃகு உற்பத்தியில் 1.5 மில்லியன் டன் அளவில் இருந்த நாம் 1990-91இல் 11.1 மில்லியன் டன் அளவை எட்டியிருக்கிறோம்.

vi. எரிசக்தி எண்ணெய் உற்பத்தி 1950-51இல் 0.26 மில்லியன் டன்னில் இருந்து 1990-91இல் 33.0 மில்லியன் டன்னிற்கு உயர்ந்திருக்கிறது.

vii. தொழில் துறையில் பல்வகைப் பொருள்கள் உற்பத்தியில் கணிசமான வளர்ச்சி கண்டு தொழில் உற்பத்தியில் உலகில் முதல் பத்து நாடுகளில் நாம் இடம் பெற்றிருக்கிறோம்.

**இன்னும் பல கூறலாம். ஆனால் நமது பொருளாதார வளர்ச்சியைப் பட்டியலிடுவது இங்கு நமது நோக்கமன்று. வளர்ச்சியை அடையாளம் காட்டும் சான்றுகளாக, மாதிரிக்காகச் சில துறைகளில் ஏற்பட்ட வளர்ச்சி மட்டும் இங்கு கூறப்பட்டிருக்கிறது.**

### 3. அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சி

தொழில்யுகம், அறிவியல்-தொழில்நுட்பத்தின் (Science and Technology) அடிப்படையில் அமைந்தது என்பதை முன்பே

கூறினோம். இருபதாவது நூற்றாண்டு பல மகத்தான சாதனை களைத் தன்னுள் கொண்டது. அறிவியலும், தொழில்நுட்பமும் விசுவரூபம் எடுத்து, மனித வாழ்வின் பொருளாதாரம், கலை, இலக்கியம், அன்றாட வாழ்க்கை முறை, அனைத்திலும் ஊடுருவி நிற்கும் பெரிய சக்தியாக வளர்ந்தது இந்நூற்றாண்டின் தலையாய கூறுபாடு.

அறிவியலும் தொழில்நுட்பமும் வளர்ச்சிக் கருவி மட்டுமன்று. அது மனித மேம்பாட்டுக்கும் துணை நிற்கும் சக்தியாகும். அதன் தாக்கம் இடம் பெறாத வாழ்க்கைக் கூறுபாடு எதுவும் இல்லை. பொருளாதார வாழ்வு மட்டுமன்றி நமது பழக்க வழக்கங்கள், மரபுகள், இசை, நாடகம், இலக்கியம் போன்ற கலைப் பகுதிகள் அனைத்தும் அறிவியலின், தொழில்நுட்பத்தின் தாக்கத்திற்கு உட்பட்டவை. **சுருக்கமாகச் சொல்வதானால், சமுதாய முன்னேற்றம், அரசியல் முன்னேற்றம், பொருளாதார முன்னேற்றம் அனைத்திலும் அறிவியலின், தொழில்நுட்பத்தின் பங்களிப்பு, கணிசமாக உண்டு.**

நாம் விடுதலை பெற்றது முதல் அறிவியல் கல்வியில், ஆராய்ச்சியில், தொழில்நுட்பக் கல்வியில், அத்துறையில் புதிய புனைவுகளில் மிகுந்த அக்கறையும் ஈடுபாடும் காட்டி வந்துள்ளோம். ஆய்வுப்பணிகட்கு ஒவ்வொரு திட்டத்திலும், திட்டத்திற்குத் திட்டம் கூடுதலான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. நாடு முழுவதும் அரசுத் துறைகளில் ஆய்வு நிலையங்கள் அமைக்கப்பட்டன. தனியார் துறையிலும் ஆய்வு நிலையங்கள் அமைக்கப்படுவது ஊக்குவிக்கப்பட்டது. மைய அரசின் அறிவியல்-தொழில்நுட்பத்துறை, 1992இல் வெளியிட்டுள்ள புள்ளி விவரப்படி, நமது நாட்டில், பல்வகை நிர்வாக அமைப்பின் கீழ் இருக்கும் 2519 ஆய்வு நிலையங்களின் விவரம் பின்வருமாறு:[2]

---

2. Directory of R & D Institutions, 1992: Department of Science and Technology, Ministry of Science and Technology, Government of India, New Delhi. 1992.

| | | |
|---|---|---|
| i. | மைய அரசு: அரசு ஆய்வு நிலையங்கள், அரசின் கீழ் வரும் தொழில் நிறுவனங்களில் உள்ள ஆய்வு நிலையங்கள் | 522 |
| ii. | மாநில அரசின் கீழ் வரும் ஆய்வு நிலையங்கள் | 713 |
| iii. | கல்வித்துறை: பல்கலைக் கழகங்கள்: தேசியத் தகுதி பெற்ற நிறுவனங்கள். | 196 |
| iv. | தனியார் துறையும் மைய/மாநில, அரசும் இணைந்து நடத்தும் நிலையங்கள் | 1088 |

நமது அறிவியல், தொழில்நுட்பத் துறை வளர்ச்சியின் பரிமாணங்களை உணரக் கீழ்க்காணும் தகவல்கள் உதவும்.[3, 4]

i. 1951இல் அறிவியல் தொழில்நுட்பத் துறையில் கல்வியும் பயிற்சியும் பெற்றோர் (S&T Manpower) தொகை 1.9 இலட்சம். இது 1990இல் 38.1 இலட்சத்தை எட்டுமென மதிப்பிடப்பட்டது.

ii. அறிவியல் தொழில்நுட்ப ஆய்வுக்கு நாம் 1951இல் ரூ.5.5 கோடி செலவு செய்தோம். 1992-93இல் இதற்காக நாம் செலவிட்ட தொகை ரூ.5141 6 கோடியாகும்.

iii. 1992-93 கணக்குப்படி நமது தேசிய மொத்த உற்பத்திப் பொருள் மதிப்பீட்டில் (GNP) 0.83 சத விகிதம் போல நாம் ஆய்வுக்குச் செலவிடுகிறோம் 1986-87இல் நாம் 1.2 சதவிகிதம் அளவை எட்டியிருந்தோம். இது எவ்வளவு கணிசமானது என்பதை மற்ற நாடுகளுடன் ஒப்பிட்டால் புரியும்

3. Research and Development Statistics 1992-93 : Department of Science and Technology, Ministry of Science and Technology, Govt. of India, New Delhi, 1994.

4. Pocket Data Book, 1993 : Department of Science and Technology.

| | | |
|---|---|---|
| இந்தியா | 1.20 | (1987) |
| | 0.83 | (1992) |
| பாகிஸ்தான் | 1.0 | (1987) |
| இந்தோநேஷியா | 0.2 | (1988) |
| எகிப்து | 0.2 | (1982) |
| பிரேசில் | 0.4 | (1985) |
| சிங்கப்பூர் | 0.9 | (1987) |

வளர்ந்த சில நாடுகள் கூட, 1.0 சத விகிதத்திற்குப் பக்கத்தில் தான் செலவிடுகின்றன.

| | | |
|---|---|---|
| யுகோஸ்லாவியா | 1.4 | (1988) |
| ஆஸ்த்ரேலியா | 1.3 | (1988) |
| ஆஸ்த்ரியா | 1.3 | (1985) |
| இத்தாலி | 1.1 | (1988) |

iv. இன்று உலகில் 200க்கு மேற்பட்ட நாடுகள் இருந்தாலும் அறிவியல், தொழில்நுட்ப ஆய்வின் அடிப்படையில் வெளியிடப்படும் கட்டுரைகளில் 90 சத விகிதம் 15 நாடுகளில் இருந்து வருகின்றன. இந்த 15 நாடுகளில் நாம் எட்டாவது இடத்தில் இருக்கிறோம்.

v. அறிவியல், தொழில்நுட்பப் படிப்பும் பயிற்சியும் பெற்றவர்களின் மொத்தத் தொகையில் நாம் அமெரிக்காவிற்கும், முந்தைய சோவியத் ஒன்றியத்திற்கும் அடுத்தபடி மூன்றாவது இடத்தை வகித்து வந்தோம்.

## 4. வளர்ந்தும் வறுமை

எல்லாத் துறைகளிலும் கணிசமான அளவிற்கு நாம் முன்னேறியிருக்கிறோம். என்றாலும், நமது வறுமை நிலை

அகலவில்லை. 1992-93 கணக்குப்படி ஏறத்தாழ 30 சத விகிதம் பேர் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழ்கிறார்கள்.

வறுமைக்கோடு என்றால் என்ன, அதற்குக் கீழ் எத்தனை சத விகிதம் பேர் இருக்கிறார்கள் என்பதில் பொருளாதார நிபுணர்களிடையே கருத்து வேற்றுமை இருக்கிறது. நாம் அந்த வாதங்கட்குச் செல்ல வேண்டுவதில்லை. வறுமை என்ன என்பது நமக்குப் புரிகிறது. அதில் வாடுவோர் தொகை கொஞ்சமன்று என்பதும் தெரிகிறது. எண்ணற்றவர் வாழ்க்கையில், விடுதலைக்குப் பின்னரும் கூட, பெரும் மாற்றங்கள் ஏற்படவில்லை என்பதும் நமக்குத் தெரிகிறது. இதன் காரணங்கள் என்ன என்பது நம்மை நோக்கும் கேள்வி.

மேம்பாடு (Development) என்பது சிக்கலான ஒரு தத்துவம். பெரிய அளவிலான சில எஃகு ஆலைகள், சில உர ஆலைகள், சில அணைக்கட்டுகள், மின் உற்பத்தி நிலையங்கள் போன்றவை அமைவதாலேயே ஒரு நாடு வளம் பெற்று விடுவதில்லை. இவை தேவை; ஆனால் போதுமானவை அல்ல. இவையொத்த தொழில்களில், அதாவது ஒரு கட்டுக்கோப்புக்கு உட்பட்ட உற்பத்தி நிறுவனங்களில் (Organised Sector) பணிபுரிவோர் தொகை, அதிகமாகப் போனால், மொத்தத் தொழிலாளர்கள் தொகையில் ஏறத்தாழ 10 சதவிகிதம் அல்லது அதற்கும் சற்றுக் குறைவாகவே இருக்கும். மற்ற 90 சதவிகிதத் தொழிலாளர் எந்தக் கட்டுக்கோப்பும் இல்லாத, அமைப்புகட்குப் புறத்தே உள்ள தொழில்களில் (Unorganised Sector) இருக்கிறார்கள். நூற்றுக்குச் சுமார் 10 பேர் மட்டுமே உள்ள தொழில் துறைகளில் பணிபுரிவோரின் உற்பத்தித் திறன் (Productivity) அதிகப்படுவதன் மூலம் மட்டும் ஒரு சமுதாயம் செல்வத்தைப் பெருக்க இயலாது. நூற்றுக்கு 90 பேர் போல இருக்கும் தொழிலாளர்களின் உற்பத்தித் திறன் பெருக வேண்டும்.

i. **ஒரு தச்சர், நவீன உளியை, நவீன ரம்பத்தை, மற்ற புதிய கருவிகளைப் பயன்படுத்துவதன் மூலம் ஒரு சாமான் செய்த நேரத்தில் பல சாமான்கள் செய்ய வேண்டும்.**

ii. செருப்புத் தைக்கும் ஒரு தொழிலாளி, புதிய ஊசி, புதிய கத்தி, இன்னும் புதிய கருவிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி, ஒரு சோடி காலணி செய்த நேரத்தில் இரண்டு சோடி, மூன்று சோடி காலணிகள் செய்ய வேண்டும்.

iii. ஒரு விவசாயி, தான் பயன்படுத்தும் மாட்டு வண்டியின் அச்சு, சக்கரம் மற்ற பகுதிகளை நவீனப்படுத்துவதன் மூலம், முன்பு எடுத்துச் சென்ற பாரத்தை விடக் கணிசமான அளவு அதிகமான பாரத்தை எடுத்துச் செல்ல வேண்டும்.

iv. ஒரு விவசாயி, உயர்ந்த விதை, விஞ்ஞான முறைப்படி பயிர் செய்யும் திறன், பயிரிடும் நிலத்தின் (மண்ணின்) தன்மை பற்றிய அறிவு, நல்ல உரங்கள் பற்றிய தெளிவு, தண்ணீரைச் சிக்கனப்படுத்தும் வழிவகை ஆகியவற்றில் தெளிவு பெற்றிருப்பதன் மூலம் உற்பத்தியை மூன்று மடங்கு, நான்கு மடங்கு உயர்த்த வேண்டும்.

நமது தற்போதைய பொருளாதார வளர்ச்சி நிலையில் நமக்கு வானூர்தியும் தேவை; மாட்டு வண்டியும் தேவை இவ்விரண்டில் எதையும் புறக்கணிக்கும் நிலையில் நாம் இல்லை. எனவே இரண்டின் திறனையும் நாம் பெருக்க வேண்டும். குறிப்பாகச் சொல்வதானால் மக்களிடையே நடைபெறும் எண்ணற்ற தொழில்களில் பழைய கருவிகள் கழிந்து, புதிய கருவிகள் இடம் பெற வேண்டும். பழைய செயல்முறைகள் நவீனப்படுத்தப்பட வேண்டும். அல்லது, கைவிடப்பட்டு, புதிய செயல்முறைகள் இடம் பெற வேண்டும் இதையே சற்று வேறுவிதமாகச் சொல்வதாயின், மக்களது வாழ்வின் ஒவ்வொரு துறையிலும், அறிவியல் - தொழில்நுட்ப வளர்ச்சியின் கூறுபாடுகள் தென்பட வேண்டும்.

மேலே கூறப்பட்ட மாற்றம் உருவாவதற்கு அறிவியலும், தொழில்நுட்பமும் மக்கள் மன்றத்தில் பரவ வேண்டும் அதற்கு இரண்டு முக்கியமான தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும் அவை பின்வருமாறு:

i. அறிவியலும், தொழில்நுட்பமும் படைத்துத்தரும் கருவிகள், பொருள்கள், செய்முறைகள் பரவலாகப் பயன்படுத்தப்பட வேண்டும். பயன்படுத்துபவர்கள் ஆய்வாளர்கள் அல்லர்; வல்லுநர்கள் அல்லர். பயன்படுத்த வேண்டியவர்கள் மக்கள். அறிவியலையும், தொழில் நுட்பத்தையும் ஒரு தற்குறிச் சமுதாயம் பயன்படுத்த இயலாது. எனவே, அவர்கள் அதற்கேற்ற கல்வியறிவு பெற்றிருக்க வேண்டும்.

ii. அறிவியலும், தொழில்நுட்பமும் மக்களது வாழ்வின் ஓர் அம்சமாக இடம் பெற வேண்டுமாயின், அது அவர்கள் பேசும், எழுதும் மொழியில் இருக்க வேண்டும்.

மேற்கூறிய இரண்டு தேவைகளையும் நாம் முறையாக நிறைவேற்றவில்லை. நமது அரசியல் அமைப்புப்படி, 1961க்குள், 14 வயது வரை குழந்தைகள் அனைவருக்கும் நாம் இலவச, கட்டாயக்கல்வி அளிக்க வேண்டும். இன்று வரை இதை நாம் நிறைவேற்றவில்லை. 1991 கணக்கெடுப்புப்படி, இந்தியாவில் எழுதப்படிக்கத் தெரிந்தவர் சதவிகிதம் 52.2 தான் நம்மைச் சுற்றியிருக்கும், நம்மைப் போலவே வளரும் நாடுகளாயிருக்கும் (Developing Countries) ஆசிய நாடுகள் அனைத்தும், பாகிஸ்தான், வங்காளதேசம் நீங்கலாக, நம்மினும் மிகவும் முன்னேறியுள்ளன. சில ஆசிய நாடுகளில் எழுதப்படிக்கத் தெரிந்தோர் விவரம் பின்வருமாறு (1990).[5]

| | |
|---|---|
| சீனா | 73.3% |
| தாய்லாந்து | 93.0% |
| மலேசியா | 78.4% |
| இலங்கை | 88.4% |
| இந்தோனேஷியா | 81.6% |

5. UNESCO : Education for Development : Responding to New Challenges; Southern Regional Conference of Ministers of Education; Kuala Lumpur 21-24 June 1993.

தாய்மொழியைப் பயிற்று மொழியாக்குவதிலும், அறிவுத் துறைகளில் ஏற்பட்ட முன்னேற்றங்களை மக்கள் தாய்மொழியில் பெறச் செய்வதிலும் நாம் திருப்திகரமான வளர்ச்சி காணவில்லை. **ஓர் அந்நிய மொழி வாயிலாகச் சிலர் அறிவியல், தொழில்நுட்ப அறிவைப் பெறலாம். ஆனால் ஒரு சமுதாயமே அப்படிப் பயன்பெற இயலாது. சுருக்கமாகச் சொல்வதானால்:**

- ★ **நமது மண்ணில் இல்லாத செல்வம் நமக்கு முழுமையாகச் சொந்தமன்று.**
- ★ **நமது மொழியில் இல்லாத அறிவு நமது மக்களுக்குச் சொந்தமன்று.**
- ★ **தாய் மொழி பெறாததைச் சமுதாயம் பெறாது.**

**அறிவியல் துறைகள் தமிழில் இடம் பெற வேண்டுமென நாம் கூறுவது, தமிழ் வளர்ச்சிக்காக அன்று: அது தமிழர் வளர்ச்சிக்குத் தேவை.** எனவே இதை இன வளர்ச்சிப் பிரச்சினையாக அணுக வேண்டுமேயன்றி, ஒரு மொழிப்பற்றுப் பிரச்சினையாக அணுகக்கூடாது.

## 5. இன்றைய அறிவியல் புதியது

இந்த இடத்தில் ஓர் உண்மையை எடுத்துச் சொல்ல வேண்டும். நமது முன்னோர், அறிவியலில், தொழில்நுட்பத்தில், அவர்கள் வாழ்ந்த காலநிலையில் வளர்ச்சி பெற்றவர்களாக இருந்திருக்கலாம். ஆனால் இன்று நாம் படிக்கும், பயிற்சி பெறும், பயன்படுத்தும் அறிவியலும், தொழில்நுட்பமும் நமது பாரம்பரியத்தின் ஒரு பகுதி அன்று அது மேலைநாடுகளில் உருவானது. அங்கு கூட, பெரும்பாலும் 16ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் இடம் பெற்றுப் படிப்படியாக வளர்ந்தது. நாம் நாற்றாகக் கொண்டுவந்து நடவு செய்து வளர்த்திருக்கிறோம். அதன் அந்நியத் தன்மை முழுமையாக மாறவில்லை. அது முழுமையாக நமது மரபுகளோடு, பாரம்பரியத்தோடு, வாழ்வோடு இணையவில்லை. அது பரவலாக, நமது மண்ணில் ஆங்காங்கு

வளரும் செடி கொடியாக, மரமாக இல்லை. அதிசயமான, அந்நியமான குரோட்டன் செடி போல, மாளிகைச் செடியாக, பூங்காப் பொருளாக இருக்கிறது. அது இன்னும் நமது நீரோடும், நிலத்தோடும், காற்றோடும் கலந்ததாகப் பரிணாம வளர்ச்சி பெறவில்லை. அப்படிப்பட்ட வளர்ச்சி பெறும் அளவிற்கு அது மக்கள் மன்றத்தை அடையவில்லை. அவர்கள் வாழ்வோடு இணையவில்லை. அப்படிப்பட்ட நிலையும், வளர்ச்சியும், அறிவியலும், தொழில்நுட்பமும் மக்கள் பேசும் மொழியில் இடம் பெற்றால்தான் நிகழக்கூடும். இந்த முக்கியமான மாற்றம், அடிப்படையான மாற்றம் இன்னும் இடம் பெறவில்லை. இதற்கான முயற்சிகள் அரை நூற்றாண்டு காலமாக மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. இதன் தேவை உணரப்பட்டிருக்கிறது; ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது; விரிவாகப் பேசப்பட்டிருக்கிறது. எனினும் நாம் அடைய வேண்டிய இடம் வெகு தொலைவில் இருக்கிறது.

★ தமிழ் மண்ணில் இடம் பெற்றுள்ள தொழில்கள் பற்றிய அறிவு நிலை தமிழ் மொழியில் இடம் பெறவில்லை. இத் தொழில்கள் இன்னும் நமது மொழிக்கு அந்நியங்களாகவே இருக்கின்றன.

★ தமிழகத்து அறிவியல், தொழில்நுட்ப அறிஞர்கள் பெற்றுள்ள அறிவுநிலை தமிழில் இடம் பெறவில்லை அவர்களும் சமுதாயத்திலிருந்து தனித்து, ஒதுங்கி நிற்பவர்களாகவே இருக்கிறார்கள்.

★ அறிவுத் துறைகள் பலவற்றில் தமிழ் மொழி தனது மண்ணினும் வறியதாக இருக்கிறது. தனது மக்களினும் வறியதாக இருக்கிறது.

இந்த நிலை மாற வேண்டும்; மாற்றப்பட வேண்டும். இந்த முயற்சியில் முதலாவதாக இடம் பெறுவன –

i. அறிவியல் இலக்கியப்படைப்பு

ii. பயிற்று மொழி (Medium of Instruction) பற்றிய பிரச்சினை.

# 2

# அறிவியல், தொழில்நுட்ப விரிவாக்கம்

## 1. இரு வேறுலகம்

வரலாறு தெரிந்த காலத்திலிருந்து உலகின் எல்லா நாடுகளிலும், ஏழைகள், செல்வர்கள் இருந்து வருகிறார்கள். இது பின்னர் உருவான சமதர்ம நாடுகட்கும் பொருந்தும். ஏழையின் வறுமைக்கும், செல்வந்தரின் வளத்திற்கும் இடையேயுள்ள தூரம் நாட்டுக்கு நாடு மாறலாம். ஆனால் இடைவெளி இருந்தே வருகிறது. இந்த நூற்றாண்டின் இறுதியில், மனித சமுதாயம் இதுவரை கண்டிராத இன்னொரு பெரிய மாற்றத்தைக் காண்கிறோம். இன்றைய உலகு, வளம் மிக்க நாடுகள் என்றும், வறுமையில் வாடும் நாடுகள் என்றும், அதாவது ஏழை நாடுகள், பணக்கார நாடுகள் என, இரண்டு அணிகளாகப் பிரிந்து நிற்கிறது. இப்படிப்பட்ட விரிசல் முன்பு இருந்ததில்லை. இந்த நிலை பற்றிப் பேசவந்த பீட்டர் ட்ருக்கர் (Peter F. Drucker)[1] கீழ்க்காணுமாறு கூறுகிறார்.

> **"1910-இல், மிகச் செல்வம் வாய்ந்ததெனக் கருதப்படும் நாட்டின் சராசரி வருமானம், மிக ஏழ்மையானது எனக் கருதப்படும் நாட்டின் சராசரி வருமானத்தைப்போல், அதிகமாகப் போனால் மூன்று மடங்கு இருந்தது. ஆனால்,**

1. Peter F. Drucker : *Managing of the Future* : Ch. 13, P.94, Tata - Mc Graw Hill, New Delhi, 1992.

**இன்று, ஓய்வு வசதிகள், கல்வி, உடல் நலப் பராமரிப்புப் போன்ற சலுகைகளையெல்லாம் கணக்கில் சேர்க்காமல் கூட, இருபதிலிருந்து, நாற்பது மடங்கு அதிகமாக இருக்கிறது."**

வளம் மிக்க நாடுகளில் வாழும் மக்கள், உலக மக்கட்தொகையில் 23 சதவிகிதத்தினர். இவர்கள் உலகின் இயற்கை வளங்களில் 80 சதவிகிதத்தை அனுபவிக்கிறார்கள். பூமியின் 40 சதவிகிதப் பரப்பில் வாழ்கிறார்கள் மீதமுள்ள 77 சதவிகிதத்தினர் அனுபவிப்பது 20 சதவிகித இயற்கை வளங்களை மட்டுமே. **வளம் பெற்ற நாடுகளின் வாழ்வுக்கும், வறிய நாடுகளின் ஏழ்மைக்கும் அடிப்படைக் காரணம் என்ன என்ற கேள்வி எழுகிறது.** இயற்கை வளங்கள் காரணம் எனில், பெரும் பகுதி பாலைவனத்தைக் கொண்ட இஸ்ரேல், வளமான வலிமையுள்ள நாடாக வளர்ந்திருக்க இயலாது நிலப்பரப்பு எனின், ஒரு நகர - நாடான (City - State) சிங்கப்பூரோ, ஃகாங்காங் (Hong Kong) கோ, இவ்வளவு செழிப்புள்ளனவாக இருக்க இயலாது. மக்கட்தொகை காரணமெனின் இந்தியாவும், சீனாவும் உலக நாடுகள் அனைத்தினும் வளம் பெற்றவையாக விளங்க வேண்டும். மொழியோ, மதமோ, அரசியல், பொருளாதார அமைப்போ கூடக் காரணமாகத் தோன்றவில்லை. இவை ஒவ்வொன்றும் ஓரளவு உதவலாம் ஆனால் அடிப்படை இவையன்று. இக்கூறுபாட்டை ஆய்ந்த, நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானி, டாக்டர் அப்துஸ் சலாம் (Abdus Salam) கீழ்க்காணும் காரணங்களைக் கூறுகிறார்.[2]

i. **அறிவியல் - தொழில்நுட்பத் துறையில், முன்னேறிய நாட்டினர் அடைந்திருக்கும் உச்ச நிலை**

ii. **அறிவியல் - தொழில்நுட்பத் துறையில் அவர்கள் பெற்றிருக்கும் புதியன படைக்கும் ஆற்றல்**

---

2. Abdus Salam : Notes on Science, Technology and Science Education in the Development of the South, The Third World Academy of Science, Trieste, Italy, 1989.

iii. **அறிவியலையும், தொழில்நுட்பத்தையும் பயன்படுத்திக் கொள்ள அந்த மக்கட்கிருக்கும் திறன்.**

இதைக் கருத்திற்கொண்டு தானோ என்னவோ, முன்னேறிய நாட்டினரைப் பார்த்துப் பின்தங்கிய நாட்டினர் வருந்திக் கேட்பதாகக் கவிஞன் பாடுகிறான்.[3]

அரைநொடி நேரம் நின்றோம் யாம் : இவண்
ஆயிரம் காதம் பின்னடைந்தோம்.
விரைவுடன் தொடர்ந்த மேற்செலவில் : எமை
விட்டுப் பிரிந்த பயணியர்காள்

★ ★

நெடுநாள் ஒன்றாய் நடந்தோம் நாம் : நம்
நிறையும், குறையும் பகிர்ந்துண்டோம்

★ ★

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாய் : நாம்
அணைந்தும், பிணைந்தும் வாழ்நதிருந்தோம்

★ ★

சாரையில் நடந்தனம் ஒருகுழுவாய் : நாம்
தவழ்ந்து நடந்த யாத்திரையின்
தாரைகள் முழுவதும் அழியவிலை : நம்
சரிதையின் நினைவுகள் மறையவிலை.

★ ★

அறிவிய லெனஒரு தேர்கண்டீர் : அதில்
அமர்ந்தீர்: பறந்தீர்: மேற்சென்றீர்
வறியவர், செல்வர்கள் எனப்பிரிந்தோம். நம்
மானிடம் பிளந்தது, மலைக்கின்றோம்.

வருகிற நாள்களில், மனித வரலாற்றில், இப்பிளவின் விளைவுகள் பாரதூரமாக இருக்கக்கூடும் நாம் அதைப்பற்றிய

---

3. குலோத்துங்கன் : கதவுகள் காப்பதில்லை, பாரதி பதிப்பகம், சென்னை - 1990

சிந்தனையில் இங்கு ஈடுபடவில்லை. நமது முன்னேற்றத்துக்கு, அறிவியல், தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் முயற்சிகள் பற்றியும், இம்முயற்சியில், தாய்மொழியின் பங்கு பற்றியும் கவனத்தைச் செலுத்துகிறோம். இங்கு ஒரு சிறு விளக்கம் கூறுவது தேவை. தொழில்நுட்பம் என்று கூறும்பொழுது, நாம் Engineering, Technology போன்ற துறைகளை மட்டும் குறிப்பிடவில்லை. வேளாண்மை, மருத்துவம் போன்று அறிவியல் உண்மைகளை, அறிவியல் அணுகுமுறையை, அறிவியல் விதிகளைப் பயன்படுத்தி வளர்ந்துள்ள எல்லாத் தொழில் நுட்பங்களையும் குறிப்பிடுகிறோம்.

## 2. பயிற்சியும், படிப்பும்

நாம் விடுதலை பெற்றது முதல் வேளாண்மைப் பொருளாதார (Agricultural Economy) நிலையிலிருந்து தொழில் பொருளாதார நிலைக்கு (Industrial Economy) நமது சமுதாயத்தை மாற்றும் பணியில் ஈடுபட்டுச் செயலாற்றி வருகிறோம். வேளாண்மைப் பொருளாதாரம் கைத்தொழிலின் (Craft) அடிப்படையில் அமைந்தது. அதற்கு வேண்டுவது ஏட்டுக் கல்வி அன்று; பயிற்சி. விவசாயம், தச்சு, கம்மியத் தொழில் போன்ற பல தொழில்களை வாழையடி வாழையென நமது சமுதாயத்தினர் செய்து வந்தனர்; இன்றும் செய்கின்றனர். இத்தொழில்களை அவர்கள் பயிற்சியின் அடிப்படையில் செய்கின்றனர்; கல்வி நிலையத்தில் முறையாகக் கற்ற படிப்பின் அடிப்படையில் அன்று.

தொழில் நாகரிகமும், தொழில் பொருளாதாரமும் 'அறிவியல் - தொழில் நுட்பம்' (Science and Technology) என்பதன் அடிப்படையில் அமைந்தவை. அறிவியலையும், தொழில்நுட்பத்தையும் பயன்படுத்த, பயிற்சி மட்டும் போதாது; கல்வி தேவை. அதுவும் ஓர் அளவு உயர் கல்வி தேவை. பொருளாதார, சமுதாய வளர்ச்சியின் ஒரு கட்டத்திலிருந்து இன்னொரு கட்டத்திற்கு மாற்றம் பெறும் சமுதாயம் அதற்குத் தன்னைத் தயாராக்கிக் கொள்ள வேண்டும்.

## 3. அறிவியல் - தொழில்நுட்ப மரபு

அறிவியல், தொழில்நுட்பம் என்று கூறும்பொழுது, நாம் கடந்த மூன்று நூற்றாண்டுகளாக மேலைநாடுகளில் வளர்ந்து, இன்று உலகு முழுவதும் பரவி இருக்கும் அறிவியல் - தொழில்நுட்ப அறிவைத்தான் குறிப்பிடுகிறோம். வரலாறு தோன்றிய காலத்திலிருந்து ஒவ்வொரு சமுதாயத்திலும், ஒவ்வொரு நாட்டிலும் அறிவியல், தொழில்நுட்பம் என்று கருதக்கூடிய சில கூறுபாடுகள் இடம் பெற்று இருந்திருக்கின்றன. நமது முன்னோர் அறிவியல் துறைகளில், தொழில்நுட்பத் துறைகளில் எத்தனையோ சாதனைகட்குச் சொந்தக்காரர்கள். கணிதம், வானவியல் போன்றவற்றில் அவர்கள் எட்டிய எல்லை இன்றும் எண்ணி வியக்கத்தக்கது. ஆனால் நாம் கெலிலியோ காலத்திலிருந்து மேலைநாட்டில் ஏற்பட்ட ஒருவகையான அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சி முறையைத்தான் இங்கு குறிப்பிடுகிறோம். இந்த அறிவியலும், தொழில்நுட்பமும் நமக்குப் புதியவை. இவற்றின் அடிப்படையில் அமைந்த பண்பாடும், அணுகுமுறைகளும் நமக்குப் புதியன. எனவே, இவை நமது சமுதாயத்தில் இன்னும் வேரூன்ற வேண்டும்; பரவ வேண்டும். நமது வாழ்வியலொடு, பண்பாட்டொடு ஒன்ற வேண்டும். நவீன தொழில் வளர்ச்சி பற்றி எண்ணும்பொழுது இது முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டிய ஓர் அம்சம் ஆகும்.

நமது நாட்டில் அறிவியல் கல்வி இருக்கிறது தொழில்நுட்பக் கல்வி இருக்கிறது. அறிவியல் ஆய்வுக்கூடங்கள் இருக்கின்றன. தொழில்நுட்ப ஆய்வுக்கூடங்கள் இருக்கின்றன. உலகு போற்றும் உயர்வுபெற்ற அறிவியல் அறிஞர்கள் இருக்கிறார்கள். தொழில்நுட்ப விற்பன்னர்கள் இருக்கிறார்கள். நமது மண்ணில் பாராட்டத்தக்க அளவிற்கு ஆங்காங்கு மகத்தான தொழிற் கூடங்களும் உருப்பெற்றிருக்கின்றன. இருந்தாலும், நம் மண்ணில் இன்னும் அறிவியல் - தொழில்நுட்ப மரபு வளரவில்லை. தொழில் நாகரிகத்தின் கூறுபாடுகள் பரவலாக இடம் பெறவில்லை.

அறிவியல் அணுகுமுறை, அறிவியல் பார்வை, நமது சமுதாயத்தின் பாரம்பரியத்தோடு இணைந்த ஒன்றாக இன்னும் இடம்பெறவில்லை. நாம் வளர்ச்சிப் பணிகளைப் பற்றி, திட்டங்களைப்பற்றி எண்ணும்பொழுது, இந்த ஒரு சூழ்நிலையை நம் மனத்தில் கொள்ள வேண்டும். அறிவியல், தொழில்நுட்பம் ஆகியவற்றை நமது வளர்ச்சிக் கருவிகளாகப் பயன்படுத்து வதற்கு, பரவலாக அவற்றை நமது வளர்ச்சித் திட்டங்களில் பயன்படுத்துவதற்கு, நாம் மேலே கூறிய சூழ்நிலை தடங்கலாகவும், தடையாகவும் இருப்பது தவிர்க்க முடியாத ஒன்று. எனவே, இந்தச் சூழ்நிலையைச் சற்று விரைவில் மாற்றுவதற்கான வழி வகைகளை நாம் சிந்திக்க வேண்டும்.

## 4. தொழில்நுட்ப விரிவு (Technology Transfer)

முன்னேறிய நாடுகளில் கடந்த இரண்டு நூற்றாண்டுகளாக, அறிவியல், தொழில்நுட்பத் துறைகளில் தொடர்ந்து வளர்ச்சி கண்டிருக்கிறார்கள். தொழில்யுகம் (Industrial Age) கடந்து, அவர்கள் உயர் தொழில்நுட்ப யுகம் (High Technology Era), அல்லது கல்வியுகம் (Knowleldge Era) கண்டு முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். நாம் இருநூறு ஆண்டு காலத் தேக்கத்தை நீக்கவும், இழந்த வாய்ப்புகளை ஈடுகட்டவும் முயல்கிறோம். புதிய தொழில் நுட்பங்களை இறக்குமதி செய்தும், நாமும் பல தொழில்நுட்பங்களை உருவாக்கியும் பொருளாதார வளர்ச்சிக்குப் பயன்படுத்துகிறோம் இந்தச் செயல்முறை (Process), பொதுவாக Technology Transfer என்று குறிப்பிடப்படுகிறது. Technology Transfer மூன்று படிகளைக் (Steps) கொண்டது. அவை, Invention, Innovation, Dissemination/Diffusion எனப்படும். இவற்றிற்கு நேரான தரப்படுத்தப்பட்ட தமிழ்ச் சொற்கள் பரவலாக வழக்கில் இருப்பதாகத் தெரியவில்லை. நாம் இப்பொழுது கீழ்க்காணும் சொற்களைப் பயன்படுத்துவோம். இவற்றினும் நல்ல மொழி பெயர்ப்பு வருமாயின் பயன்படுத்திக் கொள்ளலாம்.

★ Technology Transfer - 'தொழில்நுட்ப விரிவு' அல்லது 'தொழில்நுட்ப விரியல்'

★ Invention - தமிழில் Invention என்பதற்கும் Discovery என்பதற்கும் 'கண்டுபிடிப்பு' என்ற சொல்லையே பயன்படுத்துகிறோம். ஆங்கில அகராதியில் Discover என்பதற்கு Invent என்ற பொருளும் கொடுக்கப்பட்டிருப்பினும், அடிப்படையில் Discovery வேறு; Invention வேறு. ஒன்று, பெரும்பாலும் இருப்பதைப் புதிதாகக் காண்பது. இன்னொன்று, படைப்பாற்றலை, மனிதனின் கற்பனைத் திறனை உள்ளடக்கியது. Discovery என்பதற்கு 'கண்டுபிடிப்பு' பொருத்தமானது. 'காண்கை' என்ற சொல்லுக்கு 'அறிவு' என்ற பொருளும் உண்டு. எனவே Invention என்பதற்கு 'காண்கை', 'காண்டல்' என்ற சொற்கள் பயன்படுத்தப்படலாம்.

★ இக்கட்டுரையில் நாம் கீழ்க்காணும் மொழிபெயர்ப்புகளைப் பயன்படுத்துகிறோம்:

| | |
|---|---|
| To invent - காணுதல் : | Invention - காண்டல், காண்கை |
| To innovate - புனைதல் : | Innovation - புனைவு |
| To disseminate – பரப்புதல் : | Dissemination - பரப்பல் |

மேலெழுந்தவாரியாகப் பார்த்தால், இந்த மூன்று படிகளும் நமக்குத் தெரிந்தனவேயாகும். இருந்தாலும், ஒரு சான்று மூலம் அதனைத் தெளிவாக்குவது பொருத்தமாகும். 1930 களின் இறுதிப் பகுதியில் ஐரோப்பாவிலும், இங்கிலாந்திலும் அணுவைப் பிளக்க முடியும் என்பது நிபுணர்களால் நிறுவப்பட்டது. இது ஒரு Invention (காண்கை). Invention என்பது நாம் முன்பு கூறியதுபோல, புதிதாக ஓர் உண்மையைக் காணுவது. அதற்குப் பொருளாதார முக்கியத்துவம் (Economic Value) எதுவும் இல்லை. **உண்மை, விலை மதிப்பற்ற ஒன்று எனக் கூறலாம். ஆனால் அது விலை போகும் ஒன்றன்று**. பொதுவாகக் கூறப்போனால், இன்றைக்கு

நமது சமுதாயத்தில் உண்மைக்குப் பொருளாதார முக்கியத்துவம் எதுவும் இல்லை. இதுவே ஒரு கசப்பான உண்மைதான். இதை நாம் உணர வேண்டும். ஒப்புக் கொள்ள வேண்டும். அணுவைப் பிளக்க முடியும் என்ற 'தத்துவத்தின்', 'உண்மை'யின் அடிப்படையில், அணுமின் உற்பத்திச் சாதனமாகிய அணு உலை (Atomic Reactor) ஒன்றை நாம் உருவாக்குவோமானால், அதை Innovation (புனைவு) என்று குறிப்பிடலாம். இங்கு அணுவைப் பிளக்க முடியும் என்பதை அடிப்படையாக வைத்து, அதனால் ஏற்படும் ஆற்றலைப் பயன்படுத்தி மின் ஆற்றலை உற்பத்தி செய்ய உதவும் ஒரு கருவியை அணு உலை (Atomic Reactor) வடிவத்தில் நாம் உருவாக்குகிறோம். இது மின்விசையைத் தரும் திறன் கொண்டது என்ற அளவில் இதற்கு ஒரு பொருளாதார முக்கியத்துவம், அல்லது வணிக மதிப்பீடு (Commercial Value) இருக்கிறது. இந்த வணிக மதிப்பீடு தானாகவே சமுதாயத்திற்குப் பயன்பட்டுவிடுவதில்லை. பெரிய அளவில் அணுமின் உற்பத்திக்கூடங்களை நாட்டில் பரவலாக நாம் உருவாக்கினால் தான் அது சமுதாயத்திற்குப் பயன் விளைவிக்கும். புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட, பொருளாதார முக்கியத்துவம் கொண்ட சாதனங்களை, செய்முறைகளை, சமுதாயத்தில் பரவலான வகையில் நடைமுறைப்படுத்துவதை 'பரப்புதல்' (Dissemination) அல்லது 'பரவுதல்' (Diffusion) என்கிறோம். இவ்வாறு பரவுதல் (Diffusion) ஏற்பட்டால் தான் அறிவியல், தொழில்நுட்ப அடிப்படையில் உருவான ஒரு கருவி (Tool), அல்லது ஒரு செய்முறை (Process), மக்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்குப் பயன்படும்.

## 5. தொழில்நுட்பப் பரவல்

மேலை நாடுகளில், பொதுவாக ஒரு காண்கை (Invention) நடைபெற்று, அதன் அடிப்படையில் ஒரு புனைவு (Innovation) உருவாக்கப்படுமானால், அங்குள்ள தொழில் நாகரிகச் சூழ்நிலை, அந்தப் புதிய சாதனம் மக்கள் மன்றத்தில் இயல்பாகவே

பரவுவதற்கு உதவுகிறது. இதற்கெனத் தனிப்பட்ட அளவில், அரசின் முயற்சி எதுவுமின்றி, அந்தக் 'காண்கை' (Invention), 'புனைவு' (Innovation) என்ற நிலையிலிருந்து 'பரவுதல்' என்ற நிலையை அடைந்து, பொருளாதார வளர்ச்சி, மக்கள் முயற்சியின் அடிப்படையில் ஏற்படுகிறது. எனவே அறிவியல், தொழில் நுட்பம் என்பதை, வளர்ச்சிக்குப் பயன்படுத்தும் சங்கிலித் தொடரின், மூன்று படிகளில் முதல் இரண்டு படிகள் உயர்கல்வி நிலையங்களில், சோதனைச்சாலைகளில், துறை நிபுணர்களின் விவாத மேடைகளில் நிகழ்கின்றன; உருப்பெறுகின்றன. மூன்றாவது படி அல்லது மூன்றாவது கட்டம், மக்கள் மத்தியில் நடைபெற வேண்டும் முன்னேறிய நாடுகளில் தொழில்நுட்பப் பாரம்பரியம் சமுதாயத்தோடு ஒன்றி, வாழ்க்கை முறைகளில், பொருளாதார வாழ்வில் ஊடுருவி இருப்பதால் ஒரு புதிய 'புனைவு' (Innovation) இயல்பாகவே, பெருமுயற்சியின்றிப் பரவி, பயன்பாட்டிற்கு வந்து விடுகிறது. மூன்றாவது படி, ஒரு நீண்ட பாதையாக முன்னேறிய நாடுகளில் இருப்பதில்லை. ஆனால் நமது நாட்டின் நிலை அப்படி அன்று. முதல் இரண்டு படிகளுக்கு எடுத்துக்கொள்ளும் முயற்சி போல, அதைவிடச் சற்று அதிகமாகவே, இந்த மூன்றாவது 'படி' முடிவடைய, முற்றுப்பெற முயற்சி செய்ய வேண்டியவர்களாக நாம் இருக்கிறோம். இதன் தேவையை நாம் இன்னும் சரியாக உணரவில்லை. உணர்ந்து, அதற்கேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. நடவடிக்கைகள் எடுப்பதற்கான நிறுவனங்களை நாம் முறையாக உருவாக்கவில்லை இதனால் - முன்னேறிய நாடுகளில் பயன்படுத்தப்படும் தொழில் நுட்பத்திற்கும், நமது நாட்டில் பயன்படுத்தப்படும் தொழில் நுட்பத்திற்கும் இடையில் பெரிய இடைவெளி இருக்கிறது என்பது ஒருபுறமிருக்க, - நமது நாட்டிலேயே, பல்கலைக்கழகங்களில், சோதனைச் சாலைகளில் வளர்ந்திருக்கும் தொழில்நுட்பத்திற்கும், வளர்ச்சித் திட்டங்களில் நமது நாட்டில் பயன்படுத்தப்படும் தொழில் நுட்பத்திற்கும் இடையே பெரிய இடைவெளி இருக்கிறது.

இவ்விடைவெளியை முழுமையாக அகற்ற முடியாது. ஆனால் குறைக்க முடியும்; குறைக்க வேண்டும்.

வருங்காலத்தில் நமது பொருளாதார வளர்ச்சிக்கு, பரவுதல் (Diffusion)/'பரப்பல்' (Dissemination) ஒரு முக்கியமான தேவையாகும். அறிவியல், தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகளை மக்கள் மன்றத்தில் பரப்புவதற்கு அறிவியல் அணுகுமுறையை வளர்ப்பதற்கு, தொழில் நாகரிகத்தை நமது சமுதாயத்தில் தோற்றுவிப்பதற்கு, தேவையான அறிவியல் மனப்பான்மை, அறிவியல் விழிப்பு நமது மண்ணில் வேர்விடுவதற்கு நாம் இயன்ற அளவில் முயலக் கடமைப்பட்டிருக்கிறோம். அறிவியல் - தொழில்நுட்ப வளர்ச்சியின் விளைவுகளை மக்கள் மன்றத்திற்கு எடுத்துச் சென்று, மகத்தான பலன் கண்டதற்கு மிகச் சிறந்த உதாரணம், நாம் கண்ட 'பசுமைப் புரட்சி' (Green Revolution) ஆகும்.

நாம் செய்ய வேண்டுவன பின்வருமாறு :

i. **கல்வி நிலையம் ஒவ்வொன்றும் பயிலும், பயிற்றுவிக்கும் நிறுவனமாக மட்டும் செயல்படாது, சுற்றியுள்ள மக்கள் வாழ்வொடு தொடர்புடையதாய், அதன் 'வளாக எல்லை களைக்' கடந்து மக்கள் மன்றில் அறிவு பரப்பும் பணி மேற்கொண்ட மையமாய்ச் செயல்பட வேண்டும்.**

ii. கல்வி நிலையங்கள், ஆய்வு நிறுவனங்கள் ஆகியன, அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சி பரவ உதவுவதையும் தங்களது கடமைகளில் ஒன்றாக மேற்கொள்ள வேண்டும். ஒவ்வொரு பல்கலைக்கழகமும், பொறியியல் கல்லூரியும், வேளாண்மை, மருத்துவ கலைக் கல்லூரிகளும், தொழிற் கல்விப் பள்ளியும், மேல்நிலைப்பள்ளியும், உயர்நிலைப் பள்ளியும், ஆண்டுதோறும், குறிப்பிட்ட காலப் பகுதியில், ஒரு வாரம், அல்லது குறைந்தது மூன்று நாள்களாவது, அறிவியல், தொழில்நுட்பம் தொடர்பான, மற்ற அறிவுத் துறைகள் தொடர்பான கண்காட்சியை நடத்த வேண்டும்.

சுற்றுப்புறங்களிலுள்ள மக்கள் வந்து காணுவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டும். காட்சிப் பொருள் பற்றிய விளக்கம், எழுத்திலும், பேச்சிலும் எளிய தமிழில், பார்வையாளர்கட்குப் புரியும் தமிழில் இருக்க வேண்டும். தாங்கள் வாழும் பகுதியிலேயே அமைந்திருக்கும் கல்வி நிலையங்களில், என்ன இருக்கிறது, என்ன பயிற்றுவிக்கிறார்கள் என்பது பற்றி எள்ளளவும் அறியாது, அவர்கள் வாழ்கிறார்கள். புரிந்தாலும், புரியா விட்டாலும், அங்குள்ள நூல் நிலையங்களை, சோதனைச் சாலைகளை, தளவாடங்களை, மற்ற கூறுபாடுகளை அவர்கள் பார்க்க வேண்டும். அந்தக் கல்வி நிலையங்கட்கும், தங்கட்கும் தொடர்புண்டு, அவை தங்கள் கல்வி நிலையங்கள் என்ற உணர்வு அவர்கட்கு வர வேண்டும்.

iii. வானொலி, தொலைக்காட்சி போன்றவை விஞ்ஞான அறிவு, விஞ்ஞான மனப்பான்மை, விஞ்ஞான அணுகுமுறை ஆகியவை மக்கள் மத்தியில் பரவுவதற்கேற்ற நிகழ்ச்சிகளை நிரந்தரமாக மேற்கொள்ள வேண்டும்.

iv. எல்லாப் பத்திரிகைகளிலும் 'அறிவியல், தொழில்நுட்பம்' பற்றிய பகுதி இடம்பெற வேண்டும்.

v. அரசு தனது துறைகள் ஒவ்வொன்றின் மூலமும் இப்பணியை மேற்கொள்ள வேண்டும்.

vi. இவையனைத்தும் நடைபெற வேண்டுமாயின், மக்களைச் சென்றடைய வேண்டிய தகவல்கள், கல்வியறிவு, அனைத்தும் மக்கள் மொழியில் இருக்க வேண்டும். இது கூறாமலே பெறப்படும் உண்மையாகும்.

முன்பே கூறியது போன்று, நாம் விடுதலை பெற்ற நாளிலிருந்து அறிவியல், தொழில்நுட்பக் கல்வியிலும், ஆய்விலும் மிகுந்த ஈடுபாடு காட்டி வந்திருக்கிறோம். நேரு அவர்களின் தொலைநோக்கின் காரணமாக 1958இல் நமது

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 'அறிவியல் கொள்கைத் தீர்மானம்' (Science Policy Resolution) வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அந்தத் தீர்மானத்தின் ஆத்மாவே, அறிவியலும், தொழில் நுட்பமும், அவை உருவாக்கும் வாய்ப்புகளும் வசதிகளும் பரவலாக மக்களைச் சென்றடைய வேண்டும் என்பதுதான். அதற்கு முக்கியமான படி, முதற்படி, அவை மக்கள் மொழியில் இடம்பெற வேண்டும். மக்கள் மொழி என்னும் கழனியில், இயற்கையாக விதையினின்று முளைத்து, அல்லது நாற்றாகக் கொணர்ந்து நடப்பட்டு, அந்த மண்ணின், அந்த நீரின் வளத்தில், கன்றாகி, மரமாகி, வேரூன்றி, விழுதோங்கி, வளர வேண்டும்.

# 3

# தமிழ் வழிக் கல்வி: தயக்கங்கள், தடைகள்

## 1. அறிவுடையார் எல்லாம் உடையார்

அண்மையில் முடிய இருக்கும் இருபதாவது நூற்றாண்டு, பல சாதனைகளைக் கண்டிருக்கிறது. அமைதியான பல புரட்சிகள் இடம் பெற்றிருக்கின்றன. அணு அறிவியல் துறையில் ஏற்பட்ட வளர்ச்சிகள், கணிப்பொறி கண்டுபிடிப்பு, விண்வெளி அறிவியல், தொழில்நுட்பத்தில் கண்ட வெற்றிகள், உயிரியல் துறைகளில் ஏற்பட்ட மகத்தான முன்னேற்றங்கள், சமுதாயத் துறையில் மனித உரிமைகள் (Human Rights) பெற்ற முக்கியத்துவம், சம நீதி (Equity) பற்றிய விழிப்புணர்வு, அரசியலில் அடிமை நிலையிலிருந்த நாடுகள் அனைத்திற்கும் சுதந்திரம், மக்களாட்சிக்கு வரவேற்பு என மனித சமுதாயம் மாபெரும் மாற்றத் தொடர்களை, வளர்ச்சி வாயில்களைக் கண்டிருக்கிறது. ஒவ்வொரு மாற்றத்திலும், 'மனிதத்தின்' மேம்பாட்டுக்கான வித்துகள் இடம் பெற்றிருக்கின்றன. ஆனால், இவையனைத்திலும் மேலோங்கி நிற்கும் ஒன்று, இந்த நூற்றாண்டில், இதுவரை என்றும் இல்லாத அளவுக்குக் கல்வி பெற்றிருக்கும் தலைமை இடம்தான்.

வேளாண்மை யுகத்தில், அணியாக, அலங்காரப் பொருளாக இருந்த கல்வி, தொழில் யுகத்தில் பொருளாதார வளர்ச்சிக்

கருவியாக மாறி, இன்று மானிடத்தின் சமுதாய, அரசியல், பொருளாதார மேம்பாடுகள் அனைத்திலும் ஊடுருவி நின்று, உயிர் கொடுக்கும் சக்தியாக, சர்வ வல்லமை பெற்ற சக்தியாக மாறிவிட்டது. **"அறிவுடையார் எல்லாம் உடையார்" என்று அன்று வள்ளுவர் என்ன பரிமாணங்களை மனத்திற்கொண்டு சொன்னாரோ நாமறியோம். ஆனால் இன்று, கல்வி அறிவு, இருக்கின்ற வளங்களைப் பயன்படுத்தவும் உதவும்; இல்லாத வளங்களைப் படைக்கவும் உதவும் என்ற நிலை உருவாகி யிருக்கிறது.**

பொதுவாக, இருக்கின்ற வளங்களை எடுத்துப் பயன்படுத்துவதாயினும், இல்லாதவற்றைப் படைத்துப் பயன்படுத்துவதாயினும், அதற்கு ஓர் அமைப்பு (System), ஒரு நிறுவனம் (Organisation) தேவை. இவற்றின் மூலம் ஒரு சமுதாயம் முன்னேற்றம் காண வேண்டுமெனின், பொறுப்பான நிர்வாகம் (Administration), மேலாண்மை அமைப்பு (Management) முதலியன வேண்டும். இவற்றின் துணை கொண்டு செய்யும் பணிகளை ஆற்றுப்படுத்துவதற்கு, பணிகளின் திசையை நிர்ணயிப்பதற்கு, குறிக்கோள் (Objective) வேண்டும். அப்படிப்பட்ட ஒரு குறிக்கோள் வெறுமையில் (Vacuum) இருந்து உருவாக இயலாது. அதற்கு ஒரு கொள்கை (Policy) வகுக்கப்பட வேண்டும். ஒரு கொள்கையின் அடிப்படையில் குறிக்கோளை நிர்ணயித்து, நிர்வாக அமைப்புகளை உருவாக்கிச், செயலாற்றுவதற்கு, ஒரு சமுதாயம், சட்டத்தின் அடிப்படையில் (Legal Base) அமைந்ததாக இருக்க வேண்டும். அவ்வாறு சட்டங்கள் இயற்றிச் செயலாற்றும் சமுதாயத்திற்குச் சில மதிப்பீடுகள், விழுமங்கள் (Values) வேண்டும். இவையனைத்திற்கும் அடிப்படையாக இருப்பது கல்விதான் இந்தக் கூறுபாடுகள் அனைத்தும் கொண்ட கல்வி நம் நாட்டில் இருக்கிறது. கல்வி நிலையங்கள் இருக்கின்றன. கற்றவர்கள் இருக்கிறார்கள். ஆனால் இவர்கள் மிகச் சிலர். மேலே குறிப்பிடப்பட்டுள்ள கூறுபாடுகளை உள்ளடக்கி எழுப்பப்பட வேண்டிய நல்வாழ்வுச் சமுதாய மாளிகைக்குத் தளமாய், கதவாய்,

பலகணியாய், படிக்கட்டுகளாய், பல்வகையான கட்டுமானப் பொருள்களாய்ப் பயன்படத்தக்கவர்கள் பரவலாக இல்லை. சுருங்கச் சொன்னால், **எந்தக் கல்வி எல்லா வல்லமையும் கொண்டது என்றோமோ, அந்தக் கல்வியின் வரம் எல்லா மக்கட்கும் கிட்டவில்லை.** நமது நாட்டின் நலிவுக்கான அடிப்படைக் காரணம் பற்றிப் பேசவந்த விவேகானந்தர் ஒரு நூற்றாண்டுக்கு முன்பே பின்வருமாறு கூறினார்.

> "A nation is advanced in proportion as education and intelligence spread among the masses. The chief cause of India's ruin has been the monopolising of its whole education and intelligence of the land among a handful of men. If we are to rise again, we shall have to do it by spreading education among the masses."

நமது நாட்டுப் பேரறிஞர்களின், ஞானிகளின் சிந்தனைகள் மக்களைச் சென்றடைய வேண்டுமென்று பேராவல் கொண்ட விவேகானந்தர், அவை மக்கள் மொழியில் இல்லாதது எவ்வளவு தடையாக இருக்கிறது என்பதை அன்றே வலியுறுத்தியிருக்கிறார்.

> "I want to bring out these ideas and let them be the common property of all, of every man in India, whether he knows the Sanskrit language or not. The great difficulty in the way is the Sanskrit language; this glorious language of ours, and this difficulty cannot be removed until, if it is possible, the whole of our nation are good Sanskrit scholars. You will understand the difficulty when I tell you that I have been studying this language all my life and yet every book is new to me. How much more difficult would it then be for people who never had time to study it thoroughly. Therefore, the ideas must be taught in the language of the people. Teach the masses in the vernaculars."

இங்கு கல்வி என நாம் கூறுவது வெறும் ஏட்டுக் கல்வி அன்று. அது படிப்பு, பயிற்சி இரண்டையும் உள்ளடக்கியது. **மனிதருக்குள் அடங்கி இருக்கின்ற அளவற்ற ஆற்றலை**

**உருவம் பெறச் செய்து, உயிர் கொடுப்பது.** நமது நாட்டின் இன்றைய நிலையை எண்ணுவோமாயின், நமது மக்கள் இரக்கப்பட வேண்டியவர்கள். பாதிப் பேருக்கு அவர்கள் தாய் மொழியே, எழுதவும், படிக்கவும் எட்டாததாக இருக்கிறது. அவர்களைப் பொருத்த வரை, தாய்மொழியிலுள்ள அறிவுத் தொகுப்புகளே அந்நியமாக இருக்கின்றன. அவர்கட்கு, இன்றைய முன்னேற்றத்துக்குத் தேவையான பல துறைகளைக் கற்றுத்தரும் மொழி, தாய் மொழியையும் தாண்டி, இன்னும் தொலைவில் ஓர் அந்நிய மொழியாக இருக்கிறது. இந்தப் பின்னணியில் நாம் இரண்டு தேவைகளை வற்புத்த விரும்புகிறோம்.

i. **உலகின் எந்தப் பகுதியில் புதியன கண்டுபிடிக்கப் பட்டாலும் அது மானுடத்தின் பொதுச் சொத்து. அதை நமது அறிவுக் கருவூலத்தின் ஒரு பகுதியாக்கிப் பயன் படுத்தும் திறன் நமக்கு வேண்டும். அவற்றைத் தேவை யான அளவில் தன்வயமாக்கிக் கொள்ளும் இயல்பும், வளமும் நமது மொழி பெற்றிருப்பதன்றியில், தன் வயமாக்கும் நிகழ்ச்சி தொடர்ந்து நடைபெற வேண்டும்.**

ii. **புதிய புனைவுகளின் அடிப்படையில் உருவாகும் கருவி கள், செய்பொருள்கள், செயல்முறைகள் ஆகியவற்றை அறிந்து, உள்வாங்கி, தமதாக்கிக் கொண்டு, பரவலாகப் பயன்படுத்தும் தகுதியை மக்கள் பெற்றிருக்க வேண்டும். இது அந்நிய மொழியில் என்றும் இயலாது. தாய்மொழி வழி தான் சாதிக்கப்பட வேண்டும்.**

எனவே, தாய்மொழி வழிக் கல்வி என்பது கற்பவரின், கற்கும் சமுதாயத்தின் நலனுக்காகவேயன்றி, மொழியின் நலத்துக்காகவன்று. அடிப்படையில் தாய்மொழி வழிக் கல்வி என்பது ஓர் இனத்தின் மேம்பாட்டுப் பிரச்சினையேயன்றி, மொழிப் பிரச்சினையன்று. பல துறைகளில் உருவாகும் அறிவு வளர்ச்சி ஒரு மொழியில் இடம் பெறும்பொழுது அந்த மொழி வளரும். வளர்ந்தால் தான் அது பயன்படும் திறன் உள்ள

மொழியாக இருக்கும். தாய்மொழி வழிக் கல்வி நமது தேவை; நமது நோக்கம். அதை நிறைவேற்றும் தகுதி பெற மொழியை வளர்க்கிறோம். அந்த வளர்ச்சி தொடக்க காலத்தில் திட்ட மிட்டதாக இருக்கலாம்; இருக்க வேண்டும். பின்னர் அது தானாகவே நடைபெறும் ஒன்றாகி விடும். பயன்படுத்தப் படுவது வளரும். வளர்ந்த ஒன்றின் பயனும் வளரும். இந்தப் பின்னணியில் நாம் தமிழகத்தில் தாய்மொழி வழிக் கல்வி நிலையை ஆய்வோம்.

## 2. பரிமாணங்கள் பல

தமிழகத்தைப் பொருத்த வரை தாய்மொழி வழிக் கல்வி பரவ, நாம் விடுதலை பெறுவதற்கு முன்னிருந்தே கூட முயற்சி செய்து வருகிறோம். தாய்மொழி தொடர்பாக நாம் எடுக்காத மாநாடுகள் இல்லை. நடத்தாத ஊர்வலங்கள் இல்லை. எழுப்பாத முழக்கங்கள் இல்லை. நமது நாடு விடுதலை பெற்றது முதல், இன்று வரை பொறுப்பேற்ற அரசியல் தலைவர்கள் தீவிரமான அக்கறை காட்டவில்லை என்ற குற்றச்சாட்டில் ஓரளவு உண்மையிருக்க லாம். ஆனால் அதுவே முக்கியமான காரணம் என்று கூறுவதோ, நினைப்பதோ, பிரச்சினையை முழுமையாக உணர்ந்ததாகாது. இயன்ற அளவில் அரசுகள் முயன்றிருக்கின்றன. முயன்றும் வருகின்றன. இருந்தும், பயிற்று மொழித் துறையில் நாம் மன நிறைவு பெறும் அளவிற்கு முன்னேற்றம் காணவில்லை. எடுத்த முயற்சிக்கு இணையான பலன் காண இயலவில்லை. இதற்கான காரணங்களை நாம் சற்று ஆழமாக எண்ண வேண்டும். மக்கள் மனத்தில் இருக்கும் தயக்கங்கள் பல. அவர்கள் சந்திக்கும் தடைகள் பல. அவற்றுள் தெரிந்தனவும் உண்டு, தெரியாதனவும் உண்டு. பயிற்று மொழிப் பிரச்சினையோடு தொடர்புடைய அம்சங்களில் அவ்வளவாகப் பேசப்படாதவை, ஆனால் முக்கியமானவை:

- ★ இந்தியத் துணைக் கண்டத்தில் தமிழகம் ஒரு மாநிலம்.
- ★ தமிழ் ஒரு மாநிலத்தின் ஆட்சி மொழி. அரசியலமைப்பில்

இடம் பெற்றுள்ள இந்திய மொழிகளுள் ஒன்று.

★ மைய அரசின் ஆட்சி மொழி இந்தி; துணையாக ஆங்கிலம், இந்தி மொழி பேசாத மாநிலத்தவர் வேண்டும் வரை நீடிக்கும்.

★ மைய அரசு தில்லியில் மட்டும் இருப்பதன்று. அது மாநிலத்திலும் செயல்படுவது மைய ஆட்சி மொழிக்கு மாநிலத்திலும் இடம் உண்டு.

இந்த நாட்டின் மைய ஆட்சி மொழியின் இடம், மாநில ஆட்சி மொழியின் இடம் என்பவை, தெளிவுபடுத்தப்படவில்லை. இவற்றை ஓரளவு வரையறுப்பவை:

i. மைய அரசின் மொழிக் கொள்கை

ii. மாநில அரசின் மொழிக் கொள்கை

இவற்றை நாம் பின்வரும் பகுதிகளில் ஆய்வோம். பொதுவாகத் தமிழகத்தில் மொழி பற்றியோ, சமுதாய நீதி பற்றியோ பேசும்பொழுது, நாம் அறிந்தோ, அறியாமலோ ஒரு மனத் திரையை உருவாக்கி வைத்திருக்கிறோம். இதனால் உண்மைகள் மங்கலாகத தெரிகின்றன; மாறுபட்டும் தெரிகின்றன சில சமயங்களில் மறைக்கப்பட்டும் விடுகின்றன.

தாய்மொழி வழிக் கல்வி பற்றிய கருத்துப் பரிமாற்றத்தில், நடைமுறைப் படுத்துவதில் சற்றுத் தயக்கம் காட்டுபவர்களை, சில சங்கடங்களை எடுத்துச் சொல்பவர்களை உடனே 'ஆங்கில மோகம்' கொண்டவர்களென்றோ, 'ஆங்கிலப் பற்று' மிகுந்தவர்களென்றோ, முத்திரை குத்துவது முறையாகாது; முதிர்ந்த மன நிலையுமாகாது விடுதலை பெற்று அரை நூற்றாண்டு கழிந்த நிலையில், குடியரசு நடைமுறையில் அரை நூற்றாண்டு அனுபவம் பெற்றபின், நாம் இன்னும், சமுதாயம், மொழி, அரசியல் தொடர்பான விவாதங்கட்கு வரும்பொழுது, 'கனி' நிலையை எட்டாது, 'காய்' நிலையிலேயே இருப்பது நமக்குப்

பெருமை அன்று. மற்றவர் உணர்வுகளை மதிக்கத் தெரியாத சமுதாயத்தில் முறையான தர்க்கம் இடம் பெறாது; சண்டை தான் வளரும். பிரச்சினை எதுவும் சண்டையால் தீர்வதில்லை. தீர்ந்தாலும் அது நியாயமான தீர்வாக இருப்பதில்லை. இந்த நாட்டில் இன்று ஆங்கிலம் பெற்றிருக்கும் இடம், அது பெற்றிருக்கும் முக்கியத்துவம், எளிதாகக் காரண, காரியங் களைக் காட்டி விளக்கக் கூடியது அன்று. நீண்ட வரலாற்றுப் பின்னணியில் பல வகையான, அரசியல், சமுதாய, இன உணர்வுகளின் வேதிச் சேர்க்கையால் (Chemical Combination) உருவானது. பலர் அதைப் புதுமையாக்கச் சாதனமாகப பார்க்கிறார்கள்; பலர் அதை வெளி உலகிற்குப் பலகணியாகப் பார்க்கிறார்கள்; முன்னேற்றப் பயணத்திற்கு நீண்ட நாள் தேவைப்படும் வாகனமாக எண்ணுகிறார்கள்; இந்திய மொழிக் குடும்பங்கட்கு உறவுப் பாலமாகப் பார்க்கிறார்கள். தங்கள் மொழிக்குத் தற்காப்பாகப் பார்ப்பவர்களும் உண்டு; தங்கள் மொழியின் ஆதிக்கத்திற்குத் தடையாகப் பார்ப்பவர்களும் உண்டு. 'இந்தியாவில் ஆங்கிலம்' என்பது இன்று பல பரிமாணங்களைக் கொண்டது. இந்தப் பின்னணியுடன் நாம் தமிழ் மொழி வழிக் கல்விப் பிரச்சினைக்கு வருவோம்.

## 3. கொள்கை வேறு: நடைமுறை வேறு

பயிற்று மொழியாக ஆங்கிலம் ஆதிக்கம் செலுத்தும் இன்றைய நகர்ப்புறச் சூழ்நிலையிலும் கொள்கை அளவில் தாய்மொழி வழிக் கல்வியை 'எதிர்ப்பவர்' யாரும் இலர். அரிச்சுவடிக்கு முற்பட்ட ''குழந்தைகள் பள்ளி'' (Kindergarten) நிலையிலும், ஆங்கிலம் பயிற்று மொழியாக உள்ள பள்ளியில் தம் மக்களை விரும்பிச் சேர்த்து விட்டிருக்கும் பெற்றோர்கள் கூடக் கல்வி, தாய்மொழியில் தான் பெறப்பட வேண்டும் என்பதைக் கொள்கை அளவில், தயக்கமின்றி ஒப்புக் கொள்கின்றனர் இப்படி ஒருமித்த மனத்தோடு ஒப்புக்கொள்ளப்படும் தத்துவம், நடைமுறையில் தமிழகத்தில் வெற்றி பெறாதிருப்பதைப்

பார்க்கிறோம். அந்த நிலை தொடர்கிறது. சிலர் கூற்றுப்படி, வளர்கிறது.

★ பெரிய இடத்துப் பிள்ளைகள், உயர்ந்த உத்தியோகப் பின்னணியினர் மட்டுமே ஆங்கிலம் வழி, பயிற்றுவிக்கும் பள்ளிகளை நாடியது மாறி, இன்று கல்வி, பொருளாதாரம், சமுதாயத் த்குதி என்ற மூன்றிலும் வசதியுடையோராக இல்லாதாரும் இயன்ற அளவு 'ஆங்கிலம் வழி பயிற்றுவிக்கும்' பள்ளிக்குத் தங்கள் குழந்தைகளை அனுப்ப ஏங்குவதைப் பார்க்கிறோம்.

★ ஆங்கிலப் பயிற்சிக்கு ஊட்டந் தரும் குடும்பச் சூழ்நிலை இல்லாத சமுதாய, பொருளாதாரப் பின்னணியைக் கொண்ட குழந்தைகள், இயந்திரங்களைப் போல ஆங்கிலப் பாடங்களை ஒப்புவித்தலையும், பொருளை உணராது எதையோ ஓதுகின்றனர் என்ற நிலையையும் காணும்பொழுது நமது நெஞ்சில் குருதி வ்டிகிறது. நாம் எங்கே சென்று கொண்டிருக்கிறோம், நமது எதிர்காலத் தலைமுறைகளை எப்படி வழிப்படுத்துகிறோம் என்பது பற்றிய கவலை நெஞ்சை அரிக்கிறது.

★ நகர்ப்புறக் காட்சியாக இருந்த ஆங்கிலப் பயிற்று மொழிப் பள்ளி, இன்று நாட்டுப்புறக் காட்சியாகவும் பரவுகிறது. மேட்டுக் குடியினர் பயிலுமிடம் என்ற நிலை மாறி எல்லாத் தரப்புப் பெற்றோர்களும் இப்படிப்பட்ட பள்ளிகளின் முன் அணி வகுத்து நிற்கும் சாரை(Queue) நம் கண்முன் விரிகிறது.

★ மேல்நிலைப் பள்ளி மட்டத்தில் தமிழில் பயின்ற பலர், கல்லூரியில் ஆங்கிலத்தில் படிக்க விழைந்து, ஆங்கிலம் வழி பயிற்றுவிக்கும் வகுப்புகளில் சேர்கின்றனர்.

★ மாநிலம் முழுவதிலும் எல்லா மட்டத்திலும், ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, ஆங்கிலம் வழி பயிற்றுவிக்கும் கல்லூரிகட்கும், பள்ளிகட்கும் நெருக்கடி சற்று அதிகமாக இருப்பதை நாமறிவோம். பல கல்லூரிகளில் ஆங்கிலம் பயிற்று

மொழியாக உள்ள வகுப்புகளில் இடம் கிடைக்காதோர், தமிழ், பயிற்று மொழியாக இருக்கும் பிரிவில் சேர்வதையும், சேர்ந்த பின்னும் மாற்றம் வேண்டி வரிசை வரிசையாகப் பரிந்துரைகளைக் குவிப்பதையும் பார்க்கிறோம்.

★ கல்லூரிகளில் 'தமிழ்வழி' பயின்றோர், தங்களது பட்டச் சான்றிதழ்களில் 'தமிழ்வழி' பயின்றதாகக் குறிப்பிடக் கூடாது எனக் கோரிக்கை எழுப்பியதையும் நாமறிவோம். அந்தக் கோரிக்கையின் அடிப்படை நமக்குப் புரிகிறது.

★ பொதுவாக உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளிகளில் ஆங்கிலத்தைப் பயிற்றுமொழியாகக் கொண்டவர் சத விகிதம் இவ்வளவு ஆண்டுகட்குப் பிறகும் கணிசமாக இருக்கிறது. கல்லூரிகட்கு வரும்பொழுது கலைக் கல்லூரிகளை எடுத்துக் கொண்டால், ஆங்கிலத்தில் பயில்வோர் தொகை தமிழில் பயில்வோர் தொகையினும் மிக அதிகமாக இருக்கிறது.

★ அனைத்திலும் முக்கியமாகக், 'குழந்தைகள் பள்ளி', 'ஆரம்பப்பள்ளி' ஆகியவற்றில் ஆங்கிலம்வழி, கற்றுத்தரும் போக்கு வளர்கிறது.

கல்வித் தத்துவத்தின் அடிப்படையில் பார்க்கும்பொழுது ஆங்கிலம்வழி பயிலுவது ஆரோக்கியமான முறை அன்று என்றாலும், மிகப் பலர், **அதுவும் கல்விப் பின்னணி உள்ள குடும்பத்தினர், 'தாய்மொழிவழி', கற்பதன் சிறப்பைத் தத்துவ ரீதியாக அறிந்தவர்கள், நடைமுறையில் ஆங்கிலம்வழி பயிலத் தங்கள் மக்களை அனுப்புவதற்கும் காரணமிருக்க வேண்டும். அவர்கள் எல்லாரும் தவறு செய்கிறார்கள் என்று புறக்கணிக்க முடியாது.** கொள்கை ரீதியில் அயல்மொழிவழி, கற்பதில் சில குறைபாடுகள் இருப்பதை அவர்கள் அறிந்திருப்பினும், நடைமுறையில், இன்றைய கல்வி, பொருளாதார, சமுதாயச் சூழ்நிலையில், ஆங்கிலம்வழி, கற்பதில் ஏற்படும் நன்மைகள் அல்லது அனுகூலங்கள், தமிழ்வழி, கற்பதினும் அதிகம் என்று

எண்ணி, அல்லது அவ்வாறு சரியாகவோ, தவறாகவோ கணக்கிட்டு அவர்கள் செயல்படுகிறார்கள். இதை நாம் மறுப்பதோ, மறைப்பதோ ஏற்ற ஒன்றன்று. இதற்கான காரணங்கள் என்ன என்று ஆராய வேண்டும். கீழ்க்காண்பவை காரணங் களாகச் சிலரால் கூறப்படுகின்றன. அவற்றில் உண்மை உள்ளதா என்பது வேறு கேள்வி. அதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும் நம் திருப்திக்காகவேனும் அந்தக் கேள்விக்குப் பதில் காண வேண்டும்.

## 4. தயக்கங்கள்: தடைகள்

தமிழ் வழிக் கல்வி நாம் விரும்பும் அளவிற்கு, எதிர்பார்த்த அளவிற்கு வெற்றி பெறாமைக்குக் கீழ்க்காணும் காரணங்கள் கூறப்படுகின்றன:

i. இலக்கிய மொழியான தமிழ், நவீன கல்வியறிவுத் துறைகளில் பயிற்று மொழியாகப் பயன்படத்தக்க நூல்வளம் உடையதாக இல்லை. கடந்த 40 அல்லது 50 ஆண்டுகளில் நாம் கணிசமாக இந்தத் துறையில் முன்னேற்றம் காணவில்லை.

ii. நாள்தோறும் வளர்ந்துவரும் கல்வியறிவுத் துறைகளில் பாடநூல்களாகப் பயன்படும் இலக்கியங்களையும், அறிவியலும் தொழில்நுட்பமும் படைத்துத் தரும் எண்ணற்ற கருவிகளை, உத்திகளை உடனுக்குடன் பயன்படுத்தும் நெளிவு சுழிவுகளையும் தமிழ் தன்வயமாக்கிக் கொள்ளவில்லை. அதற்கான பரிமாணங்கள் தமிழில் சேர்க்கப்படவில்லை.

iii. தமிழ்வழி, பயிற்றுவிக்கும் பள்ளிகள், ஒப்பீட்டளவில் பெரும்பாலும் ஆங்கிலம் வழி, பயிற்றுவிக்கும் பள்ளிகளைவிட வசதிகளில், தரத்தில், குறைந்தவை. கல்லூரிகளிலும் இன்றைய நிலையில் ஆங்கில மொழி வழியாகக் கற்றுத்தரும் நிறுவனங்கள் தான், அதற்கான

வகுப்புகள் தான் ஓரளவு தரம் கொண்டவையாக இருக்கின்றன. மாணவர்கள் அணிவகுத்து விண்ணப்பம் செய்வதும் அந்த நிறுவனங்கட்குத் தான். இதே கல்லூரிகளில் 'தமிழ்வழி'க் கல்வி இருந்தாலும் மாணவர்கள் மத்தியில் அவை இரண்டாந்தர இடத்தையே பெறுகின்றன

iv. தமிழ்வழி பயின்றோருக்கு உயர்பட்டப் படிப்புக்குச் செல்வதற்கான, குறிப்பாக மைய அரசின் கீழ் வரும் தேசிய அளவில் அமைந்த கல்வி நிறுவனங்களில் (National Level Institutions) இடம் பெறுவதற்கான வாய்ப்புகள் குறைவு.

v. மேல்நிலைப் பள்ளியில் படித்த மாணவர்கள், நுழைவுத் தேர்வின் அடிப்படையில் தான் மருத்துவம், பொறியியல், வேளாண்மை போன்ற துறைகட்குத் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள் இதில் வெற்றி பெறுபவர்களில் இன்னும் ஆங்கிலம்வழி, பயிலும் மாணவர்களே சத விகித ஒப்பீட்டில் பார்த்தால் மிகப் பெரும்பான்மையினராக இருக்கிறார்கள். இதற்கு அடிப்படைக் காரணம், ஆங்கிலம் வழியாகக் கற்றுத் தரும் பள்ளிகளின் தரம் சிறந்ததாக இருப்பதும், திறமை மிக்க மாணவர்கள் அப்பள்ளிகட்குச் செல்வதுமேயாகும்.

vi. மைய அரசின் கீழ் வரும் பல கல்வி நிலையங்களுக்கு நுழைவுத் தேர்வுக் கேள்வித் தாள்கள் ஆங்கிலம், இந்தி ஆகிய இரு மொழிகளில் தாம் இருக்கின்றன. சான்றாக இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் (I.I.T) நுழைவுத் தேர்வின் கேள்வித் தாள்கள், ஆங்கிலத்திலும் இந்தியிலுமே இருக்கின்றன. தமிழ் வழி, படித்தவர்கள், ஆங்கிலத்தில் கேட்கப்பட்டிருக்கும் கேள்விகளைத் துல்லியமாகத் தவறின்றிப் புரிந்துகொண்டு பதில் எழுதுவதில் பல சங்கடங்கள் இருக்கின்றன

vii. மைய அரசின் முக்கியமான பணிகள் அனைத்திற்கும் தனியாகத் தேர்வு வைத்தே விண்ணப்பதாரர்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள். அவர்களிலும் ஆங்கிலம்வழி

பயின்றவர்கள் தாம் பெரும்பான்மையினராக வெற்றி பெறுகிறார்கள்.

viii. அரசுத் துறைகளை விட இன்று சில பெரிய தனியார் நிறுவனங்கள் தாம் நல்ல ஊதியத்துடன் பதவிகள் கொடுக்கின்றன. அவை மாநில அளவிலும், தேசிய அளவிலும் பதவிக்கு ஆட்களைத் தேர்ந்தெடுக்கின்றன. மிகப் பெரும்பான்மை நிறுவனங்கள் ஆங்கில மொழியில் செயல்படுகின்றனவாதலின், அங்கும் ஆங்கிலம்வழி பயின்றவர்கட்குத் தான் முன்னிடம் கிடைக்கிறது. ஆங்கிலம்வழி பயின்றவர்கள் அளவிற்குத் தமிழ்வழி பயின்ற பலர், ஆங்கிலத்தைச் சரளமாகவும், சரியாகவும், தன்னம்பிக்கையுடனும் பயன்படுத்த முடிவதில்லை.

ix. மிகச் சிறு தொகையினர் என்றாலும், இன்று மேலை நாடுகட்குக் கல்வி கற்கப் போவது, மேலை நாடுகளில் வேலை தேடுவது, மேற்குடியின் மக்களுக்கு முக்கியமான நோக்கமாகி விட்டது. உண்மையைக் கூறுவதானால் மைய அரசிலிருந்து மாநில அரசு வரை, அரசின் கல்வி, பொருளாதாரக் கொள்கைகளை வகுக்கும் அதிகாரிகள் அனைவரும் ஆரம்பத்திலிருந்து தங்கள் மக்களை மேலை நாட்டுக் கல்விக்கும், மேலை நாட்டு வேலை வாய்ப்புக்கும் தான் தயார் செய்கிறார்கள். இங்கும் ஆங்கிலம்வழி பயின்ற மாணவர்கட்குத் தான் வாய்ப்பு அதிகம்.

x. இன்று நமது பள்ளிகளில் ஆங்கிலம் பயில்விக்கும் தரத்தை எண்ணிப் பார்த்தால், ஆங்கிலத்தை வெறும் பாடமாக மட்டுமே பயின்றவர் எவரும், ஆங்கிலத்தைப் பேசவும், எழுதவும் திருப்திகரமாகப் பயன்படுத்தும் நிலையில் ஆங்கில அறிவு பெறுவது இயல்வதன்று. சிலர் தங்களது குடும்பப் பின்னணி, அல்லது சாதகமான சூழ்நிலை காரணமாக ஆங்கிலத்தில் நன்றாக எழுதவும், பேசவும் திறமை பெற்றிருப்பின் அது வேறு செய்தி. ஆங்கிலத்தைப்

பயிற்று மொழியாகப் பயன்படுத்தியவர்கள் கூடப் பலர் தவறில்லாது சில வரிகள் கூட ஆங்கிலத்தில் எழுத இயலாத சூழ்நிலையைப் பார்க்கிறோம். இந்தி பயிலாத நாம், மைய அரசில், மைய அரசு நிறுவனங்களில் பொறுப்பேற்று, ஆங்கிலத்தை ஆட்சி மொழியாகப் பயன்படுத்தும் திறனை, அதை வெறும் பாடமாக மட்டுமே பயிலுவதன் மூலம் பெற முடியுமா என்பது கேள்விக்குறியாகும். இந்தி பயின்றவர்கள், ஆங்கிலத்தைப் பயன்படுத்த இயலாத சூழ்நிலையில் இந்தியைப் பயன்படுத்திக் கொள்ள வாய்ப்பிருக்கிறது. இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கட்குப் பிரச்சினையே இல்லை. அதைத் தாய்மொழியாகக் கொள்ளாத மாநிலத்தவரும் பள்ளியில் இந்தி பயின்றிருப்பதால், அதை அலுவலகங்களில் பயன்படுத்தும் அளவு தேர்ச்சி பெறுவது எளிது. இந்தி பயிலாது, ஆங்கிலத்தில் போதிய அளவு தேர்ச்சி பெறாத தமிழர்கள் மைய அரசின் எண்ணற்ற நிறுவனங்களில், மைய அரசின் தலைமைப் பீடங்களில் எவ்வாறு திறமையுடன் செயல்படுவது என்ற கேள்வி எழுப்பப்படு கிறது. இது புறக்கணிக்கப்படக் கூடிய கேள்வி அன்று.

xi. பொதுவாகக் கூறுவதானால் இன்று சமுதாயத்தில் மேல்மட்டத்தில் இருப்பவர்கள் பெரும்பாலும் தங்கள் குழந்தைகளை ஆங்கிலம்வழி பயில்விக்கும் பள்ளிகட்கும், கல்லூரிகட்கும் அனுப்பும் போக்கிற்கு ஆங்கிலம்வழி பயில்விக்கும் கல்வி நிறுவனங்களின் தரமும் ஒரு காரணம் என்பதை மறுப்பதற்கில்லை. ஆங்கிலம்வழி கற்பதன் மூலம் எதிர்காலத்தில் தேசிய அளவில் உயர்கல்வி வாய்ப்புகள், நாடு தழுவிய அளவில் வேலை வாய்ப்புகள் அதிகமாகின்றன என்ற நம்பிக்கை இரண்டாவது காரணம். இந்த நிலையில் பெற்றோர் ஒருவர் வந்து, உயர்கல்வி பெற இருக்கும் தம் மகனின், மகளின் நாளைய வாய்ப்புகளின் அடிப்படையில், அவர்களை ஆங்கிலம் வழி,

பயிற்றுவிப்பதா, தாய்மொழிவழி பயிற்றுவிப்பதா என அறிவுரை கேட்டால், நமது இன்றைய அரசியல், சமுதாயச் சூழ்நிலையில் ஒரு மாணவரின் நாளைய கல்வி, வேலை வாய்ப்புகளை அடிப்படையாக வைத்து வழி காட்டுவதா, அல்லது "தாய்மொழிவழிக் கல்வியே ஒரு சமுதாயத்திற்குச் சாலச் சிறந்தது" என்ற தத்துவத்தின் அடிப்படையில் வழி காட்டுவதா என்பதை நாம் எண்ணி ஆய்ந்தே முடிவு செய்ய வேண்டியுள்ளது. பதில் எளிதானதன்று.

நாம் மேலே கூறியுள்ள கூறுபாடுகளும், பின்னணியும் தான் பயிற்று மொழிப் பிரச்சினையில் **'கொள்கை வேறு, செயல் வேறு' என்ற சூழ்நிலைக்குக் காரணம்.** கொள்கையளவில் அவர்கள், தாம் நம்பும் தத்துவத்தைக் கூறுகிறார்கள். செயலளவில், நாளைக்கு எது விரும்பத்தக்கதோ அதன்படி செய்கிறார்கள்.

## 5. நாம் கருத வேண்டியன

மேலே கூறிய ஒவ்வொன்றையும் ஆய்வது தேவையானதும், தவிர்க்க முடியாததும், பொருத்தமானதுமாகும். நாம் கூறும் கருத்துகள், தமிழைக் கல்வியின் எல்லா மட்டத்திலும் பயிற்று மொழியாக்குவதற்கு வேண்டிய தேவைகள், முயற்சிகள் பற்றியனவேயாகும். ஐந்தாவது வரை, அல்லது உயர்நிலைப் பள்ளிப் படிப்பாகிய பத்தாவது வரை, தமிழைப் பயிற்று மொழி யாக்குவது பெரிய பிரச்சினை அன்று. மொழி வளர்ச்சி, பாடப் புத்தகங்கள், அறிவியல் துறைகளில் ஏற்படும் முன்னேற்றங்கள் போன்ற எவையும் தடையல்ல. அரசின் கல்விக் கொள்கை, மக்கள் அணுகுமுறை போன்றவை வேண்டுமானால் தடையாகலாம்.

முதலாவது, தமிழ் மொழியின் தகுதி பற்றியது. இதில் எந்த வாதமும் தேவையில்லை. தமிழ் மொழியின் சொல்வளம் ஒரு பிரச்சினையே அன்று. இஸ்ரேல் என்ற ஒரு நாடே 1948க்கு முன்

இருந்ததில்லை. பல நாடுகளிலும் பரவி வாழ்ந்த யூதர்கள் அந்தந்த நாட்டு மொழியைத் தான் கற்றுவந்தார்கள். அவர்கட்குத் தங்கள் மூதாதையர் மொழியான 'ஹீப்ரு' (Hebrew) மொழி தெரியாது. பாலஸ்தீனத்திலும், ஹீப்ரு ஒரு வட்டார மொழி போல இருந்து வந்தது. அடிப்படையில் அது வழக்கிழந்த மொழியாகவே கருதப்பட்டது. இஸ்ரேல் அமைவதற்கு முன், இரண்டாயிரம் ஆண்டு காலப் பகுதியில், அம்மொழியில் பெரிய வளர்ச்சி எதுவும் ஏற்படக்கூடிய வாய்ப்பே இல்லை. ஆனால் இன்று இஸ்ரேலில் அரிச்சுவடி முதல் டாக்டர் பட்டம் வரை ஹீப்ரு மொழியில் தான் பயிற்றுவிக்கப்படுகிறது.

மலாய் மொழி அவ்வளவாக வளர்ச்சி பெற்ற மொழி அன்று. ஆனால் இன்று மலேசியாவில் அதுதான் எல்லா மட்டத்திலும் பயிற்று மொழி. இந்தோநேஷிய மக்கள் மலாய் மொழியைத் தான் பேசி வந்தார்கள். டாக்டர் சுகர்னோ அதற்குப் 'பாஷா இந்தோநேஷியா' என்று பெயர் வைத்து, ஒரு புது மொழியைத் தம் மக்களுக்குத் தந்துவிட்டுப் போனார். அங்கும் எல்லா மட்டத்திலும் இன்று 'பாஷா இந்தோநேஷியா' தான் பயிற்று மொழி. மலாய் மொழி, பாஷா இந்தோநேஷியா இரண்டும் ரோமன் வரி வடிவத்தில் எழுதப்படுகின்றன.

தாய்லாந்து ஆகட்டும், வியட்நாம் ஆகட்டும், வடகொரியா, தென்கொரியா ஆகட்டும், அங்கு தாய்மொழி தான் பயிற்று மொழி. எவ்வளவு கடுமையான அளவுகோலை வைத்துப் பார்த்தாலும், தமிழ் மேலே குறிப்பிடப்பட்ட மொழிகள் அனைத்திலும் வளத்தில், இலக்கண அமைப்பில், பாரம்பரியத்தில் மிக உயர்ந்தது. இதில் அணுவளவும் ஐயமில்லை. எனவே பயிற்று மொழியாகத் தாய்மொழி அமைவதற்குத் தமிழ் மொழி ஒரு தடை அன்று. தேவையான அளவில் நூல்கள் இயற்றுவதும் தடை அன்று. தமிழர் அணுகுமுறையும், குறிக்கோளை முன்வைத்துத் திட்டமிட்டுச் செயலாற்ற இயலாமையும், மன உறுதியின்மையும் வேண்டுமானால் தடையாக இருக்கலாம்.

இரண்டாவது, தேவைக்கேற்ப மொழியில் ஏற்பட வேண்டிய மாற்றம் பற்றியது. தமிழ் நீண்ட காலமாக ஓர் இலக்கிய மொழியாகத்தான் இருந்து வந்திருக்கிறது. நகரமைப்புப் பற்றி நமது இலக்கியங்கள் பேசுகின்றன. ஆனால், நகரமைப்புப் பற்றிய நூல்கள் – பண்டை நூல்கள் – இன்று இல்லை. மிகச் சிறந்த அணைகளை, வாய்க்கால்களை உருவாக்கி, நீர்ப்பாசன வசதிகளை நமது முன்னோர் படைத்திருக்கிறார்கள். ஆனால் அத்துறையில் எழுதப்பட்ட நூல்கள் எவையும் தமிழில் இன்று இல்லை. இன்னும் சொல்லப்போனால், சித்த மருத்துவம் தவிர, மற்ற அறிவுத் துறைகளில் குறிப்பிடத்தக்கதான பண்டை நூல்கள் அனைத்தும் இலக்கியம், சமயம், தத்துவம் ஆகிய துறைகளைச் சேர்ந்தவைதாம். அவையும் செய்யுள் வடிவிலமைந்தவை. எனவே பண்டை இலக்கிய மொழியான தமிழை, இன்றைய கல்வியறிவுத் துறை அனைத்திலும் ஆங்கிலம் போலப் பயன்படும் மொழியாக நாம் மாற்ற வேண்டும். இந்த மாற்றம் இடம் பெறுவதற்குச் சொல் வளம் மட்டும் போதாது. துறைச் சொற்களை உருவாக்குவது மட்டும் போதாது. செங்கற்கள் வீடு கட்டத் தேவை. ஆனால் செங்கற்களைச் சேகரித்துக் குவித்து வைப்பதே வீடாகி விடுவதில்லை. துறைச்சொற்கள் செங்கற்கள் போன்றவை. தமிழில் அறிவியல் நடை உருவாக வேண்டும். அதற்கான இலக்கணம், பாரம்பரியம் உருவாக வேண்டும். பல நூல்கள் எழுதப்பட வேண்டும். அறிவியல், தொழில்நுட்பத் துறைகளில் பத்திரிகைகள் (Journals in Science and Technology) வெளிவர வேண்டும். புதிய சொற்களை உருவாக்குவதற்கான பல உத்திகளை நாம் காண வேண்டும். இவற்றைப் பற்றிய சில கருத்துகளை 'அறிவியல் தமிழ்'[1] என்ற எனது நூலில் சற்று விரிவாகக் கூற முயன்றிருக்கிறேன்.

மனித சமுதாயத்தின் ஒவ்வொரு வளர்ச்சியிலும், கருவி வளர்ச்சி இருக்கிறது. அவ்வப்பொழுது புதிய கருவிகளைப்

---

1. வா.செ. குழந்தைசாமி . அறிவியல் தமிழ், பாரதி பதிப்பகம், சென்னை, 1985.

படைத்த சமுதாயம், பயன்படுத்திய சமுதாயம் தான் முன்னேற முடிந்தது. வளர்ச்சி என்பது மாற்றம். மாறாத பொருளெதுவும் வளர்வதில்லை. தட்டச்சு, மின்தட்டச்சு, கணிப்பொறி, தொலைஎழுதி (Telex) போன்ற கருவிகளை ஒரு மொழி முழுமையாகப் பயன்படுத்த வேண்டுமானால் அதற்கு ஏற்ற சில மாற்றங்களை நாம் ஏற்றாக வேண்டும். செங்குத்து வரிசையில் மேலிருந்து கீழாக எழுதப்பட்ட ஜப்பானிய மொழி இன்று அறிவியல், தொழில்நுட்ப இலக்கியங்களில் படுக்கை வரிசையில் எழுதப்படுகிறது. இது சாதாரண மாற்றம் அன்று; மகத்தான மாற்றம். சீன மொழியிலும், ஜப்பானிய மொழியிலும் அறிவியல், தொழில்நுட்ப நூல்களைச் செங்குத்து (Vertical) வரிசையில் எழுத இயலவே இயலாது என்பதில்லை. கணிப்பொறி கொண்டு எல்லா வரிவடிவங்களையும் கையாளலாம் என்று வாதிடுபவர்கள், ஜப்பானியர்கள். இதை அறியாதவர்கள் அல்லர் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். எதிலும், 'எளிமை', என்ற ஒன்று இருக்கிறது. அதில் எழில் இருக்கிறது; ஈர்ப்பு இருக்கிறது.

இலக்கிய மொழியாகவே வளர்ந்த ஒன்றை, கடந்த 250 ஆண்டு காலத்தில் ஏற்பட்ட தொழிற்புரட்சியோடு தொடர்பில்லாது நின்றுவிட்ட ஒரு மொழியை, எந்த மாற்றத்தையும் ஏற்காது, கல்விமொழியாக்குவது எளிதன்று, பாதுகாப்பதாக எண்ணி, நம்மில் பலர் அதன் வளர்ச்சிப் பயணத்தைத் தடுக்கிறோம். நமது அணுகுமுறையில் ஒரு பெரிய மாற்றம் வேண்டும். இதைப் பற்றிப் பின்னர் வரும் கட்டுரைகளில் பார்ப்போம்.

வடமொழி பல துறைகளில் சொல்வளம் மிக்கது என்பதில் ஐயம் இல்லை. வழக்கொழிந்த மொழி என்பதாலேயே அதன் சொல்வளமோ, அதில் இருக்கும் நூல்களின் வளமோ, இல்லாது போய்விடுவதில்லை. துறைச் சொற்களைப் படைப்பதில் தமிழ் தவிர்த்த இந்திய மொழிக் குடும்பத்தினர் கீழ்க்காணும் அணுகுமுறையைக் கடைப்பிடிக்கின்றனர்.

i. அனைத்துலக அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டு வழக்கில் இருக்கும் துறைச் சொற்களை (International Technical Terms) அப்படியே ஏற்றுக்கொள்வது.

ii. அனைத்துலகத் துறைச் சொற்கள் ஏற்கப்பட்டது போக மற்ற சொற்கட்கு, ஐரோப்பிய மொழிக் குடும்பத்தினர், இலத்தீன், கிரேக்க மொழி வேர்ச் சொற்களைப் பயன்படுத்தித் துறைச் சொற்களை உருவாக்கியது போல, இந்திய மொழிக் குடும்பத்திற்கு வடமொழியைப் பயன்படுத்தி, அனைத்திந்தியத் துறைச் சொற்களை (Pan Indian Technical Terms) உருவாக்குவது. அதற்குப் பல குழுக்கள் அனைத்திந்திய அளவில் செயல்படுகின்றன.

iii. உலகளாவிய துறைச் சொற்கள், அனைத்திந்தியத் துறைச் சொற்கள் ஆகியவை போக, மீதமிருக்கும் சொற்களுக்கு அந்தந்த மொழிகளில் சொற்கள் புனைவது.

தமிழ் தவிர, இந்திய மொழிகள் அனைத்தும் ஏறத்தாழ, மேலே கூறிய மூன்று முறைகளையும் ஏற்றிருக்கின்றன. நாம் மற்ற இந்திய மொழிக் குடும்பத்தினரிடமிருந்து மாறுபட்ட, தனி நிலையை மேற்கொண்டிருக்கிறோம். **அதை நாம் ஏற்கவில்லை என்பதில் தான் நம்முள் ஒற்றுமையே தவிர, அதற்குப் பதிலாக நாம் என்ன வழிமுறையைக் கையாள வேண்டும் என்பதில் நம்முள் ஒத்த அணுகுமுறை இல்லை. இப்பிரச்சினைக்குத் தீர்வு பற்றிய தெளிவில்லை.** நவீன அறிவுத் துறைகளில் நூல்கள் இயற்றும், மொழிபெயர்க்கும் முயற்சியில் ஈடுபடுவோரை ஆற்றுப்படுத்தும் நிறுவனம் என எதுவும் இல்லை.

★ தூய தமிழன்றி எந்தச் சொல்லாக்க வழிமுறைகளையும் தொடோம் என்பர் ஒரு சாரார்.

★ மணிப்பிரவாளம் ஒன்றே வழி என ஒரு சாரார்.

★ தேவைக்கேற்ப உலக வழக்கு, அதற்கு மேல் இயன்றவரை தூய தமிழ்; முழுமையாகத் தனித் தமிழ் விரதமோ,

கட்டுப்பாடற்ற மொழிக் கலப்போ ஏற்புடையதன்று என்னும் நடுநிலையில் ஒரு சாரார்.

இப்படி இன்று அறிவியல் தமிழாக்கம் பற்றிய விவாதங்கள் நடைபெற்று வருகின்றன. **நாம் வாதித்தவை பல; சாதித்தவை அதிகமில்லை.**

இந்தியில் நாளொரு துறையும், பொழுதொரு நூலுமாக மைய அரசின் பெருமுயற்சியால் வளர்ச்சி இடம் பெற்று வருகிறது. இந்தியில் ஏற்படும் வளர்ச்சியை அப்படியே பயன்படுத்தும் இயல்பு கொண்டதாக மற்ற இந்திய மொழிகளும், பயன்படுத்தும் அணுகுமுறை கொண்டவர்களாக மற்ற மொழிக் குடும்பத்தினரும் இருக்கிறார்கள்.

நாம் இந்தக் குழுவில் சேரவில்லை. இத சரியா, தவறா என்று தீர்ப்புக் கூற நாம் விரும்பவில்லை. ஓர் உண்மை நிலையை மட்டும் இங்கு எடுத்துக் காட்டுகிறோம். **ஒரு குறிப்பிட்ட வளர்ச்சிப் பாதையை, அது நமக்கு ஒத்து வராது எனப் புறக்கணித்த நாம், இன்னொரு பாதையை உடனடியாக வகுக்க வேண்டும். அப்படி வகுத்திருக்கிறோமா என்றால், 'ஆம்' என்று சொல்ல நிலைமை இடம் தரவில்லை.** நமது பாதை தெளிவாக இல்லை. நமது பயணம் நிறைவு தரும் அளவிற்கு முன்னேறவில்லை. நமது அணுகுமுறையை நாம் சற்றுக் கவலையுடன் ஆராய வேண்டும். **முடிவு எதுவாயினும், அதன் அடிப்படையில் முன்னேற்றத் திற்கான முயற்சிகள் தொடங்கப்பட வேண்டும். இது தமிழ் அறிஞர்களின், துறை அறிஞர்களின், எழுத்தாளர்களின் கடமை. காழ்ப்பும் கசப்பும் ஆக்கச் சக்திகளல்ல. எதிர்ப்பு, உரிய இடத்தில், உரிய நேரத்தில் தேவை எனினும், அதுவே வளர்ச்சியாகி விடாது என்பதையும் நாம் மனத்திற் கொள்ள வேண்டும்.**

அடுத்தது, தமிழ்வழிக் கல்வியின் தரம்; நுழைவுத் தேர்வுகள், போட்டித் தேர்வுகள் பற்றியது. பள்ளிகளாயிருப்பினும், கல்லூரிகளாயிருப்பினும் ஒப்பீட்டளவில் தமிழ்வழி பயிற்று

விக்கும் நிறுவனங்களை விட ஆங்கிலம் வழி பயிற்றுவிக்கும் நிறுவனங்கள் பெரும்பாலும் தரத்தில் உயர்ந்தவையாக இருக்கின்றன என்பது ஒரு வாதம். இதை நாம் முழுமையாக மறுப்பதற்கில்லை. சில விதி விலக்குகள் இருக்கலாம். ஆனால் பொதுவான உண்மை இதுதான். கட்டடம், தளவாடங்கள், ஆசிரியர் படிப்பு, பயிற்சி, ஈடுபாடு, தூய்மையான சூழ்நிலை, கட்டுப்பாடு ஆகியவற்றில் இந்த நிறுவனங்கள் பெற்றோரின் கவனத்தை ஈர்ப்பவையாக இருக்கின்றன.

பொறியியல், மருத்துவம், வேளாண்மை போன்றவற்றில் பலரும் விரும்பும் சிறப்புடைய நிறுவனங்கட்கு நடத்தப்படும் நுழைவுத் தேர்வில் ஆங்கிலம்வழி பயின்றவர்கள் வெற்றிச் சத விகிதம் கணிசமாகக் கூடுதலாக இருப்பதாக நம்புகிறார்கள். நாம் இதை ஆராய வேண்டும்.

கீழ்க்காணும் தேர்வுகளில் மேல்நிலைப் பள்ளியில் தமிழ்வழி பயின்றோர், ஆங்கிலம்வழி பயின்றோர் ஆகியோரின் சத விகித வெற்றியை இரண்டு மூன்று ஆண்டுகட்குக் கணக்கிட வேண்டும்.

i. தமிழகத்தில் தொழில்நுட்பம், பொறியியல், மருத்துவம், வேளாண்மை; சட்டம்(ஐந்தாண்டுப் படிப்பு) ஆகியவற்றிற்கு நடத்தப்படும் தேர்வுகள்.

ii. I.I.T., அவற்றையொத்த நிறுவனங்கட்கு நடத்தப்படும் தேர்வுகள்.

iii. அனைத்திந்திய அளவில் மருத்துவக் கல்விக்கு நடத்தப்படும் நுழைவுத் தேர்வுகள்.

iv. இதைப் போலவே I.A.S., I.P.S., I.F.S.,C.E.S.,போன்ற பல மைய அரசுத் தேர்வுகளில் தமிழ்வழி பயின்றோர், ஆங்கிலம்வழி பயின்றோரின் வெற்றி விகிதங்கள்.

மேற்படிப்பு என்று வருவோமானால், இன்றும் உயர்மட்டக் கல்வியில் முக்கியமான துறைகளில் ஆங்கிலம் தான் ஆதிக்கம் செலுத்துகிறது. இந்தியா முழுவதுமாக மருத்துவம், பொறியியல்,

வேளாண்மைத் துறைகளில் பயிற்று மொழி ஆங்கிலம் தான். I.I.T., I.I.M., Post Graduate Institute of Medical Sciences போன்ற மிகச்சிறந்த கல்வி நிறுவனங்கள் ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாகக் கொண்டவை. அங்கிருந்து ஆங்கிலம் அகலுமானால் அந்த இடத்தில் இந்தி வருவது தவிர்க்க இயலாதது. எல்லாப் பிராந்திய மொழிகளிலும், அங்கு, கற்க வழி ஏற்படும் என்று நம்புவதற்கு இடமில்லை.

அடுத்தது வேலை வாய்ப்பு: தனியார் துறைகளில் பெரிய நிறுவனங்கள் அனைத்தும் ஆங்கிலத்தில் தான் அலுவல்களை நடத்துகின்றன. மைய அரசின் அலுவலகங்கள் ஆங்கிலம் அல்லது இந்தியில் தமது அலுவல்களை நடத்துகின்றன. பொதுவாக அவை அந்தந்த மாநில மொழியிலும் அலுவல் களை நடத்த வேண்டும். 'மும்மொழிக் கொள்கை' என்பது கல்விக்கு மட்டுமன்று. அது மைய அரசின் அலுவலகங்கட்கும் பொருந்தும். 'சர்க்காரியா குழுமம்' (Sarkaria Commission) இதைத் தெளிவு படுத்தியுள்ளது. ஆனால் மைய அரசு, மாநிலங்களிலுள்ள தனது அலுவலகங்களில் பெரும்பாலும் ஆங்கிலத்தையும், இந்தியையும் மட்டுமே பயன்படுத்துகிறது. நாடாளுமன்ற ஆட்சி மொழிக் குழு (Parliamentary Committee on Official Language) மைய அரசு அலுவலகங்கள், அவை தில்லியில் இருந்தாலும், மாநிலங்களில் இருந்தாலும், அவை இந்தியை அலுவல் மொழியாகப் பயன்படுத்துவதில் எந்த அளவிற்கு முன்னேறியிருக்கின்றன என்பதை மட்டும் தான் பரிசீலிக்கிறது. மாநில மொழி பற்றிய பிரச்சினை அங்கு இடம் பெறுவதாகத் தெரியவில்லை. வெளி மாநிலங்கட்கு, அல்லது மைய அரசு நிறுவனங்கட்கு, அல்லது பெரிய தனியார் துறை நிறுவனங்கட்கு எல்லாரும் வேலைக்குச் செல்வதில்லை என்றாலும், ஒவ்வொரு வரும் தமக்கு அதற்கான வாய்ப்பு இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். தொடக்கக் கட்டத்திலேயே, சில வாய்ப்பு வாயில்களை மூடி விட யாரும் தயாராக இல்லை ஆங்கிலத்தில் படிப்பவர்கட்கு அதிக வாய்ப்புகள் இருப்பதும், தமிழில் படிப்பவர்கட்கு வாய்ப்பு ஓரளவு குறைவதும் தெரிகிறது.

தாய்மொழியில் படிப்பதன் மூலம் நடைமுறையில் குறிப்பிடத்தக்க நன்மை, சலுகை எதுவும் இல்லாத சூழ்நிலையில், **"தத்துவ ரீதியாகத் தாய்மொழியில் படிப்பது தான் சிறந்தது" என்ற அறிவுரை "அடுத்த வீட்டுக்காரனுக்குத் தானே தவிர தனக்கன்று" என்ற நிலை தான் இருந்து வருகிறது.**

மைய அரசின் அலுவலகங்களின் ஆட்சி மொழி இந்தி அல்லது ஆங்கிலம். இரு மொழிக் கொள்கையின் கீழ் நாம் இந்தி பயில்வதில்லை. எனவே மைய அரசில் பணிபுரிய நாம் ஆங்கிலத்தைச் சரளமாக எழுத்திலும், பேச்சிலும் பயன்படுத்தும் தகுதி பெற்றிருக்க வேண்டும். இன்று ஆங்கிலம் பயில்விக்கும் தரத்தைக் கருதுவோமானால், அதை ஒரு மொழியாக மட்டும் கற்று, நாம் மைய அரசு அலுவலகங்களில் பல மட்டத்திலும் ஆங்கிலத்தைப் பயன்படுத்தும் வல்லமை பெறுவது இயலுமா என்பது அடுத்த கேள்வி. பொதுவாக இயலும் என்று கூற இயலவில்லை. **தமிழ்வழிக் கல்வியைச் செயல்படுத்தும் பொழுது, இணையாகவே, ஆங்கிலப் பாடத்தின் தரத்தை உயர்த்துவதும், அதில் சிறப்புத் தகுதி பெற விரும்புபவர்கட்கு வாய்ப்புகளை ஏற்படுத்துவதும் தேவையாகும். இது இரு மொழிக் கொள்கையைக் கடைப்பிடிப்பதின் மூலம் நாம் ஏற்றுக் கொண்டிருக்கும் பொறுப்பு.** மைய அரசு ஏதோ தில்லியில் மட்டும் செயல்படுவதன்று. அது மாநிலங்களிலும் செயல்படு கிறது. நமது மாநிலத்திலும் ஏராளமான மைய அரசின், அல்லது மைய அரசு சார்ந்த அலுவலகங்கள் உள்ளன. எண்ணிக்கை அளவில், வேலை வாய்ப்புகள் குறைவே என்று கொண்டாலும், ஒவ்வொரு பெற்றோரும் தங்கள் மக்கள் அதற்கும் தகுதியுடைய வர்களாக இருக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். மேலும் மாநில அரசு தான் நம்முடையதென்பதில்லை. மைய அரசும் நம்முடைய அரசுதான். **மைய அரசுப் பதவிகளில் நமது மாநிலத்தவர் கணிசமாக இடம் பெறாவிட்டால், நாம் நம்மை ஆள்பவர்களாக இல்லாது, தில்லியிலிருந்து ஆளப்படுபவர் களாகி விடுவோம்.** தமிழ்வழி பயின்ற ஓரிருவர் சில அகில இந்தியப் பணித் தேர்வுகளில் வெற்றி பெற்றதை எடுத்துக்காட்டி,

அதைப் பொதுமைப்படுத்துவது வாதத்திற்குப் பயன்படலாம். வாழ்க்கையின் நிதர்சனங்கட்கு ஒத்து வராது.

இறுதியாக, உயர்நிலை அரசு அலுவலர், செல்வர், செல்வாக்குள்ளோர் குழந்தைகள் ஆங்கிலம் பயில்கிறார்கள் என்பதும், அவர்கள் மக்களில் பலர் மேலை நாட்டில் கல்வி பெற இது வசதியளிக்கிறது என்பதுமாகும். இதில் விதிவிலக்குகள் இருப்பினும், அடிப்படையில் இதுவும் உண்மையே. வசதியும், செல்வாக்கும் வாய்ந்தவர்கள் குழந்தைகள் படிப்பதால் அப்பள்ளி வசதி பெருகுகிறது; மதிப்பு உயர்கிறது; தகுதி வளர்கிறது. தகுதி உயர்ந்திருப்பதால் பதவியிலுள்ளோர், பணம் படைத்தோர் தங்கள் குழந்தைகளை அங்கு அனுப்புகிறார்கள். இஃது ஒரு நச்சுச் சுற்று (Vicious Circle), ஒன்று மற்றொன்றை ஊக்குவிக்கிறது.

பொதுவாகத் தத்துவ ரீதியாக, உலக வழக்கின் அடிப்படை மூலமாகப் பார்க்கும் பொழுது 'தாய்மொழி வழி' கற்பதே ஏற்றதும், இயற்கையானதும் என்றாலும் நமது நாட்டில் அதற்கு நடைமுறையில் எதிரான சில கூறுபாடுகளை உருவாக்கி வைத்திருக்கிறோம். அவை பரவலானவை; பலம் வாய்ந்தவை. நமது சாதிப் பிரச்சினையைப் போல, வேண்டா மென்று நினைப்பவர்களும் விட முடியாத ஒரு நிலைமை இங்கும் இருக்கிறது. எதிர்கால உயர்வுக்கு ஊறு ஏற்படாத வகையில், மக்கள் ஏற்றுக்கொள்ளும் வகையில் இந்த மாற்றம் உருவாக்கப்பட வேண்டும். அது இயன்ற ஒன்று. இயற்றுவது தேவை. அவசரத் தேவை. வழிமுறைகள் பற்றி, அவற்றை வகுப்பது பற்றி, நடைமுறைப் படுத்துவது பற்றி ஆய்ந்து, ஆய்வின் அடிப்படையில் திட்டங்கள் வகுத்து, இயன்றால் கட்சி கடந்த ஒரு கொள்கைப் பிரகடனத்தை அறிவித்து, அதைச் செயல்படுத்த வேண்டும்.

# 4

# மைய அரசின் மொழிக் கொள்கை

## 1. மைய, மாநில ஆட்சி மொழிகள்

பொதுவாக, நாம் ஒரு சமுதாயத்தின், ஒரு நாட்டின் முன்னேற்றத்தைப் பொருளாதார அளவுகோல் கொண்டே கணித்து வந்தோம். அதற்கான சில அலகுகளையும் நிர்ணயித்தோம். ஆனால் இன்று ஒரு மனித சமுதாய 'வாழ்க்கையின் மாற்று' (Quality of Life) பொருளாதார நிலையை மட்டும் தழுவியிராது, கல்வி, சுகாதாரம் தொடர்பான அலகுகளையும், ஓரளவு தனி மனித சுதந்திரத்தையும் பொருத்திருக்கிறது. எனவேதான், இன்று, மேம்பாடு (Development) எனக் கூறப்படும் முன்னேற்றக் கூறுபாட்டைச், சமுதாய மேம்பாடு (Social Development), அரசியல் மேம்பாடு (Political Development), பொருளாதார மேம்பாடு (Economic Development) என்ற மூன்று உறுப்புகளைக் கொண்டதாகப் பார்க்கிறோம். இந்த மூன்றுக்கும் கல்வியே அடித்தளமாக இன்று அமைந்திருக்கிறது என்பதையும் முன்பே குறிப்பிட்டிருக்கிறோம் தேவையான துறைகளில், உரிய தரத்தில், உரிய அளவில் கல்வி பெறத் துணை நிற்கும் கருவூலமாக இருப்பது ஓர் இனத்தின் மொழி அது பண்டை அறிவையும் தாங்கி நிற்பது; இன்றைய அறிவையும் சேகரிப்பது. தாய்மொழி வழிக் கல்வி, தாய்மொழி

வழிச் சிந்தனை இயற்கையானது: நீரில் மீனினம் நீந்துவதொப்ப, வானத்தில் புள்ளினம் பறப்பதொப்ப இயல்பானது. கற்பதற்கும் அதுவே இயற்கை வழி; புதுவன காண்பதற்கும் அதுவே ஏற்ற வழி என்பதும் உலகு ஒப்பிய தத்துவம். இவை நாம் அறிந்த உண்மைகள்

சுதந்திரமான ஒரு நாட்டில், ஒரே மொழி எல்லா மட்டத்திலும் ஆட்சி மொழியாக இருப்பது பரவலாக நாம் காணுவது. ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகள் வழங்கும் நாட்டில் எல்லா மொழிகளும் மைய அரசின் ஆட்சி மொழிகளாக இருப்பதும் நடைமுறையிலுள்ள ஏற்பாடு: சான்றுகள், பெல்ஜியம், ஸ்விட்சர்லந்து அங்கு மொழிகளின் எண்ணிக்கை குறைவு. ஆனால் ஒரே நாட்டில் மாநிலத்தில் ஓர் ஆட்சி மொழி; மைய அரசில் இன்னோர் ஆட்சிமொழி; அண்டை மாநிலங்களில் வெவ்வேறு ஆட்சி மொழிகள் என்ற ஏற்பாடு நாம் நடைமுறையில் அவ்வளவாகப் பழகிய ஒன்றன்று இதற்கு நமக்கு 'முன்மாதிரிகள்' (Models) அவ்வளவாக இல்லை. சோவியத் ஒன்றியத்தைப் பற்றி எண்ணலாம். அங்கும் பல மாற்றங்கள் அண்மையில் நிகழ்ந்திருக்கின்றன. இந்தியத் துணைக் கண்டத்தைப் பொருத்தவரை, கீழ்க்காணும் ஏற்பாடு, மொழிப் பயன்பாட்டிற்கு அரசியல் அமைப்பின்வழி, நாடாளுமன்ற உறுதிமொழி வழி, ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

i. மைய அரசில் இந்தி ஆட்சி மொழி. இந்தி பேசாத மாநிலத்தினர் வேண்டும் வரை ஆங்கிலம் துணை ஆட்சிமொழியாக நீடிக்கலாம்

ii. சில மாநிலங்களில், மைய அரசின் ஆட்சி மொழியே, மக்களின் தாய்மொழியாகவும் இருப்பதால், அவர்கட்கு இந்தியே, மாநில ஆட்சி மொழியும் மைய ஆட்சி மொழியுமாகும்.

iii. மற்ற மாநிலங்களில், மாநில மக்களின் தாய்மொழி, அந்த மாநிலத்தின் ஆட்சி மொழி; இந்தி அம்மாநிலங்கட்கு மைய அரசின் ஆட்சிமொழி.

**ஆட்சி மொழிக் கொள்கையில் மாற்றம் தேவை என்ற கோரிக்கையும் இருக்கிறது என்பதை இங்கு குறிப்பிட வேண்டும். இந்தக் கருத்துரையில் நாம், இப்பொழுது அரசியலமைப்பில் இடம் பெற்றிருக்கும் மொழிக் கொள்கை யின் அடிப்படையில்தான் இப்பிரச்சினையை அணுக வேண்டி யவர்களாக இருக்கிறோம்.**

பல மாநில ஆட்சிமொழிகள் நீண்ட பாரம்பரியம் உடையவை, இலக்கிய, இலக்கண வளமுடையவை. தமக்கென வரலாறு, அரச பரம்பரை, ஆண்ட பெருமை - ஆகியவற்றிற்குச் சொந்தம் கொண்டாடுபவை. இந்தியத் துணைக் கண்டத்தின் மொழி ஏற்பாடு ஒரு புது அமைப்பு ஒரு வகையில் பன்மொழிக் குடும்பங்களின் கூட்டு வாழ்க்கையில் ஒரு மகத்தான முன்னோடி அரசியல் திட்டம், சோதனை என்றும் கூறலாம். இந்த ஏற்பாடு வெற்றி பெற, தேவையற்ற அதிருப்திகளைத் தவிர்க்க, மைய ஆட்சிமொழிப் பயன்பாடு பற்றிய விவரங்கள், எல்லைகள், சற்று விளக்கமாகவே தெளிவுபடுத்தப்பட வேண்டும். எனவே, மைய அரசின் மொழிக் கொள்கை, மாநில அரசின் மொழிக் கொள்கை, வரையறுக்கப்பட வேண்டும்.

## 2. மைய அரசின் மாநில அலுவலகங்கள்

இந்தப் பின்னணியுடன் நாம் மைய அரசின் மொழிக் கொள்கை பற்றியும், பயிற்றுமொழித் தேர்வில் அதன் தாக்கம் பற்றியும் முதலில் ஆராய்வோம். **மொழிக் கொள்கை பற்றிப் பேசும்பொழுது மைய அரசின் கொள்கை பற்றியாகட்டும், மாநில அரசின் கொள்கை பற்றியாகட்டும், இருக்கின்ற நிலைமையைக் கூறுகிறோமேயன்றி, அவற்றின் நிறை குறை பற்றி விமர்சிப்பதற்கு நாம் இங்கு முயலவில்லை. காரணம், இந்தக் கட்டுரையின் நோக்கம் அதுவன்று.** சுருக்கமாகச் சொல்வதானால், மைய, மாநில அரசுகளின் மொழிக் கொள்கை பற்றிய கொள்கை சார்ந்த அறிவிப்புகள், அரசு வெளியிட்ட சட்டபூர்வமான மொழித் திட்டம் பற்றி, ஆய்வுக்குத் தேவையான

அளவில் இப்பொழுதுள்ள நிலை பற்றியும், எதிர்காலப் போக்குப் பற்றியும் பேசுகிறோம்.

ஒரே மொழியைக் கொண்ட நாட்டில் 'மொழிக்கொள்கை' தேவைப்படக்கூடும் எனினும், அங்கு அது அவ்வளவு முக்கியமானது அன்று. பெரிய மொழிச் சிக்கல் எதுவும் அங்கு எழுவதற்கில்லை. எங்கு சிக்கல்கள் எழக்கூடுமோ, அங்கு தெளிவான, வரையறுக்கப்பட்ட கொள்கைகள் தேவை. கொள்கைகள் குழப்பமில்லாமல் அமைய வேண்டும்.

இந்தியத் துணைக்கண்டத்தின் அரசியல் சட்டத்தில் இப்பொழுது 18 மொழிகள் இடம் பெற்றிருக்கின்றன. அவை அனைத்தும் இந்த நாட்டின் மொழிகள் என அரசியல் அமைப்பில் இடம் பெற்றவை. அவற்றுள் ஒன்றான இந்தி, இணைப்பு மொழியாக, அரசியல் அமைப்புப்படி மைய அரசின் அலுவலக மொழியாக, ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஆங்கிலமும், தேவைப்படும் வரை, இந்தி பேசாத மாநிலங்கள் வேண்டும்வரை, தொடர்ந்து ஆட்சி மொழியாகப் பயன்படுத்தப்படும் என்று 1963இல், 1967இல் நாடாளுமன்றத்தில் கொடுக்கப்பட்ட உறுதிமொழி மூலம் ஏற்கப்பட்டிருக்கிறது. இது தற்காலிகமான ஏற்பாடேயன்றி நிரந்தரமானது அன்று. நீண்ட கால அளவில் இந்தி மட்டுமே அலுவலக மொழி. இதுதான் இன்றைய நிலை. இதை முன்பே குறிப்பிட்டிருக்கிறோம் **இதில் மாற்றம் வேண்டுபவர்கள் இருக்கிறார்கள். மாற்றம் ஏற்படலாம்; ஏற்படாமலும் இருக்கலாம். இன்றிருக்கும் நிலையை வைத்துத்தான் எடுத்த பிரச்சினையை நாம் அணுக வேண்டும்.**

மைய அரசின் நிர்வாகத்தைப் பொருத்தவரை அலுவலக மொழியான (Official Language) இந்தி பெறும் பங்கு என்ன என்பதில் இன்னும் தெளிவில்லை. அகில இந்திய அளவில் மைய அரசின் அலுவலகங்கள் அனைத்திலும் ஆங்கிலம் பயன் படுத்தப்பட்டு வந்தது. இப்பொழுது இந்தியும் படிப்படியாக இடம் பெறுகிறது. மாநில அளவில் வழங்கும் இந்திய மொழிகள், மைய அரசின் அலுவலகங்களில் அந்தந்த மாநிலங்களில் இடம்

பெறுமா? என்பதிலும், பெறும் எனில் இதன் இடம் என்ன என்பதிலும், தெளிவில்லை. இது ஆச்சரியமாகத் தோன்றலாம். ஆனால், உண்மை. **மைய அரசு என்பது தில்லியில் மட்டும் இல்லை. அது நாடு முழுவதும் வியாபித்திருக்கும் ஒன்று. அது மாநில அரசுகளோடுதான் தொடர்பு கொள்கிறது என்பதில்லை. நேரடியாக மக்களோடும் தொடர்பு கொள்கிறது. எனவே, மைய அரசின் அலுவலக மொழி இந்தி (அல்லது ஆங்கிலம்) மட்டுமன்று. அதன் அலுவலகம் இருக்குமிடத்தைப் பொருத்து அந்த மாநில மொழியும் மைய அரசின் மொழியாக இருக்க வேண்டும் என்பது புலனாகும். இந்தத் தேவை எளிதில் உணரக்கூடிய ஒன்று. எனினும் மாநிலங்களில் உள்ள மைய அரசின் அலுவலகங்களில் இன்று ஆங்கிலம், இந்தி மட்டுமே இடம் பெறுமா, அல்லது மாநில மொழிகட்கும் இடம் உண்டா என்பது தெளிவுபடுத்தப்படவில்லை.**

பொதுவாக மாநிலங்களின் எதிர்பார்ப்பு கீழ்க்காணுமாறு உள்ளது

★ ஆட்சிமொழி என்ற நிலையிலிருந்து ஆங்கிலம் நீங்கும் பொழுது படிப்படியாக, பொதுவாக ஆங்கிலம் இருந்த இடத்தில் எல்லா அலுவலகங்களிலும் இந்தியுடன் அந்தந்தப் பிராந்தியத்தில் வழக்கிலுள்ள தேசிய மொழிகளும் இடம் பெறும். மாநில அரசுக்கும் மைய அரசுக்கும், மாநிலங்களில் உள்ள மைய அரசின் அலுவலகங்கட்கும் மைய அரசுக்கும், தொடர்பு மொழியாக மட்டுமே இந்தி இடம் பெறும்.

இது சரிதானா என்பதும், இதுதான் மைய அரசின் மொழிக் கொள்கையா என்பதும் கேள்விக்குறியாகவே உள்ளன – போதுமான விளக்கம் இல்லாத காரணத்தால்.

★ இன்று வரை மைய அரசின் நடைமுறையைப பார்த்தால், மைய அரசைப் பொருத்தவரை, தேசிய அளவில், மைய அரசு நிறுவனங்களின் அலுவல்களில், ஆங்கிலம் இருந்த இடத்தில் இந்தி, என்ற அணுகுமுறையின் தோற்றம் தான்

தென்படுகிறது. அதை, மைய அரசினர், அங்கு மொழிக் கொள்கையை நடை முறைப்படுத்துபவர்கள், தெளிவாகக் கூறவில்லையென்றாலும், அவர்கள் நடக்கும் திசை அதுதான். அவர்கள் பார்வையில் சற்று, தூரத்தில் தெரிகின்ற இலக்கும் அதுதான்.

சற்று விரிவாகவும், விளக்கமாகவும் பார்ப்போம். அஞ்சல், தந்தி, தொடர் வண்டி (Railway), வருமானவரி, சுங்கம், வானொலி, தொலைக்காட்சி, வங்கிகள், வெளிநாட்டுச்செலவு, அறிவியல் தொழில் நுட்பக் கல்வி, உயர்கல்வியின் தரம், உயர்கல்வி ஒருங்கிணைப்பு, உயர்மட்ட நீதி, ஏற்றுமதி, இறக்கு மதி, வெளியுறவு, பாதுகாப்பு, போன்ற ஏராளமான மையத்துறை அரசு நிறுவனங்கள், ஏனைய தன்னாட்சி நிறுவனங்கள் எனப் பெரும் பிரிவுகள் மைய அரசின் கீழ்வருகின்றன. மைய அரசின் அலுவலகங்கள் ஒரு மாநிலத்தில் இருந்தால், அவை அங்கு மக்களுடன் தொடர்புகொள்ள நேரும்பொழுது இந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் மட்டும் தொடர்பு கொள்ளுமா, அல்லது அந்த மாநில மொழிகளிலும் தொடர்பு கொள்ளுமா என்பது கேள்வி. இதற்குத் தெளிவான பதில் இருப்பதாகத் தெரியவில்லை. சான்றாகத் தமிழகத்தில் இருக்கும் மைய நிறுவனங்கள், அவற்றின் ஆவணங்களை ஆங்கிலம், இந்தி இரண்டு மொழி களிலும் வைத்துக் கொள்ள வேண்டும் என்பதும், அதற்கான ஏற்பாடுகளின் முன்னேற்றம் பற்றி, அறிக்கைகளைச் சமர்ப்பிக்க வேண்டும் என்பதும் கட்டாயம். ஆனால், மக்களிடம் பழகும் பொழுது, மாநில மொழியிலும் சம்பந்தப் பட்ட ஆவணங்கள் இருக்க வேண்டும் என்பது கட்டாயமன்று. நமக்கு வரும் வருமான வரித் தாள்கள், நாம் வாங்கும் கடன் பத்திரங்கள் போன்ற எண்ணற்ற மைய அரசின் ஆவணங்கள் ஆங்கிலத்திலும் இந்தியிலும் மட்டுமே இருக்கின்றன மாநில மொழி அங்கு இடம் பெறவில்லை. தொடர் வண்டிகட்குக் கொடுக்கப்படும் பயணச்சீட்டுகள் கூடத் தமிழகத்தில் எந்த ஊரிலிருந்து எந்த ஊருக்குச் செல்வதாயினும் ஆங்கிலத்திலும் இந்தியிலும் மட்டுமே உள்ளன. தாய்மொழியே அறியாத தற்குறி மக்கள் ஏறத்தாழ 40

விழுக்காடு தமிழகத்தில் இருக்கும்பொழுது அவர்கள் பயணச்சீட்டு ஆங்கிலத்திலும், இந்தியிலும் மட்டுமே இருக்கின்ற மொழிக்கொள்கை, வருவது காட்டுவதாகவும் இருக்கிறது. சற்று மர்மமாகவும் இருக்கிறது. மைய அரசின் ஒவ்வோர் அமைச்சகத்தில் இருந்தும், அவற்றின்கீழ் அமைந்துள்ள ஏராளமான துறைகளில், தன்னாட்சி நிறுவனங்களில் இருந்தும் ஆண்டுதோறும் எண்ணற்ற அறிக்கைகள் ஆங்கிலத்திலும் இந்தியிலும் வருகின்றன. அவற்றின் மொழிபெயர்ப்புகள் பெரும்பாலும் மாநில மொழிகளில் இல்லை.

### 3. 'சர்க்காரியா' குழும (Sarkaria Commission) அறிக்கை

பழமையும் பாரம்பரியமும் கொண்ட பல மொழிகள் புழங்கும் ஒரு நாட்டில் உணர்ச்சிகட்கு உள்ளாகும் மொழிக் கொள்கையின் முக்கியத்துவத்தை உணர்ந்த சர்க்காரியா குழுமம்(Sarkaria Commission) கீழ்க்காணும் பரிந்துரையை மைய அரசிற்கும் மாநில அரசுகட்கும் வழங்கி இருக்கிறது:

> ''மைய அரசின், மாநில அரசுகளின் பணிகள் நாட்டின் ஒரு பகுதியில் வாழும் மக்களோடு நேரடித் தொடர்பு கொள்வதாக இருக்கும்பொழுது, இப்பணிகள் அந்த மக்களின் மொழி யிலேயே நடைபெற வேண்டும். ஒரு மக்கள் நல ஆட்சியில் (Welfare State) இது மிகவும் முக்கியமானதாகும். எல்லாப் படிவங்களும், விண்ணப்பத்தாள்களும், கடிதங்களும், இரசீதுகளும், அறிக்கைகளும் அந்தப் பகுதி மக்கள் பேசு மொழியிலும், ஆட்சி மொழியிலும் இருக்க வேண்டும் மொழிச் சிறுபான்மையினரைக் கணிசமாகக் கொண்ட பகுதி களில் மாநிலங்கட்கும் இக் கொள்கை முக்கியமானதாகும்''.
> (பத்தி 20.1.29)

இப்பரிந்துரையை மைய அரசு ஏற்றதா, இல்லையா என்பதில் இதுவரை தெளிவில்லை. நடைமுறையைப் பார்த்தால், சர்க்காரியா குழுமப் பரிந்துரை, மொழியைப் பொருத்த வரை ஏற்கப்பட்டிருப்பதாகத் தோன்றவில்லை. மும்மொழித் திட்டம்

என்பது கல்விக் கொள்கை மட்டுமன்று. அது இந்த நாட்டின் மொழிப் பிரச்சினைக்குக் கண்ட தீர்வு எனவும் எண்ணப்படுகிறது. எனவே, நீதி, நிர்வாகம், அரசியல் ஆகிய துறைகளிலும் அதன் பங்கு பற்றி ஆராய வேண்டும். **மொழிக் கொள்கை பற்றி அவ்வப்பொழுது வரும் அறிக்கைகள், நிலைமையைத் தெளிவாக்குவனவாக அமையவில்லை. பொது மக்களின் பயிற்றுமொழி பற்றிய அணுகுமுறை, இவற்றால் பெரிதும் பாதிக்கப்படும் ஒன்றாகும்.**

மைய அரசின் தலைமைப் பீடங்களில் பதவி பெறுவது ஒரு புறமிருக்க, தமிழகம் கடந்து வெளி மாநிலங்களில் பணிபுரிவது ஒருபுறமிருக்க, மாநிலத்திற்குள் உள்ள மைய அரசின் அனைத்து நிறுவனங்களிலும், மேலும் பெரும்பாலான தனியார் நிறுவனங்களிலும் பணிபுரியவும் ஆங்கிலம் அல்லது இந்தியில் பேசவும், எழுதவும், எடுத்துரைக்கவும், தகுதி வேண்டும் என்ற நிலை உறுதிப்படுகிறது. இந்தி பயிலாதவர்களான தமிழர்கட்கு ஆங்கிலத்தில் இத்தகுதி தேவைப்படுகிறது. இன்றுள்ள ஆங்கிலப் பாடத்தின் தரத்தில், பாடமொழியாக மட்டுமே ஆங்கிலத்தைக் கற்றுத் தேவையான தகுதிபெற இயலாது என்ற நம்பிக்கை சரியாகவோ தவறாகவோ பலர் மனத்தில் பதிந்திருக்கிறது. இதை முன்பே குறிப்பிட்டிருக்கிறோம் இந்த அச்சத்தைப் போக்காது புறக்கணிப்பது பிரச்சினையை முழுமையாகப் புரிந்து கொள்வதாகாது.

## 4. பயிற்று மொழியும், மைய ஆட்சி மொழியும்

மைய அரசின் மொழிக் கொள்கையின் நீண்ட கால விளைவுகள் பற்றியும், பயிற்றுமொழித் திட்டத்தில் அவற்றின் பங்கு பற்றியும், நாம் எண்ணுவதும் ஓரளவு தெளிவு பெற்றிருப்பதும், நமது கல்விக் கொள்கைக்குப் பயன்தரும், அண்மையில் 'இந்திய அரசியல் அமைப்பின்' இந்தி மொழி பெயர்ப்பு அதிகார பூர்வமானதாக நாடாளுமன்றத்தில் ஏற்கப்பட்டிருக்கிறது. நீண்டகால அளவில் அதன் முக்கியத்துவம்

கவனிக்கத் தக்கது. நமது அரசியல் அமைப்பைப் பொருத்தவரை நேற்றுவரை ஆங்கிலம் மட்டுமே நமது அரசியலைப்புக்கு அதிகார பூர்வமான மொழியாக இருந்தது இன்று இந்திய மொழிகளில் அதன் இந்தி மொழி பெயர்ப்பு ஒன்றுதான் அதிகாரபூர்வ மானதாகும். இது நடைமுறைக்கு வரும் நாள் மைய அரசைப் பொருத்திருக்கிறது. **இந்தத் தகுதியை மற்ற இந்திய மொழிகளும் பெறுமா என்பது தெளிவுபடுத்தப்படவில்லை. பெறுவது சாத்தியமானதாகத் தோன்றவில்லை.** ஆங்கிலம் ஆட்சிமொழி நிலையிலிருந்து அகலும்பொழுது, சென்னை உயர்நீதி மன்றத்தில் ஒரு வழக்கறிஞர் நமது அரசியல் சட்டத்தை மேற்கோள் காட்ட வேண்டுமாயின் அதன் இந்தி 'மூலம்' தான் ஏற்கப்படும். அதுதான் அடிப்படை. நீதிமன்றத்தின் தீர்ப்பும் அடிப்படையில் இந்தியில் தான் இருக்க வேண்டும். தமிழில் இருந்தாலும் அதன் இந்தி மொழி பெயர்ப்புத் தான் அதிகாரபூர்வமானதாகும். மாநிலச் சட்ட மன்றங்களில் நிறைவேற்றப்படும் சட்டங்கட்கும் இந்திய மொழிகளில் இந்தி மொழி பெயர்ப்புத் தான் உச்சநீதி மன்றத்தைப் பொருத்தவரை அதிகார பூர்வமானதாகும்.

அரசியலமைப்பை, நாடாளுமன்றத்தில நிறைவேற்றப்படும் சட்டங்களை, பல மாநிலங்களின் உயர்நீதி மன்றத்தீர்ப்புகளை, ஆட்சிமொழியில், அதாவது இந்தியில் அறிந்து பயன்படுத்த வேண்டுமானால், இந்தியில் சட்டம் படித்தவர்கட்கு இருக்கும் வாய்ப்பும், வாதங்களைக் கையாளும் திறனும் தாய்மொழியில் படித்தவர்கட்கு அமைவது கடினம். நடுத்தர நீதி மன்றங்களில் தாய்மொழியில் கற்றவர்கள் செயல்படலாம். உயர்நீதிமன்றம் என்று வரும்பொழுது இந்தியில் பயின்றவர்கள், 'பண்டிதர்கள்' போன்ற அந்தஸ்துடன் நடமாடுவது எதிர்பார்க்கப்பட வேண்டிய ஒன்று சமுதாயத்தின் மேல்மட்டத்தினர், தங்கள் மக்கட்குச் சிறந்த எதிர் காலத்தை எதிர்பார்ப்பவர்கள் அனைவரும் இன்று ஆங்கிலத் தையும் பின்னர் இந்தியையும் பயிற்று மொழியாக ஏற்கும் சபலத்திற்கு உள்ளாவதும் எதிர்பார்க்கப்பட வேண்டிய ஒன்று.

நமது அரசியலமைப்பில் மைய அரசு மிகவும் வலிமை வாய்ந்தது. உயர்ந்த ஊதியம், சமுதாய அந்தஸ்து, அதிகாரம் ஆகியன கொண்ட பதவிகள் அனைத்தும் மைய அரசின் கீழ், அல்லது மைய அரசின் நேரடியான ஆட்சிக்குள் வரும் தன்னாட்சி நிறுவனங்களின் கீழ், இருக்கின்றன. மாநிலங்களில் செயல்படும் வலிமை வாய்ந்த மைய அரசு நிறுவனங்கள் அனைத்தும் ஆங்கிலம், இந்தி ஆகிய இரு மொழிகளில் மட்டுமே செயல்படுமாயின், ஆங்கிலத்திற்கு இருக்கும் செல்வாக்கை அப்பொழுது இந்தி மட்டுமே பெறுவது எதிர்பார்க்கக் கூடிய ஒன்றே. இப்பொழுது மேல்மட்டத்தினர், அரசு அலுவலர் ஆகியோர் மக்கள் ஆங்கிலத்தில் பயில முன் வருவது போல, அப்பொழுது இந்தியில் பயில முன்வரக்கூடும். தாய்மொழி வழிக்கல்வி என்பது ஓர் இரண்டாந்தர நிலையிலேயே நின்று விடக்கூடும்

மைய அரசின் பல துறைகளிலும் ஆட்சி மொழியாகத் தொடர்ந்து ஆங்கிலமும், படிப்படியாக இந்தியும் பயன் படுத்தப்படும் நிலையில், ஆங்கிலம் மட்டும் பயிலும் நாம் அம்மொழியை வெறும் பாடமாக மட்டும் பயின்று, அந்த மொழியைப் பயிற்று மொழியாகக் கொண்டவர்களைப் போலவோ, அல்லது இந்தியைத் தாய்மொழியாகக் கொண்ட வர்கள் இந்தியைப் பயன்படுத்துவது போலவோ, சாதாரணமாகப் பயன்படுத்த இயலுமா என்ற கேள்வியும் பலர் மனத்தில் எழுகிறது. இதை முன்பே குறிப்பிட்டிருந்தோம் பயிற்றுமொழி என்று வரும்பொழுது மாநிலங்களை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

i. மும்மொழித் திட்டத்தைச் செயல்படுத்தும், அல்லது செயல்படுத்தாத, ஆனால் இந்தியைத் தாய்மொழியாகக் கொண்ட மாநிலங்கள்.

ii. மும்மொழித் திட்டத்தைச் செயல்படுத்தும், வடமொழி வழி வந்த மொழிகளைத் தாய்மொழியாகக் கொண்ட மாநிலங்கள்.

iii. மும்மொழித் திட்டத்தைச் செயல்படுத்தும், திராவிட மொழிகளைத் தாய்மொழியாகக் கொண்ட மாநிலங்கள்.

iv. மும்மொழித் திட்டத்தை ஏற்காது இரு மொழித் திட்டத்தைச் செயல்படுத்தும் மாநிலம் (தமிழகம்)

பயிற்று மொழித் திட்டத்தைச் செயல்படுத்தும்பொழுது, பல துறைகளில் எழக் கூடிய பிரச்சினைகளைச் சந்திப்பதில் இந்தி பேசும் மாநிலங்களின், மும்மொழித்திட்டத்தைச் செயல்படுத்தும் மாநிலங்களின் நிலைமை வேறு. இரு மொழித் திட்டத்தைச் செயல் படுத்தும் தமிழகத்தின் நிலை வேறு. இதை மனத்திற்கொள்ளாது மற்ற மாநிலங்களோடு நம்மை ஒப்பிட்டுப் பேசுவது பயன்தராது.

## 5. பயிற்று மொழிப் பிரச்சினை: பரிமாணங்கள் பல

பயிற்று மொழிப்பிரச்சினை கல்வித்தத்துவத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டதன்று. அது வேலைவாய்ப்பு, நாட்டு ஆட்சியில் நமது பங்கு, மைய அரசின் பல நிறுவனங்களின் வசதிகளை, சலுகைகளை நமது மக்கள் பயன்படுத்திக் கொள்ளும் திறன் பெறுதல் ஆகியவற்றையும் சார்ந்திருக்கிறது. பயிற்றுமொழிப் பிரச்சினையைக் காலந்தோறும் 'தாய்மொழி வழிக் கல்வி' பற்றிய தத்துவத்தின் அடிப்படையிலோ, 'ஆங்கில மோகம்' என்பதன் அணுகுமுறையிலோ மட்டும் காண்பது அதை முழுமையாகப் பார்ப்பதாகாது யானை கண்ட குருடர் பார்வையாகவே அது அமையும். எனவே, மைய அரசின் மொழிக் கொள்கையும் பயிற்றுமொழி பற்றிய அணுகுமுறைக்கு ஒரு முக்கியமான அம்சமாகிறது என்பதையும் மனத்திற்கொண்டு நாம் இப்பிரச்சினையை அணுக வேண்டும்

தாய்மொழி வழிக் கல்வி உலகு ஒப்பிய தத்துவம், இயற்கையோடியைந்தது. இதில் வாதத்திற்கே இடமில்லை. இந்தியத் துணைக்கண்டத்தில் வழங்கும் நமது மொழிகள் அனைத்திலும், பயிற்று மொழியாவதற்கான தகுதி, தமிழுக்குக் கணிசமாகவே அதிகமாக உண்டு. இதுவும் வாதப் பொருளன்று.

ஆனால், இவற்றையே திருப்பித் திருப்பிச் சொல்வதன் மூலம் திட்டம் செயல்பட்டு விடாது. தத்துவம் வேறு. அதை நடைமுறைப்படுத்துவது வேறு. நடைமுறைப்படுத்துவதில் எதிர்ப்படும் சிக்கல்கள் தீர்க்க இயலாதவை அல்ல ஆயினும், பள்ளிக் கல்வியில் சிக்கல்கள் எவை, பல்கலைக் கழக நிலையில் சிக்கல்கள் எவை, என நாம் அறிய வேண்டும். அவற்றை வகைப்படுத்த வேண்டும். அவற்றைத் தீர்ப்பதற்கு அரசியல் கட்சி கடந்த அணுகுமுறை வேண்டும். எண்ண வேண்டிய பல கூறுபாடுகளில், மைய அரசின் மொழிக் கொள்கையும் மாநில அரசின் மொழிக் கொள்கையும் முக்கியமானவை. பயிற்று மொழிப் பிரச்சினையின் முழுப்பரிமாணத்தையும் அறிய, அதை நமது அரசின் இரு மொழிக் கொள்கையின் பின்னணியில் ஆராய்வதும் தேவை.

# 5

# மாநில அரசின் மொழிக் கொள்கை

## 1. பொது

மைய அரசின், மாநில அரசின் மொழிக் கொள்கை பற்றி இந்நூலில் இடம் பெற்றுள்ள கட்டுரைகளில் நாம் தேசிய அளவில், மாநில அளவில் நம்மை எதிர்நோக்கும் பிரச்சினைகளை, நாம் புரிந்துகொண்ட அளவில், ஓரளவு சுருக்கமாகவே விளக்க முயன்றிருக்கிறோமேயன்றி, இது தொடர்பாக, தனிப்பட்டவரின், நிறுவனங்களின், அரசியல் கட்சிகளின் அணுகுமுறையில், குற்றம் காண்பதோ, குறை காண்பதோ நமது நோக்கமன்று. அப்படி எந்தப் பகுதியாவது தொனிக்குமாயின், அது நம்மையுமறியாது இடம் பெற்றுவிட்ட ஒன்று. நமது விருப்பமோ, நோக்கமோ அதுவன்று. **இவை பிரச்சினைகள் பற்றிய உரத்த சிந்தனை. நாட்டு நலனில், தமிழின நலனில் அக்கறையுள்ள, அரசியல் துறை மட்டுமின்றி, மற்ற துறையிலுமுள்ள அறிஞர்களின், வல்லுநர்களின், கவனத்தை ஈர்ப்பதும் நம் நோக்கமாகும். அதிகமாகப் போனால், இது ஒரு விவாத மேடை; நீதி மன்றம் அன்று.**

## 2. தமிழக மொழிக் கொள்கை

மைய அரசு மட்டத்தில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க அளவில் மொழிக்கொள்கை இருக்கிறது அதைச் செயல்படுத்தும் முறை,

செயல்படுத்தும் வேகம் போன்ற விவரங்களில் (Details) கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் அடிப்படையில் அனைத்துத் தேசியக் கட்சிகளாலும்,

i. ஆட்சி மொழி இந்தி; இந்தி பேசாத மாநிலத்தினர் வேண்டும் வரை ஆங்கிலம் இணை ஆட்சி மொழியாகத் தொடரும்

ii. மொழிக் கல்வியில் மும்மொழித் திட்டம்

என்பன ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கின்றன. மாநிலக் கட்சிகள் என்று பார்த்தாலும், திராவிட இயக்கத்தின் அடியொற்றி அமைந்த தமிழகக் கட்சிகள் தவிர மற்ற மாநிலங்களில் உள்ள மாநிலக் கட்சிகளும் மைய அரசின் மொழிக் கொள்கையை எதிர்ப்பதாகத் தெரியவில்லை. எனவே மைய அரசுக்கு ஒரு மொழிக் கொள்கை இருக்கிறது இந்தியத் துணைக் கண்டத்தில் ஆட்சி மொழி இந்தி என்ற முடிவைச் செயல்படுத்த நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட, சக்தி வாய்ந்த நாடாளுமன்ற ஆட்சி மொழிக் குழு(Parliamentary Committee on Official Language) ஒன்று நியமிக்கப்பட்டிருக்கிறது நாளொரு துறையும், பொழுதொரு பிரிவுமாக இந்தி, ஆட்சி மொழி இடத்தை ஏற்கும் தகுதியை அடைந்து வருகிறது

இந்தப் பின்னணியில் நாம் தமிழகத்திற்கு வருவோம். இங்கு செயல்படும் காங்கிரஸ், பொதுவுடைமை, ஜனதா, பாரதிய ஜனதா போன்ற தேசிய அரசியல் கட்சிகளின் (National Political Parties) தமிழகப் பிரிவுகள் மும்மொழித் திட்டத்தை ஏற்கின்றன திராவிட இயக்கக் கட்சிகள இருமொழிக் கொள்கையைக் கடைப் பிடிக்கின்றன. **எனவே தமிழகத்துக்கு, அனைத்துக் கட்சி களாலும் மாநில அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மொழிக் கொள்கை இல்லை.** பல கட்சிகளின் தமிழக அரசியல் தலைவர்கள், தமது மக்களின் எதிர்காலம் கருதி, மொழியைப் பொருத்தவரை ஒரு குறைந்தபட்சத் திட்ட அளவிலாவது ஒற்றுமை காணவில்லை; காண முயலவில்லை **அரசியல் தலைவர்கள் ஒரு புறமிருக்க, மொழிக் கொள்கையில் நமது நிலையின் எதிர்கால**

**விளைவுகள் பற்றி, கட்சிச் சார்பற்ற அறிஞர்களோ, சமுதாய, அரசியல் நிபுணர்களோ ஆய்வு செய்யவும் முயலவில்லை.**

மும்மொழித் திட்டத்தை ஏற்ற காங்கிரஸ் கட்சி, தமிழகத்தில் ஆட்சியில் இருந்த காலத்தில், எதிர்ப்பு ஏற்படுமென்ற அச்சமோ, தயக்கமோ காரணமாகச் செயல்படுத்துவதில் சற்று ஏனோ தானோ என்ற அணுகுமுறையையே கையாண்டது.

மொழிக் கொள்கையில் மாநில அளவில் வழங்கும் தேசிய மொழிகள் மீது மிகுந்த அக்கறை காட்டியவரும், 1961-இல் இந்தியைப் பயன்படுத்துவது பற்றிக் குடியரசுத் தலைவர் அமைத்த குழுவின் உறுப்பினரும், பழுத்த தேசியவாதியுமான டாக்டர் சுப்பராயன் அவர்கள் தமிழகக் காங்கிரசின் அணுகுமுறை பற்றித் திருவரங்கத்தில் ஒரு கூட்டத்தில் பேசும்பொழுது,

> ''தமிழகக் காங்கிரஸ் தலைவர்கட்குத் தமிழர்கள் இந்தியை ஏற்க மாட்டார்கள் என்று தில்லியிலுள்ள தலைவர்களிடம் தெளிவாகக்கூறும் துணிவும் இல்லை: அல்லது ஆட்சி மொழியாக ஏற்கப்பட்டிருக்கும் இந்தியை நாம் கற்பதைத் தவிர்ப்பதற்கில்லை என்று தமிழ் மக்களிடம் கூறும் நேர்மையும் இல்லை.''

என்று கூறினார். காங்கிரசுக்குப் பின்னர் தொடர்ந்து பதவியிலிருந்த திராவிட இயக்கக் கட்சிகள் இருமொழிக் கொள்கையைத் தீவிரமாகவே செயல்படுத்தி வருகின்றன. இப்பொழுது நடைமுறையில் இருக்கும் இருமொழிக் கொள்கை பின்வருமாறு: (24.1.68 முதல் - வகுப்பு 1 முதல் வகுப்பு 10 வரை):

**Part - A**

| | |
|---|---|
| வகுப்பு-1 முதல் 10 வரை.... | பிராந்திய மொழி அல்லது தாய்மொழி |

**Part - B**

| | |
|---|---|
| வகுப்பு-3 முதல் 10 வரை.... | ஆங்கிலம் அல்லது இந்திய மொழி அல்லாத பிறமொழி. |

இது தவிர, சிறுபான்மையினர் தமிழ் கற்க விரும்பின், பள்ளி நேரத்துக்குப் பின்னர் தமிழ் கற்க (அரசாணை நிலை எண்:1949 - கல்வி-நாள் 10.11.1971) வகை செய்யப்பட்டுள்ளது.

## 3. சில விமர்சனங்கள்

மாநில அரசின் இருமொழிக் கொள்கை பலரால் கீழ்க்காணுமாறு விமர்சிக்கப்படுகிறது:

> ''கழக அரசுகள் தமிழ் மக்கள் இந்தி பயிலுவதை இதுவரை ஏறத்தாழ வெற்றிகரமாகத் தடுத்து விட்டன. ஆனால் இந்தி ஆங்கிலத்திற்கு இணையாக ஆட்சி மொழியாகப் படிப்படி யாக வளருவதை, உயர்வதை அவர்களால் தடுக்க இயல வில்லை. அரசியலமைப்பின் கீழ் தடுப்பதற்கான காரணமும் கூற இயலாது. இருமொழிக் கொள்கையால் தமிழ் மக்கட்கு ஏற்பட்ட நன்மை என்ன, தமிழ் மொழிக்கு ஏற்பட்ட பாது காப்பு என்ன என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. அதே சமயத்தில் இருமொழிக் கொள்கையால் தமிழ் மக்களின் அரசியல் வாழ்வில், பொருளாதார வாழ்வில், கல்வி, ஆராய்ச்சித் துறைகளில் நீண்ட கால அளவில் ஏற்படக்கூடிய விளைவுகள் பற்றிய நமது சிந்தனைகள் என்ன, விளைவு களிலிருந்து நமது நலன்களைப் பாதுகாத்துக் கொள்ள வகுத்த திட்டங்கள் என்ன, எடுத்த நடவடிக்கைகள் என்ன என்பதும் கேள்விக்குறியாகவே உள்ளது. நாடு முழுவதும் வியாபித்திருக்கும் மைய அரசின் எண்ணற்ற துறைகளில் இந்தி படிப்படியாக, திட்டமிடப்பட்டுப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த நிலையில், நமது மக்கள் இந்தி படிப்பதைத் தடுப்பதன் நீண்ட கால விளைவுகள் என்ன?''

இருமொழிக் கொள்கையைத் தீவிரமாக எதிர்க்காவிட்டாலும், ஓரளவு நடுநிலையில் நின்று மேலே கூறிய கேள்விகளை எழுப்புபவர்கட்கு, எதிர்கால விளைவுகள் பற்றி அச்சம் தெரிவிப்பவர்கட்குப் பதில் கூறுவது தேவை. பதில் எளிதானதாகத்

தோன்றவில்லை. மற்ற மாநிலங்கள் மாநிலத்தின் ஆட்சி மொழியைக் கற்பது கட்டாயம் எனச் செய்திருக்க, இருமொழிக் கொள்கை காரணமாக நாம் அப்படிச் செய்ய இயலவில்லை. மாநிலத்தின் ஆட்சிமொழியைக் கற்காது, அரிச்சுவடி நிலையிலிருந்து Ph.D. பட்டம் வரை கற்றுத் தேர்வது தமிழகத்தில் மட்டுமே இயலும். **எனவே அனைவரும் தமிழ் கற்பதைக் கட்டாயமாக்க வேண்டும்; தேவையானால் அதற்காக நாம் இருமொழிக் கொள்கையை மாற்றலாம் எனக் கூறுபவர்கள் உள்ள்.** இப்போதைய மொழிக் கொள்கையைப் பயன்படுத்தி, தமிழ் படிக்காத பள்ளி மாணவர்கள் எண்ணிக்கை பின்வருமாறு. (1995-ஏப்ரல் பள்ளித் தேர்வுகளின் அடிப்படையில்)

| **வகுப்பு** | **மொத்தம்** | **தமிழ்மொழி** | **பிறமொழி** |
|---|---|---|---|
| உயர்நிலை (S.S.L.C) | 5,88,059 | 5,76,000 | 12,059 |
| மெட்ரிக்குலேஷன் (Matriculation) | 38,669 | 31,915 | 6,754 |
| மேல்நிலை (Higher Secondary) | 2,71,056 | 2,54,410 | 16,646 |

தமிழ் படிக்காதவர்கள் மிகச் சிலரே. இந்தச் சிறு தொகையினரைக் கட்டாயப்படுத்தித் தமிழ் படிக்க வைப்பதற்காக மட்டும் இருமொழிக் கொள்கையை மாற்ற வேண்டுமா என்பதும் எண்ணப்பட வேண்டிய ஒன்று.

இன்னொரு வாதத்தையும் சிலர் முன்வைக்கின்றனர்.

''இந்தி ஆதிக்கத்தை எதிர்ப்பது வேறு; இந்தியைக் கற்பது வேறு. ஆட்சி மொழியாக, பாட மொழியாக ஆங்கிலம் இருப்பதை எதிர்ப்பவர்கள், ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கற்பதை எதிர்க்கவில்லை. இந்தி கட்டாயமாக்கப் படுவதை எதிர்ப்பது வேறு இந்தியை விருப்பப் பாடமாகக் கற்பது வேறு 'இந்தி ஆதிக்கத்திற்கு' எதிராக, இந்தி பேசாத மாநிலங்கள் நம்மோடு சேரக்கூடும். ஆனால் இந்தி

மொழிக்கே எதிராக அவர்கள் நம்மோடு சேரமாட்டார்கள். எனவே **விரும்பியவர்கள்** இந்தி படிக்க வழிவகுத்து, நமது மொழிக் கொள்கையில் **இந்தி ஆதிக்க எதிர்ப்பு: மாநில அளவில் இருக்கும் மற்ற தேசிய மொழிகட்கு நடைமுறைக்குச் சாத்தியமான அளவில் மைய அரசின் துறைகளில் உரிய பங்கு,** என்ற அணுகுமுறையைக் கடைப்பிடிப்போமானால் தமிழகத்திலுள்ள அரசியல் தலைவர்களிடையே மொழிக் கொள்கையில் ஓர் ஒத்த கருத்தை உருவாக்குவது இயலும்.''

''தமிழக எல்லை தாண்டியும் இந்தியைத் தாய்மொழியாகத் கொண்டிராத அரசியல் தலைவர்களின் ஆதரவைப் பெறுவதும் சாத்தியமாகலாம். இன்று **நாம் மொழிக் கொள்கையில் தனித்து நிற்கிறோம். தனிமைப்பட்டும் நிற்கிறோம்.''**

என்ற கருத்தும் கூறப்படுகிறது இந்தப் பின்னணியுடன் நாம் பயிற்று மொழிக்கு வருவோம். கலை, பண்பாடு, ஆன்மிகம் தழுவிய வாழ்வுக்கும் கல்வி தேவைப்படுகிறது; அரசியல், பொருளாதார வாழ்வுக்கும் கல்வி தேவைப்படுகிறது. **நமது அரசியல், பொருளாதார வாழ்வின் அடிப்படையிலும், அறிவுத் துறைகள் அனைத்தையும் நமது மக்கள் பெற வேண்டிய அவசியத்தின் அடிப்படையிலும், நமது நாட்டின் அரசியல் வாழ்வில் நாம் முழுப் பங்கு பெறுவதற்கான வாய்ப்பின் அடிப்படையிலும் பயிற்சி மொழிப் பிரச்சினையை நாம் ஆராய வேண்டும்.**

## 4. கேள்விகள் பல

நமது மக்கள் மாநில அரசுக்கு உட்பட்ட துறைகளில் பங்கு பெறுவது மட்டும் நமது நோக்கமன்று. அவர்கள் மைய அரசின் அரசியல், ஆய்வு, நிர்வாகம், நீதி, தற்காப்பு, ஏனைய அனைத்துத் துறைகளிலும் பங்கேற்க வேண்டும். ஆங்கிலம் நாம் விரும்புவது போல தொடர்ந்து ஆட்சி மொழியாக இருப்பதாகவே வைத்துக்

கொள்வோம். அப்போது ஆங்கிலம், இந்தி, ஆகிய இரு மொழிகளும் மைய அரசின் ஆட்சி மொழிகளாகப் பயன்படுத்தப் படும். மைய அரசின் பல துறைகளில், பல நிறுவனங்களில், தேசிய அளவில் நடைபெறும் மாநாடுகளில், கருத்தரங்குகளில், ஆய்வுப் பணிகளில் பங்கு கொள்ள நாம் ஆங்கிலத்தைச் சரளமாகப் பிழையின்றி எழுதவும், பேசவும் திறமை பெற்றவர்களாக இருக்க வேண்டும். இது தவிர்க்க முடியாதது. ஆங்கிலத்தை ஒரு பாடமாக மட்டும் கற்று நாம் இந்தத் தகுதியை, வல்லமையைப் பெற முடியுமா? இதை முன்பே குறிப்பிட்டிருக்கிறோம். ஆங்கிலக் கல்வியின் தரம் இப்பொழுது இருக்கும் நிலையில் முடியும் என்று கூற இயலவில்லை.

பல்கலைக்கழகத்தில் இளங்கலை, முதுகலை வகுப்புகள் முழுவதும் ஆங்கிலத்தைப் பாடமாக மட்டுமன்றிப் பயிற்று மொழியாகவும் கொண்டு பல துறைகளில் பட்டம் பெற்றவர்களில் பெரும்பாலோர் பிழையின்றிப் பேசவும், எழுதவும் இயலாதவர்களாக இருப்பதைப் பார்க்கிறோம். இதை நாம் மறுப்பதற்கில்லை. ஆங்கிலம் நமக்கு அந்நிய மொழி என்பதில் இரு கூறுபாடுகள் உண்டு. அது தமிழல்லாத வேறு ஒரு மொழி என்பது மட்டுமன்றித் தமிழினின்றும் வேறுபட்ட மொழி. நமது மொழியுடன் உறவுடைய ஒரு மொழியை (Related Language) பாடமாகக் கற்றுக் குறுகிய காலத்தில் தேர்ச்சிபெற இயலும், ஆங்கிலத்தில் அந்நிலையை எட்ட இயலவில்லை. முதுகலைப் பட்டம் பெற்ற ஆசிரியர்கள், பல்கலைக்கழக மட்டத்தில் ஆங்கிலத்திலேயே படித்துப் பட்டம் பெற்றவர்கள், ஆங்கிலம் பயிற்று மொழியாக இருக்கும் வகுப்புகளில் ஆங்கிலத்தில் விளக்க இயலாத காரணத்தினால் தமிழில் பாடம் நடத்துகிறார்கள். ஆங்கிலத்தில் விளக்குவதை மாணவர்கள் புரிந்துகொள்ள இயலாத நிலையும் இன்னொரு காரணம். இந்த நிலையில் ஆங்கிலத்தை ஒரு பாடமாக மட்டும் கற்றவர்கள், அறிவுத் துறைகள் அனைத்தையும் தமிழிலேயே பயின்றவர்கள், தமிழ் அலுவல் மொழியாக இல்லாத எண்ணற்ற மைய அரசின்

நிறுவனங்களில், தன்னாட்சி நிறுவனங்களில், தனியார் துறைகளில் ஆங்கிலத்தைத் திறமையுடன் இல்லாவிட்டாலும், திருப்தி தரும் நிலையிலாவது எந்த அளவிற்குப் பயன்படுத்த இயலும் என்ற கேள்வி எழுகிறது.

மேலே குறிப்பிட்டவாறு பங்கு பெறுபவர்கள் எத்தனை பேர்? நமது நாட்டின் மொத்த மக்கள் தொகையில் விரல் விட்டு எண்ணக்கூடியவர்கள் தானே, என்று கூறப்படுகிறது. உண்மை தான். ஆனால் இந்த விரல்விட்டு எண்ணக்கூடியவர்கள் தானே நமது நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கும் எண்ணற்ற முடிவு கட்கு, முன்னேற்றத் திட்டங்கட்குக் காரணமாயிருக்கிறார்கள?. அந்தச் சிறு தொகையினரில் கணிசமான அளவில் தமிழர்கள் இடம் பெற வேண்டாமா?

★ இந்தியப் பிரதமர் என்பவர் ஒருவர் தான். இந்தப் பதவிக்குப் போட்டியிடும் தகுதி தமிழனுக்கு வேண்டாமா?

★ இந்திய ஆட்சிப் பணி (ஐ.ஏ.எஸ்), இந்தியக் காவல் பணி (ஐ.பி.எஸ்), இந்திய வெளியுறவுப் பணி (ஐ.எஃப்.எஸ்.), மைய பொறியியல் துறைப் பணி (Central Engineering Service), மைய சிவில் பணி (Central Civil Services), இந்தியத் தணிக்கைப் பிரிவுப் பணி (I.A.& A.S.), இந்தியப் பொரு ளாதாரப் பணி (Indian Economic Service), இவையொத்த பல மைய அரசுத் துறைகளில் உயர்பதவி வகிப்பவர்கள், ஆகியோர் நாட்டின் மக்கள் தொகையில் சிலர் தான் இந்தப் பதவிகளில் கணிசமாக நம்மவர் இடம் பெற வேண்டாமா?

★ தாமாக இந்தி படிப்பவர்கள், தாமாக ஆங்கிலம் படித்து வல்லமை பெறுபவர்கள், விரல்விட்டு எண்ணக்கூடிய சில பள்ளிகளில், கல்லூரிகளில் படிப்பவர்கள் மட்டும் தான் இப்பதவிகட்குப் போட்டியிட வேண்டுமா? மேற்குடியினர் அல்லாத எளிய மக்கள் இப்பதவிகட்கு ஆசைப்படக் கூடாதா?

★ தமிழில் தேர்வு எழுதியும் வெற்றி பெறலாம் என வாதத்திற்குக் கூறலாம். வெற்றி பெற்ற பின் இந்தி அல்லது ஆங்கிலத்தில் நிர்வாகம் நடத்த வேண்டிய தேவை இருக்கிறது என்பதையும் மனத்திற் கொள்ள வேண்டும்.

★ போட்டியிட்டுத் தோற்பது வேறு; போட்டிக்கே தகுதியில்லாது இருப்பது வேறு. **இன்று ஐ.ஐ.டி. போன்ற கல்வி நிறுவனங்கட்கு, ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., மற்றும் மைய அரசுப் பணிகட்கு நடத்தும் தேர்வுகட்குக் கேள்வித் தாள்கள் ஆங்கிலம், இந்தி ஆகிய இரு மொழிகளில் மட்டும் இருக்கின்றன.** தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு ஒரு துறையில் பாடத்தைப் படித்த மாணவர் ஆங்கிலத்திலுள்ள கேள்வியை ஐயம் திரிபு அறப் புரிந்து பதில் எழுத இயலாது. ஆங்கிலத்தை மொழியாகக் கற்பது வேறு ஆங்கிலத்தில் ஒரு குறிப்பிட்ட பாடத்தைக் கற்பது வேறு. இன்று பெரும்பாலான கேள்வித் தாள்களில் Objective Type Questions என்ற வகைக் கேள்விகள் இடம் பெறுகின்றன இதில் ஒரு கேள்விக்கு நான்கு அல்லது ஐந்து பதில்களைக் கொடுத்து, அதில் சரியான பதிலைத் தேர்ந் தெடுக்கச் சொல்கிறார்கள். கிட்டத்தட்ட ஒவ்வொரு பதிலும் சரியாக இருப்பது போலவே தோன்றும் கொடுக்கப்பட்டி ருக்கும் பதில்களின் வேறுபாட்டை நுட்பமாக அறிந்திருந்தா லன்றி, சரியான பதிலை உறுதியான நம்பிக்கையோடு தேர்ந்தெடுக்க இயலாது. மேலும், ஒவ்வொரு துறைச் சொல்லுக்கும் மாணவர்கள் அதன் ஆங்கிலச் சொல்லைக் கற்றிருக்க வேண்டும் **பொதுவாக எந்த ஒரு துறையையும் ஒரு மொழியில் கற்றபின் இன்னொரு மொழியில் கேட்கப் படும் கேள்விகளைத் துல்லியமாகப் புரிந்து எழுதுவது கடினம். ஆனால் இன்று அது நடைமுறையில் சில ஆண்டுகளாக இருக்கிறது.** இதற்குப் பெரிய எதிர்ப்பு எதுவும் இல்லாதிருப்பதற்குக் காரணங்கள் இரண்டு.

i. பெரும்பாலும் போட்டித் தேர்வுகளை எழுதுபவர்கள் ஆங்கிலத்தில் பயின்றவர்கள்

ii. தமிழில் பயின்றவர்கள் இதற்காகத் தனியாக, இதற் கென இருக்கும் வகுப்புகளில் கட்டணம் செலுத்திப் பயிற்சி பெறுகிறார்கள்.

நாடாளுமன்றத்தில் இந்திய தேசிய மொழிகளுள் எதில் பேசினாலும் மொழி பெயர்ப்பு வசதி இருக்கிறது ஆனால், பல நாடாளுமன்றக் குழுக்கள் (Parliamentary Committees) இருக்கின்றன. அங்கு இந்தி, ஆங்கிலம் என இரு மொழிகளில் மட்டுமே மொழிபெயர்க்க வசதி இருக்கிறது. இந்தி பேசாத, பயிலாத மாநிலத்தவர் ஆங்கிலத்தில் திறமை பெற்றிருந்தாலன்றி, இவற்றில் பங்கு கொள்ள இயலாது. பல்கலைக்கழக மானியக் குழுமம்; அகில இந்திய தொழில் நுட்பக் கல்விக் கழகம் (AICTE); இந்திய வேளாண்மை ஆய்வுக் கழகம் (ICAR);தொழிற் பயிற்சிக் கல்வியின் கூட்டுக் கழகம் (Joint Council of Vocational Education) போன்றவை கல்வித் துறையிலும் இன்னும் எண்ணற்ற – உண்மையில் எண்ணற்ற – மைய அரசுக் கழகங்கள், குழுக்கள் தான், மற்ற பல துறைகளிலும் மாநிலங்களின் தலைவிதியை நிர்ணயிக்கின்றன. இவற்றில் பங்கு கொள்பவர்களில் பலர், சாதாரணமாக இந்தியில் பேசத் தொடங்கி விடுகிறார்கள். அதைத் தடுக்க இயலாது. இக்கூட்டங்கட்கு எந்த மொழி பெயர்ப்பு வசதியும் இல்லை. ஆங்கில அறிவும் பயன்படாத சூழ்நிலையும் வளர்ந்து வருகிறது.

தமிழைப் பயிற்று மொழியாக்குவது என்ற கொள்கையில் எந்த மாற்றமும் செய்யாது, மேலே எழுப்பியுள்ள பிரச் சினைகட்குத் தீர்வு காண இயலாதா என்ற கேள்வி எழலாம். இயலும் என்பதே பதில். ஆனால் அதற்கு நாம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பல. அவற்றை விரிவாக ஆராய வேண்டும். சுருக்கமாக இரண்டொரு வாக்கியங்களில் ஏறத்தாழ அனைவரும் ஏற்கத்தக்க ஒரு கருத்தைக் கூறுவதானால், நமது ஆங்கிலக் கல்வியின் தரம் கணிசமாக உயர வேண்டும். தேவையானால் உயர்மட்ட நிலையில் சிறப்பு நிலை ஆங்கிலப் பயிற்சிக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். நமது கல்விச் சூழ்நிலையில் முக்கியமான மாற்றம் வேண்டும். பயிற்று மொழித் திட்டம் செயல்படுவது படிப்படியாகத் திட்டமிடப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டும். சான்றாக, பொறியியல் பட்டப்படிப்பு தமிழில் தொடங்கப்பட வேண்டும் எனக் கோரிக்கை

எழுப்பபடுகிறது. ஆனால், தச்சு வேலை (Carpentry), இயந்திரக் கம்மியர் (Machinist), மின்இணைப்பு வினைஞர் (Electrical Wireman) போன்றவர்கட்கு, 10ஆம் வகுப்பிற்குப் பின் பயிற்றுவிக்கும் தொழிற் பயிற்சிக் கூடங்கள் (Industrial Trainning Institutes) இன்றும் ஆங்கிலத்தைத்தான் பயிற்று மொழியாகப் பயன்படுத்துகின்றன. மேலும், பட்டயப்படிப்புக்கான (Diploma) தொழிற் கல்விப் பள்ளிகள் (Polytechnics) ஆங்கிலத்தில்தான் நடைபெறுகின்றன. இங்கிருந்து தொடங்காது, பொறியியல் பட்டப்படிப்பைத் தமிழில் தொடங்குவதென்பது நடைமுறைக்கு ஏற்றதாகத் தோன்றவில்லை.

தொழில் துறைகளில் வேளாண்மைத் துறையினர் மக்களிடம், அதுவும் கிராம மக்களிடம் நெருங்கிப் பழகுபவர்கள். அவர்களை அடுத்து மருத்துவர்கள். மருத்துவத்துறையிலும் செவிலியர் (Nurses) முக்கியமானவர்கள். தாய்மொழி வழிக் கல்வி என்று வரும் பொழுது முதலில் கவனிக்கப்பட வேண்டிய துறைகள் இவையாகும் மொழி சம்பந்தப்பட்ட ஆய்வுகளில் உணர்வின் பங்கு ஒதுக்க இயலாதது எனினும், இந்தப் பிரச்சினைகளை நாம் பகுத்தறிவின் வழிதான் பார்க்க வேண்டும்.

தமிழ்வழி பயில்விப்பது இன்றுதான் தொடங்குகிறது என்பதில்லை. இதற்குக் குறைந்தது அரை நூற்றாண்டுக்கு மேற்பட்ட வரலாறு, அனுபவம் நமக்குண்டு. எனவே இப்பணியைப் பல கட்டங்களாகப் பகுத்துப் பரிசீலனை செய்ய வேண்டும்.

1. பள்ளிக்கல்வி
    i. 5-ஆவது வகுப்பு வரை
    ii. 8-ஆவது வகுப்பு வரை
2. உயர்நிலைப் பள்ளிக்கல்வி
3. மேல்நிலைப்பள்ளிக் கல்வி
4. பல்கலைக்கழகக் கல்வி (கலை, அறிவியல்)

i. கலை, அறிவியல் படிப்பு (இள நிலை)

ii. கலை, அறிவியல் படிப்பு (முது நிலை)

5. தொழிற் படிப்பு

i. சான்றிதழ் நிலை

ii. பட்டய நிலை

iii. பட்டப்படிப்பு நிலை

ஒவ்வொரு நிலையிலும் தற்போதைய வளர்ச்சியை, முன்னேற்றத்தை ஆராய வேண்டும். ஒவ்வொரு நிலைக்கும், பாடப் புத்தகங்கள், பயிற்சிக் கையேடுகள், மற்ற கல்விக் கருவிகள் தயாரிப்பதில் நாம் அடைந்திருக்கும் முன்னேற்றத்தையும் பரிசீலிக்க வேண்டும். ஒவ்வொரு நிலையிலும் நாம் தரமான கல்வி அளிப்பதற்கான ஆயத்தங்களைச் செய்திருக்கிறோமா எனத் திறந்த மனத்துடன் ஆராய வேண்டும். நிறை, குறைகளை எண்ண வேண்டும். குறைகளிருப்பின் அவற்றை நிவர்த்தி செய்வதற்கான திட்டங்களை உருவாக்க வேண்டும். பன்னிரண்டாம் வகுப்பு வரை உள்ள பள்ளிக் கல்வி, அந்த நிலைக்கு இணையான தொழிற் கல்வி பயிலும் அனைவரும், **தமிழ்வழி தரமான கல்வி கற்க ஏற்பாடு செய்வதில் வெற்றி காணுவோமாயின்,** பயிற்று மொழித் திட்டத்தின் நோக்கத்தைப் பூர்த்தி செய்வதற்கு வலுவான தளம் அமைத்து விட்டோம் என்று கொள்ளலாம்.

## 5. உயர்கல்வி: தொழிற்கல்வி

கல்லூரிக் கல்விக்கு வேண்டிய நூல்கள் தயாரிக்க, மைய அரசு ஒவ்வொரு மொழிக்கும் ஒரு கோடி ரூபாய் வழங்கியது. இத்தொகை, அறுபதுகளில், எழுபதுகளில் செலவிடப்பட்டது. நல்ல ஆசிரியர்கள் கிடைப்பது, நல்ல நூல்களை உருவாக்குவது ஆகியன பெரும் பாடாகவே இருந்தது. அதற்குப் பின்னர் எந்த நிதி ஒதுக்கீடும் இல்லை. உயர்கல்வி என வரும்பொழுது ஆங்கிலத்தில் எத்தனை பாட நூல்கள் வெளியாகின்றன?

எத்தனை பார்வை நூல்கள் (Reference Books) வெளியாகின்றன? எத்தனை வகைப்பட்ட களஞ்சியத் தொகுப்புகள் வெளியிடப் பட்டிருக்கின்றன? எத்தனை ஆய்வுத் தாளிகைகள் (Research Journals) வெளிவருகின்றன? நாம் இவற்றில் ஒரு சிறு பகுதி, மிகச் சிறு பகுதியையாவது தமிழில் கொண்டுவர ஏற்பாடு செய்ய வேண்டும். ஆங்கில நூல்களைப் பயன்படுத்தும் வாய்ப்பும், திறனும் நமது மாணவர்கட்கு வேண்டும். அவற்றை அவர்கள் பயன்படுத்த வேண்டும். இவையெல்லாம் இன்றி, வகுப்பில் பாடம் நடத்த எடுத்த குறிப்புகளைப் பாட நூலாகப் பதிப்பித்து, அவற்றை மாணவர்கள் மனப்பாடம் செய்து, எழுதி, அதை வைத்துக் கொண்டு, நாங்கள் தமிழில் கற்றுத்தருகிறோம் என்பதும், மாணவர்களும் தமிழ்வழி படிக்கிறார்கள் என்பதும், 'தமிழ்வழிக் கல்வி தரம் குறைந்தது' என்ற கெட்ட பெயரை உண்டாக்கத்தான் உதவும். தமிழ்வழிக் கல்வி என்பது, தமிழ்வழி கற்பவர் நலனுக்காகவேயன்றி, தமிழுக்காகவன்று.

**எல்லா நூல்களும் எழுதப்பட்டபின், எல்லா வசதிகளும் செய்யப்பட்டபின் தான், தமிழ்வழிக் கல்வி என்பதும் நடை முறைக்கு ஏற்றதன்று. ஆனால் எதுவுமே ஒரு குறைந்தபட்ச அளவிற்கு இல்லாமல் தமிழ் வழி பயிற்றுவிக்கத் தொடங்கு வதும் முறையன்று. உயர்கல்வி, அதுவும் அறிவியல் - தொழில் நுட்பத் துறையில் உயர்கல்வி, தமிழில் வெற்றி பெற நாம் கருத்தோடும், கவலையோடும் செயல்பட வேண்டும்.**

உயர்கல்வியிலும், முதுநிலைக்கல்வி, தொழில் துறைக்கல்வி, அதாவது பொறியியல், மருத்துவம், வேளாண்மை போன்ற கல்விக்கு வரும்பொழுது, நாம் நமது எல்லைகளை உணர்ந்திருக்க வேண்டும். இத்துறைகளில் பழையன கழிதலும், புதியன புகுதலும் தொடர்ந்து வேகமாக நடைபெறுகின்றன. அறிவுத் தொகுப்பு ஏறத்தாழ ஐந்து ஆண்டு முதல் பத்து ஆண்டுகட்குள் பல துறைகளில் இரட்டிப்பாகிறது. இன்று உலகில் அறிவியல், தொழில்நுட்பத் துறைகளில் ஆராய்ச்சிக்குச் செலவிடும்

தொகையில் 96 சத விகிதம்[1] முன்னேறிய நாடுகளில் செலவிடப்படுகிறது. மீதமுள்ள 4 சதவிகிதம் தான் முன்னேறிக் கொண்டிருக்கும் நாடுகள் அனைத்தும் சேர்ந்து செலவிடும் தொகை (1990). அதில் இந்தியாவின் பங்கு, அந்த இந்தியாவின் பங்கில் தமிழகத்தின் பங்கு என்பது, பார்வைக்கும் தெரியாத அணுவேயாகும். நம் நாட்டில் செய்யப்படும் சிறிதளவு ஆய்வுக்கும் மூலம் ஆங்கிலம்தான். நாம் இன்னும் பல, பல ஆண்டுகட்கு மொழிபெயர்ப்பை நம்பியே வாழ வேண்டியவர் களாயிருக்கிறோம். இதை நாம் உணர வேண்டும்.

இராக், இரான் போன்ற நாடுகள் அறிவியல், தொழில்நுட்பத் துறைகளில் நம் அளவிற்கு முன்னேறிய நாடுகள் அல்ல. ஆனால் அவை, இயற்பியல், வேதியியல் போன்ற பல துறைகளில், மிக அழகிய முறையில், ஆய்வுத் தாளிகைகளை வெளியிடுகின்றன. சீனா, ஆயிரத்திற்கு மேற்பட்ட ஆய்வுத் தாளிகைகளைச் சீன மொழியில் வெளியிடுகிறது. நாம் அப்படிப்பட்ட முயற்சிகளைக் கணிசமான அளவில் மேற்கொள்ளவில்லை. தகவல் இதழ்களை நமது நிறுவனங்கள் வெளியிடுகின்றன. சில பொதுவான கட்டுரைகள் தமிழில் வெளியாகின்றன. தமிழகப் பல்கலைக் கழகங்களைத் தலைமையிடமாகக் கொண்டு, கலை, அறிவியல், சமுதாய இயல், தொழில் துறைகள் போன்றவற்றில் தரமான கட்டுரைகள் கொண்ட ஆய்வுத் தாளிகைகள் வெளியிடப்பட வேண்டும். தமிழ்வழி பயிலும் மாணவர்கட்கு, அவர்கள் பயிலும் துறைகளில் ஏற்படும் முன்னேற்றங்களை அறிய, அவர்கள் தங்கள் ஆய்வின் விளைவுகளைப் பிரசுரிக்க, இந்தத் தாளிகைகள் பயன்பட வேண்டும். இன்று தொடங்கினால் கூட, இவை முறையாக வேர் பிடிக்க 10 ஆண்டுகள் ஆகும். உயர்நிலைக் கல்விக்கு, அதிலும் இளநிலை வகுப்பிற்கு மேற்பட்ட கலை, சமுதாய இயல், அறிவியல் பட்டப்படிப்புக்கு, தொழில் துறைப்

---

1. Research and Development Statistics. 1992-93; Department of Science and Technology; Ministry of Science and Technology, Government of India - New Delhi - 1994.

பட்டப் படிப்பிற்கு எல்லா நிலையிலும் தமிழ்வழி கற்பதற்கு நாம் செய்ய வேண்டிய முயற்சிகள் பல. பல நூல்கள், அவ்வப்பொழுது பல்கலைக் கழகங்களின் துறைகளிலிருந்து தமிழில் வந்து கொண்டிருக்க வேண்டும். பலவகைப் பிரசுரங்கள் தமிழில் வர வேண்டும். நவீன முறையில் அகராதிகள், களஞ்சியங்கள், பார்வை நூல்கள் தமிழில் வர வேண்டும். நாம் இதுவரை தொகுத்த இரண்டு இலட்சம் கலைச் சொற்களைக்கூடச் சில தொகுதிகளாகப் பதிப்பித்து வெளியிட இயலாதவர்களாக இருக்கின்றோம். அவை தட்டச்சுச் செய்யப்பட்ட தாள்களாகப் பழுப்பேறி நிற்கின்றன இந்தப் பின்னணியில் புரட்சிகரமான மாறுதல்கள் ஏற்படா. தமிழ் நூல்கள் வெளியிடுவதற்குப் பெரிய அளவில், நிறுவனங்களின் துணை கொண்டு மகத்தான ஏற்பாடுகளைச் செய்யாமல், தமிழில் நூல்கள் எழுதக் கல்வித் துறையினர் கணிசமாக முன்வருவதற்கான சூழ்நிலைகளை உருவாக்காமல், சில நூல்களை அரையும், குறையுமாக மொழிபெயர்த்து வைத்துக்கொண்டு, அல்லது சில பாடங்களில் எழுதப்பட்ட நூல்களை வைத்துக் கொண்டு, நாம் முதுகலை, தொழில்நுட்பக் கல்வித் துறைகள் ஆகியனவற்றில் தமிழ்வழிக் கல்வி முயற்சியில் வெற்றி பெற இயலாது. முறையான அடிப்படையும், தாங்கும் தூண்களும் இன்றி, உயர்நிலை வகுப்புகளில், தொடர்ந்து வளரும் தொழில் துறைகளில் பல்கலைக் கழகப் பட்டப்படிப்பு நிலையில், தமிழ்வழி பயிற்றுவிக்கத் தொடங்கி மாணவர்கள் தரமான கல்வி பெறவில்லையாயின், நமது குறைகளையும், தவறுகளையும், இயலாமையையும், போதுமான ஏற்பாடுகள் செய்யாது ஒரு முயற்சியில் ஈடுபட்டதன் பாதகமான விளைவுகளையும், தமிழின் மீது சுமத்த, தமிழ் மொழி வழிக்கல்வியின் தரம் குறைவு எனப் பெயர் சூட்ட மட்டுமே உதவும். நாம் கீழ்க் காணும் சில செயல்களை உடனே மேற்கொள்ள வேண்டும்.

i. பள்ளியிலிருந்து பல்கலைக்கழகம் வரை, நாம் இதுவரை அடைந்திருக்கும் வளர்ச்சியை, முன்னேற்றத்தைக் (State of the Art) கணக்கிட்டு, ஓர் அறிக்கை தயாரிக்க வேண்டும் மற்ற

மாநிலங்களின் அனுபவங்களை அறிந்து கொள்வதும் பயன் தரும்.

ii. இனிமேல் செய்ய வேண்டுவன பற்றி ஐந்தாண்டு, பத்தாண்டுத் திட்டம் வகுக்க வேண்டும்.

iii. நமது மாநிலத்தின் ஐந்தாண்டுத் திட்டங்களில், பயிற்று மொழித் திட்டம் என ஒரு தனி அத்தியாயம் இடம் பெற வேண்டும். அதன் கீழ் பல வகையான பணிகட்கு நிதி ஒதுக்கப்பட வேண்டும். செய்யப்பட வேண்டிய பணிகள் பற்றிய பட்டியல் ஒன்று கல்வித் துறை நிபுணர்களைக் கொண்டு, அவரவர்தம் துறைகளில் தேசிய அளவிலாவது அங்கீகாரம் பெற்ற வல்லுநர்களைக் கொண்டு, தயாரிக்கப்பட வேண்டும்.

iv. துறையில் நீண்ட அனுபவம் உள்ளவர்களைப் பயன்படுத்த வேண்டும்.

தமிழ் வளர்ச்சிக்கும், பல்துறை அறிவுத்துறை இலக்கியங்களைத் தன்னுள் கொண்டு பண்டைப் பெருமையோடு இற்றைச் சிறப்பும் உடையதாக மிளிரும் வளம் மிக்க ஒரு மொழியாகத் தமிழ் வடிவம் பெறவும் உதவும் வகையில், நிரந்தரமான சில நிறுவனங்கள் உருவாக்கப்பட வேண்டும்:

i. பொது அகராதி, கலைச் சொல் அகராதிகள், புதிய இலக்கணம் போன்ற நூல்களை உருவாக்கவும், தரப்படுத்தும் பணிகளை மேற்கொள்ளவும், ஃப்ரான்சில் உள்ள Academy போன்ற, இஸ்ரேலில் உள்ள The Academy of the Hebrew Language போன்ற, 'தமிழ்க்கழகம்' என்ற ஒரு நிறுவனம்

ii. தமிழ் மொழி, பல்துறை இலக்கிய நூல்களை, பார்வை நூல்களை, ஆய்வுத் தாளிகைகளைக் கொண்டதாக உருவாவதற்கேற்ற முயற்சிகளை மேற்கொள்ளவும், பொறுப்பான நிறுவனங்களைத் தேர்ந்தெடுத்துப் படைப்புப்

பணிகளை ஒப்படைக்கவும், நிதி உதவி செய்யவும் ஒரு குழுமம் / வாரியம்.

இவை அரசியல் கட்சிகட்கு அப்பாற்பட்டவையாக, முக்கியமான கட்சித் தலைவர்களின் ஒப்புதலுடன் அரசினால் உருவாக்கப்பட்டவையாக இருக்க வேண்டும். **'தமிழ்க்கழகம்' போன்ற நிறுவனத்தின் சார்பில் வெளியிடப்படும் அகராதி, இலக்கணம், தரப்படுத்திய கலைச் சொல் தொகுப்பு போன்றன, அரங்கேற்றம் பெற்றவை போன்ற அங்கீகாரம் பெற வேண்டும்.**

## 6. கட்சி கடந்த அணுகு முறை

'பயிற்று மொழிக் கொள்கை' பொதுவான, தமிழக அரசுக் கொள்கையாக இருக்க வேண்டும். இது கட்சி சார்ந்ததாகவோ, அரசுக்கு அரசு மாறும் தன்மை கொண்டதாகவோ இருக்கக் கூடாது. இப்பொழுது, 'பயிற்று மொழி'ச் செயலாக்கம் அரசுக்கு அரசு மாறுவது மட்டுமன்றி, ஒரே அரசில் கூட, கல்வி அமைச்சர் மாறும்பொழுது மாற்றம் பெறும் ஒன்றாக இருக்கிறது அடிப்படைக் கொள்கை வேறுபாடு கொண்ட பிரச்சினைகள் தவிர, மற்ற வகையில் அனைத்துக் கட்சிகட்கும் ஏற்புடைய அணுகுமுறையை உருவாக்குவது இன்றியமையாத தேவை.

# 6

# கலைச்சொல்: அகராதிகள், வங்கி★

## 1. கலைச் சொற்கள்

கல்வியறிவுத் துறைகளில் இதுவரை உலகு கண்ட வளர்ச்சி முழுவதும் நமது மொழியில் இடம் பெற வேண்டும். எதிர்கால வளர்ச்சியில் நாம் முன்னேறிய நாடுகளோடு தோளோடு தோள் சேர்ந்து நடை போட வேண்டும் என்பது நமது அவா, நமது நோக்கம். இதற்கு இருக்கும் தடைகள் பல. பயணம் நெடியது, பாதை கடினமானது இதை மனத்திற்கொண்டு முறையாக முயல்வதும், எண்ணியதை இயன்ற அளவில் முடிப்பதும் இன்றைய முக்கியமான குறிக்கோள்கள். இது சிலராலோ, அல்லது குறிப்பிட்ட ஒரு நிறுவனத்தாலோ மட்டும் செய்து முடிக்கப்படக் கூடிய பணி அன்று. பரவலாகப் பலரின் பங்களிப்புத் தேவை. அந்தந்தத் துறை நிபுணர்களின் ஈடுபாடு தேவை. ஓர் இயக்கம் போன்ற அணுகுமுறை தேவை.

அறிவியல், தொழில் நுட்பம், மற்றும் பிற துறைகளில் தமிழில் நூல்கள் எழுதுவதற்கு அந்தந்தத் துறைகளில் பலர் முன்வரலாம். ஆனால், எல்லாரும் கலைச் சொற்களை உருவாக்கும் முயற்சியில் ஈடுபடுவார்கள் என்று கூறுவதற்கில்லை. எனவே, பலவகைத் துறைகளில் இலக்கியம் உருவாவதற்குக்

★ *தினமணி, பொங்கல் மலர்,* 1996.

கலைச் சொற்கள் தேவை என்பது நாம் அறிந்த ஒன்று. அவை கட்டடம் அமைவதற்குச் செங்கல் போன்றவை; கதவு, பலகணி போன்றவை.

கலைச் சொல்லாக்கத்தில் தமிழ் மொழி பாராட்டத்தக்க வளர்ச்சியைப் பெற்றிருக்கிறது என்பது நமக்கு மகிழ்ச்சி தரும் நிலை. தமிழில் கலைச் சொல்லாக்கம் இன்று நேற்றுத் தோன்றியது அன்று. அதற்கு ஏறத்தாழ, குறைந்தது, ஒன்றரை நூற்றாண்டு வரலாறு உண்டு. தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகப் பேராசிரியர் டாக்டர் இராம சுந்தரம் கலைச் சொல்லாக்கப் பின்னணியைச் சற்று விரிவாக ஆய்ந்திருக்கிறார். அவர் சேகரித்துள்ள தகவல்கள் பயனுடையன.

## 2. கலைச் சொல்லாக்க முயற்சிகள்

தாய் மொழியில் கல்வி கற்றுத் தருவது பற்றிய முயற்சிகள், சென்ற நூற்றாண்டின் முதல் பாதிப் பகுதியிலேயே இந்தியத் துணைக் கண்டத்தில் தொடங்கப்பட்டன. முதல் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை பல பள்ளிகளில் தாய் மொழியில் பாடங்கள் கற்றுத்தரப்பட்டன. தமிழில் அறிவியல் நூல்கள் பள்ளி மாணவர்கட்குப் பயன்படும் வகையில் எழுதப்பட்டன அன்று தொடங்கிய பயிற்று மொழி யாத்திரை, இன்றும் தளர் நடை போடுவதும், தவழ்ந்து செல்வதும், நமது மெத்தனப் போக்குக்கும், வினை செய்யாது விவாதத்திலேயே காலத்தைச் செலவிடும் 'வேடிக்கை மனிதர்' பண்பாட்டுக்கும் சான்றாகும்.

கலைச் சொல்லாக்கம், தமிழில் பயிற்றுதல் போன்றவற்றில் இலங்கையின் பங்களிப்பு கணிசமானது. இன்றைய நிலைக்கு வருமுன் முந்தைய முயற்சிகளைச் சுருக்கமாக நினைவு கூர்வது பொருத்தமாகும். அவற்றுள் குறிப்பிடத்தக்கன பின்வருமாறு:

1832இல் ரேனியஸ் (Rhenius) பாதிரியார் எழுதிய 'பூமி சாஸ்திரம்', 1849இல் இலங்கையில் வெளியான பாலகணிதம், 1855இல் டாக்டர் கரோல் (Dr. Carrol) என்பவர் எழுதிய

குறியீட்டுக் கணிதம் (Algebra), இலங்கையில் வாழ்ந்த அமெரிக்கரான டாக்டர் சாமுவேல் கிறீன் 1850-1855 காலப் பகுதியில் மருத்துவத் துறையில் தமிழாக்கம் செய்த நூல்கள் ஆகியன குறிப்பிடத்தக்கன. பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்களின் நூற்றொகை விளக்கத்தையும் (1888) குறிப்பிட வேண்டும்.

இந்த நூற்றாண்டின் முயற்சியில் முதலாவதாக, இராஜாஜி, வேங்கடசுப்பையர் என்பவருடன் சேர்ந்து 1916இல் சேலத்தில் கொண்டு வந்த ''தமிழ் சாஸ்திர பரிபாஷைச் சங்கத்தாரின் பத்திரிகை'' என்ற இதழைக் குறிப்பிட வேண்டும். 1937இல் டி.வி.சாம்பசிவம் பிள்ளை அறிவியல் கலைச் சொற்களைக் கொண்ட அகராதி ஒன்றை மூன்று தொகுதிகளாக வெளியிட்டார்.

1932இல் சென்னை அரசு, கலைச் சொல்லாக்கக் குழு ஒன்றை அமைத்தது. 1936-இல் கலைச் சொல்லாக்க மாநாடும் நடந்தது. 1940இல் சென்னை அரசு, மீண்டும் ஒரு கலைச் சொல்லாக்கக் குழுவை அமைத்தது. விடுதலைக்குப் பின்னர், 1947இல் சென்னை அரசு பல்வேறு பாடங்கட்குக் கலைச் சொல் அகராதிகளை வெளியிட்டது. தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் துறைச் சொற்களைக் கொண்ட பதின்மூன்று சிறு தொகுப்புகளை வெளியிட்டிருக்கிறது.

அரசு முயற்சி ஒரு புறம் இருக்க, தனிப்பட்ட தன்னாட்சி நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றின் பங்களிப்பும் முக்கியமானது. 1947இல் இருந்து பணியாற்றி வரும் தமிழ் வளர்ச்சிக்கழகம், பொதுவான கலைக் களஞ்சியத் தொகுப்புகள் 10; குழந்தைகள் கலைக் களஞ்சியத் தொகுப்புகள் 10; இன்னும் சில நூல்களை வெளியிட்டிருக்கிறது. இப்பொழுது 10 தொகுதிகள் கொண்ட மருத்துவக் கலைக் களஞ்சியம் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளது. இவற்றில் ஏராளமான கலைச் சொற்கள் இடம் பெற்றிருக்கின்றன. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், நியூ செஞ்சுரி புக் ஃகவுஸ் பதிப்பகம், திரு. ஜி.ஆர்.தாமோதரன் அவர்கள் தொடங்கிய 'கலைக்கதிர்' பத்திரிகை ஆகியவற்றின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கவை. 'விஞ்ஞானச்சுடர்', 'வளரும்

வேளாண்மை', திரு.மணவை முஸ்தபாவை ஆசிரியராகக் கொண்ட யுனெஸ்கோ நிறுவனத்தின் 'கூரியர்' ஆகியனவும் குறிப்பிடத்தக்கவை.

இலங்கை அரசு 1955இல் அமைத்த 'தன்மொழி அலுவலகம்' என்ற அமைப்பும், மற்ற சில நிறுவனங்களும் ஐம்பதுக்கும் மேற்பட்ட கலைச்சொல் தொகுதிகளை வெளியிட்டிருக்கின்றன.

1983 வரை உருவாக்கப்பட்ட கலைச்சொல் தொகுப்புகளை ஆய்ந்த டாக்டர் இராதா செல்லப்பன் இருநூறுக்குப் பக்கமான கலைச் சொல் தொகுப்புகள், பல இடங்களிலிருந்து, பலர் முயற்சியால் வெளிவந்திருப்பதாகக் கூறுகிறார். அதற்குப் பின்னும் கடந்த 10-15 ஆண்டுகளில் பல கலைச்சொல் அகராதிகள் துறைவாரியாகவும், தொகுப்பாகவும் வந்திருக் கின்றன. உருவாக்கப்பட்ட கலைச்சொற்களைத் தொகுப்பதில் முறையாக ஈடுபட்டுள்ளது தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம். மறித்துவரும் சொற்களை நீக்கிவிட்டால் இதுவரை மொத்தம் 1,50,000 கலைச் சொற்கள் உருவாக்கப்பட்டிருப்பதாகவும், அவற்றில் 80,000 சொற்களைத் தஞ்சைப் பல்கலைக்கழகம் தரப்படுத்தியிருப்பதாகவும் டாக்டர். இராம சுந்தரம் கூறுகிறார். டாக்டர் இராதா செல்லப்பன் 1983-லேயே 2,00,000 கலைச் சொற்கள் உருவாக்கப்பட்டிருப்பதாகக் கணக்கிட்டிருக்கிறார்.

### 3. செய்ய வேண்டுவன

இதுவரை செய்த பணியைத் தொடர்ந்து, இன்றைய நிலை வரை உருவாக்கப்பட்ட சொற்களைத் தொகுக்க வேண்டும். அத்துடன் இந்தக் காலகட்டத்தில் நாம் செய்ய வேண்டிய முக்கியமான பணிகள் பின்வருமாறு:

i. கலைச் சொற்களை உருவாக்குவதில் நமக்குக் கணிசமான அனுபவம் இருக்கிறது. இப்பணியில் ஈடுபாடுள்ள அறிஞர்கள் பலர் உள்ளனர். மேலே கூறப்பட்டிருப்பது போல, இரண்டு இலட்சத்திற்குப் பக்கமாகச் சொற்கள்

உருவாக்கப் பட்டிருக்கின்றன. இவற்றினடிப்படையில், மொழி வல்லுநர்கள், மொழியியல் வல்லுநர்கள், பல்வகைத் துறை வல்லுநர்கள் சேர்ந்து கலைச்சொல் படைப்பதற்கான சில உத்திகளை உருவாக்க வேண்டும். அது கலைச்சொல் படைப்பதற்கு இலக்கணம் போல பயன்படும். இப்பொருள் பற்றிச் சற்று விரிவாக 'அறிவியல் தமிழ்' (1985) என்ற எனது நூலில் விவாதித்திருக்கிறேன்.

ii. கல்வி அறிவுத் துறைகளில் நூல் எழுதுவோர் ஒவ்வொரு வருக்கும் இதுவரை உருவாக்கப்பட்ட கலைச்சொற்கள் எட்டுவனவாக இருக்க வேண்டும்.

iii. புதிதாகக் கலைச்சொற்கள் தமிழில் எங்கு, எந்தத் துறையில் உருவாக்கப்பட்டாலும், கலைச்சொல் அகராதித் தொகுப்புகள் உருவானாலும், அவற்றைப் பற்றிய விவரம் நம்மால் நிர்ணயிக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு அனுப்பப்படுவதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். இது, இந்தியாவில் வெளியிடப்படும் நூல்களின் படிகள் கல்கத்தாவிலுள்ள தேசிய நூலகத்திற்கு அனுப்பப்பட வேண்டும் என்பது போன்ற ஏற்பாடு ஆகும். முன்பே பகுக்கப்பட்ட துறைவாரியாக அவை அங்கு பதிவு செய்யப்பட வேண்டும்

iv. தொகுக்கப்பட்ட சொற்கள் தொடர்ந்து தரப்படுத்தப்பட வேண்டும். கலைச் சொல் விவரம் கேட்பவர்கட்கு, தரப்படுத்தப்பட்ட சொற்கள், தரப்படுத்தப்படாத சொற்கள் என்ற பாகுபாட்டுடன் சொற்களைப் பற்றிய விவரம் தெரிவிக்கப்பட வேண்டும்

## 4. செயற்படுத்துதல்

கலைச் சொல் துறையில் நமது தேவை பற்றியும், நாம் செய்ய வேண்டுவது பற்றியும் கூறினோம். செயல்படுத்தும் முறை பற்றி எண்ணுவது பொருத்தமாகும்.

இதுவரை வந்த கலைச் சொற்களைத் தொகுத்து வெளியிடவும், தொடர்ந்து இப்பணியை மேற்கொள்ளவும் ஒரு தன்னாட்சி அமைப்பை (Autonomous Organisation) அரசு உருவாக்க வேண்டும். 'மாநில அரசின் மொழிக்கொள்கை' என்ற கட்டுரையில் குறிப்பிடப்பட்டிருக்கும் தமிழ்க்கழகத்தின் ஓர் அங்கமாக இது அமையலாம். கொள்கை வகுக்கவும், திட்டமிடவும், தேவையான நிதி ஒதுக்கவும் வசதியைக் கொண்டதாக அதன் ஆட்சிக் குழு அமைய வேண்டும். இப்பணிக்குத் தொடர்புள்ள தலையாய நிபுணர்களை உறுப்பினர்களாகக் கொண்டதாக இருக்க வேண்டும். பல்கலைக் கழகங்கள், ஆராய்ச்சி நிலையங்கள், தொழில் துறைகள், அரசுத் துறைகள் போன்ற தொகுதிகள் வரையறுக்கப்பட்டு, அந்தந்தத் தொகுதியிலிருந்து பொருத்தமான ஒருவர், இருவர் பொறுக்கி எடுக்கப்பட்டு, ஆட்சிக் குழுவிற்கு நியமிக்கப்பட வேண்டும். கட்சிச் சார்பு இல்லாத வகையில் இந்தக் குழுவைத் தேர்ந்தெடுப்பதற்கான வழிவகைகளைப் பற்றிச் சிந்திக்கலாம். இந்த அமைப்பின் தலைமையகம் ஏதாவது ஒரு பல்கலைக்கழகத்தின் வளாகத்தில் அமையலாம். அதற்கு ஓர் அலுவலகம் வேண்டும். இயக்குநர் அல்லது நெறியாளர் அல்லது பதிப்பாசிரியர் (Editor) போன்ற தலைமை அலுவலரும், அவருக்குத் தேவையான துணை அலுவலர்களும், உதவியாளர்களும் நியமிக்கப்பட வேண்டும். இந்த அலுவலகம், ஆட்சிக் குழுவின் முடிவுகளை, அதன் தீர்மானங்களின்படி செயல்படுத்தும் நடவடிக்கைகளை எடுப்பதற்காக மட்டுமே. மற்றபடி ஒவ்வொரு பணிக்கும் தனித்தனியே நிபுணர்களோ, நிபுணர் குழுவோ அல்லது குறிப்பிட்ட ஒரு நிறுவனமோ ஆட்சிக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டு, திட்டங்கள் செயல்படுத்தப்படும். இந்த அமைப்பு அதன் முதற் கட்டப் பணியாக:

★ இதுவரை இந்தியத் துணைக் கண்டத்திலேயும், வெளியிலேயும், நிறுவனங்கள், தனி அலுவலர்கள், குழுக்கள் ஆகியவை தொகுத்துள்ள எல்லாக் கலைச் சொற்களையும் திரட்டிச் சேர்க்க வேண்டும். கலைச் சொற்களைத் தொகுப்பதில் ஏற்கெனவே செய்துள்ள பணியை முழுமைப்படுத்த வேண்டும்.

★ தொடர்ந்து உருவாக்கப்படும் கலைச் சொற்கள், கலைச்சொல் அகராதிகள் இந்த அமைப்பை வந்து அடைவதற்கான வழிவகைகளைக் காண வேண்டும்.

★ இதுவரை உருவாக்கப்பட்ட கலைச் சொற்களை **'கலைச்சொல் அகராதி'** என்ற தலைப்பில் பல தொகுதிகளாகப் பதிப்பித்து உடனடியாக வெளியிட வேண்டும். எந்தெந்தத் தலைப்புகளில் வெளியிடப்படலாம் என்பதைப் பின்னர் ஆய்வோம்.

★ தொகுப்புகள் வெளியான பின், ஆண்டுக்கொரு முறை, புதிதாக உருவாக்கப்பட்ட கலைச் சொற்கட்கு, பிற்சேர்க்கை (Appendix) வெளியிடப்பட வேண்டும்.

★ இத்தொகுப்புகள் முழுமையாகவோ, அல்லது துறைவாரியாகவோ, பல்கலைக்கழகங்கள், முக்கியமான நூல் நிலையங்கள், அரசு அலுவலகங்கள், பத்திரிகை அலுவலகங்களிலுள்ள நூல் நிலையங்கள், வானொலி, தொலைக்காட்சி அலுவலக நூல் நிலையங்கள் ஆகியவற்றிலும், மற்றும் முக்கியமான பிற இடங்களிலும் இடம் பெற ஏற்பாடு செய்ய வேண்டும்.

★ முதலாவதாகக் கலைச் சொற்களைத் திரட்டுவதற்காக அமைக்கப்பட்ட தலைமையகத்தில் சேர்ந்த கலைச் சொற்கள் அனைத்தையும் கணிப்பொறியில் தேக்கி, ஒரு 'கலைச் சொல் வங்கி' அமைக்க வேண்டும். புதிதாக வரும் சொற்கள் இவ்வங்கியில் முறையாகச் சேர்க்கப்பட வேண்டும். இவ்வாறு சேகரித்து வைக்கப்பட்டிருக்கும் கலைச்சொற்கள்,

தரப்படுத்தப்பட்டவை, தரப்படுத்தப்படாதவை என்ற இரு பிரிவிற்குள் வரலாம். தலைமையகத்தில் இருக்கும் கணிப்பொறியை Internet போன்ற இணைப்புச் சாதனம் மூலம் தமிழகத்தில் உள்ள பல்கலைக் கழகங்கள், ஆய்வு நிலையங்கள், முக்கியமான நூலகங்கள், அரசு அலுவலகங்கள் போன்றவற்றில் உள்ள கணிப்பொறிச் சாதனங்களோடு இணைத்து, கலைச்சொல் வங்கி பரவலாகப் பலருக்கும் எட்டும் தூரத்தில் உள்ளதாகச் செய்யலாம். இது கல்வியறிவுத் துறைகளில் நூல் எழுத முன்வருபவர்கட்குப் பெரும் உதவியாக இருக்கும். நூல்கள் எழுதுவது பரவலாக்கப்படும். பலருடைய பங்களிப்பும் இடம் பெறும்.

## 5. கலைச்சொல் தொகுப்புகள்

கலைச்சொல் அகராதித் தொகுப்புகளை அச்சிடுவது பற்றிச் சிந்திப்போம். கலைச் சொல் தொகுப்புகளை இரு அடிப்படைப் பிரிவுகளாக நெறிப்படுத்தலாம்.

★ பகுதி (1) : அறிவியல் (Basic Sciences), பொறியியல் - தொழில் நுட்பம் (Engineering & Technology), மருத்துவம் (Medicine), வேளாண்மை (Agriculture), சமுதாய இயல்கள் (Social Sciences), கலை, மொழி, இலக்கியம் (Arts & Humanities), சட்டம், ஆட்சி (Law and Administration) போன்ற பெரும் பிரிவுகளை எடுத்து, இவை ஒவ்வொன்றுக்கும் பொதுவான சொற்களைத் தனித் தனித் தொகுதியாக, அல்லது தொகுதிகளாகத் தயார் செய்யலாம்.

★ பகுதி (2): பகுதி (1)இல் உள்ள பெரும் பிரிவுகள் ஒவ்வொன்றின் கீழ் வரும் கிளைப் பிரிவுகளுக்கான கலைச் சொற்கள் இப்பிரிவில் இடம் பெறும். சான்றாக, பொறியியல், தொழில் நுட்பத்தை எடுத்துக் கொண்டால், அனைத்துப் பொறியியல் தொழில் நுட்பங்கட்கும் பொதுவான சொற்கள் பகுதி (1)-லும், குடிமைப்பொறியியல் (Civil Engineering),

மின்சக்திப் பொறியியல் (Electrical Engineering), எந்திரப் பொறியியல் (Mechanical Engineering) போன்ற தனித்தனிப் பிரிவுகட்கான கலைச் சொற்கள் அந்தத் தலைப்புகளில் பகுதி (2)-லும் இடம் பெறலாம்.

பொதுவாக, அறிவியல் துறைகளை (Basic Sciences) எடுத்துக் கொண்டால், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல் போன்ற அனைத்திற்கும் பொதுவான கலைச் சொற்கள், பகுதி (1)இல் வந்து விடும். பின்னர், கணிதத்துக்கு மட்டும் உரித்தான சொற்கள், பகுதி (2)இல் ''கணிதக் கலைச் சொற்கள்'' என்ற தலைப்பிலும், இயற்பியலுக்கு மட்டும் உரித்தான சொற்கள், பகுதி (2)இல் ''இயற்பியல் கலைச் சொற்கள்'' என்ற தலைப்பிலும், இதுபோன்றே மற்ற அறிவியல் துறைகட்கும் வெளிவரலாம். இந்த அணுகுமுறை மருத்துவம், வேளாண்மை போன்ற மற்ற துறைகட்கும் பொருந்தும். கீழே கொடுத்துள்ள வரைபடம் நாம் கூறும் கருத்தைத் தெளிவுபடுத்த உதவும்.

**அறிவியல்** (Basic Sciences)

**பகுதி-1 கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல்**
அனைத்திற்கும் பொதுவான கலைச்சொற்கள்

பகுதி - 2 (பகுதி 1இல் இடம் பெற்ற
பொதுச் சொற்கள் நீங்கலாக)

| **கணிதக்** கலைச் சொற்கள் | **இயற்பியல்** கலைச் சொற்கள் | **வேதியியல்** கலைச் சொற்கள் | **உயிரியல்** கலைச் சொற்கள் |
|---|---|---|---|

இவ்வாறு தொகுப்பது, எல்லாத் தொகுப்புகளையும் விலை கொடுத்து வாங்காது. இனம் பிரித்துத் தங்கட்குத் தேவையானவற்றை மட்டும் வாங்குபவர்க்குத் துணை புரியும். சான்றாக, இயற்பியல் கலைச் சொற்களில் மட்டும் ஆர்வமுள்ளவர்கள் - 'அறிவியல் கலைச் சொற்கள்', என்ற தலைப்பில்: பகுதி (1)இல்

வரும் தொகுப்பையும், அல்லது தொகுப்புகளையும், பகுதி (2)இல் 'இயற்பியல் கலைச் சொற்கள்' என்ற தலைப்பில் வரும் தொகுப்பு அல்லது தொகுப்புகளை மட்டும் வாங்கினால் போதுமானது. அதேபோன்று, எந்திரவியல் கலைச் சொற்களில் மட்டும் ஆர்வமுள்ளவர்கள் 'பொறியியல், தொழில் நுட்பக் கலைச் சொற்கள்' என்ற தலைப்பில் : பகுதி (1)இல் வரும் பொதுவான கலைச் சொல் தொகுப்பையும், 'எந்திரவியல் கலைச் சொற்கள்' எனப் பகுதி (2) இல் வரும் கலைச் சொல் தொகுப்பையும் வாங்கினால் போதுமானது.

பொதுவான அகராதி போல, அகர வரிசையில் தொகுப்போமானால், எல்லாரும் எல்லாத் தொகுதிகளையும் வாங்க வேண்டும். மேலும் பல சொற்களுக்கு, துறைக்கேற்பப் பொருள் வேறுபடும். பொதுவாக, கலைச் சொல் தொகுப்புகளை ''கலைச் சொல் அகராதி'' என்ற தலைப்பிலோ, ''கலைச் சொல் களஞ்சியம்'' என்ற தலைப்பிலோ வெளியிடும் பொழுது, முதலில் அறிவுத் துறைகளின் பெரும் பிரிவுகள், பின்னர் ஒவ்வொரு பெரும் பிரிவின் கீழும் உட்பிரிவுகள் என வகைப்படுத்தி, அவற்றை வரிசைப்படுத்தி, எண்ணிட்டு வெளியிடுவது தேவையாகும் இம்முயற்சி ஒரு பொதுக்குழுவின் தலைமையின் கீழ் ஒழுங்குபடுத்தப்பட்டு, பின்னர் துறை வல்லுநர்களைக் கொண்ட குழுக்களிடம் பிரித்து ஒப்படைக்கப்பட வேண்டும். இருக்கின்ற கலைச் சொற்கள் அச்சேறிய பின்னர், தொடர்ந்து தரப்படுத்தும் பணியையும் தொடங்கலாம். பொதுவாக, கலைச் சொற்களை முன்பு கூறியவாறு, தொகுத்து, பகுத்து, பலரும் பயன்படுத்தும் வகையில் வெளியிடுவதும், கணிப்பொறி மூலம் விரிவான அளவில் கலைச் சொல் வங்கியை அமைப்பதும், இன்றைய முக்கியமான பணிகளாகும். இருபதாவது நூற்றாண்டின் இறுதிக் கட்டத்தில் நம் முன் விரியும் எண்ணற்ற கலைகள் அனைத்தையும் தன்னுள் கொண்ட நிறைமொழியாகத் தமிழ் மலர்வதற்காக நாம் மேற்கொள்ளும் தவத்தின், வேள்வியின் நீண்ட பயணத்தில் முக்கியமான இரு படிகள், **கலைச்சொல் அகராதிகள் பதிப்பு; கலைச்சொல் வங்கி அமைப்பு.**

# 7

# இன்றைய தமிழுக்கு இலக்கணம்*

## 1. நன்னூலின் பின்னணி

ஏறத்தாழ, கி.பி. 13-ஆம் நூற்றாண்டு அளவில் அரசாண்ட சீயகங்கன் எனும் சிற்றரசன், [1]

> ''தொல்காப்பியம் முதலிய பழைய இலக்கண நூல்கள் பேரறிவினர்க்கே புலப்படும் தன்மையனவாயிருத்தலின், இயற்றமிழின் பாகுபாடான எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணியிலக்கணங்களின் பயிற்சி குன்றிப் போவதனால், தமிழாராய்ச்சியில் வலியோரேயன்றி எளியோரும் ஓதியுணரும்படி, நீவிர் ஓர் இலக்கண நூலை இயற்றித் தரல் வேண்டும்.''

எனப் பவணந்தி முனிவரை வேண்டினன். அதை ஏற்ற பவணந்தியார், [2]

> ''முற்காலத்து வழங்கிய இலக்கணங்களுக்குள்ளே பிற்காலத்து வழங்காதொழிந்தனவற்றை நீக்கி, முற்காலத்து வழங்காது பிற்காலத்து வழங்கி வரும் இலக்கணங்களைத்

---

★ வா.செ. குழந்தைசாமி· தினமணி, மே 19, 26 - 1996

1,2 : நன்னூல், காண்டிகையுரை, வை.மு.சடகோப ராமானுஜாசாரியார், கே.கிருஷ்ணமாசாரியார், உமாபதி அச்சுக்கூடம், சென்னை, 1932.

தழுவி, உலக வழக்கு, செய்யுள் வழக்குகளோடு சிறிதும் மாறுபடாமல் ...... சாதாரண மாணவர்கட்கும் உபயோகப்படத் தக்கதாய்''

'நன்னூல்' என்னும் நூலை இயற்றி அவ்வரசனது சபையில் அரங்கேற்றினார் என்று கூறப்படுகிறது. இங்கு முற்காலத்து, பிற்காலத்து வழங்கிவரும் இலக்கணம் என்று கூறுவது, இலக்கண நூல்களன்றியும், அந்தந்தக் காலத்து இலக்கியங்களிலும், சான்றோரது உரையாடல்களிலும் இடம் பெற்ற மொழி வழக்கு என்றும் பொருள்படும். சுருக்கமாகக் கூறுவதானால், பவணந்தி முனிவர், 13-ஆம் நூற்றாண்டில், வழக்கிலிருந்த தமிழ் இலக்கண, இலக்கிய மரபை நுட்பமாக ஆய்ந்து தமிழுக்கு இலக்கணம் எழுதினார் என்பதும், அன்றைய தமிழ் வழக்கு, அதற்கு முந்தைய தமிழ் வழக்கினின்றும் சில மாற்றங்களைக் கொண்டிருந்தது என்பதும் புலனாகும். சான்றாக, தொல்காப்பியர், மொழிக்கு முதலில் 'ச' கரத்தை அனுமதிக்கவில்லை. நன்னூலார் 'ச' கரம் மொழிக்கு முதலில் இடம் பெற அனுமதிக்கிறார். இந்த மாற்றம் அவர்கள் வாழ்ந்த காலத்து வழக்கினின்றும் ஏற்பட்டதேயன்றி, அவர்களது விருப்பு, வெறுப்பால் இடம் பெற்றதன்று. தொல்காப்பியர் இலக்கணம் எழுதிய காலத்தில் இருந்த தமிழ் வழக்கில் 'ச' கரம் முதல் எழுத்தாக இடம் பெறாதிருந்து, அதற்குப் பிந்திய இடைக்காலத்தில் 'ச'கரம் முதல் எழுத்தாக இடம் பெற்றிருக்க வேண்டும். எனவே நன்னூல் அதை ஏற்றுக்கொண்டு இலக்கணம் வகுக்கிறது.

தொல்காப்பியத்திற்குப் பின்னர் ஓர் இலக்கண நூல் எழுதப்படாத குறையைச் சீயகங்கன் உணர்கிறான். தொல் காப்பியம் பேரறிவாளர்க்கே புலப்படும் தன்மையுடையதா யிருத்தலின், தமிழ் ஆய்வில் வலியோரேயன்றி, மற்றையோர் பங்கு கொள்ள இயலாத நிலையில் தமிழ்ப் பயிற்சி தளர்வதை உணர்ந்து, எளிமையாக்கத்திற்கு வழிவகுக்க விரும்புகிறான் மன்னன். இட்ட பணியை ஏற்ற பவணந்தி முனிவர், தொல்காப்பியத்திற்குப் பின் வந்த காலப் பகுதியில் ஏற்பட்ட

மாற்றங்களை, வளர்ச்சியை எண்ணி, ஏற்றுத் தமிழுக்கு இலக்கணம் வகுக்கிறார்.

## 2. ஏழு நூற்றாண்டு இடைவெளி

நன்னூல் எழுதப்பட்டு ஏறத்தாழ ஏழு நூற்றாண்டுகள் கழிந்து விட்டன. இந்தக் காலப்பகுதியில் ஏற்பட்ட மாற்றங்கள், நன்னூலுக்கு முற்பட்ட காலத்தில் ஏற்பட்ட மாற்றங்களை விட மகத்தானவை, விரைவானவை. பல மடங்கு விரிவானவை. புதிய, புதிய பரிமாணங்களைக் கொண்டவை. அதுவும் கடந்த 300 ஆண்டுகளில் மனித சமுதாயம் இரண்டு புது யுகங்களையே கண்டுவிட்டது. ஆனால் கடந்த 700 ஆண்டுகளில் ஏற்பட்ட மாற்றத்தை, வளர்ச்சியை அலசி, ஆய்ந்து, முறையானவற்றை ஏற்று, எழுதப்பட்ட இலக்கணம் – தொல்காப்பியம் போல, நன்னூல் போல இல்லாவிடினும், ஓரளவுக்காவது அறிஞர் உலகம் ஏற்றுக்கொண்டதெனப்படும் இலக்கணம் – தமிழுக்கு இல்லையென்பது நம்ப இயலாதது; ஆனால் உண்மை. இது வருந்தத்தக்க ஒரு குறைபாடு. தமிழறிஞர்கள் கொடுக்கும் இலக்கண நூல் வரிசையைப் பார்த்தால், 13-ஆம் நூற்றாண்டு முடிய, குறிப்பிடத்தக்க பெரிய முயற்சி எதுவும் தென்படவில்லை. சில நூல்களின் பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன. 19-ஆம் நூற்றாண்டில் தனிப்பட்டவர்கள் இலக்கணம் எழுதியிருக்கிறார்கள். அவற்றுள் யாப்பு, அணியியல் நூல்களும் அடங்கும். 20-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டவை மிகச்சில. 19-ஆம், 20-ஆம் நூற்றாண்டுகளில் எழுதப்பட்ட இலக்கணங்களில் தமிழ் கற்ற மேலைநாட்டினர் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதியுள்ள நூல்களும் அடங்கும். எழுதப்பட்டுள்ள நூல்களுள் ஆறுமுக நாவலர் எழுதியுள்ள ''இலக்கணச் சுருக்கம்'' எனும் நூல் சிலரால் முக்கியமானதாகக் குறிப்பிடப்படுகிறது. எது எப்படியிருப்பினும், இன்றும் தமிழ் வழக்கைப் பொருத்த வரை எது சரி, எது தவறு என முடிவு செய்ய நன்னூலைத்தான் – இன்னும் சிலர் தொல்காப்பியத்தையே – அளவுகோலாக எண்ணுகிறார்கள்;

பயன்படுத்துகிறார்கள். நன்னூலுக்குப்பின், அரங்கேற்றம் பெறாவிட்டாலும், பரவலான அங்கீகாரம் பெற்று, மேற்கோள் காட்டப்படும் இலக்கண நூல் எதுவும் உருவாகவில்லை.

இன்றைய தமிழுக்கு இலக்கணம் பற்றி எண்ணும்பொழுது அ.சண்முக தாஸ் பின்வருமாறு கூறுகிறார்: [3]

> **"தமிழ் மொழிக்கு, தற்கால அடிப்படையில் புதிய, முழுமையான இலக்கணம் அமைக்க வேண்டியது சிறப்பான, கட்டாயமான தேவை என்பதை நாம் உணரும் அதே வேளை, அத்தகைய இலக்கணத்தை அமைப்பதிலே உள்ள பல சிக்கல்களை நெஞ்சிருத்த வேண்டியுள்ளது."**

தமிழுக்கு இன்றுள்ள இலக்கண நூல் நிலை பற்றி டாக்டர் இ.அண்ணாமலை பின்வருமாறு கூறுகிறார்.[4]

> **"பழைய இலக்கண நூல்கள் புதிய விதிமுறைகளுக்குப் பொருந்தி வரவில்லை. புதிய இலக்கண நூல்களும் தோன்றவில்லை. பழைய விதிகள் புறக்கணிக்கப் படாமலும், புதிய விதிகள் முற்றிலும் ஏற்றுக் கொள்ளப் படாமலும் ஒரு சமூகம் இயங்குகின்ற நிலையைச் சமூகவியலாளர்கள் மயக்க நிலை (Anomie) என்பார்கள். புதிய தமிழைப் பொருத்த வரை இத்தகைய மயக்க நிலை இருக்கிறது எனலாம்."**

மயக்க நிலை என்பதை விட, ஒரு குழப்ப நிலை. எந்தக் கட்டுப்பாடும் அற்ற நிலை; யார் எப்படி எழுதினாலும் அது ஏற்புடையதே என்பது போன்ற நிலை இன்று நிலவுகிறது. தமிழில் பல துறைகளில் எழுதும், பேசும் பொதுமக்கள் ஒரு புறமிருக்க, தமிழ்ப் புலவர்கள்தம்முள்ளும் தமிழ் வழக்குப்பற்றி ஒத்த

3. நுஃமான், எம்.ஏ. (பதிப்பாசிரியர்) தொடர் பாடல் மொழி நவீனத்துவம்: பகுதி 1: அ. சண்முகதாஸ்: புதிய தமிழ் இலக்கணம்; அதன் தேவையும், சிககல்களும், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு, 1993

4. நுஃமான், எம்.ஏ. பகுதி 1. இ. அண்ணாமலை: மொழிப்புதுமையாக்கத்தில் அகராதியின் பங்கு.

கருத்தில்லை. பல சான்றுகள் கூறலாமெனினும், சிலவற்றைக் குறிப்பிடுவது நாம் எடுத்துக்கொண்ட பொருளுக்குப் போதுமென்றே கருதுகிறோம்.

பழந்தமிழில் 'அல்' என்ற அடியாகப் பிறந்த எதிர்மறை வினைமுற்று, நான் அல்லேன், நாம் அல்லேம், நீ அல்லை, நீங்கள் அல்லீர், அவன் அல்லன், அவள் அல்லள், அவர்கள் அல்லர், அது அன்று, அவை அல்ல என அமையும். ஆனால் உ.வே. சாமிநாதய்யர், மு.வரதராசனார் போன்ற பெரும் புலவர்கள், 'அல்ல' என்ற சொல்லை ஐம்பால், மூவிடத்துக்கும் உரிய பொதுச் சொல்லாகவே கையாண்டுள்ளார்கள். எனினும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் எழுதி வெளியிட்டுள்ள எட்டாம் வகுப்புக்குரிய தமிழ் இலக்கணம் - ''அவன் அல்ல, அவள் அல்ல, அவர் அல்ல, அது அல்ல என்று எழுதுவது பிழை என்றும், அவன் அல்லன், அவள் அல்லள், அவர் அல்லர், அது அன்று,'' என எழுதுவதே சரியென்றும் வலியுறுத்திக் கூறுகிறது. டாக்டர் மு.வ. அவர்கள் 'அல்ல' என்பது ஏற்றுக்கொள்ளத்தக்க வழக்கு என 1954-இலேயே வாதாடியுள்ளார்.

'ஏமாறு' என்ற சொல்லின் வினையெச்ச வடிவம் 'ஏமாறி' என்று தான் இருக்க வேண்டும். பரவலாக வழக்கில் இருக்கும் 'ஏமாந்தான்' என்பதில் வரும் 'ஏமாந்து' என்ற வடிவம் தவறு என்கிறார் பரந்தாமனார். டாக்டர் முத்து-கண்ணப்பனார் கருத்தும் அதுவே.[5] ஆனால் டாக்டர் மு வ. 'ஏமாந்து' என்ற வடிவைக் கையாள்கிறார். 'நாள்' என்பதன் பன்மை 'நாள்கள்' என்றுதான் இருக்க வேண்டும். 'நாட்கள்' என்பது தவறு என்பார் பரந்தாமனார் ஆனால் மறைமலையடிகள், மு.வ. போன்றோர் 'நாட்கள்' என்பதைக் கையாண்டுள்ளனர். டாக்டர் முத்து-கண்ணப்பனார், 'ஒரு சிலர்', 'ஒரு சில தமிழர்', 'பல எழுத்தாளர்' என்பன தவறான வழக்குகள்; இவை முறையே, 'சிலர்', 'தமிழர்

---

5. டாக்டர் தி முத்து - கண்ணப்பன் · நல்ல தமிழ் அறிவோம் : கங்கை புத்தக நிலையம், சென்னை, 1994.

சிலர்', 'எழுத்தாளர் பலர்' என இருக்க வேண்டும் என்பார். ஆனால் பல தமிழாசிரியர்களே முதலில் கூறப்பட்டுள்ளவாறு எழுதுகிறார்கள், பேசுகிறார்கள். இப்படி எத்தனையோ வழக்குகளை எடுத்துக் கூறலாம். தமிழ் இலக்கணம் அவ்வப்பொழுது புதுப்பிக்கப்பட்டு இருக்குமானால், தமிழ் அறிஞர்கள் 'சரியானது', 'ஏற்கத்தக்கது' எனக் கருதும் பல வழக்குகள் இலக்கணத்தில் இடம் பெற்றிருக்கும். அது நடைபெறாத காரணத்தினால், இலக்கணத்தை இருக்கிற இடத்திலேயே விட்டு விட்டு, தமிழுலகம் மதிக்கும் தமிழறிஞர்கள் பயன்படுத்தும் இலக்கியத் தமிழ் கூட, வெகு தூரம் சென்று விட்டது.

கண்ணு தற் பெருங் கடவுளும்
கழகமோ டமர்ந்து
பண்ணு றத்தெரிந் தாய்ந்தஇப்
பசுந்தமிழ் ஏனை
மண்ணி டைச்சில இலக்கண
வரம்பிலா மொழிபோல்
எண்ணி டப்படக் கிடந்ததா
எண்ணவும் படுமோ

எனப் பாடும் பரஞ்சோதியார், தமிழ், இலக்கண வரம்புடையது என்பதைச் சுட்டிக்காட்டிப் பெருமைப்படுவ தோடமையாது, மற்ற சில மொழிகட்கு இலக்கண வரம்பில்லை யென்றும் கூறித் தம் மொழிக்கு உயர்வு தேடுகிறார். அவர் பாடியது ஏறத்தாழ, 15ஆம் நூற்றாண்டில்; வருகிற ஐந்து நூற்றாண்டு காலத்திற்கு, இலக்கிய வளர்ச்சிக்கு ஈடு கொடுக்காது, இலக்கணம், தாம் விட்டுச் செல்லும் வளர்ச்சி நிலையிலேயே நின்று விடும், இலக்கண வரம்பு மங்கித் தோன்றும் கட்டம் தமிழிலும் ஏற்படும் என்று அவர் கனவிலும் கருதியிருக்க மாட்டார்.

தமிழில் 'சந்தி' என்று வரும்பொழுது குழப்பம் நாளுக்கு

நாள் அதிகமாகி வருகிறது. எளிமைப்படுத்துவதற்காகச் சந்தி பிரித்து எழுதுவதே நல்லது என்பது பலர் கருத்து. பொதுவாகப் பலர் அந்தப் பாதையிலேயே செல்கின்றனர். ஆனால் புலவர்கள் பலர் அதை ஏற்பதில்லை. இலங்கையில் **Fisheries Department** என்பதற்கு, அரசுகரும மொழித் திணைக்களம் கொடுத்துள்ள தமிழ் வ்டிவம், 'கடற்றொழிற்றிணைக்களம்' என்பதாகும். இது மிகையான இலக்கண இறுக்கம். நீண்ட நாள் நில்லாது; தேவையுமில்லை. சந்தியில் ஒற்றுமிகுதல் இன்று புதிதாகச் சிக்கல்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறது. தமிழாசிரியர்களே, 'தமிழ் படித்தவர்கள்' என்பதைத் 'தமிழ்ப் படித்தவர்கள்' எனவும். எழுத்தாளர் பலர் 'மாலை புறப்படும் வண்டி' என்பதை 'மாலைப் புறப்படும் வண்டி' என்றும், அதேபோன்று 'காலைப் புறப்படும் வண்டி' எனவும் எழுதும்பொழுது நமக்கு நம் த்மிழறிவின் மீதிருந்த நம்பிக்கையே போய் விடுகிறது.

i. தமிழில் உரைநடைக்கு ஏறத்தாழ இரண்டு நூற்றாண்டுப் பாரம்பரியம் மட்டுமே உண்டு. நன்னூலார் காலத்தில் உரைநடை இலக்கியம் இல்லை. உரையாசிரியர் உரைநடை, உரையிடை யிட்ட பாட்டுடைச் செய்யுளில் காணும் உரைநடை இவற்றை முழுமையான உரைநடை இலக்கியத்தோடு ஒப்பிட முடியாது. எனவே முழு அளவில் நன்னூலுக்குப் பின் உருவம் பெற்று, இன்று பல பரிமாணங்கள் பெற்று, விசுவரூபம் எடுத்து நிற்கும் ஒரு தமிழ் வடிவத்திற்கு அதற்கென எழுதப்பட்ட இலக்கணம் இல்லை நமது முன்னோர் எல்லாத் துறைகளிலும் பயன்படுத்திய தமிழ் செய்யுள் வடிவத்தது. அதற்கு அவர்கள் இலக்கணம் வகுத்தார்கள். இன்று நாம் பயன்படுத்துவது முழுமையாக உரைநடை. எந்தத் துறை நூலும் செய்யுள் வடிவில் எழுதப்படுவதில்லை. இருப்பினும், இந்த உரைநடை வடிவை எண்ணி, அதன் தேவைகளை மனத்திருத்தி, விரிவான இலக்கணம் இதுவரை எழுதப்பட வில்லை. நன்னூலுக்குப் பின்னர் கவிதைகளும், பல புது உருவங்களைப் பெற்றுள்ளன. உருவ்த்தை நிர்ணயிக்க இயலாத புதுக்கவிதைகளும் உருவாகியுள்ளன.

ii. தமிழ் மொழி, புலவர் உலகத்தோடு நிற்பது அன்று. எண்ணற்ற துறையினரால் பயன்படுத்தப்படுகிறது; பயன்படுத்துபவர்களால் வளர்க்கப்படுகிறது. படைப்பெழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், நிர்வாகத்தினர், விளம்பரதாரர்கள், திரைப்படத் துறையினர் எனப் பலர் பயன்படுத்தும், பலர் வளர்க்கும், பலர் மேம்படுத்தும் தமிழ் இன்று கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

iii. 'இன்றைய தமிழ்' என்பதை வரையறுப்பதே ஒரு மாபெரும் பணி. இன்றைய தமிழ் என்பதும், துருவப் பனிக்கட்டி போல உறைந்துபோன ஒன்றன்று. அது வளருவது. காலத்துக்குக் காலம் மாறுவது. அதையொட்டி இனி எழுதப்படும் இலக்கணமும் தொடர்ந்து புதுப்பிக்கப்பட வேண்டும்.

## 3. இன்றைய தமிழ் எது?

இன்றைய தமிழுக்கு இலக்கணம் தேவை என்பது விவாதத்திற்கு இடமில்லாதது. ஆனால் இதைச் செயல்படுத்துவது மலையை அசைப்பது போன்ற மாபெரும் பணி, மகத்தான பணி. மேலே குறிப்பிட்டது போல, 'இன்றைய தமிழ்' என நாம் குறிப்பிடும் தமிழ் வழக்கை வரையறுத்தால்தான், அதற்கு இலக்கணம் எழுதுவது பற்றிப் பேச முடியும். இன்றைய தமிழ் என்பது எது? எழுத்து வழக்கிருக்கிறது, பேச்சு வழக்கிருக்கிறது; பேச்சுத் தமிழ்தான் உயிருள்ள தமிழ், ஓட்டமுள்ள தமிழ், மக்களோடு உறவாடும் தமிழ் என வாதாடுவோர் பலர். அவர்களில் தமிழ்ப்புலவர்களும் உளர். இலக்கியத் தமிழ், பேச்சுத் தமிழ், இவ்விரண்டிற்கும் இடையே இடைவெளி கூடாது; பேசுவது போன்றே எழுத வேண்டும் என்று கூறுபவர்கள் எதை மனத்திற்கொண்டு கூறுகிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ளவும் இயலவில்லை பேச்சுத் தமிழ் என்றால், யார் பேசும் தமிழ்? எந்தப் பகுதியில் பேசும் தமிழ்? இதில் எதை வரையறுத்து நெறிப்படுத்துவது? எனப் பல கேள்விகள் எழுகின்றன. இந்தப் பிரச்சினை பற்றிக் கருத்துக் கூற வந்த ராஜாஜி அவர்கள், பல ஆண்டுகள் முன்னரே, நூற்றுக்கு எழுபதுக்கும் மேலானவர்கள்

தமிழ் எழுத்தே தெரியாத தற்குறிகளாக இருக்கும் இந்த நாட்டில், 'பேச்சுத் தமிழ்' என்றால், அவர்கள் பேசும் தமிழ்தான் நாம் ஏற்று, எழுதிப் பயன்படுத்த வேண்டிய மொழியா என்று கேட்டார். **ஏறத்தாழ நூற்றுக்கு நூறு பேர் கல்வி கற்ற நாடு ஜெர்மனி. ஜெர்மன் மொழியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட இரு பிரிவுகள் உண்டு. ஒன்று Hoch Deutsch; அதாவது High German. இன்னொன்று Nieder Deutsch; அதாவது Low German. முன்னது இலக்கிய வழக்கு; பின்னது பேச்சு வழக்கு.** சாதாரணமாக, தெற்கு ஜெர்மனியிலிருப்பவர்கள் தங்கட்குள் பேசிக்கொள்ளும் ஜெர்மன் மொழி, வடக்கு ஜெர்மனியிலிருப்பவர்கட்குப் புரியாது. பொது இடத்தில் ஒரு ஜெர்மானியர் இன்னொரு ஜெர்மானியரிடம் பேசும்பொழுது அவர் ஜெர்மனியின் மற்ற பகுதியில் இருந்து வருகிறார் என்று தெரிந்தவுடன் High German -இல் பேசத் தொடங்கி விடுவார்.

பொதுவாக ஒரு மொழியில் பரவலாகப் பேச்சு வழக்கில் இடம் பெற்றுவிட்ட சில மொழிப் பயன்பாடுகள் இலக்கிய வழக்கிற்கும் ஏற்றுக் கொள்ளப்படுவது இயற்கையாக நடைபெறுவது. சான்றாக, 'ஒருவன்', 'ஒருத்தி' என்பதுதான் இலக்கணம் ஏற்ற வழக்கு. இன்று 'ஒருவள்' என்ற சொல்லை வழங்குகிறார்கள், எழுதுகிறார்கள்.

'ஒருத்தி' இருக்க 'ஒருவள்' எதற்கு என்று கேட்பார் ஒரு புறம். 'ஒருவன்' இருந்தால் 'ஒருவள்' ஏன் இருக்கக் கூடாது என்பார் ஒருபுறம். இது நாம் காணும் காட்சி. நாளை 'ஒருவள்' என்ற சொல்லை இலக்கிய வழக்கில் ஏற்கலாம் என முடிவு செய்யப்படுமாயின் இது பேச்சு வழக்கை ஏற்பதற்கு ஒரு சான்று. முன்னிலையில், 'நீ', 'நீயிர்', 'நீவிர்' என்பதே இலக்கணம் ஏற்ற வழக்கு. இன்று 'நீர்', 'நீவிர்', 'நீங்கள்', 'தாங்கள்' என்ற சொற்கள் முன்னிலை ஒருமையாக, மரியாதை கருதிப் பேச்சு வழக்கில் இருக்கின்றன இவற்றை இலக்கிய வழக்கு ஏற்பது, பேச்சு வழக்கை ஏற்பதாகும்.

'முயல்தல்' எனும் செயலுக்கு 'முயல்' என்பது வேர்ச் சொல், அது வினைச் சொல். 'முயற்சி' பெயர்ச் சொல். இச்சொல்லைப் பயன்படுத்தும்பொழுது 'முயன்றான்', 'முயன்றாள்' என எழுதுவதே முறை. ஆனால் இன்று 'முயற்சித்தான்', 'முயற்சித்தாள்' என்றும் எழுதுகிறோம். இது இலக்கண வழக்கு அன்று. ஆனால் பேச்சு வழக்கிலிருந்து ஏற்கப்படக்கூடிய ஒன்று. அதே சமயத்தில், 'இகழ்தல்', 'இகழ்', 'இகழ்ச்சி' என்பதிலிருந்து நாம், 'இகழ்ந்தான்' 'இகழ்ந்தாள்' என்று தான் கூறுகிறோமே தவிர, 'இகழ்ச்சித்தான்', 'இகழ்ச்சித்தாள்' எனக் கூறுவதில்லை. பேச்சு வழக்கில் நிலை பெற்றுவிட்ட ஒன்றை ஏற்பது என்பது எளிமையாக்கத்தின் ஒரு கூறுபாடு. அது தொடர்ந்து நடைபெறும் ஒன்று. நடைபெற வேண்டிய ஒன்று. ஆனால் அது வேறு, பேசுவது போலவே எழுவது என ஒட்டுமொத்தமாகக் கூறுவது வேறு.

நாடகத்தில் ஒரு பாத்திரம் பேசுவதை, அப்படியே எழுதலாம், எழுத வேண்டும். சிறுகதை, புதினம் போன்றவற்றிலும் அதே போன்று எழுதலாம். அது தனிப்பட்டவர் பேசும் தமிழே தவிர, பொதுவான தமிழ் வழக்காகிவிடாது. எழுதப்படும் தமிழெல்லாம் எழுத்து வழக்கன்று இலக்கியத்தில் இடம் பெறும் வசனங்கள் எல்லாமே இலக்கிய வழக்கன்று. கையில் எழுதுகோலும், தாளும் இருப்பவர்கள் எப்படி வேண்டுமானாலும் எழுதலாம். அது பத்திரிகையாக வெளிவரலாம். சிறு கதையாக, புதினமாக, புதுக்கவிதையாக, கட்டுரையாகக் கூட வெளிவரலாம். ஆனால் அவையனைத்தும் இலக்கிய வழக்காகிவிடா. 'இலக்கிய வழக்கு' என நாம் கூறுவது ஒரு கலைச் சொல் (Technical Term). அது இலக்கணம் ஏற்றதாக இருக்க வேண்டும் ஆங்கிலத்தில் பேச்சு வழக்கில் பயன்படுத்தப்படும் சொற்கள் அனைத்தும் ஆக்ஸ்ஃபோர்டு அகராதியில் இடம் பெற்று விடுவதில்லை பேச்சு வழக்கில், எழுத்து வழக்கில் இடம் பெற்று, அகராதி ஏற்காத பல சொற்கள் இருக்கின்றன. அவற்றுள் பல ஏற்கப்படக்கூடும். ஆனால் அதற்கும் முறை இருக்கிறது.

பேச்சு வழக்குகளை அவ்வப்போது ஆய்ந்து, ஏற்கத்தக்கன வற்றை ஏற்று, அதன்வழி இலக்கிய வழக்கு வளம் பெற வேண்டும். எளிமை பெற வேண்டும். அதன் மூலம் மொழி, தனக்குள்ள மக்கள் தொடர்பை வலிமையுடையதாக்க வேண்டும். அதே சமயத்தில் 'இலக்கணம்' எனும் வாயிலில் நுழையும் ஒரு தேவையையும் பூர்த்தி செய்ய வேண்டும். இதற்கான ஓர் அமைப்புத் தேவை அது புலவர்கள் கூட்டம் மட்டுமன்று. பண்டிதர், படைப்பாளர், பத்திரிகைத் துறையினர், அறிவியல் தொழில்நுட்பத் துறையினர் போன்ற (பயன்படுத்தும்) பெருமக்கள் கூட்டத்தினின்று, முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு குழுவாக இருக்க வேண்டும். தமிழ் அகராதி, தமிழ் இலக்கணம் இரண்டும் தொடர்ந்து, குறிப்பிடப்பட்ட கால இடைவெளியில் புதுப்பிக்கப்பட வேண்டும். **தனிப்பட்டவர்கள் எழுதும், பேசும் தமிழ் எவ்வகைத்தாயினும், கல்வியில் இடம் பெறும் தமிழ், அரசு பயன்படுத்தும் தமிழ் ஏறத்தாழ இலக்கிய வழக்கோடு இணைந்ததாக இருக்க வேண்டும்.** இங்கும், தனிப்பட்ட முறையில் அறிஞர்கள் செய்யும் மாற்றம், அரங்கேற்றம் பெறும் வரை, விதி விலக்காக எண்ணி, ஏற்றே பயன்படுத்தப்பட வேண்டும். **தமிழைப் பயன்படுத்துவோர், எத்துறையிலிருப்பினும், அவ்வப்பொழுது அகராதியைப் பார்ப்பதும், இலக்கண நூலைப் புரட்டிச் சரிபார்ப்பதும் வழக்கமாக மாற வேண்டும். ஆங்கிலத்தில் அதைச் செய்கிறோம். தமிழைப் பொருத்தவரை என்ன எழுதினாலும் எப்படிப் பேசினாலும் ஏற்புடையதே என்பது போன்று தோற்றம் அளிக்கிறது.** இதற்குப் பொதுமக்கள் பொறுப்பு அல்லர். இந்த நிலைக்கு அரசு பொறுப்பு. தமிழ் அறிஞர்கள் பொறுப்பு, பல்கலைக்கழகங்கள் பொறுப்பு.

## 4. எழுத்து வழக்கே அடிப்படை

நாம் இப்பொழுது இலக்கணம் எழுதத் தொடங்குவதற்கு, பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு என்ற இரண்டில், எழுத்து

வழக்குத்தான் அடிப்படை என்று கொள்ள வேண்டும். அப்படிக் கொண்டாலும், இன்றைய எழுத்து வழக்கிலுள்ள வேறுபாடுகள் எண்ணிறந்தவை. எழுநூறு ஆண்டுகளாகச் சேர்ந்து, குவிந்திருக்கும், பொன், மணி, வைரம், குப்பை, கூளம் அனைத்தையும் அலசி, ஆய்ந்து, சங்க காலத்திற்கும் திரும்பாமல் தரமே கருதாத வழக்கையும் ஏற்காமல், வாழும் தமிழுக்கு இலக்கணம் காண வேண்டும். இலக்கிய வழக்கு என்றவுடனே அது பண்டிதர் தமிழ் என்பது போன்ற ஓர் எண்ணம் சிலருக்கு ஏற்படுகிறது. அல்லது, ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இலக்கிய வழக்கு எளிமைக்கு எதிரானது அன்று. எளிமையாக்கத்தை எதிர்ப்பதும் அன்று.

மறைமலையடிகளார், நாவலர் சோமசுந்தர பாரதியார் போன்றவர்கள் எழுதியதுதான் இலக்கிய வழக்கென்பதில்லை. திரு.வி.க.வின் தமிழும் இலக்கியத் தமிழ்தான் அண்ணாவின் எழுத்தும் இலக்கியத் தமிழ்தான். சிலம்புச் செல்வரும், கலைஞரும் இலக்கியத் தமிழ் வகையினரே. இவர்களெல்லாரும் புலவர் கட்காக எழுதவில்லை. பொதுமக்கட்காகத்தான் எழுதினார்கள். படிக்கத் தெரியாதவர்கள் கூட, இவர்களது எழுத்துகளை மற்றவர்கள் படிக்கப் புரிந்து கொள்கிறார்கள். இலக்கியத் தமிழ் என்பது பெரும்பான்மை இலக்கண வரம்பை ஏற்கும் தமிழ்; விதிகளை மதிக்கும் தமிழ் என்பதுதான். 'இலக்கணம்' எளிமையை எதிர்ப்பதுமன்று, கடுமையை வரவேற்பதுமன்று. அது, நொதுமல் இயல்பினது (Neutral).

இலக்கணம் நேற்றைய தமிழிலிருந்து வளரும் இன்றைய தமிழையும், இன்றைய தமிழிலிருந்து உருவாகும் நாளைய தமிழையும் இணைப்பது. தமிழில் உருவாகும் புதுமைகள் தனித் தீவாக நின்று விடாமல், தமிழ் மரபென்னும் கடலோடு ஐக்கியமாகச் செய்வது. இலக்கணம் மொழி வளர்க்கும் சாதனமன்று. அது ஒரு சமுதாயத்தின் சட்டம் போன்றது. மொழி அமைப்பைக் கட்டிக் காக்கும் சாதனம் இலக்கணப் புலவர்கள் மொழி வளர்ப்பவர்கள் அல்லர். அவர்கள் சட்ட வல்லுநர்

போன்றவர்கள். ஒரு மொழி, காப்பவர்களால் வளர்வதில்லை; அது பயன்படுத்துபவர்களால் வளர்கிறது. இலக்கணத்தை மதிப்பதோடு, மாற்றுபவர்களும், புதியன புகுத்துபவர்களும், பழையன கழிப்பவர்களும் அவர்களே. புலவர்கள் துணை, அவர்கட்கு ஊன்றுகோல், கைவிளக்கு, திசை காட்டி அவ்வளவே.

மேலே கூறப்பட்ட பரிமாணங்கள் அனைத்தையும் எண்ணிப் பார்க்கும்பொழுது, இன்றைய தமிழுக்கு இலக்கணம் என்பது ஒரு தனி நபரால் எழுதப்படக் கூடியது அன்று. தமிழ்ப் புலவர்கள் மட்டுமே எழுதிவிடக் கூடியதுமன்று. முறையாகத் தேர்ந்தெடுக்கப் பட்ட, தமிழில் ஞானமுடைய, பல்துறை வல்லுநர்கள், தமிழ்ப் புலவர்கள் ஆகியோர் சேர்ந்து, இணைந்து செய்ய வேண்டிய பணி. இன்று தொடங்கினாலும் குறைந்தது ஐந்தாண்டுகள் தேவைப்படும் பணி. இதற்கான அடிப்படையை அரசு, பல்கலைக் கழகங்களைக் கலந்து அவற்றின் துணை கொண்டு அமைக்க வேண்டும். தமிழ்ப் பல்கலைக்கழகம் இதையொத்த பணியைத் தொடங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது. அதையும் கருத்தில் கொண்டு, மேலே ஆவன செய்வது முறையாகும்.

# 8

# கிரந்த எழுத்துகள்: ஒரு சிந்தனை★

## 1. இரு வகை வழக்கு

இந்தக் கட்டுரையில் இடம் பெறும் சில யோசனைகள் கடுமையான விவாதத்திற்கும், கருத்து வேறுபாட்டுக்கும் உட்படக் கூடியவை. கண்டனத்திற்கும் ஆளாகலாம். நாம் முன்வைப்பவை, முடிந்த முடிவுகளல்ல. அவை நம்மை நோக்கும் பிரச்சினை பற்றிய, அப்பிரச்சினைக்கான தீர்வுகள் பற்றிய சில எண்ணங்கள். இந்தப் பின்னணியில், இக்கட்டுரையை அணுக வேண்டுகிறோம்.

நாம் எடுத்துக் கொண்ட பிரச்சினை கிரந்த எழுத்துகளைத் தமிழில் பயன்படுத்துவது பற்றியது. இந்தக் கட்டத்தில் ஒரு கேள்வி எழலாம்:

''பல நூற்றாண்டுகளாகக் கிரந்த எழுத்துகள் தமிழில் பயன் படுத்தப்பட்டு வருகின்றன. எனினும் அவற்றைப் பயன்படுத்தாத வர்கள் அன்றும் இருந்தார்கள். இன்றும் இருக்கிறார்கள். இதை அவரவர் விருப்பத்திற்கு விட்டுவிட வேண்டியதுதானே. இதில் விவாதம் எழுப்புவது வீண் வேலையல்லவா?'' எனக் கேட்கலாம். மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் இது சரியான அணுகுமுறை போன்றும் தோன்றலாம். ஆனால், நிலைமை அவ்வளவு சாதாரணமானது அன்று.

★ வா.செ. குழந்தைசாமி: தினமணி, 18 மார்ச் 1996

இலக்கியத் துறையில் இரு வகையான வழக்குகளும் இடம் பெறலாம். இடம் பெற்றும் வருகின்றன. ஆனால், பலவகையான அறிவுத் துறைகட்கு வரும்பொழுது, தரப்படுத்தப்பட வேண்டியது தேவையாகிறது. **மாணவர்கட்குப் பாடப்புத்தகம் எழுதும் பொழுது, ஓரிடத்தில் ஒரு பாடப் புத்தகத்தில் 'ஐன்ஸ்ட்டைன்', 'அகஸ்ட்டஸ்' என்றும், இன்னொரு பாடப்புத்தகத்தில் 'ஐன் சுட்டைன்', 'அகசுட்டசு' என்றும் எழுதுவது முறையாகாது. Fahrenheit என்பதை ஓரிடத்தில் 'பாரன்கைட்டு' என்றும், இன்னோர் இடத்தில் 'ஃபாரன்ஹைட்' என்றும் எழுதுவது முறையாகாது.** ஒரே சீரான வழக்கை நாம் மேற்கொண்டாக வேண்டும். வேளாண்மை, மருத்துவம், சட்டம், பொறியியல் போன்ற எல்லாத் துறைகளிலும் இத்தகைய பிரச்சினை எழும். இதற்குத் தீர்வு காண வேண்டும். அன்றாட வழக்கில் கூட, தமிழ் ஆட்சி மொழியாகப் பயன்படுத்தும் சூழ்நிலையில், ஒவ்வோர் அரசு அலுவலர் விருப்பத்துக்கேற்ப, ஆவணங்களில், ஆணைகளில், மொழி வழக்கு மாறுவது முறையாகாது. தனிப்பட்டவர்கள் எப்படி வேண்டுமானாலும் எழுதலாம். ஆனால், அரசின் வழக்கில் தலைமைச் செயலகத்திலிருந்து, கிராமப் பஞ்சாயத்து வரை, பேரளவிற்கு ஒருமை காணுவது தவிர்க்க இயலாதது.

## 2. நடைமுறைத் தேவைகள்

நம்மை எதிர்நோக்கும் பிரச்சினைகட்குச் சான்றாக, ஒரு பள்ளியை எடுத்துக் கொள்வோம் அதன் தலைமை ஆசிரியர் தனித் தமிழ்ப்பற்றாளர், கிரந்த எழுத்துகளைத் தவிர்த்தே எழுதுபவர் என்று கொள்வோம். அவரிடம் ஒரு தந்தை வந்து, என் மகளைப் பள்ளியில் சேர்க்க வேண்டும் பெயர் 'ஸ்ரீப்ரியா' அல்லது 'ராஜஸ்ரீ' என்றால், அவர் எப்படி எழுதுவார்? இவையெல்லாம் கற்பனைப் பெயர்கள் அல்ல. தடுக்கி விழுந்தால் இன்று நகர்ப் புறங்களில் நாம் காணும் பெயர்கள். நாட்டுப் புறத்திற்கும் பரவி வரும் பெயர்கள். தலைமையாசிரியர்

இப்பெயர்களை, நான் 'திருப்பிரியா' அல்லது 'சிரிப்பிரியா' என்றும், 'இராசசிரி' என்றும் எழுதுவேன் என்று கூற இயலுமா? பெற்றோர் ஏற்பார்களா? அதே மாதிரி, என் மகன் பெயர் 'ஜான் அகஸ்ட்டஸ்' என்று கூறும் தந்தையிடம் நான், 'சான் அகசுட்டசு' என எழுதுகிறேன் என்றால் ஏற்பாரா? அப்படித்தான் எழுதுவேன் என்று தலைமையாசிரியர் பிடிவாதம் பிடிக்க இயலுமா? தமிழில் வழக்கில் இல்லாத ஒலியாயின், மறுக்கலாம். வழக்கில் உள்ள எழுத்தை, ஒலியைப் பயன்படுத்த எப்படி மறுக்க இயலும்? தமிழ், சைவ சமயத்தினருக்கோ, வைணவ சமயத்தினருக்கோ, அல்லது வேறு எந்தக் குறிப்பிட்ட சமயப் பிரிவினருக்கோ மட்டும் சொந்தமானது அன்று. இன்று இஸ்லாமிய சமயத்தைச் சார்ந்தவர்கள் 'ஹஜ்' யாத்திரையைக் 'கச்சு' யாத்திரை என எழுத ஒப்புவார்களா? சமய நம்பிக்கையுள்ளவர்கள், ஒலியிலேயே ஒரு கடவுள் தன்மை இருப்பதாகக் கருதுகிறார்கள். அந்த அடிப்படையில்தான் மந்திரங்கட்கும், குறிப்பிட்ட ஒரு மொழியில் செய்யும் பிரார்த்தனைகட்கும் சிலரால் தனி முக்கியத்துவம் தரப்படுகிறது.

தமிழர்கள் ஒரு மொழியினர்; பல நாட்டினர்; எல்லா நாட்டிலும் சிறுபான்மையர் எனவே அவர்கள் காலமெல்லாம் தங்கள் மொழியை, கலையை, மரபுகளைக் காப்பாற்ற முயல வேண்டிய, சில சமயங்களில் போராட வேண்டிய, கட்டாயத்தில் இருப்பவர்கள். அவர்கள் வாழும் நாட்டில் பெரும்பான்மை மொழியினர் பயன்படுத்தும் இடப் பெயர்கள், தெருப் பெயர்கள், மக்கட் பெயர்கள் ஆகியவற்றை ஓரளவாவது அடையாளம் தெரியக்கூடிய அளவிற்குத் தமிழில் எழுதவும், பேசவும் கடமைப்பட்டவர்கள்.

## 3. கிரந்த வரிவடிவத்தின் பின்னணி

உலகில் எத்தனையோ மொழிகள் வழங்குகின்றன. அம்மொழியினரோடு அவர்களது இலக்கியத்தோடு தொடர்பு கொள்கிறோம். தமிழர்களும் பல நாடுகளில் சிறிய அளவிலோ,

பெரிய அளவிலோ வாழுகிறார்கள். எனவே, எல்லா மொழி களிலுமிருந்தும் ஒலிகளைக் கடன் வாங்கி, அவற்றிற்கான எழுத்துகளை உருவாக்க முடியுமா? முடிந்தாலும், அது முறையா? என்ற கேள்வி எழும். அது முடியாது, முறையுமன்று. இதில் எள்ளளவும் ஐயமில்லை. ஆனால், உலகில் பெரும்பாலான மொழிகளில் பொதுவாகப் பயன்படுத்தப்படும் சில ஒலிகள், பரவலாகப் பயன்படுத்தப்படும் சில ஒலிகள், நமது மொழியில் மட்டும் இல்லாவிட்டால் பல சிக்கல்கள் தோன்றுகின்றன. பரந்த உலகில் நாம் மட்டும் ஒரு தீவாக, சிறு தீவாக நிற்கின்ற நிலைமை உருவாகின்றது. இது கற்பனை அன்று, உண்மை. இந்த நிலைமை, வடமொழித் தொடர்பு ஏற்பட்ட காலத்திலேயே ஏற்பட்டது. அதற்கு நமது முன்னோர் ஒரு வகையில் தீர்வு கண்டுள்ளனர்.

களப்பிரர் காலந்தொட்டு, நேற்று வரை தமிழுக்கு ஏற்பட்ட கண்டங்கள் பல. அப்பொழுதெல்லாம் பல உத்திகளைக் கையாண்டு நமது மூதாதையர் காத்து வந்ததனால்தான், ஏறத்தாழ பதினான்கு நூற்றாண்டுகள் போல அரசிழந்து அடிமை நிலையிலேயே இருந்த நமது மொழி, உயிர் வாழும் மிகச் சில செம்மொழிகளில் ஒன்றாக இருக்கிறது. கிரந்த எழுத்துகள், வடமொழி எழுத்துகள் அல்ல, வட நாட்டிலிருந்து வந்தவையு மல்ல. இன்று வட மொழியைக் கற்கும் மேலை நாட்டினர், பெரும்பாலும் தேவநாகரி எழுத்துகளைக் கற்பதில்லை. பேரள வில் அவர்கள் ரோமன் எழுத்துகளில்தான் வட மொழியைக் கற்கிறார்கள். ரோமன் எழுத்துகளில் இல்லாத சில வட மொழி ஒலிகட்கு ரோமன் எழுத்துடன் சில குறியீடுகளைப் (**Diacritical Marks**) பயன்படுத்துகிறார்கள். அதேபோன்று, பல்லவர் காலத்தில் வடமொழி இலக்கியங்களை, நூல்களைக் கற்க விரும்பியபொழுது, தமிழர்கள் தேவநாகரி வரிவடிவத்தில் கற்ற தாகச் சான்றுகள் இல்லை. அன்று தமிழகத்தில் வழக்கி லிருந்த வரிவடிவத்தோடு, மேலும் தேவைப்படும் ஒலிகட்கு, உரு வத்தில் அதனுடன் இணைந்த சில எழுத்துகளை உருவாக்கி னார்கள். இந்த வகையில் அமைந்ததுதான் கிரந்த வரிவடிவம்

ஆனால், பின்னர் தமிழ் வழக்கில் நமது முன்னோர் அந்த வரிவடிவத்தில் சில எழுத்துகளை மட்டுமே தேவை கருதி ஏற்றனர். அதுவும் அவ்வளவாக இலக்கியத்தில் அன்று. பெரும்பாலும் மருத்துவம், சோதிடம், சமயம், தத்துவம் போன்ற துறைகளில்தான். இவ்வாறு வழக்கில் வந்துவிட்ட எழுத்துகள் பின்வருமாறு:

ஹ, ஸ, ஷ, ஜ, க்ஷ, ஸ்ரீ

இவற்றுள், முதல் ஐந்தும் முக்கியமானவை. 'ஸ்ரீ' ஒரு கூட்டொலி, அதை ஒரு குறியீடாகக் கூடக் கொள்ளலாம். அதைப் பயன்படுத்தி ஓர் உயிர்மெய் வரிசை இல்லை. மீதமுள்ள ஐந்து எழுத்துகளில், ஹ, ஸ ஒலிகள் தமிழில் உண்டு. ஆனால் அவற்றிற்கான தனி வரிவடிவங்கள் இல்லை. சான்றாக, காகம், தாகம், நாகம், பாகம் போன்றனவும் காசு, தூசு, பாசம், வீசு போன்றனவுமாகும். எனவே இந்த இரண்டு 'ஒலிகளின்' மீது யாருக்கும் எதிர்ப்பில்லை. அதற்கெனத் தமிழ் நெடுங்கணக்கிற்கு வெளியே புதிய வரிவடிவத்தை ஏற்பதுதான் எதிர்க்கப்படுவதாகத் தோன்றுகிறது. ஹ, ஸ என்ற ஒலிகள் ஒரு சொல்லுக்குள் வருகின்றன. ஆனால், சொல்லுக்கு முதலாக 'ஹ' ஒலியும், சொல்லின் எந்தப் பகுதியிலும், ஸ்' ஒலியும் இடம் பெறுவதில்லை. 'ஹாங்காங்' என்பதை, ஒலிமாறாது, 'க' வரிவடிவத்தைப் பயன்படுத்தி எழுதுவது இயலாது. அதேபோல, 'அகஸ்ட்டஸ்' என்பதை ஒலி மாறாது. 'ச்' வரிவடிவத்தைப் பயன்படுத்தி எழுத இயலாது. 'ஸ' கர மெய்யொலி தமிழில் வழக்கில் இல்லை.

## 4. புதிய உத்திகள்

இன்று தமிழில் புதிதாக ஒரு வழக்கு உருப் பெற்றிருக்கிறது. தமிழில் "F' ஒலி இல்லை. எனவே, அதற்கு எழுத்தும் இல்லை. ஆனால், இன்று ஆங்கிலத்திலிருந்தும், வேறு சில மொழிகளிலி ருந்தும் பெயர்களை, சித்தாந்தங்களைப் பயன்படுத்தும்பொழுது, 'F' ஒலியின் தேவை உருப்பெறுகிறது. இன்று, ஆய்த எழுத்தும், 'ப'கரமும் சேர்ந்து, 'ஃப்' எனும் கூட்டு 'F' ஒலிக்குப்

பயன்படுத்தப்படுகிறது. 'பிரான்ஸ்' என்பதை 'ஃபிரான்ஸ்' என எழுதுகிறார்கள். இந்த வழக்கு நாளுக்கு நாள் பரவலாகி வருகிறது. எனக்குக் கடிதம் எழுதும் பல தமிழ்ப் புலவர்கள் - மூத்த தமிழறிஞர்கள் - உட்படப் பலர் பயன்படுத்துகிறார்கள். கொள்கை அளவில் தனித் தமிழைப் பெரிதும் வற்புறுத்தும் சில பத்திரிகை களும் இவ்வழக்கை ஏற்றிருப்பதைப் பார்க்கிறோம். இதற்கு இதுவரை எந்த எதிர்ப்பையும் நாம் காணவில்லை. எந்த இலக்கண விதியையும் பாராது, எந்த நிறுவனத்தின் அனுமதி யையும் எதிர்பார்க்காது, இன்று தமிழ் எழுத்துலகம் ஒரு புது ஒலியை ஏற்றுக்கொண்டு விட்டதாகவே தோன்றுகிறது. இந்த 'F' ஒலிக்கு, இருக்கின்ற தமிழ் எழுத்துகளைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக ஒரு புது எழுத்தை யாராவது உருவாக்கியிருந்தால் அதற்குப் பலத்த எதிர்ப்புக் கிளம்பியிருக்கும். இந்த அளவிற்கு அது எளிதில் பரவலாக இடம் பெற்றிருக்க முடியாது. இதை ஆராயும்பொழுது, புது ஒலியை எதிர்ப்பதை விடப் புதுவரிவடிவம் தான் அதிகமாக எதிர்க்கப்படுகிறது என எண்ண வேண்டியிருக்கிறது. இல்லையென்றால், 'ஃப்' என்ற கூட் டொலிக்குப் பலத்த எதிர்ப்பு வந்திருக்கும். மொழி முதலில் வராத ஆய்த எழுத்திற்கு, அந்தப் பெருமையும் கிடைத்து விட்டது இந்தப் பின்னணியில் பார்க்கும்பொழுது, 'ஹ'வும், 'ஸ'வும் தமிழுக்குப் புதிய ஒலிகள் அல்ல. இவற்றிற்குரிய வரிவடிவம் மட்டும் நெடுங்கணக்கில் இல்லாதவை. அன்றைய நிலையில் தேவைப்படாதவை.

பொதுவாக ஆய்தம், வல்லெழுத்துகட்கு மென்மையூட்டும் தன்மையது. அஃது, எஃகு, அஃகி அகன்ற, வெஃகி வெறியசெயின், தொடிப் புழுதி கஃசா உணக்கின், போன்றன கருதத்தக்கன. எனவே 'ஹ', 'ஸ' ஆகிய ஒலிகளை

ஹ = ஃக ஸ = ஃச

என்ற கூட்டெழுத்துகள் மூலம் பெறலாம். அப்பொழுது, 'ஹாங்காங்' என்பதை 'ஃகாங்காங்' என்றும், 'இஸ்லாம்' என்பதை 'இஃச்லாம்' என்றும் எழுதுவது பொருந்தும் இந்த உத்தியை

ஏற்றுக் கொண்டால், 'ஹ', 'ஸ' ஆகிய இரண்டு கிரந்த எழுத்துகள் தவிர்க்கப்படலாம்.

தமிழில் 'க்ஷ' ஒலி இருக்கிறது. ஆட்சி, காட்சி, மாட்சி போன்றவை உதாரணங்கள்: ஆனால் 'க்ஷ' சொல்லுக்கு முதலில் வரும்பொழுது பிரச்சினை எழக்கூடும். தமிழ் வழக்கில் சொல்லுக்கு முதலில் 'க்ஷ' வரும் சொற்கள் பரவலாக வழக்கில் இல்லை. ஆங்கிலத்தில் கூட 'க்ஷ' ஒலி இல்லை. தேவைப்படும்பொழுது, 'tsh' அல்லது 'tch' என்ற மூன்று எழுத்துகளின் கூட்டு மூலம் உருவாக்கப்படுகிறது. 'க்ஷணம்' என்பதைக் 'கணம்' என்றோ, அல்லது 'இட்சணம்' என்றோ எழுதுகிறோம். திருப்தியான வழக்காகவே தோன்றுகிறது. தமிழ் இலக்கணம், 'ட'கரமும், பொதுவாக மெய்யெழுத்தும் மொழிக்கு முதலில் வருவதை ஏற்குமாயின் தவிர்க்க இயலாத தேவை எனின் 'ட்சணம்' என எழுதுவதும் கூடும். எல்லா மொழிகட்கும் பொதுவான ஒரு கூறுபாட்டை இங்கு கோடிட்டுக்காட்ட வேண்டும். ஒரு மொழியில் இல்லாத ஒலிகளைக் கூட்டெழுத்து வகையில் உருவாக்கும் வழக்கு எல்லா மொழிகட்கும் பொது. ஆங்கிலத்தில் 'ஷ' ஒலி மிகுதியாகப் பயன்படுத்தப்படுகிறது. ஆனால், அதற்குத் தனி வரிவடிவம் இல்லை. 'sh' என்ற கூட்டு; சில சமயங்களில் 'ch' (Creche), s (Pleasure) போன்றவையும் பயன்படுத்தப்படுகின்றன. 'ஸ்ரீ' என்பதற்கு ரோமன் வரிவடிவத்தில் தனிக் குறியீடு இல்லை. எனவே 'Sri' என்று எழுதுகிறோம். 'ஃச்' என்பது 'ஸ்' என ஏற்போமாயின், 'ஸ்ரீ' தேவை என நினைப்பவர்கள் 'ஃச்ரீ' என எழுதலாம். 'ஸ்ரீதேவி' ஆங்கிலத்தில் 'Sri Devi' ஆவதைப் பார்க்கிறோம்.

மேலே கூறப்பட்ட அணுகுமுறையைப் பயன்படுத்துவோமாயின், மீதமிருப்பன 'ஜ', 'ஷ' என்ற இரண்டு ஒலி எழுத்துகள்தாம். இவற்றை, நாம் திசைச் சொற்கள் என்பது போன்று, 'திசை ஒலிகள்' என்று தனித்து வைத்து, அறிவியல், தொழில் நுட்பத் துறைகளில், மேலும் தவிர்க்க முடியாத மற்ற சூழ்நிலைகளில் பயன்படுத்திக் கொள்ளலாம். வளரும் உலகில்

காலத்தின் கட்டாயத்திற்கு ஏற்பச் சில நெளிவு, சுழிவுகளை ஒரு மொழியோ, இனமோ ஏற்க வேண்டும். பெரும் புயலில் வளையாத மரம் விழுந்து விடும். காலம், இடம், குறிக்கோள், தேவை இவற்றிற்கேற்ப வளைவதிலும் வலிமை உண்டு. கற்றூணைக் கொண்டு, பல மாடிக் கட்டடம் கட்ட இயலாது. அதற்கு எஃகுக் கம்பிகளை இணைத்து உருவாக்கிய 'கான்கிரீட்' தேவை. எஃகுக்கு இறுக்கமும் உண்டு, இளகும் தன்மையும் உண்டு.

## 5. புதுவதன்று

கிரந்த எழுத்துகள் என்று வரும்பொழுது, உண்மையான பிரச்சினை, 'புதுவன' ஏற்பதன்று, பரவலாக வழக்கிலிருக்கும் ஒன்றை, பல நூற்றாண்டுகட்கு முன்பு இடம் பெற்றுவிட்ட ஒரு வழக்கை முறைப்படுத்துவது பற்றிய பிரச்சினையே யாகும். இப்பொழுதிருக்கும் 'இரட்டை வழக்கு' நிலை தவிர்க்கப்பட வேண்டிய தேவை எழுகிறது. தரப்படுத்துவதைத் தள்ளிப்போட முடியாத கட்டாயம் கண் முன் தெரிகிறது. உலகில் எந்தப் பகுதியில் எனினும், எந்த மொழியில் எனினும், கல்வியறிவு புதிதாக உருவாகும்பொழுது, வளரும் பொழுது நாம் அதைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இந்தக் கல்வியுகத்தின் தேவைகட்கு நாம் ஈடு கொடுக்க வேண்டும் தனிப்பட்ட முறையில் நான் அவ்வளவாகக் கிரந்த எழுத்துகளைப் பயன்படுத்துவதில்லை. எனது ஐந்து கவிதைத் தொகுதிகளில் ஒரு கிரந்த எழுத்துக்கூட இடம் பெறவில்லை. உரைநடை என்று வரும்பொழுது, 'ஐன்ஸ்டைன்' என்பதை 'ஐன்சுட்டைன்' என்று எழுதுவதில்லையே தவிர, மற்றபடி கிரந்த எழுத்துகளைத் தவிர்த்தே வந்திருக்கிறேன் இது என் உணர்வு பூர்வமான, இளமை தொட்டு வந்த பழக்கத்தின் அடிப்படையில் அமைந்த அணுகுமுறையே தவிர, "நாம் காணும் கல்வியுகத்தில் இது அறிவுபூர்வமான அணுகுமுறை அன்று" என்ற எண்ணமே வலுப்பெறுகிறது. இந்த மனப் போராட்டத்தைப் பகிர்ந்து கொள்வதே இக்கட்டுரையின் நோக்கம் இது பரிந்துரையன்று, நாம் தீர்வு காண வேண்டிய ஒரு பிரச்சினை பற்றிய சிந்தனை.

# 9

## செம்மொழிகளின் வரிசையில் தமிழ்★

### 1. தவறவிட்ட வாய்ப்பு

இந்திய அரசியல் அமைப்பின் எட்டாவது அட்டவணையில் இடம் பெற்றுள்ள மொழிகள் முதலில் 14, பின்னர் 15, இப்பொழுது 18. "செப்பு மொழி பதினெட்டுடையாள் எனில் சிந்தனை ஒன்றுடையாள்" என பாரதி எப்பொழுதோ சொன்னது தீர்க்க தரிசனமான வாக்கு. இந்த எண்ணிக்கை இன்னும் வளரலாம். இவற்றுள் இடம் பெற்றுள்ள வடமொழிக்குச் செம்மொழி அல்லது செவ்வியல் மொழி (Classical Language) என்ற பெருமை உண்டு. இந்திக்கு இந்த நாட்டின் ஆட்சி மொழி என்ற சிறப்பு உண்டு. இலக்கிய இலக்கண வளம் பெற்று, முழுமையும் வளர்ந்த மொழியாகத் தமிழ் இருந்த காலத்தில், உருவம் பெறாத, பெயர் தெரியாத, பல நூற்றாண்டுகட்குப் பின்னர் வடிவம் பெற்ற பல மொழிகளுள் ஒன்றாகத் தமிழ் எட்டாவது அட்டவணையில் இடம் பெற்றிருக்கிறது. இந்த நாடு விடுதலை பெற்ற பின் இடம் பெற்ற, மொழிப் பிரச்சினை பற்றிய விவாதங்களில் என்ன காரணத்தாலோ, தமிழின் தொன்மை, உலகப் பண்பாட்டிற்கு வித்திட்டவையெனக் கருதப்படும் மொழிகளான இலத்தீன், கிரேக்கம், வடமொழி, பாரசீகம், அரேபியம், சீனம் போன்ற மொழிக் குடும்பத்தில் இடம் பெறும்

★ வா.செ.குழந்தைசாமி : தினமணி, ஜூன் 1, 2 – 1995

தகுதி பெற்ற பழைமை, வளம், இந்தியப் பண்பாட்டிற்கு, சமயத்திற்கு, தத்துவத்திற்கு, கலைகட்கு அதன் பங்களிப்பு ஆகியவற்றை எடுத்துக்கூறி, தமிழ்மொழிக்கு, அதற்கு உரிய ஓர் இடத்தை, பெருமையைப் பெற்றுத்தர நாம் தவறி விட்டோம். இந்தத் திசையில் நமது முயற்சி இருந்ததாகவோ, இந்தக் கோணத்தில் நாம் நமது மொழிப் பிரச்சினையை அணுகியதாகவோ தோன்றவில்லை. ஆட்சி மொழிப் பிரச்சினை தவிர, மற்றபடி தமிழின் தொன்மை, இலக்கிய இலக்கண வளம் போன்றவை பற்றிப் பேசுவதும், எழுதுவதும் ஏதோ தமிழ்ப் புலவர்களின், தமிழ் ஆர்வலர்களின் பணி போலவும், அரசியல் தலைவர்கட்கு இதில் எந்தவிதமான கடமையும், பொறுப்பும் இல்லாதது போலவுமே அன்றைய அணுகுமுறை இருந்து விட்டது போலத் தோன்றுகிறது. ஆழ்ந்த சரித்திர அறிவும், இந்தியப் பண்பாட்டின் கூறுபாடுகளில் பல பரிமாணங்களை நுட்பமாக அறிந்திருந்த பின்னணியும், பரந்த உள்ளமும் கொண்ட நேரு போன்ற தலைவர்கள், மொழிப் பிரச்சினைகள் பற்றி விவாதித்த காலத்தில், ஆட்சி மொழித் தேர்வு ஒரு புறமிருக்க, இந்தியத் துணைக் கண்டத்தின் பண்பாட்டை, பண்டை மரபுகளை, தத்துவ அடிப்படைகளைப் பிரதிபலிக்கும் தன்மையில் வடமொழியுடன், நாடு தழுவிய அளவில் தமிழும் சிறப்பிடம் பெறச் செய்திருக்க இயலும் என்று நம்ப இடம் இருக்கிறது.

## 2. இந்தியப் பண்பாட்டின் இரு கண்கள்

இமய முதல் குமரிவரை பரவி நிற்கும்
இந்தியத்தின் வாழ்வியலில், இலக்கியத்தில்
சமயமெனும் சிந்தனையில், தத்துவத்தில்
தமிழ் மொழியின் பங்குண்டு. சாற்ற வேண்டும்.

இந்தியத்தின், பண்பாட்டின் விழிகள் என்ப
இன்தமிழும் வடமொழியும் என்னும் உண்மை

விந்தியத்தின் வடக்கேயும், கடல்கள் தாண்டி
வெளியுலகின் மன்றத்தும் விளக்க வேண்டும்.[1]

என்பான் கவிஞன் நாம் இதை அவ்வளவாகச் செய்யவில்லை. பொதுவாக இந்த நாட்டின் பண்பாடு, பண்டை மரபுகள், சமயம், தத்துவம், இலக்கிய இலக்கண வளர்ச்சி ஆகியவற்றை அறிய, ஆய்வு செய்ய வடமொழியே அடிப்படை என்ற தோற்றமே நாட்டின் எல்லைக்குள்ளும், எல்லை தாண்டி வெளியுலகிலும் நிலவுகிறது. இந்தியாவின் ஆட்சி மொழியாக ஏற்கப்பட்டிருக்கும் இந்தி மொழியின் மேம்பாடு (Development) பற்றி நமது அரசியல் அமைப்பின் 341-ஆம் பிரிவில் பேசும்பொழுது, தேவைக்கேற்ப வார்த்தைகளை முதலாவதாக வடமொழியிலிருந்தும் இரண்டாவதாக, மற்ற மொழிகளிலிருந்தும் பெறலாம் என்று கூறப்பட்டிருப்பது இந்த அணுகுமுறையையே பிரதிபலிக்கிறது. தமிழுக்கு, 'மற்ற மொழிகளுள் ஒன்று' என்ற நிலை தான். இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் நின்று, கடந்த 50 ஆண்டு காலப்பகுதியில் நமது மொழிப்பணியைத் திறந்த மனத்துடன் ஆய்வோமாயின் கீழ்க்கண்ட உண்மைகள் புலனாகும்.

★ நாம் பண்டைப் பெருமை, முந்தைப் பாரம்பரியம் என்று பேசுகிறோம். அதில் தவறு எதுவும் இல்லை. அந்தத் தகுதியும் நமக்கு உண்டு. ஆனால் அதை முறையாக எடுத்துச் சொல்லி, தேசிய அளவில், உலக அளவில் அதற்கேற்ற அங்கீகாரம் (Recognition) பெறவில்லை.

★ நாம் நமக்குச் சொந்தமானவை எவை என்று தேடி, அவற்றைச் சேகரித்து நமது மொழிக்குப் பெருமை சேர்ப்பதை விட, அந்நியங்களை அடையாளம் காண்பதிலும், அவற்றை அகற்றுவதிலும், அதற்கான வாதங்களிலும் நமது கருத்தையும், காலத்தையும் சற்று அதிகமாகவே செலவிட்டு வந்திருக்கிறோம்

1. குலோத்துங்கன் விண் சமைப்போர் வருக – நம் தமிழின் பெருமை எது – பாரதி பதிப்பகம் , 1984.

★ நேற்றைய உயர்வுக்குரிய பெருமையையும் நாம் பெற வில்லை. நாளைய உயர்வுக்கான பாதையையும் நாம் தெளிவாக வகுத்துக் கொள்ளவில்லை.

★ நாம் மாற்றார் மொழி என்றும், மாற்று மொழி என்றும் கருதிய மொழிகளின் குறைகளைப் பேசிய அளவிற்கு, நமது மொழியின் நிறையை ஆதாரங்களுடன் பேசவில்லை. நமக்குள்ளேயே பேசிக் கொண்ட அளவிற்கு, உலகுக்கு எடுத்துச் சொல்லவில்லை.

★ இதன் விளைவாக, பல்வேறு அறிஞர்கள், குறிப்பாக மேலை நாடுகளில் பலர் தமிழைச் செம்மொழியாகக் கருதி ஆய்வு செய்துள்ளனர் எனினும், உலகளாவிய நிலையில், தமிழ் இன்னும் செம்மொழிகள் வரிசையில் இடம் பெறவில்லை. வடமொழி யொடு, அரேபியம், பாரசீகம் ஆகியவையும் தமிழகப் பல்கலைக் கழகங்களின் பாடத் திட்டத்தில் செம்மொழிகளாக ஏற்கப்பட்டிருக் கின்றன; இடம் பெற்றிருக்கின்றன. ஆனால் தமிழ், நமது பல்கலைக் கழகங்களில் கூட, அந்த இடத்தைப் பெறவில்லை.

அண்ணா பல்கலைக் கழகம் 'அறிவியல் யுகத்திற்குத் தமிழ்' என்ற தலைப்பில் 1988-இல் நடத்திய கருத்தரங்கில், டாக்டர் ஜி.ஜான் சாமுவேல் படைத்த 'செம்மொழிகளின் வரிசையில் தமிழ்'[2] என்ற ஆய்வுக் கட்டுரையில் பின்வருமாறு நிலையை விளக்குகிறார்.

> **"உலகின் முதன்மை மொழிகள் என்ற தலைப்பில்கூட பிரிட்டிஷ் கலைக் களஞ்சியத்தில் தமிழுக்கு இடம் தரப்படவில்லை. இலக்கியக் கோட்பாடுகளை விரித்துப் பேசும் இக்கலைக் களஞ்சியத்தில் தமிழ் இலக்கியத்திற்குப் போதுமான இடம் இல்லை. உலகந்தழுவிய நிலையில் தயாரிக்கப்படும் பல்வேறு கலைக் களஞ்சியங்களிலும் கூடத் தமிழ் என்கின்ற தலைப்பில் போதுமான குறிப்புகள் தரப்படுவதில்லை. இந்துமத இலக்கியம் என்ற தலைப்பில்**

2. டாக்டர் ஜான் சாமுவேல் . செம்மொழிகளின் வரிசையில் தமிழ். ஆசியவியல் ஆய்வு நிறுவனம், சென்னை, 1995.

**சமஸ்கிருத இலக்கியங்களைப் பற்றி இவை விரிவாகப் பேசுகின்றனவே அன்றித் தமிழிலக்கியம் பற்றி விளக்க மாகப் பேசுவது கிடையாது. சமஸ்கிருத இலக்கியங் களுக்குப் பிற்பட்ட இந்திய இலக்கியங்கள் சுட்டப்படு கின்றனவே தவிர, தமிழிலக்கியங்கள் பற்றிப் பேசப்பட வில்லை. இவ்வாறே உலக மொழிகளின் கவிதைத் தொகுப்புகளாக வெளிவரும் பெரும்பாலான தொகுப்பு களில் தமிழ்க் கவிதை களுக்கு உரிய இடம் தரப்படவில்லை.''**

இவற்றைப் பற்றியெல்லாம் கருதாதவர்களாகவும், கவலைப்படாதவர்களாகவும் நாம் இருந்து வந்திருக்கிறோம்: இன்னும் 'இருந்து வருகிறோம். இப்பொழுதும் காலம் கடந்து விடவில்லை. தமிழ் மொழியின் இரு கூறுபாடுகளை நாம் வலியுறுத்திச் சொல்ல வேண்டும்.

**i. எப்படி, ஐரோப்பியப் பண்பாட்டை அறிய, கிரேக்கமும், இலத்தீனும் தேவையோ, அது போன்று, இந்தியத் துணைக் கண்டத்தின் பண்டை மரபுகளை, பண்பாட்டை, சமயங்களின் அடிப்படைகளை, தத்துவத்தை முழுமையாக அறிய, வடமொழியுடன் இன்றியமையாது தமிழும் தேவை. இவ்விரண்டின் துணையின்றி நமது பழமையின் முழுப் பரிமாணங்களை அறிய இயலாது.**

**ii. இலத்தீன், கிரேக்கம், வடமொழி போன்று தமிழும் உலகின் செவ்வியல் மொழிகளுள் ஒன்று.**

இந்தியப் பண்பாடு, பல இனங்களின் பங்களிப்பின் விளைவு எனினும், இன்றைய இந்தியப் பண்பாட்டில் நூற்றுக்கு 50க்கும் அதிகமாகத் திராவிடர்களுடையது என்கிறார், எஸ்.கே.சட்டர்ஜி. அவர் பக்தி, யோகம், கலைகள்,நடனம் ஆகியன திராவிடர்கள், குறிப்பாகத் 'தமிழர்கள் நல்கிய கொடைகள் என்கிறார். பக்தி மார்க்கம், நாயன்மார்கள், ஆழ்வார்கள் காலத்தில் உருப்பெற்றுப் பின்னர் இந்தியா முழுவதும் பரவியது என்பது விவாதத்திற்கு

இடமின்றி ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மை. இந்து சமயத்தில், திராவிடப் பண்பாடு முக்கியமான இடம் பெற்றிருக்கிறது வேதம் சாராத சமயக் கூறுபாடுகள் திராவிடப் பங்களிப்பே ஆகும். எனவே இந்தியாவின் பாரம்பரியத்திற்கு, பண்டை மரபுகட்கு அடிப்படையான மொழிகள் வடமொழியும், தமிழும் என்பதற்கு தேசிய அளவில், உலக அளவில் ஏற்புப் பெறுவதற்கான வழிவகைகளை எண்ண வேண்டும். இதற்கு முதற்படியாக நாம் செவ்வியல் மொழிகளின் வரிசையில், தமிழ் இடம் பெறச் செய்ய வேண்டும்

## 3. அறிஞர்கள் கருத்து

தமிழ் செவ்வியல் மொழிகள் வரிசையில் இடம் பெறும் தகுதி உடையது என்பது விவாதத்திற்கு உரிய ஒன்றல்ல. தமிழைத் தாங்களாக விரும்பிக் கற்ற மேலை நாட்டு அறிஞர் பலர் அவ்வப்பொழுது அதன் பல கூறுபாடுகளையும் எண்ணி, ஆய்ந்து, அவர்களாக அது செவ்வியல் மொழி என்று கூறிச் சென்றிருக்கின்றனர். இதற்கு விரிவான விளக்கம் தேவை யில்லையெனினும், ஒரு சிலரது கூற்றினையேனும் இங்கு எடுத்துரைப்பது பொருத்தமானதாகும். இந்தியப் பேராசிரியர், ஆய்வாளர்களில், பரிதிமாற்கலைஞர் எனத் தம்மை அழைத்துக் கொண்ட வி கோ.சூரியநாராயண சாஸ்திரியார் 1987-இல் தமிழைச் செம்மொழி என்று குறிப்பிட்டு, "வடமொழி, இலத்தீன்,கிரீக் போலத் தமிழ் மொழியும் உயர் தனிச் செம்மொழி" எனக் கூறுகிறார். இதற்கான அடிப்படைகளையும் விளக்குகிறார். தேவநேயப் பாவாணர், இலக்குவனார் போன்றவர்கள் தமிழின் செம்மொழித் தரம் பற்றி விரிவாகப் பேசுகின்றனர். பேராசிரியர் ஏ.கே ராமானுஜம், "இந்தியாவின் இரண்டு செம்மொழிகளில் தமிழ் மட்டுமே செம்மொழித் தரம் சேர் பழைமையோடு துண்டிக்கப்படாத தொடர்புடையது" என்கிறார்.

மேலை நாட்டுப் பாதிரிமார்கள் பலர் தமிழைச் செவ்வியல் மொழி என்று கூறியிருக்கின்றனர். டாக்டர் வின்ஸ்லோ

(Dr.Winslow) தமிழ் மொழியின் செவ்வியல் தன்மையைப் புகழ்ந்து, அதன் பல கூறுபாடுகளை விதந்து கூறுகிறார். அண்மைக் காலத்தில் பேராசிரியர் கமில் சுவலபில்:

> **''நாம் எப்படி நமது தேசிய இலக்கியங்களின் சில பகுதிகளைச் செம்மொழித் தரம் வாய்ந்ததாகக் கருதுகிறோமோ, அதே பொருளில் சங்க இலக்கியம், தமிழர்களாலும், வரலாற்று ஆசிரியர்களாலும், திறனாய் வாளர்களாலும் அறிவு ஜீவிகளான வாசகர்களாலும் செம்மொழி எனக் கருதப்படுகிறது.''**

எனக் கூறுகிறார். அவரே, இன்னோரிடத்தில், ''சங்கத் தொகுதி யில் இடம் பெறும் 26350 வரிகள் உலகின் ஒப்புயர்வற்ற செவ்வியல் மொழி தமிழ் என்பதை நிலைநிறுத்தப் போதுமான சான்று'' என்கிறார்.

### 4. சில முயற்சிகள்

எந்த அடிப்படையில் நோக்கினும், எந்த அளவுகோலை வைத்து மதிப்பிடினும், தமிழ் செம்மொழி எனும் தகுதி பெறும் தரமுடையது என்பதை உலகு ஒப்பும். இருப்பினும், இன்று தேசிய அளவிலோ, உலக அளவிலோ செம்மொழிகள் வரிசையில் தமிழ் இடம் பெறவில்லை. இதற்கான முயற்சிகள் முன்பு நடந்தன.

★ சென்னை பச்சையப்பன் கல்லூரியில் 1918, மார்ச் மாதம் நடந்த சைவ சித்தாந்த மகா சமாஜ மாநாட்டில், தமிழ்ப் புலவர் களின் கூட்டத்தில் சென்னைப் பல்கலைக் கழகம் தமிழை ஒரு செம் மொழியாக அறிவிக்க வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேறியது.

★ கரந்தைத் தமிழ்ச் சங்கம் 1919-இல், 1920-இல் தனது ஆண்டு விழாவில் பாரசீகம், அரேபியம், வடமொழி போன்று தமிழையும் செம்மொழி எனச் சென்னைப் பல்கலைக் கழகம் அறிவிக்க வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றியது.

இந்தக் காலப் பகுதியில், அன்றைய சென்னை மாகாணத்தில் சென்னைப் பல்கலைக் கழகம் ஒன்று தான் இருந்தது. எனவே

தீர்மானங்களில் சென்னைப் பல்கலைக் கழகம் மட்டும் குறிப்பிடப் படுகிறது. இதே மாதிரி தீர்மானத்தை மற்ற சில நிறுவனங்களும் நிறைவேற்றின. பின்னர் இம்முயற்சி தொடரவில்லையோ என எண்ணத் தோன்றுகிறது. நமது அரசியலமைப்பு உருவாக்கப்பட்ட பொழுது, இத்தகுதி பற்றிய கோரிக்கையை எழுப்பியிருக்கலாம். அரசியல் அமைப்பில் செம்மொழி பற்றிக் குறிப்பிடப்படவில்லை என்பதை நாம் அறியாமலில்லை. வடமொழிக்கிணையான ஒரு தகுதி தேசிய அளவில் தமிழுக்கு அளிக்கப்பட வேண்டும் என்பதை நாம் வலியுறுத்தி இருந்தால் அதன் நியாயம் ஏற்கப்பட்டிருக்கும். அண்ணா பல்கலைக் கழகத்தில் நான் துணை வேந்தராக இருந்த பொழுது, 1988, ஆகஸ்ட் மாதத்தில் 'அறிவியல் யுகத்திற்குத் தமிழ்' என்ற தலைப்பில் இரண்டு நாள் கருத்தரங்கு நடத்தினோம். நவீன அறிவுத் துறைகள் அனைத்தும் தமிழில் இடம் பெற எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி, செய்ய வேண்டிய முயற்சிகள் பற்றிப் பல அமர்வுகளில் விவாதித்தோம். தமிழகப் பல்கலைக் கழகங்களின் துணை வேந்தர்கள் பலர் கருத்தரங்கில் கலந்து கொண்டனர். தமிழகப் புலவர் குழுவின் உறுப்பினர் சிலர் பங்கேற்றனர். முதல் அமர்வின் தலைப்பே 'செம்மொழிகளின் வரிசையில் தமிழ்' என்பது தான். கருத்தரங்கின் பரிந்துரைகள் அரசுக்கும் அனுப்பப்பட்டன.

## 5. நன்மைகள் பல

எந்தக் கோணத்தில் பார்த்தாலும் தமிழ் மொழி பெற வேண்டிய இத்தகுதி நமக்கு முக்கியமானது. இத்தகுதி மூலம் தமிழ் எதிர்காலத்திலும் பெறத்தக்க நன்மைகள், உயர்வுகள் பல. எதிர்கால உயர்வுக்கும், பெருமைக்கும் எல்லாரும் முயலலாம். கொள்கை அளவில் எல்லாரும் பெறலாம். ஆனால் பண்டைப் பெருமை என்பது சில இனங்கட்கு மட்டுமே உரிய சொத்து. இன்று ஓர் இனமோ, நாடோ, நினைத்தால் சம்பாதிக்கக் கூடியதன்று. ஒரு மகத்தான செம்மொழிக்குச் சொந்தக்காரர் நாம். உலக அளவில் அதன் ஏற்பு, தமிழர்க்கு மட்டுமின்றி, இந்தியர் அனைவர்க்கும்

பெருமை சேர்ப்பது. இதைப் பற்றி ஏனோ நாம் ஆழ்ந்து சிந்திக்க வில்லை. இன்றும் சிந்திப்பதாகத் தெரியவில்லை.

★ உலக அளவில் செம்மொழி என்ற தகுதி பெற்ற மொழிகள் விரல் விட்டு எண்ணக் கூடியன. அவ்வரிசையில் தமிழ் இடம் பெறும்பொழுது, அதன் **வளம்**, **தொன்மை**, **தனித்தன்மை**, **தலைமை** ஆகியன உலக ஒப்புதல் பெறுகிறது.

★ மைய அரசு வடமொழிக் கல்விக்கும், ஆய்வுக்கும் ஆண்டு தோறும் கணிசமான தொகை ஒதுக்குகிறது. 1993-94 வரவு-செலவு அறிக்கையில் வடமொழிக் கல்வி (Sanskrit Education) என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை ரூ.9.24 கோடி. இது தவிர, பல மாநில அரசுகள் நிதி ஒதுக்குகின்றன. வடமொழி இந்நாட்டின் பண்பாட்டு மொழி; செம்மொழி என்ற அடிப்படையில் தான் இந்த உதவி அளிக்கப்படுகிறது. இந்தியாவின் பண்பாட்டு மொழிகளுள், செம்மொழிகளுள் தமிழும் ஒன்று என்பது ஏற்கப்படும் பொழுது, தமிழ்க் கல்விக்கும், ஆய்விற்கும் மைய அரசின் உதவி இயல்பாகவே கிடைக்கும்

★ பூனாவில் உள்ள தெக்கண முது நிலைக் கல்வி, ஆய்வுக் கல்லூரி (Deccan College of Postgraduation and Research) தயாரிக்கும் 60 தொகுதிகளைக் கொண்ட வடமொழி-ஆங்கில அகர முதலிக்கு மைய அரசு நிதியுதவி செய்கிறது. இப்பணி 1956 முதல் நடந்து வருகிறது

★ செம்மொழிகள் என்ற காரணத்தால் அரேபியம், பாரசீகம் ஆகிய மொழிகளைக் கற்கின்ற, அவற்றில் ஆராய்ச்சி செய்கின்ற மாணவர்கட்கு, புலமைத் தொகையாக உதவ 1993-94-இல் ரூ.15 இலட்சம் மைய அரசின வரவு-செலவு அறிக்கையில் ஒதுக்கப்பட்டுள்ளது.

★ மேலை நாடுகளில் உள்ள இந்திய ஆய்வுத் துறைகள் (Department of Indian Studies)வடமொழிக்கிணையான இடத்தைத் தமிழுக்கும் வழங்குவதற்கு இது துணை செய்யும்.

## 6. செய்ய வேண்டுவன

எவ்வழி நோக்கினும், செம்மொழி எனும் தகுதி பெறும் தரம் பெற்ற தமிழ், செம்மொழிகளின் வரிசையில் இடம் பெற என்ன செய்ய வேண்டும் என்ற கேள்வி எழுவது இயல்பு. இது விரிவாக ஆராயப்பட வேண்டிய, ஆழமாக எண்ணப்பட வேண்டிய ஒன்று. நமது பல்கலைக் கழகங்களில் வடமொழி, அரேபியம், பாரசீகம் ஆகியன செம்மொழிகள் எனப் பாடத் திட்டத்தில் இடம் பெற்றிருக்கின்றன். முதலாவதாக இவ்வரிசையில் தமிழையும் சேர்க்க வேண்டும். இம் முயற்சியை இலங்கை, மலேசியா போன்ற நாடுகளிலும் தொடரலாம். *தமிழ் மொழியின் செவ்வியல் காலம்* பற்றிய கேள்வி எழக் கூடும். கி.பி.1000க்கும் முற்பட்ட பழந்தமிழ் செவ்வியல் மொழி எனக் கொள்ளலாம் என்பது பேராசிரியர் கமில் சுவலபில் கருத்து. தேவையானால் இதைச் சற்று ஆய்ந்து முடிவு செய்யலாம் நமது நாட்டில் உள்ள மையப் பல்கலைக் கழகங்களின், மாநிலப் பல்கலைக் கழகங்களின் தமிழ்த் துறையின் செம்மொழிப் பட்டியலில் தமிழைச் சேர்க்க முயற்சி செய்யலாம். மேலும் பல்கலைக் கழக மானியக் குழுவின், மைய அரசினது கல்வித் துறையின், ஏற்பை நாடலாம். மேலை நாடுகளில், ஜப்பான் போன்ற ஆசிய நாடுகளில் தமிழ் அறிஞர்கள் இருக்கிறார்கள். இவர்களின் துணை கொண்டு வெளி நாடுகளின் பல்கலைக் கழகங்களிலுள்ள இந்திய ஆய்வுத் துறைகள் அனைத்திலும், செம்மொழி எனும் தரத்துடன் தமிழ் இடம் பெற முயற்சி மேற்கொள்ளலாம். உலகத் தமிழாய்வுக் கழகத்தின் (International Association for Tamil Research) மூலமாக வும், அயலகத் தமிழர் மூலமாகவும் முயல்வதும் பொருந்தும்.

தமிழின் செம்மொழித் தரம் ஐயத்திற்கிடமில்லாதது; அறிஞர் பலர் ஒப்பியது. நமது ஆசை முறையானது, கோரிக்கை நியாயமானது "புலன்களோடு, கரணமும், ஆவியும் போந்து நின்ற விருப்புடனும்", உறுதியுடனும் முயல்வோமாயின், நாம் இப்பணியை முடிப்போம் என்பதில் ஐயமில்லை.

# 10

# உலகத் தமிழ் ஆய்வுக் கழகம்: நான்காவது தமிழ்ச் சங்கம்*

## 1. தோற்றத்தின் பின்னணி

உலகத் தமிழ் ஆய்வுக் கழகம் (International Association for Tamil Research) இன்று பலரும் அறிந்த நிறுவனம். அண்மையில் தஞ்சையில் அதன் சார்பில் நடந்த 'எட்டாவது உலகத் தமிழ் மாநாடு-கருத்தரங்கு' நமது நினைவில் பசுமையாக உள்ளது. இவ்வாய்வுக் கழகம் 1964-இல் தொடங்கப்பட்டது முதல் இதுவரை எட்டு மாநாடுகளை நடத்தியிருக்கிறது என்பதும், அவற்றுள் மூன்று தமிழகத்தில் நடந்தன என்பதும் நாம் அறிந்தவை. எனினும், இக்கழகம் தொடங்கப்பட்டதன் பின்னணி, அதன் நோக்கங்கள் ஆகியன பெரும்பாலோர்க்குத் தெரியாது என்றே கருத வேண்டியிருக்கிறது. அது உருவம் பெற்றபொழுது இருந்த சூழல், அதன் இன்றைய நிலை, அதன் எதிர்காலம் ஆகியன பற்றிச் சிந்திப்பது இன்று தேவை என்று கருதுகிறோம்.

கீழை நாட்டியல் வல்லுநர்களின் 26-ஆவது உலகப் பேராயம் (XXVI International Congress of Orientalists) தில்லியில் 1964இல் கூடியது. அதில் பங்கேற்க வந்திருந்த உலக அறிஞர்கள் சிலர் ஒன்றுகூடி, உலகத் தமிழ் ஆய்வுக் கழகம் (IATR) என்ற

* வா.செ. குழந்தைசாமி : தினமணி, ஜூலை 25, 26 – 1995

பெயரில் ஒரு நிறுவனத்தை உருவாக்குவதென முடிவு செய்தார்கள். அவ்வாறே உருவாக்கினார்கள். அதற்கான காரணங்களைச் சுருக்கமாகவேனும் விளக்குவது, இக்கட்டுரையில் நாம் பரிந்துரைக்கும் திட்டத்திற்குப் பாயிரமாக அமையும்.

இன்று சென்னை, தரமணியில் செயல்பட்டுவரும் 'உலகத் தமிழ் ஆய்வு நிறுவனம்' (International Institute of Tamil Studies) உலகத் தமிழ் ஆய்வுக் கழகத்தின் முயற்சியால் நிறுவப்பட்டதாகும். அதை அமைப்பதற்காகத் தயாரிக்கப்பட்ட அறிக்கையின் முன்னுரையில், உலகத் தமிழ் ஆய்வுக் கழகம் நிறுவப்பட்டதற்கான காரணம் கூறப்பட்டுள்ளது. அதன் சாரம் பின்வருமாறு:

இந்தியாவின் இரண்டு பெரிய பண்பாடுகளை மொழி அளவில் பிரதிபலிப்பவை வடமொழி, தமிழ் ஆகிய இரு செம்மொழிகள் ஆகும். அவற்றுள் இந்தோ-ஆரியன் அல்லது சமஸ்கிருதப் பண்பாடு, கடந்த இருநூறு ஆண்டுகளில், மேலை நாடுகள், கீழை நாடுகள் ஆகியவற்றின் இந்திய இயல் அறிஞர்களின் (Indologists), மொழியியல் அறிஞர்களின் (Philologists) மிகுந்த ஈடுபாடு காரணமாக மிக விரிவாக ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் இன்னொரு செம்மொழியாகிய தமிழின் பங்கும், இந்தியாவின் மகத்தான பண்பாட்டில் தமிழர்கள் பண்பாட்டின் தாக்கமும், பங்களிப்பும் அவ்வளவாக விஞ்ஞான ரீதியில் ஆய்வு செய்யப்படவில்லை; ஆய்வாளர்கள் பார்வைக்குக் கொண்டு வரப்படவும் இல்லை. அதனால் உலக அறிஞர்கள், இந்திய இயலின் (Indology) ஒரு பகுதியாகிய தமிழியல் (Tamilology) அல்லது திராவிட இயல் (Dravidology) பற்றி, அவ்வளவாக ஆய்வு மேற்கொள்ளவும் இல்லை. அதில் அக்கறை காட்டவும் இல்லை. வடமொழி தொடர்பான ஆய்வைப் பொருத்தவரை, அது பெரும்பாலும் பண்டைக் காலத்தைப் பற்றியதாகவே இருந்து வந்திருக்கிறது. வடமொழி போலன்றி, தமிழ் நிகழ் காலமும், வளர்கின்ற எதிர்காலமும் கொண்ட மொழியாதலின், தமிழ் ஆய்வு, பண்டைக் காலம், இடைக் காலம், தற்காலம் என மூன்று பகுதிகளையும் உள்ளடக்கியதாக அமைய வேண்டியதாகிறது.

ஒரு புறத்தில் புராதனத் தமிழர்கள் அல்லது புராதனத் திராவிடர்கள் என்ற அடிப்படையில், உலகின் தொன்மையான நாகரிகங்களான எகிப்து, சுமேரியா, சிந்துவெளி நாகரிகங்கள் செழிப்புற்றும், தங்களுக்குள் தொடர்பு கொண்டும் வாழ்ந்த காலப் பகுதியாகிய கி.மு.3000 ஆண்டு முதல் தமிழர்கள் தங்கள் நாகரிகத்தின் தொடக்கத்தை அடையாளம் காணக்கூடும். அதே சமயத்தில் மற்றொரு புறத்தில், தமிழ் இடையறாத தொடர்புடைய வழக்கும், இன்று வழக்கிலிருக்கும் உலக மொழிகளில், அடிப்படையான மொழி அமைப்பில், இன்று வரை மாற்றமில்லாத கட்டுக்கோப்புடன் எஞ்சி நிற்கும் ஒரே மொழி என்ற தகுதியுமுடையதாகும். கடல் பயணத்தில், கப்பல் கட்டுவதில் திறன் பெற்றிருந்த தமிழர்கள் தங்கள் பண்பாட்டை தூர தேசங்களிலும் பரப்பினார்கள். அவர்கள் சந்ததியர் இன்று அங்கு இல்லாவிட்டாலும், அவர்கள் விட்டுவந்த பண்பாட்டின் அடையாளங்களை, பர்மா, இலங்கை,தென் கிழக்கு ஆசியா, தூரக் கிழக்கு நாடுகள், மற்றும் ஆப்பிரிக்கா, ஐரோப்பா ஆகிய கண்டங்களிலும் காணலாம். அண்மைக் காலங்களில் தமிழியல் துறை பற்றிய ஆய்வில் ஈடுபாடு சற்று அதிகமாகியிருக்கிறது. ஆனால் தமிழகத்தில் நடைபெறும் ஆய்வுகள் பழைய போக்கிலேயே அமைந்தவையாகவும், ஒருங்கிணைப்பு இல்லாதவையாகவும், ஆய்வுத் தேவைகளைப் பூர்த்தி செய்யப் போதுமான அளவில் அமையாதவையாகவும் உள்ளன. கடந்த ஆண்டுகளில், மேலை நாடுகளான ஃப்ரான்சில், ஃபிலியோஜா (Filliozat),பிரிட்டனில், பர்ரோ (Burrow), அமெரிக்காவில், எமனோ (Emeneau), நெதர்லாந்தில் கூப்பர் (Kuiper), ஜெக்கோஸ்லோ விக்கியாவில், கமில் சுவலபில் (Kamil Zvelebill) போன்றோர் பொதுவாகத் திராவிட இயலில், குறிப்பாக மொழியியலில் கணிசமான பங்களிப்பைச் செய்திருக்கிறார்கள் இவர்களது ஆய்வுகள் சிறப்பானவை எனினும், அவை தனியார் முயற்சி யாகவும், சிறு சிறு பகுதிகளானதாகவும் உள்ளன. தமிழியல் பற்றி, முழுமையான, ஒருங்கிணைக்கப்பட்ட, விரிவானதும், தீவிர அக்கறையுடையதுமான, ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை

என்ற கருத்து வலுப்பெற்று வருகிறது. இந்த உணர்வு தான் உலக அளவில் ஓர் ஆய்வுக் கழகத்தை உருவாக்க வேண்டும் என்ற உந்துதலுக்குக் காரணமாக இருந்தது. எனவே 1964இல் கீழை நாடுகள் பற்றிய ஆய்வினரின் 26ஆவது பேராயக் கூட்டத்தில் பங்கேற்க தில்லி வந்திருந்த, உலகப் புகழ்பெற்ற சில அறிஞர்கள், உலகின் மகத்தான பண்பாடுகளின் வரிசையில் தமிழ்ப்பண்பாடு பெற வேண்டிய சிறப்புமிக்க இடத்தை அது பெறுவதற்குத் துணை செய்யும் நிறுவனமாக உலகத் தமிழ் ஆய்வுக் கழகத்தை (IATR) உருவாக்கினர். பின்னர் அது *'கீழை நாட்டியல் அறிஞர்கள் சர்வதேச ஒன்றியத்தின்'*, (International Union of Orientalists) ஓர் உறுப்பாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

## 2. இன்றைய நிலை

இவ்வளவு உயரிய குறிக்கோளுடன், ஆசைகளுடன் 30 ஆண்டுகட்கு முன் உருவாக்கப்பட்ட இந்த அமைப்பின் இன்றைய நிலையை அறிவதும், இதன் எதிர்காலம் பற்றிச் சிந்திப்பதும் முக்கியமானது, தேவையானது. உலகத் தமிழாய்வுக் கழகத்தின் அமைப்புப்படி, ஒரு நாட்டிற்கு ஒன்று என ஒவ்வொரு நாட்டிலும் அமைக்கப்பட்ட தேசிய அவைகள் (National Units) தாம் அதன் உறுப்பினர்கள். இக்கழகத்தின் குறிக்கோள்களில் ஈடுபாடுடைய நிறுவனங்கள் அந்தந்த நாட்டுத் தேசிய அவையில் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படலாம். தனி நபர் உறுப்பினராக இயலாது. அதன் செயல்பாட்டிற்கு மூன்று அங்கங்கள் உண்டு:

i. பேரவை (General Body)

ii. மையக் குழு (Central Council)

iii. செயற்குழு (Executive Council)

பேரவை, தேசிய அவைகளை உறுப்பினர்களாகக் கொண்டது. மையக் குழுவின் அமைப்பு பின்வருமாறு:

i. தலைவர்

ii. துணைத் தலைவர்கள் (மூவர்: அவர்களில் ஒருவர் இந்தியாவில் வாழ்பவராக இருக்க வேண்டும்)

iii. செயலர்கள் (மூவர் : ஒருவர் இந்தியாவில் இருப்பவர்)

iv. பொருளாளர் (இருவர் : ஒருவர் இந்தியாவில் இருப்ப்வர்)

v. ஒருங்கிணைப்பாளர் (இந்தியாவில் இருப்பவர்)

மையக் குழு உறுப்பினர்களில் யார் யார் இந்தியாவில் வாழ்கிறார்களோ அவர்கள் அனைவரும் செயற்குழு உறுப்பினர்களே. அவர்கள் இயன்றவரை அடிக்கடி கூடிக் கழகத்தின் பொதுவான நிர்வாகத்தை நடத்த வேண்டும். கழகத்தின் தலைமைப் பீடம் பாரிசில் இருந்தாலும்,செயற்குழுவின் தலைமைச் செயலகம் இந்தியாவில் தான் இருக்கும்.

கழக அமைப்புப்படி யார் வேண்டுமானாலும் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படலாம் எனினும், இதுவரை எழுதப்படாத் ஒரு மரபாக தமிழரல்லாத ஒரு தமிழறிஞரே அப்பொறுப்பில் இருந்திருக்கின்றார். இது ஆரோக்கியமான மரபேயாகும். இன்று இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், மொரீஷியஸ் ஆகிய நாடுகளில் தேசிய அவைகள் இருக்கின்றன.

இதன் சார்பில் இதுவரை எட்டு மாநாடுகள் நடந்திருக்கின்றன. இந்த மாநாடுகள் உலகத் தமிழ் ஆய்வுக் கழகத்தின் சார்பில் நடத்தப்படுவன என அறிவிக்க அனுமதிக்கும் உரிமையைத் தவிர, மாநாட்டு நடவடிக்கைகளில் முழுப் பொறுப்பையும் மாநாடு நடக்கும் நாட்டின் ஒரு பல்கலைக் கழகம், பெரும்பாலும் அரசின் உதவியுடனும், தானாகவே சில சமயங்களிலும் மேற்கொண்டது. பெரும்பாலான மாநாடுகள் அந்தந்த நாட்டு அரசின் ஆர்வத்தால் தான் நடைபெற்றன.

கோலாலம்பூரில் நடந்த முதல் மாநாடு முழுமையாகக் கருத்தரங்க்மாகவே நடந்தது. **அடுத்துச் சென்னையில் நடந்த மாநாட்டை முதலமைச்சராக இருந்த அண்ணா அவர்கள் 'அகம்',**

'புறம்' என இரண்டாகப் பிரித்தார்கள். தமிழகத்தில் நடந்த மூன்று மாநாடுகளும், கோலாலம்பூரில் இரண்டாவது முறை நடந்த மாநாடும் மொரீஷியசில் நடந்த மாநாடும் அகம், புறம் என்ற வார்ப்பில் தான் அமைந்தன. 'அகம்', அறிஞர்களின் ஆய்வுக்கும், 'புறம்', பொதுமக்களின் ஈடுபாட்டுக்கும் ஏற்ப அமைந்தன. **தமிழர்கள் சிறுபான்மையாக உள்ள நாடுகளில் 'புறம்' ஓரளவு ஓர் எழுச்சியை, விழிப்பை, தமிழ் உணர்வை உருவாக்கும் சாதனமாகவும் பயன்பட்டது. இது ஒரு சிறந்த ஏற்பாடே யாகும்.** இம்மாநாடுகளின் நிறை குறைகள் எப்படியிருப்பினும், சில தரமான ஆய்வுக் கட்டுரைகள் படைக்கப்பட்டிருக்கின்றன. தமிழரல்லாத தமிழ் அறிஞர்கள் பலர் பங்கேற்றிருக்கின்றனர். தமிழுலகத்திற்கு அடையாளம் தெரிந்த நிறுவனமாக இக் கழகம் உருப்பெற்றிருக்கிறது.

உலகத் தமிழ் ஆய்வுக் கழகம் இந்த மாநாடுக்ள் மூலம் தான் உயிர் வாழ்கிறது. **உலகத் தமிழ் ஆய்வுக் கழகம், அதை நிறுவியவர்களின் கனவை நிறைவேற்றும் வகையில் வளரவில்லை;** செயல்படவில்லை. முதலாவதாக அதற்கென நிதி இல்லை. எந்த நாட்டிலும் அதற்கென அலுவலகம் இல்லை முழு நேர அலுவலர்கள் யாரும் இல்லை. **சுருக்கமாகக் கூறுவதானால், இதை உருவாக்கியவர்கள் அமைத்த அடிப்படை இருக்கிறது எனினும், அவர்கள் கண்ட கனவின்படி கோட்டை கட்டப்பட வில்லை. இன்றைய சூழ்நிலையில் அது கட்டப்படுவதற்கான முயற்சியோ, ஏற்பாடோ இல்லை. அதே சமயத்தில், இதற்கு இணையான, உலகறிந்த, உலக அளவில் பல 'தமிழறிஞர்கள் பங்கு பெறும் களம் அமைத்துத் தந்த வேறொரு நிறுவனமும் தமிழுக்கு இல்லை.** எனவே தமிழக அரசியல் தலைவர்கள், அறிஞர்கள் இந்நிறுவனத்தைப் புதுப்பிப்பது பற்றி, அது நிறுவப்பட்டதன் நோக்கம் நிறைவேறும் வகையில் அதை உருவாக்குவது பற்றி ஆழமாகவும், தீவிரமாகவும் சிந்திக்க வேண்டும். தமிழ் மொழியின் தேவைகளையும், இன்றைய சூழ்நிலைகளையும், தமிழக அரசு அவ்வப்போது உலகத் தமிழ்ச்

சங்கம் அமைப்பது பற்றிச் செய்த அறிவிப்புகளையும் ஒருங்கிணைத்துப் பார்க்கும்பொழுது, **உலகத் தமிழ் ஆய்வுக் கழகம், நான்காவது தமிழ்ச் சங்கமாக, உலகத் தமிழ்ச் சங்கமாக உருப்பெறலாமா என்ற சிந்தனை எழுகிறது.**

## 3. சங்கம்: தமிழர் நடைமுறை

தமிழ் இனத்திற்குச் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த பாரம்பரியம் – நீண்ட பாரம்பரியம்-உண்டு. பண்டை மொழிகளில் கிறித்துவின் காலத்திற்கு முன்பே தரத்தை நிர்ணயிக்கவும், காக்கவும் மொழியை வளர்க்கவும், வல்லுநர்களை அடையாளம் கண்டு மதிக்கவும் ஓர் அமைப்பை உருவாக்கி, அதற்கு உறுப்பினர்களை நிர்ணயித்து, விதிகளை வகுத்துச் செயல் படுத்தியமைக்கு, இன்னொரு சான்று மனித வரலாற்றில் காண இயலவில்லை.

கடைச் சங்க காலத்திலிருந்து நீண்ட இடைவெளிக்குப் பின் 1901இல் பாண்டித்துரைத் தேவர் நான்காவது தமிழ்ச் சங்கத்தை அமைத்தார். **மதுரையில் நடந்த 'ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு - கருத்தரங்கிற்குப்' பின் 1981-இல் உலகத் தமிழ்ச் சங்கம் நிறுவனப்படுமென, தமிழக அரசின் சார்பில் அன்றைய முதல்வரால் அறிவிக்கப்பட்டது. பின்னர் 1986இல் மதுரையில் உலகத் தமிழ்ச் சங்கம் நிறுவப்பட்டு, அதற்கென நிலமும் ஒதுக்கப்பட்டது. தனி அலுவலரும் அமர்த்தப்பட்டார்.** இஃதன்றி, தனிப்பட்டவர்களால் மலேசியாவிலும், இந்தியாவிலும் உலகத் தமிழர் மாமன்றம், பன்னாட்டுத் தமிழ் உறவு மன்றம், ஞாலத் தமிழ்ப் பண்பாட்டுக் கழகம், உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், உலகத் தமிழ் இளைஞர் பேரவை, உலகத் தமிழர் பேரவை எனப் பல பெயர்களில் நிறுவனங்கள் தொடங்கப் பட்டுள்ளன. அவற்றுள் சிலவற்றின் சார்பில் இரண்டொரு மாநாடுகளும் நடந்துள்ளன.

இப்படிப் பல நிறுவனங்கள் அவ்வப்பொழுது, ஆங்காங்கு தோன்றுவது, நமது ஆற்றலை, ஆர்வத்தை, உழைப்பைச் சிதற

விடுவதாகும். இவை எதுவும் வேர் விட்டு, விழுதிறக்கி வளரவில்லை. வளரக்கூடும் என்றும் தோன்றவில்லை. நம் அனைவரின் உண்மையான நோக்கம் தமிழ் வளர்ச்சியேயாயின், வலிமை வாய்ந்த, வளம் மிக்க, முறையான அமைப்புடைய, உலகு தழுவிய நிறுவனம் ஒன்றை உருவாக்குவது பற்றி எண்ண வேண்டும்; செயல்பட வேண்டும்.

## 4. உலகு தழுவிய நிறுவனம்

முந்தைய கடைச் சங்கம் முடியாட்சியின் கீழ் அமைந்தது. இன்று, நாம் வாழும் குடியாட்சி மரபுக்கேற்ப ஒரு நிறுவனம் அமைய வேண்டும். தமிழ் கூறும் நல்லுலகம் 'வடவேங்கடம் தென்குமரி' என்ற எல்லைக்குள் இருந்த சூழ்நிலையில் பழைய ஏற்பாடு போதுமானதாக இருந்தது. இன்று தமிழ் கூறும் நல்லுலகம் இந்திய எல்லைகளைத் தாண்டி, திசைகள் நான்கிலும் விரிந்துள்ளது.

**இந்திய மொழிகளில் வங்கம், உருது தவிர, இந்தியத் துணைக் கண்டத்தின் எல்லை தாண்டி, தேசிய ஆட்சி மொழியாக அங்கீகரிக்கப்பட்டிருப்பது தமிழ் மட்டுமே.** தமிழ் இன்று இலங்கையில் ஆட்சி மொழி; சிங்கப்பூரில் ஆட்சி மொழி; மலேசியாவில் அங்கீகாரம் பெற்ற மொழி; மொரீஷியசில் அங்கீகாரம் பெற்ற மொழி. தென் ஆப்பிரிக்காவில் நேட்டால் தமிழர்கள், தமிழுக்கு ஆட்சி மொழித் தகுதி வேண்டும் எனக் கோரிக்கை எழுப்பியுள்ளனர் ரெயூனியன் தீவு (Reunion) இன்று சுதந்திர நாடாக இல்லை. அதன் மக்கட்தொகையில் பெரும் பான்மையர் தமிழ்ப் பாரம்பரியத்தினர் எனக் கூறப்படுகிறது அவர்கட்கு இன்று தமிழ் பேசவோ, படிக்கவோ தெரியாது. இந்தியத் துணைக் கண்டத்திற்கு வெளியே, இலங்கையில் வடக்கு, வடகிழக்குப் பகுதியில் வாழும் தமிழர்கள் ஆதித் தமிழர்கள். ஏனைய நாடுகளில் இருப்போர் வெவ்வேறு காலப் பகுதிகளில் வெவ்வேறு காரணங்களுக்காக, பெரும்பாலும் வேலை தேடி, அந்தந்த நாடுகளில் குடியேறி அங்கு குடிமக்களாக ஆனவர்கள்.

அவர்களில் பெரும்பாலோருக்கு இன்று தமிழ் தெரியாது. அவர்களுடைய பெயர், சமய வழிபாடுகள், பழக்க வழக்கங்களை வைத்துத் தான் அடையாளம் காண முடியும். இன்று இவர்கள் அனைவரிடத்திலும் தமிழ் கற்க வேண்டும்; தமிழ் நாட்டோடு தொடர்பு கொள்ள வேண்டும்; தமது பண்டைய பண்பாடு, கலை, இசை, நாட்டியம், சமயக் கொள்கைகள் ஆகியவற்றைப் பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வு பரவலாக, சற்றுத் தீவிரமாகவே உருவாகியிருக்கிறது. நல்ல வேளையாக அந்தந்த நாட்டு அரசுகளும் ஒத்துழைக்கின்றன.

இலங்கை, சிங்கப்பூர் மட்டுமன்றி இன்னும் சில நாடுகளிலும் தமிழ் ஆட்சி மொழி எனும் தகுதி பெறும் தோற்றம் சற்றுத் தொலைவில் உதயமாவது தோன்றுகிறது. இந்தப் பின்னணியில் நாம் பண்டைத் தமிழகத்தில் பாண்டியர் கண்ட தமிழ்ச் சங்க வார்ப்பை (Mould), சற்று மாற்றி, விரிவாக்கி, இப்பொழுதுள்ள உலகத் தமிழ் ஆய்வுக் கழகத்தை (IATR) அதே பெயருடன் நான்காவது தமிழ்ச் சங்கமாக உருவாக்கலாம்; உருவாக்க வேண்டும். உலகத் தமிழ் ஆய்வுக் கழகத்தைப் பண்டைத் தமிழ்ச் சங்கத்தின் இருபதாம் நூற்றாண்டின் புது அவதாரமாகக் கொள்ளலாம். தமிழகத்தைத் தலைமையிடமாகக் கொண்டு கிளைகளை, சிறிய அளவிலோ, பெரிய அளவிலோ, முக்கிய மானவை எனக் கருதப்படும் மற்ற நாடுகளில் பரவலாக நிறுவலாம். அந்நாட்டுத் தமிழர்கள் அதை நிச்சயம் பேணிக் காப்பார்கள்.

உலகு முழுவதிலும், தமிழ் அறிஞர்களிடையே இன்று அறிமுகமான நிறுவனமாக IATR இருந்து வருகிறது. பொதுவாக, உலக நாடுகள், இருக்கின்ற நிறுவனங்களைப் பயன்படுத்தி, விரிவாக்கிப் புதிய நிறுவனங்களை உருவாக்குகிறார்கள். மேலை நாடுகளில் பல பல்கலைக் கழகங்கள், ஓரளவு வளர்ந்த கல்லூரிகளின் தரத்தை உயர்த்தி உருவாக்கப்பட்டவையேயாகும். **எனவே நாம் உலகத் தமிழ் ஆய்வுக் கழகத்தை இந்த நூற்றாண்டின் தமிழ்ச் சங்கமாக, உலகு தழுவிய தமிழ் ஆய்வு,**

**தமிழ் மேம்பாட்டு நிறுவனமாக உருவாக்கலாம்; உருவாக்க வேண்டும்.** இதன் பெயர் 'ஆய்வுக் கழகம்' என இருப்பதால் தமிழர்கள் வாழும் அந்தந்த நாட்டு அரசுகள் இந்த நிறுவனத்தை அரசியல் கண்ணோட்டத் தோடு பார்க்க மாட்டா. தமிழக அரசு, இயன்ற அளவில் மற்ற அரசியல் கட்சிகளையும் கலந்து, ஆலோசித்து, இந்தப் பணிக்குத் தலைமைப் பொறுப்பேற்றுப் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

i. இலங்கை அரசில் தமிழ் அமைச்சர்கள் இருக்கிறார்கள். சிங்கப்பூர் அரசில், மலேசிய அரசில், தென் ஆப்பிரிக்காவின் ஆப்பிரிக்கத் தேசியப் பேரவை (African National Congress) அரசில், மொரீஷியஸ் அரசில் தமிழ் அமைச்சர்கள் இருக் கிறார்கள். தமிழ் அமைச்சர்கள், மேலும் அமைச்சர்கள் இல்லாத நாடுகளில் உள்ள தமிழ்ச் சமுதாயப் பெரியவர்கள், தமிழ் அறிஞர்கள், பொறுப்பான பதவிகளில் உள்ள தமிழ் ஆர்வலர்கள், தமிழகத்தில் உள்ள முக்கியமான கட்சிகளின் தலைவர்கள், ஆகியோரைக் கொண்ட ஒரு கூட்டத்திற்குத் தமிழக அரசு ஏற்பாடு செய்து, உலகத் தமிழ் ஆய்வுக் கழகத்தின் புதிய அமைப்பு, அதன் நோக்கங்கள், எதிர்காலச் செயல்முறை போன்றவற்றை முடிவு செய்யலாம். இக்கூட்டத்திற்குப் பேரா. ஆஷர், பேரா. ஜான் மார், பேரா. கராஷிமா, பேரா. கமில் சுவலபில் போன்ற தமிழர் அல்லாத, ஆனால் தமிழ்ப் புலமையுடைய தமிழ் அறிஞர்கள் சிலரை அழைக்கலாம்.

ii. உலகத் தமிழ் ஆய்வுக் கழகத்தின் பேரவை, மையக் குழு, செயற்குழு ஆகியவற்றைத் தற்போதைய குறிக்கோள்கட்கு ஏற்பத் திருத்தி அமைக்கலாம்.

iii. உலகத் தமிழ் ஆய்வுக் கழகத்திற்கு, சென்னையில் தலைமை அலுவலகமாக, சற்றுப் பரந்த வளாகத்தில் நல்ல கட்டடம் ஒன்று கட்டலாம்.

iv. **இப்பொழுது உலகத் தமிழ் ஆய்வுக் கழகத்தின் தலைமைப் பீடம் கழக விதிகளின்படி பாரிசில் இருக்கிறது. அதை மாற்ற வேண்டுவதில்லை. அதன் செயல் தலைமையிடம் (Working Headquarters) சென்னையிலும், கிளைகள் இயன்ற அளவு மற்ற நாடுகளிலும் அமையலாம்.**

திருத்தி, விரிவாக்கி அமைக்கப்படும் உலகத் தமிழ் ஆய்வுக் கழகத்தின் குறிக்கோள்கள், அமைப்பு, அதன் அடிப்படையில் அமைய வேண்டிய பேரவை, மையக்குழு, செயற்குழு போன்ற, அல்லது இவற்றினின்றும் சற்று வேறுபட்ட உறுப்புகள், அவற்றின் பணிகள் போன்றவற்றை, முறையான ஒரு குழுவை அமைத்து, அதன்மூலம் நிர்ணயம் செய்யலாம். ஒரு கருத்தை மட்டும் இங்கு குறிப்பிட வேண்டும். **இப்பொழுது இக்கழகத்திற்கு முழு நேர அலுவலர் யாருமில்லை. இதற்கு ஓர் இயக்குநர் (Director General) அல்லது செயலர் (Secretary General) போன்ற ஒரு தலைமை அலுவலரும், நல்ல அலுவலகமும் தேவை.**

தமிழக அரசும், மற்ற நாடுகளின் அரசுகளும் சேர்ந்து, கட்டடம், நூலகம் போன்ற வசதிகளைச் செய்து தருவதற்கான ஒரு **தவணைச் செலவை (One Time Expenditure) ஏற்பதுடன், சுமார் ரூ.50 கோடி கொண்ட ஒரு வைப்பு நிதியை உருவாக்கி, அதன்** வழி வரும் வருவாயை ஆண்டுச் செலவுக்கும், நிறுவனத்தின் செயல்பாடுகட்கும், கருத்தரங்கு போன்ற நடவடிக்கைகட்கும், மானியத் தொகை வழங்குவதற்கும், பல்கலைக் கழகங்களில் தமிழ் தொடர்பான அமர்வுகளை உருவாக்கவும் பயன்படுத்தலாம். **தமிழ் வளர்ச்சிக்காக, தமிழ் மேம்பாட்டிற்காகத் தமிழக அரசு எந்தக் குழுவை அமைப்பதாக இருப்பினும், உலகத் தமிழ் ஆய்வுக் கழகப் பேரவையின் தலைவரையும், ஆட்சிக் குழுவின் தலைவரையும் கலந்தே செய்வது என்ற மரபையும், விரிவான கருத்துப் பரிமாற்றத்தின் பின் தமிழகத்தில் மேற்கொள்ளப்படும் மாற்றங்களை, சீர்திருத்தங்களை, தமிழ் கூறும் நல்லுலகம் ஏற்றுக்கொள்வது என்ற மரபையும் உருவாக்கலாம்.**

## 5. செய்தற்கரிய செயல்

ஓர் அரசுக்காகட்டும், தனிநபர்கட்காகட்டும், சில வாய்ப்புகள் அபூர்வமாகத் தான் வருகின்றன. வரலாற்றில் இடம் பெறும் மகத்தான செயல்களை, சாதனைகளைப் புரியும் வாய்ப்பு எல்லாருக்கும் தானாக முன்வந்து நிற்பதில்லை. 1947க்குப் பிந்திய தலைமுறையினர் விடுதலைப் போராட்டத் தியாகியாக விரும்புவதில் பயனில்லை. டாக்டர் எம்.ஜி.ஆர்., அவர்களைப் பொருத்தவரை, அவர் பணிகளில் எது நிலைத்தாலும் நிலைக்கா விட்டாலும், அவர் பெரியார் பயன்படுத்தி வந்த எழுத்துச் சீரமைப்பை அரசு ஆணை மூலம் செயல்படுத்தியது தமிழ் வரலாறு வாழும் வரை எழுதப்படும், பேசப்படும் மூன்றாவது தமிழ்ச் சங்கத்திற்கு ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகட்குப்பின், அதற்கு ஒப்ப உலகு தழுவிய அளவில் நான்காவது தமிழ்ச் சங்கம் என்று கூறத் தகுந்த, ஆனால் அதனினும் பரிமாணங்களில், பரப்பில், பயனில் இன்னும் மகத்தானதாக உலகத் தமிழ் ஆய்வுக் கழகத்தை – இருக்கின்ற நிறுவனமாயினும் அதைப் புதுப்பித்து, புத்துயிர் கொடுத்து – பெரிய அளவில் நிறுவும் வாய்ப்பு இன்றைய தமிழகத் தலைவர்கட்கு இருக்கிறது. **அதிர்ஷ்டத்திற்குக் கண் இல்லை: எனவே அது நம்மை நோக்கி வராமல் போகலாம். ஆனால் நமக்குக் கண் இருக்கிறது. அதிர்ஷ்டத்தைத் தேடி நாம் அடையாளம் கண்டு கொள்ளலாம். இன்று தேட வேண்டிய தேவை இல்லாத ஒரு வாய்ப்பு - தமிழினத்திற்கும், தமிழ் மொழிக்கும் வரலாற்றில் அழியாத இடம் பெறும் செயல் ஒன்றைச் செய்யும் வாய்ப்பு – நமது கண் முன் நிற்கிறது.**

எய்தற்கு அரியது இயைந்தக்கால் அந்நிலையே
செய்தற்கு அரிய செயல்

என்பது வள்ளுவம். எய்தற்கரியது இயைந்த நேரம் இது. செய்தற்கரிய செய்வது தமிழினத் தலைவர்களைப் பொருத்தது. சற்றுக் குறிப்பாகவே கூற வேண்டுமானால் தமிழக அரசைப் பொருத்தது.

# 11

# தமிழ் வரிவடிவச் சீரமைப்பு

## 1. மன்ற நெறிகள்

தமிழ் வரிவடிவச் சீரமைப்பைப் பற்றிக் கருதத் தொடங்கு முன்பு, சில கருத்துகளை வலியுறுத்துவது முறை என்று கருதுகிறோம்.

வரிவடிவச் சீரமைப்பு ஆதரவாளர்கள், எதிர்ப்பாளர்கள் என ஏதோ இரண்டு கட்சி இருப்பது போன்ற ஒரு 'தோற்றம்', உருவாக்கப்படுகிறது. இது சரியான அணுகுமுறை அன்று. கடந்த 60 ஆண்டுகட்கு மேலாகத் தமிழ் வரிவடிவச் சீரமைப்புப் பற்றிப் பல அறிஞர்கள் எழுதியும், பேசியும் வந்திருக்கின்றனர். அக்கருத்துப் பரிமாற்றம் இன்றும் தொடர்கிறது. இதில் பங்கு கொள்வோர் அனைவரும் அதன் தேவையை, நிறைகுறைகளை ஆய்பவர்கள். சுதந்திர உணர்வோடு இந்தப் பிரச்சினையை அணுகுபவர்கள். இந்தக் கேள்விக்குத் தீர்வு காண்பதில் நாம் நமது மனச்சான்றுக்குத் தான் கட்டுப்பட்டவர்களே தவிர, எந்த மடத்துக்கும் சீடர்களல்லர்.

உண்மையான உள்ளத்துடன், நமக்குத் தெரிந்த அளவில் தமிழ் வளர்ச்சி பற்றிச் சிந்திப்பவர்கள் நாம். இதில் உயர்வு தாழ்வு இல்லை. யாரும், ஒருவரது தமிழ்ப் பற்றினும் இன்னொருவரது தமிழ்ப் பற்று உயர்ந்தது என்றோ, தாழ்ந்தது என்றோ தீர்ப்பளிப்பது ஆய்வுலகுக்கு ஏற்றதன்று.

தங்கட்குத் தெரிந்த அளவில், காரணங்களைச் சீர்தூக்கி, சீரமைப்பை ஆதரிப்பவர்களையும், எதிர்ப்பவர்களையும் அவ ரவர் கருத்தைக் கூறுகிறார்கள் எனக் கொள்வது தான் முறையே தவிர, யாரையும் ஒரு குறிப்பிட்ட அணியைச் சேர்ந்தவராகப் பார்ப்பதும், மாறுபட்ட கருத்தினரைத் தமிழ் விரோதிகள் என்பதும், தமிழ்த் துரோகிகள் என்பதும் நாகரிகமன்று. ஆய்வுலக மரபுமன்று. பொதுவாக, நம்மிடமிருந்து மாறுபட்ட கருத்துடை யவர் நோக்கத்தைச் சந்தேகிப்பதும், களங்கம் கற்பிப்பதும் பண்புடைமை ஆகாது. அது முழுமையும் தவிர்க்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் ஆரோக்கியமான விவாதங்கள் நடைபெறும். இந்த நெறிப்படுத்தலோடு மேலே செல்வோம்.

## 2. சில அடிப்படைகள்

வினை செய்வதாயின் ஒரு குறிக்கோள் வேண்டும். விளையாடுவதானாலும் ஆடுகளத்திற்கு வரம்புகள் வேண்டும். ஆட்டத்திற்குச் சில விதிமுறைகள் வேண்டும். எனவே, நமக்கு நாமே சில எல்லைகளை வகுத்துக் கொள்வது நமது கருத்துப் பரிமாற்றம் முறையான ஒரு பாதையில் செல்லத் துணை புரியும்.

i. நாம் கூறும் மாற்றங்கள் தர்க்க ரீதியாக எவ்வளவு சிறந்தது; அறிவு ரீதியாக எவ்வளவு உயர்ந்தது என்பது முக்கியமானது எனினும், அது மட்டுமே போதுமானது அன்று. இன்றைய சூழ்நிலையில், மக்களின் இன்றைய மன நிலையில் எந்த அளவுக்கு மாற்றங்கள் ஏற்கப்படும் என்பதையும் மனத்திற் கொள்ள வேண்டும்.

ii. தமிழ் நெடுங்கணக்கில், ஒலிகள் தான் வரையறுக்கப்பட்டவை. ஒலிகளுக்கான குறியீடுகள் அறுதி செய்யப்படவில்லை. எனவே, அடிப்படையானவை ஒலிகள். முடிந்த வரை, தவிர்க்க முடியாதது என, ஏறத்தாழ ஒருமித்த கருத்து இருந்தாலன்றி, குறைக்கப் படவோ, மாற்றப்படவோ கூடாதவை. நாம் ஒலி எழுத்துகளில் எந்த மாற்றம் பற்றியும் இங்கு கருதவில்லை.

iii. வரிவடிவம், ஒலிகளைப் போன்று நிரந்தரமானதன்று. எல்லா மொழிகளிலும் அது காலத்துக்குக் காலம் மாறியே வந்திருக்கிறது. தமிழ் வரிவடிவமும் தொடர்ந்து பல மாற்றங்கட்கு உள்ளாகி யிருக்கிறது. பெரும்பாலும் ஒலி எழுத்துகளைப் பற்றி மட்டுமே பேசும் தொல்காப்பியம்,

மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்
எகர, ஒகரத் தியற்கையும் அற்றே

என மெய்யெழுத்துகளும், எகரமும், ஒகரமும் புள்ளி பெறுவதைப் பற்றிக் குறிப்பிடுகிறது. எகரம், ஒகரம் பற்றிய தொல்காப்பிய விதியையும் வீரமாமுனிவர் 18ஆம் நூற்றாண்டில் மாற்றிவிட்டார். இப்பொழுது எகரமும், ஒகரமும் புள்ளி பெறுவதில்லை. அதனால் தமிழுக்கு எந்த விதத் தீமையும், இழப்பும் நேரவில்லை.

**iv. வரிவடிவச் சீர்திருத்தம் பற்றி எண்ணும்பொழுது நாம் தட்டச்சையோ, அல்லது அச்சிடுவதையோ, அல்லது கணிப் பொறியையோ முன்னிலைப்படுத்தி இப்பிரச்சினையை அணுக வில்லை. குழந்தைகள், இன்றைய நிலையில் பெரியவர்கள் கூட, தமிழ் கற்பதை எளிதாக்குவது என்ற அடிப்படையில் தான் பார்க்கிறோம். மற்ற காரணங்கள் முதலிடம் பெறுபவை அல்ல; இரண்டாவது, மூன்றாவது இடத்தில் வருபவை.** முக்கிய மானவை அல்ல.

v. தமிழர் ஒரு மொழியினர், பல நாட்டினர். தமிழ் மொழி தமிழக எல்லை கடந்தும், ஆட்சி மொழியாக அல்லது அங்கீகரிக்கப்பட்ட மொழியாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. பார் முழுதும் பரந்து வாழும் தமிழர்கள் இந்த மொழிக்குச் சொந்தக்காரர்கள் என் பதை எண்ணியும், அவர்கள் உணர்வுகளை மதித்தும், அவர்கள் சந்ததியினர் தமிழ் கற்றவர்களாக, தமிழ் இலக்கியம், கலை, பண்பாட்டுடன் தொடர்புடைய மக்களாக வாழ வேண்டுவதன் முக்கியத்தை உணர்ந்தும், அவர்கள் தமிழ் கற்பதில் எழும் பிரச்சினைகளை மனத்திற்கொண்டும் இப்பிரச்சினையை அணுக வேண்டும்.

## 3. நீண்ட வரலாறு உண்டு

இன்றைய வரிவடிவம் சீர்திருத்தப்பட வேண்டும் என ஏதோ நாம் தான் இப்பொழுது கூறுகிறோம் என்பதில்லை. நாமறிந்த அளவில் 1930 முதல் பல நிலைகளில், பல மன்றங்களில் சீரமைப்பின் தேவை வலியுறுத்தப்பட்டு வந்திருக்கிறது. தமிழக அறிஞர் சிலரின் கருத்துகள் இணைப்பு-1இல் கொடுக்கப் பட்டுள்ளன. தனிப்பட்ட சான்றோர் கருத்துகள், மாநாடுகள், நிறுவனங்கள் நிறைவேற்றிய தீர்மானங்கள், வல்லுநர் குழுக்களின் அறிக்கைகள் ஒரு புறம் இருக்க, தமிழக அரசும், இதன் தேவையை உணர்ந்து தொடர்ந்து, கட்சிப் பாகுபாடு இன்றி அக்கறை காட்டி வந்திருக்கிறது. அதன் விவரம் பின்வருமாறு:

★ நாடு விடுதலை பெற்ற பின் 1950-இல் காங்கிரஸ் அரசு, 'தினமணி' ஆசிரியராக இருந்த திருT.S.சொக்கலிங்கம் அவர்கள் தலைமையில் ஓர் எழுத்துச் சீர்திருத்தக் குழுவை அமைத்தது.

**★ 1977 - தேர்தல் அறிக்கையில், தி.மு.க. பின்வருமாறு வாக்குறுதி அளித்திருந்தது:**

> **''பண்டிதரும், பாமரரும் ஒப்புக்கொள்ளும் வகையில் தமிழில் எழுத்துச் சீர்திருத்தம் செய்ய, மொழியியல் வல்லுநர் உதவியுடன் ஏற்பாடு செய்வோம்.''**

★ 1978-இல், பெரியார் நூற்றாண்டு விழாவின் பொழுது அ.இ.அ.தி.மு.க அரசு, பெரியார் செய்த சீர்திருத்தத்தைச் சிறு மாற்றத்துடன் நடைமுறைப்படுத்த உத்தரவிட்டது.

**★ அ.இ.அ.தி.மு.க. அரசு, 1979இல் மகாவித்துவான் மே.வீ.வேணுகோபால் பிள்ளை அவர்கள் தலைமையில், 1978இல் செய்த சீர்திருத்தத்திற்கு மேற்கொண்டு செய்ய வேண்டிய சீரமைப்புப் பற்றி ஆராய ஒரு குழுவை அமைத்தது.**

★ 1990-இல் அ.இ.அ.தி.மு.க. அரசு, திருத்தி அமைத்துள்ள தமிழ் வளர்ச்சி மன்றத்தின் குறிக்கோள்களில் ஒன்றாக, எழுத்துச் சீரமைப்புப் பற்றிப் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது;

> ''வளர்ந்துவரும் அறிவியலுக்கு ஈடு கொடுக்கும் வகையிலும், தமிழைப் பயில்வோருக்கு உறுதுணை புரியும் வகையிலும், **இதுவரை மேற்கொள்ளப்பெற்ற தமிழ் எழுத்துச் சீரமைப்புக்குக்** கூடுதலாக வேண்டப்படும் சீரமைப்புக் குறித்து ஆய்ந்து பரிந்துரைகளை அளித்தல்''

★ 11.12.1995-இல் நடந்த தமிழ் வளர்ச்சி மன்றத்தின் மூன்றாவது கூட்டத்தில், எழுத்துச் சீரமைப்புப் பற்றி ஆய்ந்து பரிந்துரை வழங்க ஒரு குழுவை அமைக்க வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதை ஏற்று, அரசு, மார்ச் 1996இல் டாக்டர் வா.செ.குழந்தைசாமி அவர்கள் தலைமையில் எழுத்துச் சீரமைப்புக்குழு ஒன்றை அமைத்தது.

எனவே இப்பிரச்சினை, அரசின் கவனத்தில், ஆய்வில் தொடர்ந்து இருந்து வந்திருக்கிறது.

## 4. தேவையான குறியீடுகள்

தமிழ் வரிவடிவத்தில் பயன்படுத்தப்படும் குறியீடுகளைப் பற்றிப் பேசும்பொழுது நாம் பெரியார் நூற்றாண்டின் போது அரசு செய்த மாற்றங்களை ஏற்றுக் கொண்டு, மேலே சிந்திப்பதுதான் முறை. குழந்தைகள் தமிழை எழுதப் படிக்கத் தெரிந்து கொள்ளக் கற்க வேண்டிய குறியீடுகள், அட்டவணை - 1 இல் கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை - 1

| தமிழுக்குக் கையெழுத்தில் தேவைப்படும் குறியீடுகள் பற்றிய விவரம் | | | | |
|---|---|---|---|---|
| | | ஒலிகள் | எழுத்துகள் | குறியீடுகள் |
| i. | உயிர் | 12 | 12 | 11 (ஔ - கூட்டுக் குறியீடுகள்) |
| ii. | ஆய்தம் | 1 | 1 | 1 |
| iii. | தனி மெய் | 18 | 18 | 18 + புள்ளி 1 |
| iv.a | உயிர்மெய் (அகர வரிசை) | கூட்டொலிகள் | 18 | – |
| iv.b | உயிர்மெய் (ஆ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ வரிசைகள்) | கூட்டொலிகள் | 126 | 4 (ா, ெ, ே, ை) (35) |
| v. | உயிர்மெய் (இ,ஈ,உ,ஊ வரிசைகள்) | கூட்டொலிகள் | 72 | 72 (72) |
| | | 31 | 247 | 107 |

எனவே, அட்டவணை 1-இல் i, ii, iii, iv.a, iv.b, ஆகிய பகுதிகளில் வரும் 175 ஒலியெழுத்துகட்கு 35 குறியீடுகளை மட்டுமே குழந்தைகள் கற்கின்றனர். ஆனால் v-இல் இடம் பெற்றுள்ள 4 வரிசைகட்கு மட்டும் 72 குறியீடுகளைக் கற்க வேண்டியிருக்கிறது. உயிர்மெய் இகரம், ஈகாரம் ஒரு பொதுவான விதியைப் பின்பற்றுகிறது. ஆனால், உயிர்மெய் உகரம், ஊகாரத்தில் எந்த ஓர் எளிதான விதியும் பின்பற்றப்பட வில்லை. குழந்தைகள் 36 குறியீடுகளையும் தனித்தனியே

மனப்பாடம் செய்தே ஆக வேண்டியிருக்கிறது. மற்ற 7 வரிசைகளில் உயிர்மெய் அகரத்தோடு முன்னோ, பின்னோ, அல்லது இரு புறத்திலுமோ தனிக் குறியீட்டை, குறியீடுகளைச் சேர்க்கும் ஒரு மரபு பின்பற்றப்படுகிறது. இந்த 4 வரிசைகள் மட்டும் மற்ற 7 வரிசைகளில் பயன்படுத்தப்படும் மரபினின்றும் மாறி, ஒவ்வோர் எழுத்தும் ஒரு தனி வரிவடிவமாகவே இருக்கிறது.

தட்டச்சுக்கு வரும்பொழுது, மொத்தம் 59 குறியீடுகள் தேவைப்படுகின்றன. அரசு 1995இல் திருத்தி அமைத்திருக்கும் தட்டச்சில் உள்ள 92 குறியீடுகளின் பங்கீடு, அட்டவணை-2 இல் கொடுக்கப்பட்டுள்ளது. தமிழக அரசு 14.3.1995இல் ஏற்பளித்த விசைப்பலகை இன்னும் (ஜூலை, 1996) நடைமுறைக்கு வரவில்லை. நடைமுறையில் உள்ள தட்டச்சில், கூட்டல் குறி (+), பெருக்கல்குறி(X) வகுத்தல் குறி(÷), சமன்பாட்டுக்குறி (=), அரைப்புள்ளி(;), முக்காற்புள்ளி(:), ஆகியன இல்லை. தட்டச்சு இருநூறு ஆண்டுகட்கு முன் உருவாக்கப்பட்ட ஒரு பழைய கருவி. அதைக் கூட முழுமையாகப் பயன்படுத்தும் நிலைக்கு நாம் வளரவில்லை. நமது முன்னேற்றப் பயணத்தில் நாம் கடக்க வேண்டிய தூரம்; செல்ல வேண்டிய வேகம்: நமக்கு இருக்கும் வாகனம்: அதன் திறன் ஆகியன பற்றி நாம் திறந்த மனத்துடன் சிந்திக்க வேண்டும். நமது நிறைகுறைகளை ஆராய வேண்டும். மேடையில் செய்யப்படும் ஆவேசமான பிரகடனங்கள், பேச்சுக்கு அழகு சேர்க்கலாம். அவை பிரச்சினைகளைத் தீர்ப்பதில்லை.

தட்டச்சில் தமிழ் நெடுங்கணக்கிற்குத் தேவைப்படும் 59 குறியீடுகளில் இந்த 4 (உயிர்மெய் இகர, ஈகார, உகர, ஊகார) வரிசைகட்கு மட்டும் 24 குறியீடுகள் தேவைப்படுகின்றன: உகர, ஊகார உயிர்மெய் கொண்ட 2 வரிசைகட்கு மட்டும் 20 குறியீடுகள் தேவைப்படுகின்றன. 247 ஒலி எழுத்துகட்குத் தேவைப்படும் 59 குறியீடுகளில், 36 ஒலி எழுத்துகட்கு மட்டும் 20 குறியீடுகளைப் பயன்படுத்த வேண்டுவது தமிழுக்குத் தவிர்க்க முடியாத 'தலை விதி' தானா என்பது யாரும் சிந்திக்க வேண்டிய ஒன்று. நாம் இங்கு

## அட்டவணை - 2

தமிழ் நாடு அரசு ஆணை எண் 184 (கல்வி, அறிவியல், தொழில் நுட்பத் துறை) 14.3.1995இல் ஏற்பளிக்கப்பெற்று, பயன்பாட்டுக்கு வர இருக்கும் தமிழ்த் தட்டச்சுப் பொறியின் விசைப் பலகையில் உள்ள எழுத்துகள் / குறியீடுகள்.

| | | | | |
|---|---|---|---|---|
| i. உயிர் | அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ | 11 | (ஔ கூட்டுக் குறியீடுகள்: தனி விசை இல்லை) |
| ii. ஆய்தம் | ஃ | 1 | |
| iii. உயிர் மெய் (அகர வரிசை) | க, ங, ச, ஞ, ட, ண, த, ந, ப, ம, ய, ர, ல, வ, ழ, ள, ற, ன. | 18 | |
| iv. மெய்ப் புள்ளி | ● | 1 | |
| v. உயிர் மெய் இகரம், ஈகாரம், உகரம், ஊகாரம் தவிர்த்த சேர்க்கைக் குறியீடுகள் | ா, ெ, ே, ை | 4 | 35 |
| vi. உயிர்மெய் இகர, ஈகாரத் தனி எழுத்துகள் | டி, டீ | 2 | |
| vii. உயிர் மெய் இகர, ஈகாரச் சேர்க்கைக் குறியீடுகள் | ி ீ | 2 | |
| viii. உயிர் மெய் உகரத் தனி எழுத்துகள் | கு, சு, டு, ணு, து, நு, மு, ரு, லு, ழு, ளு, று, னு | 14 | ★ ஞு - இரு பகுதிகளின் சேர்ப்பு |

| | | | |
|---|---|---|---|
| ix. உயிர் மெய் ஊகாரத் தனி எழுத்துகள் | கூ, கூ | 2 | |
| x. பு, வு, யு, பூ, வூ, யூ ஆகியவற்றுக்கான சேர்க்கைக் குறியீடுகள் | । ு | 2 | |
| xi. ரு, ளு, ழு, மு, டு இவற்றுடன் சேர்க்கக்கூடிய ஊகார இணைப்புச் சுழி | ூ | 1 | |
| xii. து, நு, று, லு, னு, ணு ஆகியவற்றுடன் சேர்க்கக்கூடிய ஊகார இணைப்புக் குறியீடு | T | 1 | 24 |
| xiii. கிரந்த எழுத்து / குறியீடு | ஸ, ஜ, ு, ஒ, ஷ, ஸ்ரீ | 6 | |
| xiv. எண்கள் | 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 0 | 10 | |
| xv. நிறுத்தக் குறியீடுகள், கணிதக் குறியீடுகள் முதலியன | . , ; : ? + − x = ÷ ' " ( ) / % * | 17 | |
| | மொத்தம் | 92 | |

கருவியின் தேவைக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லையெனினும், மனித சமுதாயத்தின் முன்னேற்றத்திற்குக் கருவிகள் அடிப்படையாய் அமைந்தவை. ஒவ்வொரு புதுயுகத்தையும் ஒரு புதிய கருவி தான் தோற்றுவித்திருக்கிறது. இன்று ரோமன் எழுத்துகட்கு எண்ணற்ற வடிவில், அளவில் கிடைக்கும் Stencil எனும் மிகச் சாதாரணமான – மிகவும் பயனுள்ள – கருவி கூடக் கடைகளில் த்மிழுக்குக் கிடைப்பதில்லை. நாம் நமது குறைபாடுகள் எனத் தோன்றுவனவற்றைத் திறந்த மனத்துடன் பட்டியலிட வேண்டும். அவற்றை நிவர்த்திக்கலாம்; நிவர்த்திக்காதிருக்கலாம். அது வேறு செய்தி. ஆனால், குறைகளைச் சந்திக்க, குறைகள் என ஒப்புக்கொள்ள நாம் தயங்கக் கூடாது. **'நெருப்புக் கோழி'யின் நடைமுறை, பிரச்சினையைத் தீர்ப்பவர்களின் பாதையன்று. அது பிரச்சினையைப் பார்க்கவே மறுப்பவர்களின் பாதை.**

சுருக்கமாகக் கூறுவதாயின் நம் முன் நிற்கும் கேள்வி இது தான்:

★ தமிழ் நெடுங்கணக்கில் உள்ள 175 ஒலி எழுத்துகட்கு 35 குறியீடுகள் போதுமானவையாயிருக்க, மீதமுள்ள 72 ஒலி எழுத்துகட்கு மட்டும் 72 குறியீடுகள் தேவையா?

★ மற்ற 7 உயிர்மெய் வரிசைகட்குப் பயன்படுத்தும் உத்தி, இந்த 4 வரிசைகட்கும் பொருந்தாதா?

இதை நாம் அறிவியல் வழி நின்று ஆராயவும், பதில் காணவும் கடமைப்பட்டிருக்கிறோம்.

## 5. வாழ்வு, காலத்தால் ஆனது

மனிதன் உடம்பு வேண்டுமானால் தசையாலும், நாராலும், எலும்பாலும் ஆனது. ஆனால் அவன் வாழ்வு, காலத்தால் ஆனது. வாழ்வின் பயன்பாடு, காலத்தை எவ்வளவு திறமையுடன் பயன்படுத்துகிறோம் என்பதைப் பொருத்தது.

பண்டைக் காலத்தில் கல்வி என்பது பெரும்பாலும் மொழிக் கல்வியாகவே இருந்தது. எனவே, வரிவடிவத்தைக் கற்க நீண்ட காலம் செலவிடுவது இயன்றதாயிற்று. இன்று மொழி மற்ற துறைகளைக் கற்பதற்கு ஒரு சாதனம். சாதனத்தைப் பயன் படுத்துவதற்குக் கற்கவே நீண்ட காலம் செலவிடுவோமாயின், நாம் குறிக்கோளை அடையப் பயணம் தொடங்குவதும், குறிக்கோளை அடைவதும் காலம் கடந்ததாகி விடும்.

பண்டைக் காலத்தில் அனைவருக்கும் கல்வி (Education for All)என்ற திட்டம் யாரும் நினையாத ஒன்று ஒரு சிலரே, மிக, மிகச் சிலரே கல்வி கற்றனர் அந்தச் சூழ்நிலையில் வரிவடிவத்தைக் கற்க, சிலர் மட்டுமே அதற்கான காலத்தைச் செலவிட வேண்டி இருந்தது. இன்று அனைவருக்கும் கல்வி என்கிறோம் அந்த இலக்கை நோக்கி நடை போடுகிறோம். **எனவே, கோடிக்கணக் கான குழந்தைகள் தலைமுறை, தலைமுறையாக, ஏறத்தாழ 39 வரிவடிவங்களில் கற்கக்கூடிய ஒரு மொழிக்கு 107 வரிவடிவங் களைக் கற்பதால் ஏற்படும் கால விரயத்தையும், சிரமத்தையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.** கல்வி அலங்காரப் பொருளாக, ஆபரணமாக இருந்த காலம் உண்டு. இன்று நிலைமை மாறிவிட்டது. **அரசியல் வளர்ச்சி, சமுதாய வளர்ச்சி, பொருளா தார வளர்ச்சி அனைத்தும் கல்வி என்னும் அடிப்படையிலேயே அமைந்திருக்கின்றன. எனவே, பல்துறையிலும், சமுதாயத்தினர் அனைவரும் கல்வி பெறவேண்டிய யுகத்தில் இருக்கும் நாம், வரிவடிவத்தைக் கற்பதற்கு மட்டும் தேவைக்கு மீறிய நேரத்தைச் செலவிடுவது அறிவுடைமை ஆகாது.**

டாக்டர் தி.முத்து – கண்ணப்பன் அவர்கள் பல ஆண்டு களாகக் களத்தில் சென்று தமிழ் கற்றுத்தந்து வந்திருக்கிறார் தமிழ் வரிவடிவத்தைக் கற்று, எழுத்துக் கூட்டிப் படிக்க ஆகும் காலம் பற்றி அவர் பின்வருமாறு கூறுகிறார்

''முன்னர் குறிப்பிட்டுள்ளபடி, குறுகிய காலத்தில், அதாவது 45 அல்லது 50 நாள்களில் தமிழ் எழுதப் படிக்கக் கற்றுத்தரும்

பொழுது, உகர, ஊகார உயிர்மெய் எழுத்துகளைக் கற்பிப்பதற்கு மட்டும் குறைந்தது 10 நாள்கள் ஆகின்றன. அதனினும் முக்கியமாக, கற்போருக்குப் **பெரும் குழப்பமும், ஒரு வித வெறுப்பும் உண்டாகின்றன என்பதை உணர** முடிந்தது. **இது என் 35 ஆண்டு அனுபவத்தில் கண்ட உண்மை.''**

''கற்போருக்குப் பெரும் குழப்பமும், ஒருவித வெறுப்பும் உண்டாகின்றன'' என அவர் கூறியிருப்பதை ஆழ்ந்து எண்ண வேண்டும். உகர, ஊகார உயிர்மெய் வரிசைகள் எந்த விதமான விதிமுறைகட்கும் அடங்குவதில்லை. ஒவ்வோர் ஒலி எழுத்து வடிவத்தையும் தனித் தனியாக மனப்பாடம் செய்ய வேண்டி யிருக்கிறது குழந்தைகள் கற்கும்பொழுது ஏற்படும் சிக்கல்களை யும், அவர்கள் இதைப் பற்றிக் கேள்வி எழுப்பினால், ''இங்கு எந்த விதிமுறையும் இல்லை; இப்படித் தான் எழுதப்பட வேண்டும். கேள்வி எதுவும் கேட்காது எழுதிப் பழகு'' என்று கூறவேண்டிய நிலையையும், அந்த அணுகுமுறை குழந்தைகள் மனத்தில் ஏற்படுத்தக் கூடிய விளைவுகளையும் நாம் சிந்திக்க வேண்டும்

நாம் முன்பு கூறியது போன்று, அடிப்படையில் தமிழுக்கு இருப்பன 247 ஒலி எழுத்துகள், இவற்றுள் உயிர் 12; மெய் 18; ஆய்தம் 1. மற்றவை கூட்டொலிகள். இவற்றிற்கு நாம் அமைத்துக் கொண்டது தான் வரிவடிவம். இதை எளிதாகவும் செய்து கொள்ளலாம்: கடினமானதாகவும் ஆக்கலாம். நாம் சற்றுச் சிக்கலான வரிவடிவத்தைத் தான் உருவாக்கி இருக்கிறோம் ரோமன் வரிவடிவத்தோடு ஒப்பிடும்பொழுது நமது உயிர் எழுத்து, மெய்யெழுத்து, உயிர்மெய்யெழுத்து ஆகியன நிறைய வளைவுகளும் சுழிகளும் கொண்டவை, சீன மொழியின் வரிவடிவம் இன்னும் சிக்கலானதல்லவா எனக் கேள்வி எழுப்புவது இதற்குச் சமாதானமாகாது. கற்பதைச் சிக்கலாக்கு வதில் போட்டி போடுவது நமது குறிக்கோள் அன்று ரோமன் வரிவடிவத்தில் உயிர்மெய் எழுத்து என ஒரு வகை இல்லை. அதை வேறு நாம் அமைத்துக் கொண்டோம். இதற்குப் பல

காரணங்கள் இருக்கலாம். அவற்றை நாம் புறக்கணிக்கவில்லை. ஆனால், இன்றைய சூழ்நிலையில், அடிப்படையை அசைக்காது, தேவைக்கேற்ற சில மாற்றங்கள் செய்வது நன்மை பயக்குமெனின், செய்வது எளிதெனின் அதை முறையாக ஆய்ந்து, அறிஞர் களுடன் எண்ணி, 'செய்தக்க' செய்வதற்கு நாம் தயங்கக் கூடாது.

## 6. பரிந்துரைக்கும் சீர்திருத்தம்

செய்யத் தக்கன எனக் கருதும் மாற்றங்களைப் பற்றி நாம் எண்ணுமுன், சில கூறுபாடுகளைத் தெளிவுபடுத்துவது முறையாகும்.

i. இந்தக் கருத்துரையில், நாமாக எண்ணிக் கண்டுபிடித்த புதிய மாற்றங்கள் எதையும் கூறப் போவதில்லை,.

ii. அறுபது ஆண்டு வரலாறு உடைய எழுத்துச் சீரமைப்பு இயக்கத்தில் அறிஞர்களால், ஆய்வாளர்களால் கூறப்பட்ட அரிய கருத்துகள் பல. அவற்றை ஆய்ந்து, அவற்றுள்:

- ★ நாடறிந்த அறிஞர் பெருமக்கள் கூறியவை
- ★ பரவலான ஆதரவுடையவை
- ★ நடைமுறைப்படுத்துவதில் சிக்கல் இல்லாதவை
- ★ தமிழ் வரிவடிவ மரபொடு ஒன்றியவை
- ★ இன்றில்லாவிட்டால் நாளை, காலத்தின் கட்டாயத்தால் உறுதியாக இடம் பெறக் கூடியவை

என நாம் கருதும் சீரமைப்புப் பற்றியே இங்கு பேசுகிறோம்.

iii. முன்பே குறிப்பிட்டது போல, தமிழ் நெடுங்கணக்கில் 247 ஒலி எழுத்துகளில் ஓர் எழுத்தைக் கூட, கூட்டுவதோ, குறைப்பதோ, நாம் கூறும் சீரமைப்பின் நோக்கமன்று. அப்படிப்பட்ட கருத்துகளைப் பலர் கூறியிருக்கின்றார்களாயினும், நாம் அந்தப் பாதையில் அடியெடுத்து வைக்கவில்லை.

iv. நாம் 'சீரமைப்பு' என்பது, எழுதும் முறையை எளிமைப் படுத்துவதே அன்றி, ஒலி எழுத்து எதையும் இழப்பதன்று.

இழப்பதற்கு இடமளிப்பதும் அன்று.

மேலே கூறிய சில அடிப்படைகளைக் கருத்திற்கொண்டும். அட்டவணை-1, அட்டவணை-2 ஆகியவற்றில் பட்டியலிட்டுக் காட்டப்பட்டுள்ள குறியீடுகளின் எண்ணிக்கையைப் பரிசீலனை செய்தும், நடைமுறைப்படுத்தக் கூடியன, கால தாமதமின்றி நடைமுறைப்படுத்த வேண்டியன என நாம் கருதும் மாற்றங்கள் பின்வருமாறு:

**i. உயிர் எழுத்துகளில், மெய் எழுத்துகளில் சில எளிய மாற்றங்கட்கு இடமிருப்பதைப் பற்றிப் பலர் கூறியிருப்பதை எண்ணினும், அவற்றில் எந்த மாற்றத்தையும் பரிந்துரைக்க நாம் முன்வரவில்லை.**

**ii. உயிர்மெய் எழுத்துகள் உயிரும் மெய்யும் சேர்ந்த கூட்டொலிகள். அவை தனித்து நிற்கும் தன்மை உடையன அல்ல. அந்தக் கூட்டொலிகளிலுள்ள 12 வரிசைகளில், நான்கில் மட்டுமே சிறு மாற்றத்தை எண்ணிப் பார்க்க முயல்கிறோம்.**

iii. மெய்யுடன், அ,ஆ,எ ஏ,ஐ,ஒ,ஓ ஔ இணைந்து உருப் பெறும் உயிர்மெய் வரிசைகள் எட்டில் உயிர்மெய் அகரத்திற்கு வலது புறத்தில் அல்லது இடப் புறத்தில், அல்லது இரு புறங்களிலும் மொத்தம் நான்கு தனிக் குறியீடுகள் (ா, ெ, ே, ை) பயன்படுத்தப் படுகின்றன. உயிர்மெய் அகரத்துடன் இக்குறியீடுகளில் ஒன்று அல்லது இரண்டை இணைப்பதன் மூலம் 126 உயிர்மெய் எழுத்துகள் உருவாக்கப்படுகின்றன. ஆனால் இ,ஈ,உ,ஊ சேர்ந்து உருவாகும் நான்கு உயிர்மெய் வரிசைகளில் இந்த எளிய முறை கைவிடப்பட்டு, ஒவ்வோர் உயிர்மெய் எழுத்துக்கும் ஒரு குறியீடு பயன்படுத்தப்படுகிறது அதனால் இந்த 4 வரிசைகளில் வரும் உயிர்மெய் எழுத்துகள் 72க்கும் 72 தனிக் குறியீடுகள் தேவைப்படுகின்றன.

**iv. முதலில் கூறப்பட்ட உயிர் மெய் வரிசைகளில் பயன்படுத்தியது போல, இ, ஈ, உ, ஊ வரிசை ஒவ்வொன்றுக்கும் உயிர்மெய் அகரத்திற்கு வலப் புறத்தில் ஒரு**

குறியீட்டைப் பயன்படுத்துவது என்று முடிவு செய்வோமானால், 72 குறியீடுகட்குப் பதிலாக 4 குறியீடுகள் போதும்.

v. தமிழில் நெடுங்கணக்கில் உள்ள 247 ஒலி எழுத்துகளை எவ்வித ஒலி மாற்றமும், குறைவும் இன்றி எழுதத் தேவை யானவை 39 குறியீடுகளேயாகும்.

iv. இந்த 4 குறியீடுகள் எப்படி அமையலாம் என்ற கேள்வி எழுவது இயல்பு: அதை முடிவு செய்யவும் வேண்டும். ஆனால், இப்பொழுது நமக்கு முக்கியமானது இந்த 4 வரிசைகட்கும், 4 குறியீடுகளைப் பயன்படுத்தலாம் எனக் கொள்கையளவில் ஏற்றுக்கொள்வதேயாகும். பிரச்சினைக்கான தீர்வின் உயிர் அதுதான். குறியீடுகளைப் பற்றிப் பெரிய விவாதம் தேவை யில்லை. அறிஞர்களின் குழு ஒன்றை அமைத்து, பரவலாய்ப் பலரையும் கலந்து, தமிழ் வரிவடிவத்திற்கேற்ப, அதனுடன் இணைந்து நிற்கும் உருவம் கொண்ட, வரிவடிவத்தின் எழிலுக்கு எழில் சேர்க்கும் தன்மைத்தான 4 குறியீடுகளை நிர்ணயம் செய்யலாம். கணிப்பொறி மூலம், பல குறியீட்டு வடிவங்களை உருவாக்கி, அவற்றைப் பயன்படுத்திப் பார்த்து முடிவு செய்யலாம். எனவே, குறியீடுகள் எப்படி இருக்க வேண்டும் என்பதை எழுத்துச் சீர்திருத்தம் பற்றிய கொள்கை வகுப்பதோடு நாம் இணைக்கத் தேவையில்லை குறியீடுகள் தேர்வும் முக்கியம் எனினும், அது கொள்கை முடிவின் பின்னர் வருவது.

## 7. குறியீடு பற்றிய கருத்துகள்

எழுத்துச் சீர்திருத்தக் கொள்கை பற்றிய ஒரு விவாதத்தில், புதிய குறியீடுகளைப் பயன்படுத்தலாம் என்ற அளவிலான முடிவு தான் முக்கியம். குறியீடுகளின் வடிவம் பற்றிய ஆய்வை இதனுடன் கலக்க வேண்டுவதில்லை என்பதை மீண்டும் வலியுறுத்திய பின், தகவலுக்காகவும், இக்கருத்துரையின் முழுமை கருதியும், குறியீடுகள் பற்றி அறிஞர்கள், ஆய்வாளர்கள் தெரிவித்த சில கருத்துகள் கீழே தரப்படுகின்றன.

i பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்களின் பரிந்துரை பின்வருமாறு:

★ இகர, ஈகார உயிர்மெய் வரிசையில், மேல் விலங்காக இடப்படும் குறியீடுகளை உயிர்மெய் அகரத்துடன் இணைக்காமல் தனியே வலப்புறத்தில் எழுதலாம்

★ உயிர்மெய் உகரம், ஊகாரத்திற்கு, கிரந்த எழுத்தில் பயன்படுத்தப்படும் ு, ூ குறியீடுகளை ஏற்கலாம்.

ii. தமிழகப் புலவர் குழுவின் சார்பில் பேரா. ந.சஞ்சீவி அவர்கள், 1975இல் விடுத்த அறிக்கையில் பின்வருமாறு கூறியுள்ளார்:

★ உயிர்மெய் எழுத்துகளில் உகர, ஊகார வரிசையில் முறையே ு, ூ இடம் பெறும். இதனால் எல்லா எழுத்துகளும் ஒரு சீரான மாற்றம் பெறும்.

iii. ஆரம்பத்தில் வரிவடிவச் சீரமைப்பை எதிர்த்துவந்த சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்கள் 19.3.1989இல் 'செங்கோல்' இதழில் பின்வருமாறு எழுதுகிறார்:

★ ''போகட்டும். யதார்த்தமான நிலைக்கு வந்து இந்த எழுத்துச் சீர்திருத்தம் பற்றிய வாதத்தை முடிவுக்குக் கொண்டு வருவோம் 30 எழுத்துகளாகக் குறைப்பது பற்றிச் சிந்திப்பது கூட நல்லதல்ல சார்பெழுத்துகளைக் கைவிடுவது தமிழை அழிப்பதாகும். வரிவடிவத்திலேயும், உயிர் எழுத்துகளில் மாறுதல செய்வதும் தேவையற்றதாகும். சார்பு எழுத்துகளிலே ஏற்கெனவே 7 எழுத்துகளுக்குச் செய்யப்பட்டுள்ள மாறுதலே போதும் இதற்கப்பால் தேவைப்படும் மாறுதல் 'இ', 'ஈ', 'உ', 'ஊ' எழுத்துகளில் தான்

'கி', 'கீ' என்ற எழுத்துகளுக்குள்ள குறியீட்டைத் தனியாகப் பிரிதெடுத்துத் தட்டச்சிலும் அச்சிலும் பயன்படுத்த வழி செய்யலாம். இப்படிச் செய்தால் 34 எழுத்துகள் குறைந்து விடும். தமிழ் மொழியின் தோற்றத்திலும் ஒரு மாறுதலையும் காண முடியாது அச்சு எழுத்துகளை வார்ப்போருடன் கலந்து

பேசினால், இடுகுறிக்கும் உயிர்மெய் எழுத்துக்கும் இடைவெளி இல்லாதபடி இதைச் செய்து விட முடியும், செய்ய முடியவில்லையென்றாலும் பாதகமில்லை. நூலிழை அளவுள்ள ஓர் இடைவெளி ஒன்றும் தொல்லைப் படுத்தாது.

அடுத்து 'கு', 'கூ' ஆகிய எழுத்துகளை எடுத்துக் கொள்வோம். கிரந்த எழுத்துகளாக உள்ள 'ஜ' வுடன் சேர்ந்து, ஜு, 'ஜூ' என்கிறோம். ஜும்மா மசூதி, ஜூலை என்று எழுதுகிறோம். அதைப் போல் தனித் தமிழ்ப் பற்றுடையவர்கள் கிரந்த 'ஜ' தேவையில்லை என்று விட்டாலும் கிட்டத்தட்ட அந்த ஒலியைத் தரும் 'ச' வுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம். இதன் காரணமாகவும் 34 எழுத்துகள் அச்சுப் பெட்டியிலும் (தட்டச்சு இயந்திரத்திலும்) குறைந்து விடும் இதற்கு மேல் எத்தகைய சீர்திருத்தமும் தமிழ் எழுத்துகளுக்குத் தேவையில்லை''.

iv. திரு. ஐராவதம் மகாதேவன் அவர்கள், 27.8.1987 'தினமணி' நாளிதழில் எழுதியுள்ள கட்டுரையில், உயிர்மெய் இகரம், ஈகாரத்திற்கு இப்பொழுது நாம் மேல் விலங்காகப் பயன்படுத்தும் குறியீடுகளையும், உகர, ஊகார உயிர்மெய்கட்குக் கிரந்த எழுத்துகளில் பயன்படுத்தப்படும் உகர, ஊகார உயிர்க் குறியீடுகளையும் ஏற்கலாம் எனக் கூறியிருக்கிறார்.

v. டாக்டர் கொடுமுடி சண்முகன் அவர்கள், தாம் எடுத்த வாக்கெடுப்பின் முடிவு கிரந்த எழுத்துகட்குப் பயன்படுத்தப்படும் குறியீடுகட்கு ( ு, ூ) சாதகமாக இருப்பதாகவே கூறுகிறார்.

vi. அண்ணா பல்கலைக்கழக, 'வளர் தமிழ் மன்றம்' 1988, ஆகஸ்ட் 6,7 தேதிகளில் 'அறிவியல் யுகத்திற்குத் தமிழ்' என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்கை நடத்தியது அதில் தமிழ் எழுத்துச் சீரமைப்புப் பற்றிப் பரிந்துரைக்க டாக்டர் வா.செ.குழந்தைசாமி அவர்கள் தலைமையில் ஒரு குழுவை அமைத்தது. குறியீடுகள் பற்றி அக்குழுவினுடைய கருத்தின் சாரம் பின்வருமாறு:

★ இகர, ஈகார உயிர்மெய் வரிசைகட்கு, இப்பொழுது

பயன்படுத்தும் மேல் விலங்குகளையொத்த குறியீடுகளையே வலது பக்கத்தில் பயன்படுத்தலாம்

★ உகர, ஊகார வரிசைகட்கு, கிரந்த எழுத்துகட்குப் பயன்படுத்தும் குறியீடுகளை அப்படியே ஏற்பதில் சிறு சிக்கல் இருக்கிறது. தமிழ் வரிவடிவத்தில் பயன்படுத்தப்படும் மற்ற உயிர்மெய்க் குறியீடுகள் இரு இணை கோட்டுக்குள் அமைகின்றன. ஆனால் ~, ೨, மேலிருந்து கீழ் இணை கோடு வரை வராது, பாதியில் நின்று விடுகின்றன. எனவே தமிழ் எழுத்துகளுடன் இவற்றைப் பயன்படுத்தும்பொழுது, பல் வரிசையில் ஆங்காங்கு பற்கள் உடைந்து விட்டது போன்ற இடைவெளி கீழ்ப் பகுதியில் தோன்றும். நாம் பயன்படுத்தும் கிரந்த எழுத்துகள் மிகவும் குறைவு ஆனபடியால் இவ்வேறுபாடு அவ்வளவாகத் தெரிவதில்லை. தமிழ் வரிவடிவத்தில் இக்குறியீடுகள் அடிக்கடி வருமாதலின் இக்குறைபாடு தவிர்க்கப்பட வேண்டும். எனவே, அடிப்படையில் இக்குறியீடுகளை ஏற்றுக்கொண்டு, அவற்றின் உருவ அளவில் சிறு மாறுதல் செய்யலாம். இக்குறியீடுகளைப் படுக்கை நிலையிலோ அல்லது மலையாள மொழியில் இருப்பது போன்று செங்குத்து நிலையிலோ பயன்படுத்தலாம். குறியீடுகள் பின்வருமாறு அமையும் (அட்டவணை -3).

அட்டவணை - 3

| இகரம் | ஈகாரம் | படுக்கை நிலை | | செங்குத்து நிலை | |
|---|---|---|---|---|---|
| | | உகரம் | ஊகாரம் | உகரம் | ஊகாரம் |



இகர, ஈகார, உகர, ஊகார உயிர்மெய் எழுத்துகட்கு, நான்கு குறியீடுகளைப் பயன்படுத்துவது என முடிவு செய்வோமாயின், தமிழ் மொழியை எழுதப் படிக்கக் கற்க வேண்டியன 39 வரிவடிவங்கள் மட்டுமே. அவை அட்டவணை - 4 - இல் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை - 4**

**முதன்மை எழுத்துகள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ | இ | உ | எ | ஒ | ஃ |
| ஆ | ஈ | ஊ | ஏ | ஓ | ஐ |
| க | ச | ட | த | ப | ற |
| ங | ஞ | ண | ந | ம | ன |
| ய | ர | ல | வ | ழ | ள |

**உயிர்மெய்க் குறியீடுகள்**

| | |
|---|---|
| ் | ா |
| ி | ீ |
| ு | ூ |
| ெ | ே |
| ை | |

அட்டவணை -3-இல் கொடுக்கப்பட்டிருக்கும் இகர, ஈகார, உகர, ஊகாரக் குறியீடுகளைப் பயன்படுத்தினால், இ, ஈ, உ, ஊ-உயிர்மெய் வரிசைகள், படங்கள் - 1, 2 இல் கொடுத்திருப்பது போல் அமையும் (பக். 175).

## 8. நன்மைகள்

**இச்சீரமைப்பு அளவில் சிறியது. நடைமுறைப்படுத்து வதற்கு எளிது. இதனுள் அடங்கியிருக்கும் நன்மை ஆலின் விதையுள் மரம் போன்றது.**

**i. குழந்தைகள், தமிழைக் கற்கும் மற்றவர், 107 குறியீடுகளை மனப்பாடம் செய்வதற்குப் பதிலாக 39 குறியீடுகளை மட்டும் கற்றால் போதுமானது.**

ii. 'எல்லாருக்கும் கல்வி' என்ற தத்துவம் நடைமுறைப் படுத்தப்படும இந்தக் காலகட்டத்தில், மொழிக்கல்வி மற்ற துறைகளைக் கற்பதற்கு ஒரு கருவியேயன்றி, அதுவே முழுக்கல்வி அன்று என்ற நிலைமை உருவாகியிருக்கும் சூழ்நிலையில், இச்சீர்திருத்தம் எந்த அளவுக்கு ஒரு சமுதாயத்தின் கல்வி மேம்பாட்டிற்கு உதவுகிறது என்பது நாம் எளிதில் அறிந்துகொள்ளக்கூடிய ஒன்றாகும். இந்தச் சமயத்தில் உகர, ஊகார உயிர்மெய் எழுத்துகளைக் கற்பதில் எவ்வளவு சிக்கல் இருக்கிறது, எவ்வளவு கால விரயம் ஏற்படுகிறது, எவ்வாறு கற்பவர்களுக்கு ஒரு வகையான விரக்தியும், வெறுப்புணர்ச்சியும் ஏற்படுவதைக் காண முடிகிறது என்பதைத் தாமே 35 ஆண்டு அனுபவத்தில் நேரில கண்டதாகக் கூறும் தமிழகப் புலவர் குழுத் தலைவர் டாக்டர் தி.முத்து-கண்ணப்பன் அவர்களின் கருத்தை நாம் மீண்டும் எண்ணிப் பார்ப்பது முறையாகும்.

iii. இந்தியத் துணைக் கண்டத்தின் பல மாநிலங்களில் தமிழர்கள் கணிசமான தொகையினராக வாழ்கின்றனர். அவர்களில் இளந்தலைமுறையினர் வீட்டில் தமிழ் பேசினாலும், தமிழ் எழுதும், படிக்கும் திறன் பெறாத சூழ்நிலை பரவி வருகிறது. 39 குறியீடுகளைக் கற்றால் போதுமானது என்றால் தமிழை எழுத, படிக்கக் கற்பது எளிதாகிவிடும். பள்ளியில் படிக்கும் வாய்ப்பு இல்லாத சூழ்நிலையில் கூட, வீட்டில் கற்பது இயலும். அயல் மாநிலத் தமிழர்கள், தமிழர்களாக, தமிழ் இலக்கியம், கலை, பண்பாடு இவற்றுடன் தொடர்பு உடையவர்களாக வாழ வேண்டுவது நீண்ட கால அளவில் நமது இனப் பாதுகாப்பிற்கும், வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்கும் தேவை. அப்படியெனின், அவர்கள் தமிழ் கற்றிருப்பது இன்றியமையாதது. அதற்கு இச்சீர்திருத்தம் பெரிதும் உதவும்.

iv. தமிழர்கள், 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்ற பண்பாட்டிற்குச் சொந்தக்காரர்கள். உலக நாடுகள் பலவற்றில் இந்தியத் தமிழர்களும், இலங்கைத் தமிழர்களும் பரவலாகக் குடியேறி நீண்ட காலமாக வாழ்கின்றனர். நாம் முன்பே

குறிப்பிட்டது போல இன்று தமிழர் ஒரு மொழியினர் பல நாட்டினர். எல்லா நாட்டிலும் சிறுபான்மையர் சிறுபான்மை இனம் எதுவாயினும், எங்கு வாழினும், அது தனது தனித் தன்மையைத் தக்க வைத்துக் கொள்ள நீங்கா விழிப்புத் தேவை, விவேகமான அணுகுமுறை தேவை, தொலைநோக்குத் தேவை. இவை இல்லாத இனம், பெரும்பான்மையினர் எனும் திரவத்தில் சிறிது சிறிதாகக் கரைந்து மறைந்து விடும். இலங்கை தவிர்த்து, பிற நாடுகளில்; சான்றாக, சிங்கப்பூர், மலேசியா, மொரீஷியஸ், தென் ஆப்பிரிக்கா, மேலை நாடுகள் போன்றவற்றில் தமிழர்கள் தம் தாய் மொழியைக் கற்பது ஒரு பொருளாதாரத் தேவையாக இல்லை; அவர்கள் தம் அன்றாட வாழ்க்கைக்குத் தமிழ் கற்க வேண்டுவது கட்டாயமில்லை **குழந்தைகள் தமிழ் கற்க வேண்டும் என்று பெரியவர்கள் விரும்பினாலும், கற்பது எளிதாக இருந்தால் தான் இளந்தலைமுறையினர் கற்பர்.** பல நாடுகளிலும் வாழும் தமிழர்கள் தமது இலக்கியத்தோடும், பண்பாட்டுடனும், கலைகளுடனும் தொடர்பறாது வாழ்வதற்குத் தமிழ் கற்பது அவசியத்திலும் அவசியம். தமிழ் இனத்தின் வலிமைக்கும், எதிர்கால வாழ்வுக்கும் இது மிகவும் முக்கியமானதாகும். **தமிழின் வலிமை கெடாது, வளம் கெடாது, எழில் கெடாது, அதன் இயற்கையோடிணைந்து, எழுத்திலும், இலக்கணத்திலும் எளிமை காண்பது அவர்கள் தமிழ் கற்கத் துணை செய்யும். தமிழ் இனத்தின் தேவைகள் அனைத்திலும் இது முக்கியமான தேவை.**

v. இந்தியாவின் இன்றைய மொழிக் கொள்கை, மும்மொழித் திட்டம், இந்தி பேசும் மாநிலத்தவர் தென்னக மொழி ஒன்றைக் கற்க வேண்டும் என்பது இத்திட்டத்தின் ஒரு கூறுபாடு. **இது முறையாக நடைமுறைப்படுத்தப்படுமானால், வட புலத்தினர் தென்னக மொழி ஒன்றைக் கற்க வேண்டும். மற்ற தென்னக மொழிகளை விட, 39 எழுத்துகளைக் கொண்ட தமிழ் மொழியைக் கற்பது அவர்கட்கு மிகவும் எளிதாகும். இதனால் தமிழ் கற்பதில் அவர்கள் அதிகம் ஆர்வம் காட்டக் கூடும். எளிமையில் எழில் இருக்கிறது; ஈர்ப்பு இருக்கிறது.**

vi. வரலாறு தோன்றிய காலத்திலிருந்து மனித வாழ்க்கையின் முன்னேற்றம், புதிய கருவிகளை உருவாக்குவதை, பயன்படுத்து வதைப் பொருத்தே அமைந்திருக்கிறது எளிய கருவியான கலப்பை தான், பல மகத்தான சாதனைகளை உள்ளடக்கிய வேளாண்மை யுகத்திற்கு வித்திட்டது. 15ஆம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்ட அச்சு இயந்திரம் தான் மேலை நாட்டினரின் முன்னேற்றப் பயணத்திற்கு வேகம் சேர்த்த வாகனமாகியது. நீராவி இயந்திரம் தொழிற்புரட்சியைத் தோற்றுவித்தது. கணிப்பொறி இன்றைய கல்வியுகத்திற்குக் கால்கோள் நாட்டியது. மனித சமுதாயத்தின் முன்னேற்றத்தில் கருவிகளின் பங்கு கணிசமானது. தந்தி, தொலையச்சு, தட்டச்சு, அச்சு, கணிப்பொறி போன்ற இன்றைய, இன்னும் உருவாகத்தகக எதிர்காலக் கருவிகள் எவையாயினும் பயன்படுத்தப்படுவதற்கு இவ்வரிவடிவச் சீரமைப்பு சாதகமான சூழ்நிலையை உருவாக்கும்.

vii. ஆங்கிலம், தமிழ் இணைந்த இரு மொழித் தொலையச்சு, இரு மொழித் தட்டச்சு போன்றவற்றை உருவாக்குவது எளிதாகும்.

**viii. சுருக்கமாகக் கூறுவதானால், எல்லாருக்கும் கல்வி என்ற தத்துவம் உருப்பெற்று, நடைமுறைப்படுத்தப்படும் இக்கல்வி யுகத்தில், ஒரு மொழியை எழுதப், படிக்கக் கற்பதற்கான, பயன்படுத்துவதற்கான கால அளவைக் குறைப்பதால் ஓர் இனத்திற்கு ஏற்படும் நன்மைகள் அளவிட இயலாதன.**

நாம் குறிப்பிட்ட நன்மைகள் புதியனவல்ல. அறிஞர் உணர்ந்தவையே. அதனால்தான், அரசியல் தலைவர்கள், தமிழ்ப் பேராசிரியர்கள், மரபு வழி தமிழ் கற்ற தமிழ் அறிஞர்கள், ஆய்வாளர்கள், அறிவியல் துறையினர் எனப் பலர் எழுத்துச் சீரமைப்பை வரவேற்றிருக்கின்றனர். சிலர், எதிர்த்து வந்ததையும், இன்னும் சிலர்-மிகச் சிலர் - எதிர்ப்பதையும் நாம் மறுக்கவில்லை

## 9. பிறர் செய்துள்ளனர்

ஏதோ நாம் மட்டும் தான் எழுத்துச் சீரமைப்பைப் பற்றிக்

கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறோம் என யாரும் நினைக்க வேண்டுவதில்லை. பலர் செய்துள்ளனர். இதைப்பற்றி, 'தமிழ் எழுத்துச் சீரமைப்பு'* என்ற எனது நூலில் விரிவாகக் கூறியுள்ளேன். சில முக்கியச் செய்திகள் பின்வருமாறு:

அண்டை மாநிலமான கேரளத்தில், 1971இல் செய்த சீரமைப்பின் மூலம், ஏறத்தாழ 75% குறியீடுகளை மலையாள மொழியில் குறைத்து விட்டனர். அமைதியாக, ஆரவாரமின்றி மாபெரும் சீரமைப்பை ஓர் அரசாங்க ஆணை மூலம் வெற்றிகரமாகச் செயல்படுத்தி விட்டனர்.

பயிற்றுமொழி என்று வரும்பொழுது நாம் அடிக்கடி உதாரணம் காட்டும் ஜப்பானிய மொழி வலப்புறத்தில் தொடங்கி, மேலிருந்து கீழாகச் செங்குத்தாக எழுதப்பட்டு வந்தது. இன்று அறிவியல், தொழில்நுட்பத் துறைகள் முழுவதிலும், தேவையை முன்னிட்டு, படுக்கையாக, இடமிருந்து வலமாக எழுதப்பட்டு வருகிறது. இது எவ்வளவு பெரிய மாற்றம் என்பதை நாம் எண்ண வேண்டும்.

கஞ்சி (Kanji) என்பது தான் ஜப்பானிய வரிவடிவம். அறிவியல், தொழில்நுட்பத் துறையில் ஏற்படும் வளர்ச்சியைத் தன்வயமாக்கிக் கொள்ள, கஞ்சி வரிவடிவம் அவ்வளவு ஏற்றதாக இல்லை. எனவே, கதகானா (Katakana), ஹிரகானா (Hirakana) என, புதிதாகவே இரு துணை வரிவடிவத்தை ஜப்பானியர் உருவாக்கிப் பயன்படுத்தி வருகின்றனர்

சீனா 1954இல் 'மொழிச் சீர்திருத்தக் குழு' ஒன்றை அமைத்தது அக்குழுவின் பரிந்துரைகளில் முக்கியமானது, குறைந்தது பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட அந்த மொழியின் எழுத்துகளை, அடிப்படையான, கற்றுக்கொள்ளத் தேவையான, 2236 எழுத்துகட்குக் குறைத்தது ஆகும்

★ வா செ குழந்தைசாமி . தமிழ் எழுத்துச் சீரமைப்பு : பாரதி பதிப்பகம், சென்னை, 1990.

அறிவியல், தொழில்நுட்பம், தத்துவம், இசை போன்ற பல துறைகளில் முன்னேறியது ஜெர்மன் மொழி. அது இந்த நூற்றாண்டின் முதல் கால் பகுதியில் கூட காத்திக் (Gothic) வரிவடிவத்தில் எழுதப்பட்டு வந்தது. எளிமை கருதி, ரோமன் வரிவடிவத்திற்குச் சென்று விட்டனர். ஜெர்மன் மொழியின் தேவைக்கேற்ப இரண்டு எழுத்துகளை அதிகமாக ரோமன் வரிவடிவத்திற்குச் சேர்த்திருக்கிறார்கள்.

இந்தோநேஷியா, தனது மொழியின் பழைய வரிவடிவத்தை முழுமையும் கைவிட்டு விட்டது. 'பாஷா இந்தோநேஷியா' என்று அழைக்கப்படும் இந்தோநேஷிய மொழி, ரோமன் வரிவடிவத்தில் எழுதப்படுகிறது. மலேசியாவிலுள்ள மலேய் மொழியின் வரிவடிவமும் அதுவே

**எனவே, பாரம்பரியம் மிக்க பண்டை மொழி, முன்னேறிய நாட்டினர் மொழி, அண்மைக் காலத்தில் சீரமைக்கப்பட்ட மொழி என எல்லா மொழிக் குடும்பத்தினரும் தேவைக்கு ஏற்ப எழுத்துச் சீரமைப்பை மேற்கொண்டே வந்திருக்கிறார்கள்.**

## 10. செயற்படுத்துதல்

இதில் பரிந்துரைக்கப்பட்ட வரிவடிவச் சீரமைப்பு ஏற்றுக் கொள்ளப்படுமானால், அதை நடைமுறைப்படுத்துவது பற்றிய பிரச்சினை எழும். தற்போதைய வரிவடிவத்தில் தமிழைக் கற்ற யாருக்கும் புதிய வரிவடிவம பெரிய பிரச்சினையாக இராது. மாற்றம் மிக எளிதானது அதுவும் குறிப்பாக, உகார, ஊகார வரிசைகளில் தான். இரண்டு குறியீடுகளை நினைவிற்கொண்டு படிப்பது சிரமமன்று. வலப்புறத்தில் உயிர்க் குறியீடுகளைப் பயன் படுத்துவதும் நாம் பழக்கப்பட்ட ஒன்று எவ்விதப் பயிற்சியும் இன்றி, புது வரிவடிவத்தில் நாம் எழுதலாம், படிக்கலாம் ஆனால் புது வரிவடிவத்தில் தமிழைக் கற்பவர்கள், பழைய வரிவடிவத்தில் உள்ள நூல்களைப் படிப்பது கடினம். நாளை பள்ளியில் சேரும் குழநதைகள் பழைய நூல்களைப் படிக்க விரும்பும்போது தான் பிரச்சினை எழும்

i. ஓர் ஐந்து ஆண்டுகட்கு, மாணவர்கட்கு இரு வரிவடிவங் களையும் கற்றுத்தரலாம்.

ii. புதிய நூல்கள், மறுபதிப்பாக வரும் பழைய நூல்கள் அனைத்தையும் புது வரிவடிவத்தில் பதிப்பிக்கலாம்.

iii. அவ்வளவாக மறுபதிப்புகள் வர வாய்ப்பு இல்லாத பழந்தமிழ் நூல்களை, திட்டமிட்டு, வரிசைப்படுத்தி, புது வரிவடிவத்தில் பதிப்பிக்க ஏற்பாடு செய்யலாம். போதுமான நிதி ஒதுக்க இயலுமாயின், அச்சுத்தொழில் அடைந்திருக்கும் இன்றைய வளர்ச்சியில், முக்கியமானவை என்று கருதப்படும் பழைய நூல்கள் அனைத்திற்கும் ஐந்து அல்லது அதிகமாய்ப் போனால் பத்து ஆண்டுகட்குள் மறுபதிப்புக் கொண்டு வந்து விடலாம்.

iv. **இங்கு நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது, பழைய வரிவடிவத்தில் தமிழைக் கற்றவர்கட்குப் புதிய வரிவடிவத்தைப் புரிந்து கொள்வதில் எந்தவிதச் சிரமமும் இராது என்பதுதான்.**

## 11. முடிவுரை

இப்பொழுது இருக்கும் வரிவடிவத்தை வைத்துக்கொண்டு சமாளிக்க இயலாதா என்ற கேள்வி எழுப்பப்படுகிறது. சமாளிக்க இயலும் இதுவரை சமாளித்தும் இருக்கிறோம். வீரமாமுனிவர் செய்த சீரமைப்பு இல்லாமலும் சமாளித்திருக்கலாம். பெரியார் நடைமுறைப்படுத்திய மாற்றம் இல்லாமலும் சமாளித்திருக்க லாம். இடுப்பில் கல்லைக் கட்டிக் கொண்டு நீந்துவதும் இயலும்: கரையும் சேரலாம். ஆனால் வேகம் குறையும், இலக்கை அடையக் காலம் அதிகமாகும். ஆற்றல் விரயம் ஆகும் இவற்றைத் தவிர்ப்பது இயலுமாயின் தவிர்ப்பது தேவை. மனித வாழ்க்கை தசையாலும், எலும்பாலும் ஆனதன்று அது காலத்தால் ஆனது மனித சமுதாயம் காலெடுத்து வைத்திருக்கும் கல்வியுகத்தில், **"அரை நொடி நேரம் நின்றோம் யாம்: ஆயிரம் காதம் பின்னடைந்தோம்" என்ற வேகத்தில் கல்வியறிவு வளர்ந்து கொண்டிருக்கிறது. இன்று காலத்தை வீணாக்கும் இனத்தின்**

**நாளைய வாழ்வு நலியும். ஒரு சமுதாயத்தின் வாழ்க்கைச் சாதனம் ஒவ்வொன்றிலும் வேகமும் விறுவிறுப்பும் தேவை. ஒரு மொழி உயிரற்ற சடப் பொருள் அன்று. அது உயிருள்ளது. காலத்துக் கேற்ப வளர்வது; சூழ்நிலைக்கேற்ப மாறுவது; மாறுவதன் மூலம் வளர்வது.**

டார்வின் தத்துவம் பறவைகள், விலங்குகள், மனிதர்கள் போன்றவற்றிற்குத் தான் பொருந்தும் என்பது இல்லை அது மொழிகட்கும் பொருந்தும், மாற்றங்கட்கு ஈடுகொடுக்கும் வலிமையுள்ள மொழிகள் தான் நிலைக்கும். மற்றவை வலியிழந்து, மங்கி, மறைந்துவிடும். மொழிகளின் எதிர்காலம் பற்றி ஆய்ந்த ஜார்ஜ் மோன்பியோ* The Guardian என்ற பத்திரிகையில் 1995-இல் எழுதிய கட்டுரையில் ''இப்பொழுதுள்ள மொழிகள் சுமார் 6000; இவற்றில் ஒரு நூற்றாண்டுக்குப் பின், ஏறத்தாழ 300 மொழிகள், அதாவது 5% தான் நிலைத்து நிற்கும்: மற்றவை மறைந்துவிடும்'' என்கிறார். வாழும் மொழிகள் 300இல் நம் மொழியும் ஒன்றாக இருக்க வேண்டும். அதற்கான விழிப்பு நமக்குத் தேவை. இந்தச் சமயத்தில் 1985இல் ''அறிவியல் தமிழ்''** என்ற நூலில் நான் கூறியுள்ள ஒரு கருத்தை இங்கு மேற்கோள் காட்டுவது பொருந்தும்.

> ''மனித சமுதாயம் தோன்றிய நாள்களிலிருந்து மாற்றங்கள் தொடர்ந்து இருந்து வந்திருக்கின்றன. அவை பழமைத் தொடர்பைத் துண்டிக்காத மாற்றங்கள். மிக மெதுவான மாற்றங்கள். ஒரு தலைமுறை தன் காலத்தில் ஏற்படும் மாற்றங்களை அவ்வளவாக உணர இயலாத அளவில் மெதுவாக நிகழ்ந்தவை. இன்றைய மாறுதல்கள் அப்படிப் பட்டவை அல்ல. அவை மகத்தானவை. பன்மடங்கு விரைவானவை. ஒவ்வொரு படியாக ஏறி உயரச் செல்வது

---

★ டாக்டர் பிரேமா நநதகுமாா · தினமணி, 13, அக்டோபர் 1995

★★ வா செ. குழநதைசாமி அறிவியல் தமிழ்
பாரதி பதிபபகம், சென்னை 1985

போன்று இல்லாது, மின்தூக்கி (Lift) மூலம் ஏறுவதை யொத்தவை. பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, செயற்கைக்கோள் வழிச் செய்தி பரப்பும் வசதி, பேசும் படம், ஒலி நாடா (Audio Cassette), ஒளி நாடா (Video Cassette) போன்றவை, வலியார் மொழி வளரவும், மெலியார் மொழி தாழவும் துணை போகின்றன. விழிப்பும், வேகமும் இல்லாத இனம், தனது பண்பாட்டையும், பாரம்பரியத்தையும் வருங் காலத்தில் பாதுகாக்க முடியாது. இன்று ஒரு மொழியையோ, இனத்தையோ எதிர்நோக்கி இருக்கும் பிரச்சினைகள் தன்மையில், பரிமாணத்தில் முற்றிலும் வேறானவை. எனவே, பழைய அனுபவங் களோடு செய்யும் ஒப்பீடுகள் பயனற்றவை.

இந்தக் கால வெள்ளத்தை அறியாது, படகின்றி, கப்பலின்றி, ஆற்றுப் படுகையில் உல்லாசமாக நடந்து கொண்டிருப்பவர்கள் அடித்துச் செல்லப்பட்டு விடுவார்கள். இது தவிர்க்க முடியாதது. 'நாம் எத்தனையோ எதிர்ப்புகளைச் சமாளித்தோம்; படையெடுப்புகளைப் பார்த்தோம்; நாம் இதுவரை காணாத கண்டங்களா?' என்பது போன்ற வசனங்களும், அணுகு முறைகளும் இன்று பொருந்தா.''

மூவாயிரம் ஆண்டிற்கும் மேற்பட்ட தனது வரலாற்றில் இதுவரை கண்டிராத சோதனைக் காலத்தைத் தமிழ் எதிர் கொள்கிறது. பல நூற்றாண்டுத் தேக்கத்திற்குப் பின், கடந்த நூற்றாண்டுகளின் இழப்பை ஈடு செய்வதுடன், கல்வியுகத்தின் இன்றைய வளர்ச்சி வேகத்திற்கு ஈடு கொடுக்க வேண்டிய கட்டாயத்தில் நம் மொழி இருக்கிறது. இதன் பரிமாணங்களை நாம் அளவிட வேண்டும் அறிவுத் துறையில் முன்னேறிய நாடுகளின் மொழிகள் எங்கோ இருக்கின்றன எங்கிருக்கிறோம் என்பது பற்றிய கணிப்போ, தெளிவோ. என்ன செய்ய வேண்டும் என்பது பற்றிய முடிவோ இன்றி நாம் எங்கோ இருக்கிறோம் நாம் கடக்க வேண்டிய பாதை நெடிது; நம் பயணம் பெரிது வரலாறு கண்டிராத

வளர்ச்சிக் காலத்தில் நாம் வாழ்கிறோம். அதன் வளர்ச்சி வேகத்திற்கு ஈடு கொடுத்து, வளர்ந்த நாடுகளொடு தோளொடு தோள் சேர்ந்து, இணையாக நடை போட நமக்குத் துணை நிற்கும் வாகனமாக நமது மொழி உருப்பெற வேண்டும். ஒரு மொழி பகைவர்களாலும் நலியக்கூடும். சில நேரங்களில் பற்றாளர் களாலும் நலியக்கூடும். பற்றும் பாசமும் துணையாக இருக்க வேண்டும்; சுமையாக மாறிவிடக் கூடாது. பொன் வளைகளும் விலங்காகலாம்' புகுந்த வீடும் சிறையாகலாம். திறந்த மனத்துடன் தேவைகளை ஆய்வதும், அவற்றை முறையாக எதிர்கொள்வதும், முன் நோக்குடன் அவற்றை நிறைவேற்றுவதும் வளரும் சமுதாயத்திற்கு இன்றியமையாதது. அதற்கு ஏற்ற அணுகுமுறை நமது இன்றைய தேவை; அவசரத் தேவை

படம் -1



படம் - 2



# இணைப்பு

தமிழ் எழுத்துச் சீரமைப்பின் தேவை பற்றிப் பல்வகைத் துறைகளிலுமிருந்து, பல அறிஞர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர் பல நூல்கள் வெளிவந்துள்ளன. அவர்களுள் தமிழ் எழுத்துச் சீர்திருத்த இயக்கத்தினர் எனக் கருதப்படுபவர்களை விடுத்து, நடுநிலையில் உள்ள, தமிழர்களால் பெரிதும் மதிக்கப்படுகிற, எழுத்துச் சீரமைப்பின் பரிமாணங்களை, அண்மைக் கால, நீண்டகால விளைவுகளை அறியும் திறன் பெற்ற தமிழ்ப் பெரியவர்களுள் சிலர் கருத்தை மட்டும் இந்த 'இணைப்பில் கொடுத்துள்ளோம்

திரு தி.சு அவிநாசிலிங்கம் செட்டியார் அவர்கள் அமைத்த எழுத்துச் சீரமைப்புக் குழுவில் உறுப்பினராக இருந்த பேரா தெ.பொ.மீ. அவர்கள் 1952இல் Tamil Culture என்ற பத்திரிகையில் எழுதியுள்ள கட்டுரையில் பரிந்துரைத்துள்ள மாற்றங்களில் மூன்று குறிப்பிடத்தக்கன.

i. ஆகார, ஐகார உயிர்மெய் வரிசையில் பெரியார் கருத்தை ஏற்கலாம்.

ii. இகர, ஈகார உயிர்மெய் வரிசையில், மேல் விலங்காக இடப்படும் குறியீடுகளை உயிர்மெய் அகரத்துடன் இணைக்காமல் தனியே வலப்புறத்தில் எழுதலாம்.

iii. உயிர்மெய் உகர, ஊகாரத்திற்கு கிரந்த எழுத்தில் பயன்படுத்தப்படும் ு, ூ குறியீடுகளை ஏற்கலாம்.

இம்மாற்றங்கள் அவர் பங்கு பெற்ற எழுத்துச் சீரமைப்புக் குழுவின் பரிந்துரைகளிலும் இடம் பெற்றிருக்க வேண்டும். எனவே அதன் உறுப்பினர்களான திரு.டி எஸ் சொக்கலிங்கம், பேரா ரா பி.சேதுப்பிள்ளை, பேரா. மு.வ.போன்றோருக்கும் இம்மாற்றங்கள் ஏற்புடையன எனக் கொள்ளலாம்.

எழுத்துச் சீரமைப்புப் பற்றி பேரா. மு.வ., அவர்களின் கருத்து (எழுத்துச் சீர்திருத்தம், பெரியார் சுய மரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடு -1973) தெளிவானது. அது பின்வருமாறு:

> ''... ஆகவே பனை ஓலையில் இரும்பாணியால் எழுதுவதற்கு உதவியாக அமைக்கப்பட்ட பழங்கால எழுத்து வடிவங்களை இனியும் போற்றிக் கொண்டிருப்பதில் பொருள் இல்லை. தட்டெழுத்துப் பொறிக்கும் அச்சுப் பொறிக்கும் ஏற்ற வகையில் அவற்றைச் சிறிது மாற்றி அமைக்க முற்பட வேண்டும் இந்த வகையான முன்னேற்றம் கருதிய சீர்திருத்தம் செய்யும்போது, கண்மூடித்தனமான பழைமைப் பற்று- மொழிப்பற்று என்ற பெயராலும் – குறுக்கிடலாகாது.''
>
> '' . கி ஙி சி . என்ற வடிவங்களைத் தட்டெழுத்திலும் அச்சிலும் கொண்டால் எத்தனை வடிவங்கள் தேவைப்படுகின்றன. உயிர்க் குறியீட்டைத் தனியே அமைக்கும் முறையை மேற்கொண்டால் ... .பதினேழு வடிவங்கள் குறைகின்றன.''
>
> ''இவ்வாறே உ, ஊ, ஐ - முதலிய உயிர்க் குறியீடுகளைச் சேர்ப்பதிலும் துணிந்து சீர்திருத்தம் மேற்கொண்டால் தான் மொழிக்கும் சமுதாயத்திற்கும் நன்மை விளையும் ''
>
> ''இவவாறு நம் முன்னேற்றத்திற்கு உதவியான எழுத்துச் சீர்திருத்தம பற்றி ஒவ்வொருவரும் எண்ணிப் பார்க்க வேண்டும் இந்த முற்போக்கிற்கு முட்டுக்கட்டை இடுவதற்கு யாரும் முன்வராதவாறு இதில் உள்ள நன்மைகளைப் பலர்க்கும் எடுத்துரைத்து விளக்க வேண்டும் ''

தமிழறிஞர் கி.வா.ஜ.. அவர்கள் ஜனவரி 1979- 'கலைமகள்' இதழில் கூறியுள்ள கருத்தைக் கீழே கொடுத்துள்ளோம்.

> ''எழுத்து வடிவத்தைக் குறைத்து ஒரு சீரான குறியீடுகளை அமைக்க வேண்டுமென்ற முயற்சி பல ஆண்டுகளாக இருந்து வருகிறது , .உயிர்மெய்யில் கி, ஙி முதலிய இகரம் இணைந்த எழுத்துகளுக்குத் தனியே பதினெட்டு அச்சுகள் தேவைப்படுகின்றன. அப்படியே உயிர்மெய் ஈகாரங்களுக்கும் பதினெட்டுத் தனித்தனி அச்சுகள் வேண்டியிருக்கின்றன. அந்த இரண்டு குறியீடுகளையும் உயிர்மெய்யோடு ஒப்பிடாமல் காலைப் போலவும் இரு சுழிகளைப் போலவும் தனியே அமைத்தால் இரண்டே குறியீடுகள் இருந்தால் போதும் 34 வடிவங்கள் குறைந்து விடும் . . உயிர் மெய் உகரத்தில் ஒரே சீரான குறியீடுகள் இல்லை., அவை மூன்று வேறு வடிவங்களைப் பெறு கின்றன . இந்தக் குறியீடுகளிலும் ஒரு சீராகவும், ஒட்டாமல் தனியே அமைவதாகவும் ஒன்று இருந்தால் பதினேழு வடிவங்கள் குறையும் ...உயிர்மெய் ஊகாரமும் இத்தகையதே.''

தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை அவ்வளவாக ஆதரிக்காத வர்களாலும் பெரிதும் மதிக்கப்படுபவர் புலவர் அ.மு.குழந்தை. அவர் ''தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்'' என்ற தமது நூலில் பின்வருமாறு கூறுகிறார்:

> ''... பன்னீருயிரும், ஒரு மெய்யோடு கூடியன 12 உயிர்மெய் எழுத்துகளைச் சொல்லத் தெரிந்து கொண்டால், அப்படியே ஏனை உயிர்மெய்யெழுத்துகளைச் சொல்லத் தெரிந்து கொள்ளலாம் ஆனால் 131 வடிவெழுத்துகளையும் கற்றுக்கொள்வதற்கு இளங்குழந்தைகட்குப் பல மாதங்கள் ஆகின்றன...தமிழ் எழுத்துப் பெட்டியில் அறைகள் மிகுதியாக உள்ளமையின் அச்சுக் கோத்துப் பழகவும் நாளாகிறது. அச்செழுத்துகள் வார்ப்பதும் கடுமையாக

உள்ளது. தட்டெழுத்துப் பொறி செய்யக் கடுமையாக இருப்பதோடு விலை மிகுதியும் அச்சடித்துப் பழகக் காலமும் ஆகின்றன. அச்சடிப்பதும் எளிதாக இல்லை. இதனால் அரசியல், அலுவலகங்கள், தொழிலகங்கள், வணிகமனை முதலியவற்றில் தமிழ் மொழி தன்னிறைவு பெறாமல் இருந்து வருகிறது.''

பன்மொழிப் புலவர் கா.அப்பாதுரையாரின் அணுகு முறையை அவரது கீழ்க்காணும் கூற்றின் மூலம் அறியலாம்.

''பெரியார் செய்த சீர்திருத்தம் வரவேற்கத் தக்கது. அதை அரசு ஏற்றுக் கொண்டிருப்பதும் பாராட்டத் தக்கது.''

''நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்வது இதுதான். பெரியார் செய்த மாறுதல் மிகக் குறைந்த அளவு தான். இந்த அரசு இன்னும் மாறுதலைச் செய்ய ஆராய்ச்சியாளர்களை ஊக்குவிக்க முன்வர வேண்டும்.''

எழுத்துச் சீரமைப்புப் பிரச்சினையில் தி.மு.க வின் அணுகுமுறையை, டாக்டர் கலைஞர் அவர்கள் 'முரசொலி'யில் எழுதியுள்ள கருத்துரை மூலம் காணலாம். முறையான மாற்றங்களைப் பெரியார் வழி நின்று மேற்கொள்வதே தி.மு.க வின் குறிக்கோள் என்று தெளிவாகவே கூறுகிறார்.

''பெரியார் எழுத்துச் சீர்திருத்தத்தை அண்ணா முதல்வராக இருந்த காலத்திலும், நான் முதல்வராக இருந்த காலத்திலும் நடைமுறைக்குக் கொண்டுவராததற்குக் காரணம் அந்தச் சீர்திருத்த நோக்கத்தை ஏற்றுக்கொள்ளாததால் அல்ல!

அந்த நோக்கத்தை ஏற்றுக்கொண்டு கழக அரசு காலத்தில் தமிழறிஞர்களை அழைத்து நானும் கல்வியமைச்சராக இருந்த நாவலர் அவர்களும், மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சராக இருந்த பேராசிரியர் அவர்களும் கலந்துரையாடியிருக்கிறோம்.

மறைந்த டாக்டர் மு.வரதராசனார் அவர்கள் அதில் பெரிதும் ஆர்வம் காட்டினார்கள்.

அவரது மறைவுக்குப் பிறகும் கூட தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் பற்றி நீண்ட நெடிய விவாதங்களைத் தமிழறிஞர்களின் குழுவுடன் இணைந்து நாங்கள் நடத்தியிருக்கிறோம்.

பெரியார் கூறிய எழுத்துச் சீர்திருத்தத்தையொட்டி இன்னும் பல வசதியான மாற்றங்களைச் செய்ய முடியுமென்று தமிழறிஞர் பெருமக்கள் அப்போது கருத்துத் தெரிவித்தனர்.

ஓரளவு முழுமையான முடிவினைக் கண்டு, அதன் பிறகும் விரிவான அளவில் அந்த முடிவினை விவாதித்து அதற்குப் பிறகு அதனை நடைமுறைப் படுத்த முயற்சி மேற்கொள்ள லாம் என்பதே அன்றைக்கு இருந்த கழக அரசின் எண்ணமாக இருந்ததே தவிர, எழுத்துச் சீர்திருத்தத்தைப் புறக்கணித்துவிடும் போக்கு எள்ளளவும் கிடையாது ''

★ ★ ★

''எனவே, தந்தை பெரியார், தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்திற் கான வழி காண்பதற்கு 'ஒளி விளக்கை' நமது கையில் வழங்கியுள்ளார். அந்த விளக்கினை ஏந்தி - கல்லையும் முள்ளையும் அகற்றி - மேடு பள்ளங்களைச் சமப்படுத்தி - நமது தமிழ் மொழியை எளிமையாகக் கையாளவும் - பரவலாகக் கையாளவும் - பொதுவான ஒரு பாதையை அமைக்க வேண்டும்! அந்த நல்ல முயற்சிக்குப் பெரியார் அவர்களின் எழுத்துச் சீர்திருத்தக் கருத்து நிச்சயமாக வெளிச்சம் தரக் கூடியதாகும்.''

'தமிழகப் புலவர் குழு' எழுத்துச் சீர்திருத்தத்தை முன்பு ஆதரித்த நிறுவனமேயாகும் பின்னர் ஏனோ தனது முடிவை மாற்றிக் கொண்டது. அதன் சார்பில் அமரர் பேரா சஞ்சீவி

1975-லேயே கீழ்க்காணும் அறிக்கையை விடுத்துள்ளார்:

> ''உயிர் மெய் எழுத்துகளில் 'ஆகார' வரிசையில் எல்லா எழுத்துகளும், ஒரு சீராக கால் (ா) பெறும். சிறப்பாக ணா, றா, னா ஆகிய மூன்று எழுத்துகளும் எழுதப்பெறும்.
>
> உயிர்மெய் எழுத்துகளில் 'ஐகார' வரிசையில் எல்லா எழுத்துகளும் 'ை' குறியீடே பெறும். தும்பிக்கை வளைவுகள் நீக்கப்படும். இதன் விளைவாக ணை, னை, லை, ளை ஆகிய நான்கு எழுத்துகளும் இவ்வாறு எழுதப்பெறும்.
>
> உயிர் மெய் எழுத்துகளில் உகர, ஊகார வரிசையில் முறையே, இடம் பெறும். இதனால் எல்லா எழுத்துகளும் ஒரு சீரான மாற்றம் பெறும்.''

எழுத்துச் சீரமைப்புக்கு ஆதரவாக நாம் மேற்கோள் காட்டியுள்ள பெரியவர்கள் யாரும் சாமான்யர்கள் அல்லர் தமிழ் அறிஞர்கள். ஆழ்ந்த தமிழ்ப் பற்றுடையவர்கள். மாற்றத்தின் பரிமாணங்களை உணர்ந்தவர்கள். அதன் இன்றைய, நாளைய விளைவுகளைக் கணிக்கும் கற்பனைத் திறன் கொண்டவர்கள் இவ்வண்ணம் பல தரப்பினரின் உறுதியான ஆதரவு இருந்தும், சீரமைப்புப் பற்றிய நடவடிக்கை ஏனோ தேங்கியே நிற்கிறது அரசும், அரசியல் தலைவர்களும், அறிஞர் பெருமக்களும் இதில் ஆர்வம் காட்ட வேண்டுவது நமது முக்கியமான தேவைகளுள் ஒன்று.

# 12

# செவ்வியல் தமிழ் இலக்கிய வரிசை

## 1. இரு நதிகளின் சங்கமம்

"பல மொழிகளில் எழுதப்பட்டிருப்பினும் இந்திய இலக்கியம் என்பது ஒன்றுதான்" என நமது முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறினார் இது தத்துவ அளவில் உண்மையாயினும், நடைமுறையில் உண்மையாக வேண்டுமெனின், இந்திய இலக்கியம், இலக்கிய உலகை, இந்திய மக்களை எட்ட வேண்டும் அவ்வாறு எட்டுவதற்கு அவை இநதிய மொழிகளில், உலக மொழிகளில் மொழி பெயர்க்கப்பட வேண்டும். இந்தியத் துணைக் கண்டத்தைப் பொருத்தவரை, கிறித்துவ சகாப்தத்திற்கும் முற்பட்ட இலக்கியப் பாரம்பரியம் உள்ள மொழிகள் இரண்டு. அவை வடமொழி, தமிழ் இரண்டாயிரம் ஆண்டுக்கு மேற்பட்ட இலக்கியப் பாரம்பரியம் உள்ள மொழிகள், பெருங்காப்பியங்களைக் கொண்ட மொழிகள் உலகில் மிகச் சிலவேயாகும். அவற்றுள் ஐரோப்பாவில் கிரேக்கம், இலத்தீன், இந்தியாவில் தமிழ், வடமொழி இந்தியப் பண்பாடு என்பது, இவ்விரு மொழிப் பாரமபரியங்களின் சங்கமம் ஆகும் இது ஆய்வுலகம் ஒப்புக் கொண்ட உண்மையெனினும தமிழின் பங்களிப்பு பரவலாக அறியப்படவில்லை

## 2. முழுமை இல்லை

இந்தியத் துணைக் கண்டத்திற்கு உள்ளும், அதன் எல்லைகளைத் தாண்டியும், பெருங்காப்பியங்கள் என்று வரும்பொழுது, இராமாயணமும், மகாபாரதமும் அறிமுகமான அளவிற்குச் சிலப்பதிகாரமும், மணிமேகலையும் அறிமுகமாக வில்லை. கௌடில்யரின் அர்த்த சாத்திரத்தையும், மனுவின் தர்ம சாத்திரத்தையும் அறிந்த அளவிற்கு இந்தியா வள்ளுவரை அறியவில்லை. காளிதாசனைப் படிப்பதற்கு உருவான வாய்ப்பு, கம்பனைப் படிப்பதற்கு உருவாக்கப்படவில்லை. உலக இலக்கியப் பாரம்பரியத்தில் இணையற்ற இடத்தைப் பெறும் தகுதியுடையதென மேலைநாட்டு அறிஞர்களும் மதிப்பிடும் சங்க நூல்கள், இந்தியாவில், அயல்நாடுகளில் இலக்கிய ரசிகர்கள் மத்தியில் கூட, பரவலாக இடம் பெறவில்லை. இந்த நிலை பற்றி இந்திய இலக்கிய உலகம் சிந்தித்ததாகவோ, கவலைப்பட்ட தாகவோ தெரியவில்லை.

தமிழ் மொழியில் இருக்கும் பண்டை இலக்கியங்கள், இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே இந்திய இலக்கியப் பாரம்பரியம் அடைந்திருந்த உன்னத நிலைக்குச் சான்றுகள் அவை தமிழுக்கும், தமிழர்கட்கும் மட்டும் பெருமை சேர்ப்பனவல்ல இந்தியத் துணைக் கண்டத்திற்கே பெருமை சேர்ப்பன வாழ்வியல் பற்றிய வள்ளுவரின் கருத்தில் காணப்படும் தெளிவும, ஆழமும், நுட்பமும் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு மானிடம் அடைந்திருந்த மன வளர்ச்சியின் உச்ச நிலைக்கு ஓர் உரைகல் ஆகும் பழந்தமிழ் இலக்கியம் எனும் சுரங்கம் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்படவில்லை மக்கள் மத்தியில் புழங்கும் நாணயமாக அவை வடிவம் பெறவில்லை. 'யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று இரண்டாயிரம் ஆண்டுக்கு முன்பே பாடியவன் இந்தியக் கவிஞன் என்று, சோவியத் ஒன்றியத்திற்குச் சென்றபொழுது, அன்று பாரதப் பிரதமராக இருந்த திருமதி இந்திராகாந்தி அவர்கள் கூறிப் பெருமைப்பட்டார் அதைச்

செய்தித்தாளில் படித்தபொழுது நாமும் ஓரங்குலம் உயர்ந்தோம். ஆனால், 'யாதும் ஊரே யாவரும் கேளிர்'; 'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்', 'உள்ளத்தனையது உயர்வு', 'புகழெனின் உயிரும் கொடுக்குவர், பழியெனின் உலகுடன் பெறினும் கொள்ளலர்'; 'செயற்கரிய செய்வர் பெரியர்'; 'யான் பெற்ற பேறு பெறுக இவ்வையகம்'; 'என் கடன் பணி செய்து கிடப்பதே', 'நாமார்க்கும் குடி அல்லோம்' போன்ற எண்ணற்ற சான்றோர் வாக்குகள், வேதங்கள் போலவோ, உபநிடதங்கள் போலவோ, கீதை போலவோ, கல்வியுலகு மேற்கோள் காட்டும் ஞான வாக்குகளாக இடம் பெறவில்லை தேவாரமும், திருவாசகமும், திவ்வியப் பிரபந்தங்களும் பாரதம் முழுவதும் பரவிய பக்தி மார்க்கப் புயலின் மையமென்பது பரவலாக அறியப்படவில்லை அந்த அளவுக்கு இந்தியர்களாகிய நாம் நமது இலக்கியப் பாரம்பரியத்தின் முழுமையை அறியாதவர்களாகவே இருக்கிறோம்

மேலை நாடுகளிலாகட்டும், இந்தியாவிலாகட்டும், பண்டைப் பெருங்காப்பியங்கள் என்பவை காதலையும், வீரத்தையும் பொருளாகக் கொண்டவை; அரசன், அரசி அல்லது இளவரசன், இளவரசியைக் கதாநாயகர்களாக, கதாநாயகிகளாகக் கொண்டவை அந்தப் பின்னணியில், அந்த இலக்கிய மரபுச் சூழ்நிலையில், சிலப்பதிகாரம் காப்பிய இலக்கணத்திற்குப் புதுமை சேர்க்கிறது சிலப்பதிகாரக் கதாநாயகன் செல்வம்மிக்க வணிகன் மகன்; ஏழையல்லன், ஆயினும், அவன் கோன் அல்லன்; ஒரு குடிமகன். குடிமக்களிலும் நால் வருணத்தில் மேல் வருணமான அந்தணன் அல்லன்: அரசிளங் குமரனல்லன்; அரச பரம்பரையினன் அல்லன்; அரசர்கள் சார்ந்த சத்திரிய வகுப்பினனு மல்லன் அவன் வளம் மிக்கவன் எனினும், வணிகக் குடிமகன் கதாநாயகி ஒரு வணிகக் குடிமகள். பெண்கள் சம உரிமை பற்றிப் பேசுவது கூட அறியாத காலகட்டத்தில் சிலப்பதிகாரத்தின் முக்கிய பாத்திரங்களாக ஒளி வீசுபவர்கள் இரு பெண்கள் அவர்களுள் ஒருத்தி, பரத்தையர் குடும்பத்திலிருந்து வந்து, பத்தினித் தெய்வத்துக்கு இணையாக உயர்கிறாள். அண்டை நாட்டு அரசின்

கீழ், குடிமகளாக வாழும் ஒரு பெண், தான் வந்த நாட்டு அரசனோடு வழக்குத் தொடங்கி, அரசன் தோற்க, தான் வெல்கிறாள் நாமறிந்த அளவில் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு எந்தச் சமுதாயமும் எண்ணிப் பார்த்திராத பாத்திரங்கள்; அதேபோல, காதலும், வீரமும் தவிர்த்த ஒரு கருப்பொருள்: மன்னனைக் கடவுளின் மறு அவதாரமாக எண்ணி மதித்த விழுமங்கள் (Values) கோலோச்சிய சமுதாயத்தில் 'அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாவது' காப்பியம் காட்டும் உண்மைகளுள் ஒன்றாகிறது இப்படி முழுமையும் மரபுக்கு மாறுபட்ட ஒரு பண்டைய காப்பியப் பாரம்பரியத்திற்கு நாம் சொந்தக்காரர்கள் என்று இந்திய இலக்கிய உலகினர் பெருமைப்பட உரிமை உண்டு ஆனால் அப்படிப் பெருமைப்படுவார் இல்லை. **ஏனெனில், அவர்கட்கு அவர்களுடைய சொந்தத்தின் முழுமையும் தெரியவில்லை. தெரியக்கூடிய வாய்ப்பும் உருவாகவில்லை.**

'உண்டாலம்ம இவ்வுலகம்' என்று தொடங்கும் பாண்டிய மன்னன் இளம் பெருவழுதியின் கவிதை, 'புகழெனின் உயிரும் கொடுக்குவர், பழியெனின் உலகுடன் பெறினும் கொள்ளலர்' என வழங்கும் மரபின் மாண்பு எண்ணுந்தொறும் நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது பெருஞ்சாத்தன் இறந்த துயரில் மூழ்கியிருக்கும் ஒல்லையூர் நாட்டில் பூத்திருக்கும் முல்லைப்பூவைப் பார்த்து, குடவாயில் கீரத்தனார்

*"இளையோர் சூடார்: வளையோர் கொய்யார்*

*.......................................................*

*பாணன் சூடான்: பாடினி யணியாள்:*

*.......................................................*

*வல்வேல் சாத்தன் மாய்ந்த பின்றை*
*முல்லையும் பூத்தியோ : ஒல்லையூர் நாட்டே"*

எனக் கேட்கும் பாடல்: தந்தையை இழந்த பாரி மகளிர்தம்.

*"அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவின்*
*எந்தையு முடையேம்: எம் குன்றும் பிறர் கொளார்*
*இற்றைத் திங்கள் இவ்வெண் நிலவின்*
*வென்றெறி முரசின் வேந்தர் எம்*
*குன்றும் கொண்டார்: யாம் எந்தையும் இலமே"*

எனும் பாடல் போன்றவை, சோகத்தின் முழுமை, அதன் உச்ச நிலை உணர்வு சொல் வடிவம் பெற்று, நமது நெஞ்சைப் பிழிந்து எடுக்கும் தன்மையைக் காட்டுகின்றன. 'நட்டோர் கொடுப்பின் நஞ்சுமுண்பர் நனி நாகரிகர்' என்ற வரிகளைப் படிக்கும் பொழுது, சமுதாய இயலில் எத்தனையோ முன்னேற்றங்களையும், மனித நேய உணர்வுகளையும், மனிதப் பண்பு வளர்ச்சிகளையும், கண்ட இந்த இருபதாவது நூற்றாண்டின் இறுதியிலும், நாம் எண்ணியும் பார்க்க இயலாத ஒரு பண்பு நிலை பற்றிய, நாகரிகம் பற்றிய சிந்தனையை நாம் காண்கிறோம். இவையெல்லாம் உலக சமுதாயத்திற்கு இந்தியா அளித்த கொடைகள் இவற்றை உலகமும் அறியவில்லை. இந்தியாவும் அறியவில்லை அந்த அளவிற்கு உலகம் வறியதாகிறது. இந்தியர் வறியவர்களாகின்றனர் இது தமிழர்கட்கு மட்டும் ஏற்பட்ட இழப்பு அன்று மனித சமுதாயத்திற்கு ஏற்பட்ட இழப்பு.

கிரேக்க நாகரிகத்தின் வேரையும், விழுதையும் முழுமையாக உலகம் உணர்ந்திருக்கிறது. ரோமர் தம் பங்களிப்பு இன்று எல்லாருக்கும் சொந்தம் வேதமும், உபநிடதங்களும், கீதையும் இன்று அறிஞர் உலகம் அறிந்தவை. ஏறத்தாழ, அதே காலகட்டத்தில் சிறந்து விளங்கிய தமிழ் நாகரிகத்தின் பங்களிப்பு, குடத்தில் இட்ட விளக்காக நின்று விட்டது. இதற்கான காரணங்களை எண்ணிப் பார்க்க வேண்டும் இன்றும் காலம் கடந்து விடவில்லை நல்லது செய்ய என்றுமே காலம் கடந்ததாகி விடாது

### 3. மொழி பெயர்ப்பு முயற்சிகள்

வடமொழியிலிருந்து வேதங்கள், உபநிடதங்கள், இலக்கிய நூல்கள், சாணக்கியரின் அர்த்த சாத்திரம், விஷ்ணு சர்மாவின் பஞ்ச

தந்திரம், மனுவின் தர்ம சாத்திரம் போன்ற எண்ணற்ற நூல்கள் 18ஆம் நூற்றாண்டில் தொடங்கி, பெரிய அளவில், ஆங்கிலத்திலும், ஐரோப்பிய மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டன இப்பணிக்கு முன்னோடியாக இருந்த நிறுவனம், கல்கத்தாவில் அமைக்கப்பட்ட ஆசியக் கல்விச் சங்கம் (Asiatic Society). மேலும், மேல்நாட்டார் தனிப்பட்ட முறையிலும், நிறுவன ரீதியாகவும் மொழி பெயர்ப்பு முயற்சிக்குப் பெரும் தொண்டாற்றியுள்ளனர். கல்கத்தாவில் நீதிபதியாக இருந்த சர் வில்லியம் ஜோன்ஸ், ஆசியக் கல்விச் சங்கத்தை நிறுவியர் . மனுவை மொழி பெயர்த்தவர் இன்று லண்டனில் இருக்கும் அவர் சிலையின் ஒரு கையில் மனு தர்ம சாத்திரம் இருக்கிறது

பொதுவாக, காப்பிய அமைப்பிற்கு, கவிதைப் பாரம்பரியத்திற்கு, மரபுகட்கு, கதைக் கருவிற்கு, இலத்தீனையும், கிரேக்க மொழியையுமே நம்பியிருந்த ஐரோப்பிய இலக்கியப் படைப்பாளர்கள், வடமொழி ஒரு பெரும் களஞ்சியமாக இருப்பதுகண்டு, பல்துறைகளில் வடமொழியின் வளத்தைப் பயன்படுத்தத் தொடங்கினர். வடமொழி நூல்களை அடிப்படையாகக் கொண்டு, இந்தியத் தத்துவங்கள் பற்றி, இலக்கியம் பற்றி, சமயக் கோட்பாடுகள் பற்றிப் பெரிய அளவில் எழுதினர். வடமொழி நூல்களின் தாக்கம், ஐரோப்பா, இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாட்டுப் படைப்பாளர்களிடம், சிந்தனையாளர்களிடம் பரவலாக இடம் பெற்றது.

கதே (Goethe) போன்ற ஜெர்மன் கவிஞர்களும், காலரிட்ஜ் (Coleridge), ஷெல்லி (Shelly), எலியட் (Eliot) போன்ற ஆங்கிலக் கவிஞர்களும், விட்மன (Whitman) போன்ற அமெரிக்கக் கவிஞர்களும், வடமொழி நூல்களால். இலக்கியங்களால் மிகவும் கவரப்பட்டனர். ஷோபன்ஹாவர் (Schopenhauer), நீஷே (Nietzsche) போன்ற தத்துவ அறிஞர்களும், தோரோ (Thoreau), எமர்சன் (Emerson) போன்ற சிந்தனையாளர்களும் வடமொழிப் படைப்பின் சிந்தனைகளால் பெரிதும் ஈர்க்கப்பட்டனர் கீழை நாடுகளின் புனித நூல்கள் (Sacred Books of the East) எனும்

மாபெரும் நூல் வரிசைக்கு மாக்ஸ் முல்லர் (Max Mueller) ஆசிரியராக இருந்து பெருந்தொண்டாற்றினார். இவையொத்த மொழி பெயர்ப்பு முயற்சிகள் தமிழில் இடம் பெறவில்லை. 16-வது, 17-வது நூற்றாண்டில் மேலைநாட்டினர் தமிழில், திராவிட மொழிகளில் மிகுந்த ஆர்வம் காட்டினர். ஆனால் 18-வது நூற்றாண்டில் தலைநகரான கல்கத்தாவிற்கு மேலைநாட்டினரின் பெரும்பாலான செயற்பாடுகள் இடம் பெயர்ந்தன. அதன்பின் அவர்கள் ஈடுபாடு வடமொழியிலேயே இருந்தது.

### 4. தமிழ் இலக்கிய வரிசை

தமிழ் நூல்கள் சில, பெரும்பாலும் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன. எனினும், பெரிய அளவில், திட்டமிடப்பட்டு, நிறுவன வாயிலாக இம்முயற்சி மேற்கொள்ளப் படவில்லை. தனிப்பட்ட முறையில், இந்நாட்டவர், மேலை நாட்டினர் செய்த முயற்சியின் விளைவாகச் சில நூல்கள் மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன அண்மைக் காலத்தில் தமிழ் நூல்கள் மீது, மேலை நாட்டினர் காட்டும் ஆர்வம் வளர்ந்திருக்கிறது. சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற நூல்களை, பெங்வின் (Penguin) நிறுவனம் ஆங்கிலத்தில் கதை கூறும் பாங்கில், பொறுக்கி எடுக்கப்பட்ட பகுதிகளின் மொழி பெயர்ப்புடன் வெளியிட்டிருக்கிறது. இவற்றிற்கு வரவேற்பு இருப்பதனால்தான், ஒரு வணிக நிறுவனம் வெளியிட முன்வந்துள்ளது.

தமிழ் இலக்கிய நூல்களைத் திட்டமிட்டு, முறையாக ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிடும் முயற்சி தேவையான ஒன்று. மற்ற செவ்வியல் மொழிகளைப் பொருத்தவரை 18-வது, 19-வது நூற்றாண்டில், அல்லது அதற்கும் முன்னர் மேற்கொள்ளப் பட்ட ஒரு பணியை, நாம் இப்பொழுது செய்ய வேண்டுமா, என்ற கேள்வியும் எழலாம். எழுவது இயற்கை. 'தேடுதல்' **மனிதனின் இடைவிடாத பணி. புதியன தேடுவது ஒரு புறமிருக்க, உலகின் ஒரு புறத்தில் நமது முன்னோர்களில் ஒரு பிரிவினர் தேடி வைத்த அறிவுச் செல்வங்களைத் தேடிப் பிடித்துப் பொதுமையாக்கு வதும் தேடல் முயற்சியின் ஓர் அங்கமேயாகும்.** இந்தப் பணி என்றும் காலம் கடந்ததாகி விடுவதில்லை.

நாம் சங்க இலக்கியங்களில் தொடங்கி, சங்கம் மருவிய கால இலக்கியங்களிலிருந்து ஏறத்தாழ பத்தாவது நூற்றாண்டு வரையிலான தமிழ் இலக்கியங்களை வகைப்படுத்தி 'செவ்வியல் தமிழ் இலக்கிய வரிசை' என்ற தலைப்பில், குறைந்தது 25 முதல் 30 தொகுப்புகள் முதற்கட்டமாக வெளியிடலாம். ஒவ்வொரு தொகுதியும் 250 முதல் 300 பக்கங்கட்கு மேல் போகாமல் நூலகப் பதிப்புத் தரத்தில், ஒரே அளவு, ஒரே கட்டமைப்புக் கொண்டதாக அமையலாம். ஆங்கிலத்தில், பல துறைகளில் இப்படிப்பட்ட வெளியீடுகட்குச் சிறந்த முன்மாதிரிகள் இருக்கின்றன. இத்தொகுதிகள் பழந்தமிழ் இலக்கியங்களின் மொழி பெயர்ப்பாக இருக்க வேண்டும் என்பதன்று நமது குறிக்கோள்: ஒவ்வொரு நூலையும், அதிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளின் மொழி பெயர்ப்புடன் அவற்றின் நுட்பத்தை, சிறப்பை, இலக்கிய மாண்புகளை, சிந்தனை வளத்தை, தமிழர் வாழ்வியல் வரலாற்றில், அல்லது இந்தியப் பண்பு வளர்ச்சியில் அவற்றின் தாக்கத்தை எடுத்துக்கூறும் வகையில் அமைந்த விளக்கங்களுடன் வெளிக்கொணர வேண்டும்

இரண்டாவது கட்டமாக இந்த நூல்களை இந்தியில் வெளியிட வேண்டும். ஆங்கிலம், இந்தி, தமிழ் ஆகிய மூன்று மொழிகளும் தெரிந்தவர்கள் இப்பணியை மேற்கொள்ள வேண்டும். ஆங்கிலப் பதிப்பை மூல நூலாகக் கொள்ளலாமெனினும், தமிழிலுள்ள பாக்களை நேராக இந்தியில் மொழி பெயர்ப்பதுதான் முறை ஆங்கில மொழி பெயர்ப்பிலிருந்து இந்தியில் மொழி பெயர்ப்பது முறையாகாது.

இப்பணிக்கு நிதி ஒரு பெரிய தடையாக இராது. நல்ல முறையில் வெளியிடப்பட்டு, விரிவாக விளம்பரப்படுத்தப் படுமானால் அவை விலை போகும் தன்மையன பெரிய பதிப்பகங்களுள் ஒன்றுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு, தொடர் வரிசையாக வெளியிடலாம். இதற்கென அரசு ஒரு தன்னாட்சி நிறுவனத்தை உருவாக்கலாம். ஆனால் பொதுவாக, அப்படிப்பட்ட

நிறுவனங்களின் விற்பனைத் திறன் திருப்தி தருவதாக இருப்பதில்லை. இந்தப் பொறுப்பை ஏற்கும் நிறுவனம் திட்டமிடுதல், நிதியுதவி, பொதுவான மேற்பார்வை என்ற அளவில் தனது பணியை வரைப்படுத்திக்கொண்டு, நிறைவேற்றும் பணிகளைப் பொருத்தமான வகையில் பிரித்தளிப்பதே முறையாகும்.

இம்முயற்சியில் முக்கியமானது, தொகுதிகளின் தலைப்புகளைச் சிறந்த முறையில் நிர்ணயம் செய்வதற்குத் திறன் வாய்ந்த ஒரு குழுவை அமைப்பதும், பின்னர் ஒவ்வொரு தொகுதியையும் எழுதுவதற்கு ஆசிரியர்களைத் தேடிப் பிடிப்பதுமாகும். உண்மையிலேயே பெருமுயற்சி செய்து தேடித்தான் பொருத்தமான ஆசிரியர்களைக் காணவேண்டும். தமிழறிவும், ஆங்கிலப் புலமையும், தமிழ் இலக்கியப் பண்பாட்டின் பல்வகைப் பரிமாணங்கள் பற்றிய தெளிவும் உள்ளவர்கள் அருகியே காணப்படுகின்றனர். இருப்பினும், திறந்த மனத்துடன் 'இப்பணிக்கு ஏற்ற கல்வி, அனுபவம்' என்ற ஒரே தகுதியை முன்னிறுத்தி முயன்றால், நாம் வெற்றி பெறுவது உறுதி. இப்பணிக்குத் தலைமைப் பொறுப்பேற்க, நமக்கு மன நிறைவு தரும் அளவிற்குத் தகுதி வாய்ந்த ஒருவரைத் தேர்ந்தெடுத்து, தேவையான அதிகாரங்களுடன் அவரிடம் பொறுப்பை ஒப்படைத்துவிட்டால், பணியில் பாதி முடிந்ததாகக் கருதலாம்.

**இது தமிழர் பெருமை பேசும் திட்டமோ, முயற்சியோ அன்று. இந்தியப் பண்பாடு என்னும் பெருநதிக்கு ஆதி முதல் வளம் சேர்த்த, ஆனால் முழுமையாக அறியப்படாதிருக்கும் ஓர் உபநதியின் மூலத்தையும், அதன் வளத்தையும், வளத்தின் சில தனிச் சிறப்புகளையும் அறிமுகப்படுத்தும் முயற்சியேயாகும். சாக்ரடீசையும், பிளேட்டோவையும் அறிமுகப்படுத்துவது கிரேக்கர்கட்குப் பெருமை சேர்க்க அன்று: அவர்களுடைய சிந்தனைகள் மூலம் மனித சமுதாயத்தை வளப்படுத்தவே யாகும். மனித சாதியின் நீண்ட, முன்னேற்ற வரலாற்றில்**

ஏறத்தாழ 2400 ஆண்டுகட்கு முன் மானிடம் அடைந்திருந்த மன வளர்ச்சிக்குச் சான்று கூறவுமாகும். இவர்களையொத்த சான்றோர்கள் எங்கு பிறந்திருப்பினும், எம்மொழியைப் பேசினும், எவ்வினத்தைச் சார்ந்திருப்பினும் அவர்கள், மனித சமுதாயம் எனும் பரந்த வானில் ஆங்காங்கு ஒளி வீசிய தாரகைகளேயாவர். நாம் இன்னும் சில தாரகைகளை அடையாளம் காட்ட முயலுகிறோம்.

❖ ❖ ❖

# டாக்டர் வா.செ.குழந்தைசாமி (குலோத்துங்கன்)

டாக்டர் வா.செ. குழந்தைசாமி திருச்சி மாவட்டத்தில் வாங்கலாம்பாளையம் என்ற சிற்றூரில் பிறந்தவர். இந்தியாவிலும், ஜெர்மனியிலும், அமெரிக்காவிலும் உயர்கல்வி பயின்றவர். நீர்வளத் துறையில் டாக்டர் பட்டம் பெற்றவர்.

நீர்வளத் துறைப் பேராசிரியர்; தமிழகத் தொழில்நுட்பக் கல்வி இயக்குநர்; மதுரை - காமராசர் பல்கலைக்கழகத் துணைவேந்தர்; UNESCO ஆலோசகர்; அண்ணா பல்கலைக்கழகத் துணைவேந்தர்; இந்திராகாந்தி தேசியத் திறந்த நிலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் போன்ற பொறுப்புகளை வகித்தவர்.

நீர்வளத் துறையில் பல ஆய்வுக் கட்டுரைகளைப் படைத்துள்ள இவரது கண்டுபிடிப்பு ஒன்று Kulandaiswamy Model என்ற பெயரில் அத்துறை இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளது. உலக அளவில் நீர்வளத் துறை அறிஞர்களால் மதிக்கப்படுபவர். UNESCO நீர்வளத் துறைத் திட்டக் குழுவில் உறுப்பினராகப் பணியாற்றியவர். பல உயர் மட்டக் குழுக்களில் அங்கம் வகிப்பவர்.



பல்கலைக்கழக மானியக் குழு (University Grants Commission), அனைந்திந்தியத் தொழிற்கல்விக் குழு (All India Council for Technical Education), அனைத்திந்தியத் தொழில் பயிற்சிக் கல்விக் குழு, தமிழகத் திட்டக் குழு போன்ற பல நிறுவனங்களில் உறுப்பினராக இருந்தவர். சர்வ தேசியத் தொலை நிலைக் கல்விக் குழுவில் ஆசியாவின் துணைத் தலைவராகவும், காமன் வெல்த் நாடுகளின் பல்கலைக்கழகக் குழுவின் (Association of Commonwealth Universities, London) தலைவராகவும், இந்தியப் பல்கலைக் கழகங்கள் குழுவின் (Association of Indian Universities) தலைவராகவும் பணியாற்றியவர்.

இவருக்கு இந்திரா காந்தி தேசிய ஒருமைப்பாடு விருதும் (1988), மைய வேளாண்மை வாரியத்தின் வைர விழாச் சிறப்பு விருதும் (1991), வழங்கப்பட்டன. இந்தியப் பொறியியலாளர் நிறுவனம் (The Institution of Engineers (India) ) இவரை இந்தியாவின் சிறந்த பொறியியல் வல்லுநர்களில் ஒருவராக 1991-இல் கௌரவித்தது.

இவர் ஆர்வம் காட்டும் மற்ற துறைகள் தமிழ் வளர்ச்சி, தமிழ் இலக்கியம், தமிழ் எழுத்துச் சீரமைப்பு ஆகியன. 'பொன்னி' இதழ் இவரை 1948-இல் பாரதிதாசன் பரம்பரையின் கீழ் அறிமுகப்படுத்தியது. 'குலோத்துங்கன்' என்ற புனை பெயரில் இவருடைய கவிதைகள் ஐந்து தொகுதிகளாக வெளிவந்துள்ளன. இவருடைய நூல்கள் பல பல்கலைக்கழகங்களில் பாட நூல்களாக இடம் பெற்றுள்ளன. இலக்கியப் படைப்புக்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 1980-இல் D.Litt. பட்டம் கொடுத்துச் சிறப்பித்தது. World Academy of Arts & Culture என்ற நிறுவனம், 1985-இல் அதன் ஏதென்ஸ் மாநாட்டில் கௌரவ டாக்டர் பட்டம் (Litt.D) கொடுத்துப் பெருமைப்படுத்தியது. 'வாழும் வள்ளுவம்' என்ற நூலுக்கு, 1988-இல் 'சாகித்ய அகாதெமி' விருது வழங்கப்பட்டுள்ளது. இந்தியக் குடியரசுத் தலைவர் 1992-இல் இவருக்கு 'பத்ம ஸ்ரீ' விருது வழங்கினார்.

தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் (Tamil Academy, Madras) தலைவராகவும், ஆசிய இயல் நிறுவனத்தின் (Institute of Asian Studies) துணைத் தலைவராகவும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் (I.A.T.R.) துணைத் தலைவராகவும், தமிழக அரசின் தமிழ் வளர்ச்சி மன்றத்தின் உறுப்பினராகவும் இருந்து வருகிறார்.

- பாரதி பதிப்பகம்